உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



மாயூர ஸ்தல மான்மியம்

இஃது

மாயூரம் முனிசிபல் ஹைஸ்கூல்

தமிழ்ப் பண்டிதர்

வீ. சுப்பிரமணிய ஐயர் அவர்களால்,

இயற்றப்பட்டு

சென்னை

திருவல்லிக்கேணி

ஸ்ரீ "வாணீபூஷணம்" அச்சுக்கூடத்தின்

சொந்தக்காரர்:

ஆர். வைத்தினாதையர் அவர்களால்.

பிரசுரஞ் செய்யப்பட்டது.

1912



PRINTED AT

THE "VANEE BHOOSHANAM" PRESS,

Trplicane, MADRAS.



செய்யுண் முதற் குறிப் பகராதி

பாயிரம்



செய்யுண் முதற் குறிப் பகராதி

* ஆச்சாபுரத்தலபுராணம்.

முகவுரை.

ஸ்மரணத்தினால் முக்தி தரத்தக்க க்ஷேத்திரம் அருணாசலம். தரிசனத்தினால் மோக்ஷமளிக்கும் ஸ்தலம் சிதாகாசமாகிய சிதம்பரம். க்ஷேத்திரத்தில் பிறப்பதனாலேயே முக்தி தருவது திருவாரூர். க்ஷேத்திரம் சென்று மரணமடைதலினாலேயே முக்திக்குக் காரணமாயிருப்பது ஸ்ரீகாசி க்ஷேத்ரம். இவைபற்றி கமலையிற் பிறக்க முத்தி, காசியிலிறக்க முத்தி எனவும், தேசமர் தில்லையில் திரு நடங் காண, எனவும், அருணையை நினைக்க முத்தி எனவும் வாக்யங்கள் எழுந்தன போலும்.

இவ்விதமான பல க்ஷேத்திரங்களில், ஸ்ரீகௌரி மாயூரம் ஸ்நாந கட்டத்திற்குப் பெயர் வாய்ந்தது. அம்பிகையே மயிலுருவமெடுத்து எம்பெருமானைப் பூசனை புரிந்த இச் சீரிய க்ஷேத்திரத்தில், துலா மாஸத்தில் ஈச்வரனே பஞ்ச பஞ்ச உஷத்காலத்தில் ஸ்நாநம் செய்து, ப்ராதஃ கால ஸ்நாநத்தின் பெருமையைப் புலப்படுத்தத் தாமே உதாரணமாய் நிற்கிறார். இத்தகைய க்ஷேத்திரத்தில், அநேக உயிர்கள் விருஷப தீர்த்தத்தில் மூழ்கி முக்தி பெற்றிருப்பதாகப் புராணமும் கூறுகிறது. இந்த மாயூர க்ஷேத்திர மஹாத்ம்யம் வடமொழியில் இயன்றிருப்பது வடமொழி வல்லுநரே அறியக் கூடியதா யிருப்பதனாலும், தென்மொழியில் பாவலர் திலகரான மஹா வித்வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் செய்யுட்களாலியற்றிய மாயூர ஸ்தலப் புராணம் செந்தமிழ் வல்லுநர்க்கே விளங்கக்கூடியதா யிருத்தலாலும், இந்த க்ஷேத்திரத்தின் மஹிமை ஸாதாரண ஜனங்கள் எவராலும் நன்றாக அறிந்துகொள்ளக் கூடாததாயிருக்கின்றது.

பல நண்பர்களும் இவ்வரிய செய்யுள் நூலினை வசனமாகச் செய்யத் தூண்டினமையினாலும், இந்த க்ஷேத்திரத்தில் எனக்குள்ள விசேஷமான அபிமானத்தாலும், ஸ்ரீ பிள்ளையவர்கள் செய்த புராணத்தை முதனூலாக வைத்துக்கொண்டு இதனை எளிய வசன

நடையில் எழுதினேன். அவர் தமது செவ்விய மதுரஞ் சேர்ந்தினிதிசைக்குஞ் சீரிய கூரிய தீஞ்சொலாணியன்ற செய்யுட்களிற் சிலவற்றை இடையிடையே யாவரும் படித்தானந்திக்குமாறு பதிப்பித்திருக்கிறேன். அவரியற்றிய பாயிரத்தின் கண்ணமைந்த அருமைத் திருச்செய்யுட்களை நான் முகப்பிற் சேர்த்துள்ளேன்.

இரவிக்குமுன் மின்மினி பாடுவதுபோல் ஸ்ரீ பிள்ளையவர்கள் இயற்றிய நூலினை வசன நூலாக வரையப் புகுந்த இதன் கண் பிழைகள் பல மலிந்திருத்தலும் கூடும். ஆதலின் செந்தமிழ் வல்ல சான்றோர்கள் அவற்றினைப் பொருட்படுத்தாது எம்மைப் பொறுத்து அருள்புரிய வேண்டுகின்றனென்.

இவ்வரிய நூலினை வரைதலிடையே நேரிட்ட இடையூறுகளைக் களைந்து தோன்றாத் துணையாய் நின்று கடைபோதுமட்டும் அருள்புரிந்த ஸ்ரீ அபயப் பிரதாம்பிகா ஸமேத மாயூர நாதேச்வரரை மனமொழி மெய்களாற் றொழுகின்றனன்

முனிஸிபல் ஹைஸ்கூல் மாயூரம். 30-8-12 } வீ. சுப்பிரமணிய ஐயர். தமிழ்ப் பண்டிதர்

மாயூர ஸ்தல புராண வசனத்தைப் பற்றிய அபிப்பிராயங்கள்.

கடலூர்க் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ ந. பலராமைய ரவர்கள் எழுதுகிறார்.

அமிழ்தினுமினிய தமிழ் மொழிசெய்த அருந்தவத்தானே அவதரித்த பாவலாளராகிய ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் செய்த மாயூர ஸ்தல புராணம் பண்டிதர்களே கண்டு களிகூருமாறு அமைந்திருத்தலின், அதனைச் சாமானியரும் உணருமாறு எனது நண்பரும் மாயூரம் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதருமாகிய பிரமஸ்ரீ, V. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் எளிய வசன நடையில் இயற்றி யுள்ளார். மாயூர ஸ்தல மகாத்மியத்தில் ஈடுபட்ட நண்பர்கள் பலரும் இதனை வாசித்துச் சந்தோஷமடைவார்களென்பதற்குச் சந்தேகமே யில்லை.

கடலூர்க் கலாசாலை. (31-8-12) } ந பலராமையர். தமிழ்ப் பண்டிதர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் இயற்றிய மாயூர ஸ்தல புராணத்தின் பாயிரச் செய்யுட்கள்.

கடவுள் வாழ்த்து

அகத்திய விநாயகக் கடவுள்

பூமேவு தன்னடியார் தமைவிளக்கி முந்திருக்கை புணர்த்தல்வல்ல
தேமேவு பெருங்கருணையாள னெனத்தெரிப்பமறைத் திருநாமங்கள்
பாமேவு பலவிருக்க அகத்தியபால் களிறெனும் பேர்பரித்து நாளு
மாமேவு மயிலாடு துறைத்தளிவாழ் பெருமானை வணக்கஞ்செய்
[வாம் (1)

பெரிய விநாயகக் கடவுள்

மன்னிய பேருருவாய்ந்த மதாசலமாமுடி மேக்குயருத நாமே
துன்னிய பேருருவாய்ந்த பூதத்தினடி கிழக்குந் தோய்தற் கேற்ப
மின்னிய பேருருவாய்ந்து பெரிய வாரணமெனும பேர்விளங்கப்
[பூண்டு
பன்னிய பேருருவாய்ந்த மாமயிலை தளியமரும் பரன்றன் போற்றி

வதான்யேச்வரர்.

சீர்பூத்த விமைபாரும் அமையாருந் தோட்சிசேர் செல்வமேவந்தும்
பார்பூத்த திருவானும் பெருவானும் புகழ் புரவு பண்ணுவானுங்
கூர்பூத்த வேறொருந் தேறொருமலர் இறைப்பக் குறித்தநல்கி
யேர்பூத்த மயிலாடு துறையமரும் வள்ளலா ரிருதாள்போற்றி (3)

சூதவனேசர்

இச்சை யறிவுறு தொழிலாய்ப் பரையாதி யாதியா யெண்ணிலாத
விச்சை செயாரணி முதலாய்ச் சத்தி விந்து வாதியாய் வேறுயின்னு
மச்சையினிதோம் பிடுவானளவாத கருணையிற் பல்லண்ட மீனும்
பச்சைமயில் போற்றெடுக்க மாவடி யிற்றிருப்பாரைப் பரவி வாழ்
[வாம். (4)

அபயப் பிரதாம்பிகை

பரவுபிற ரபயவரதம் புனைந்தும் பாவனையாம் படியாறுண
வுரவு மிருமுலை மலர்க்கை யமைத்தமைத்தபடி யகில வுயிர்க்கு
[மாற்றிக்
கரவு தவிர் தாவனைய வுடையமே திருப்பெயராய்க் கதிர்ப்பப்பூணூற்
றாவுமதி புனைவார் டாலமஞ்சனயகி தாளடைந்து வாழ்வாம் (5)

பரந்தமலர்க் கருங்குழலும் செவ்வாயும் வெண்ணகையும் பசுவேய்த்
[தோளுஞ்
சுரந்தவருள் பொழியு மிருவிழியு மெழில்வழி முகமுந்துணைப்
[பொற்றோடுஞ்
சுரந்த இருவிடையுமொண் செம்பட் டுடையுமங்கலப் பொற்கழுத்து
[நாணு
மிறந்த வருக்கரு ளஞ்சனையகி நூபுரப் பதமு மிறைஞ்சிவாழ்வாம். (6)

மயிலம்மை

வாசிபொலி பிரமவன மாயூரமெனு மொருபேர் மருவியோங்கத்
தூவியன முணராத முமச் சாப மொருமயிலாத் தோன்றியாங்கு
மேவியமர் தருவிடப மரங்கமா நடம்புரிய விழைந்து நோக்கி
யோவியெலாம் முனமகிழ் பூத்தமர்ந்து தொழும் பசுமயிலையுன்னி
[வாழ்வாம். (7)

சபா நாயகர்

மாடுவான கைநோக்க நாடுவானவர் பலரும் வணங்கி வாழ்த்த
வூடுவான் பொழிவமுதனைப் பாடுவான் புலவர்துதி யுரைப்ப யாமு
நீடுவான் முதலியவையோடு வான்வளி பொருவல் நீத்தானந்தங்
கூடுவானம் பலத்துளாடுவான் குஞ்சிதத்தாள் குறித்து வாழ்வாம்.(8)

சிவ காமி யம்மை

கரமூன்று மடியிரண்டுஞ் சிருஷ்டி முதலைந் தொழிலுங் கதிர்ப்ப
[வாற்றச்
சிரமூன்று நான்குமுளார் சேவிப்ப வெண்முறுவல் செவ்வாய்த்
[தோற்றிப்
புரமூன்று மெரித்தார் செய் நடங்காண்டல் அதுவலிக்கப் போதல்
(ஆய
இரமூன்று மிரண்டனுக்கும் வினை முதலாம் பராபரைதாள் சேர்ந்து
[வாழ்வாம். (9)

தக்ஷிணா மூர்த்திக் கடவுள்

மான்மலரவன் முன்னோர் தொன்முதலென வழுத்தற் கேற்பச்
சூன்மலர் கருணையாலோர் தொன்முதல் அமர்ந்தான் மாக்கள்
கான்மல ரடங்குமுண்மை கைமலர்க் காட்டியாலே
தான்மலர் தரத்தெரிக்குந் தம்பிரான் சரணஞ் சார்வாம். (10)

வயிரவக் கடவுள்

ஓங்கு சொற்படை முன்னஞ்சு மொள்ளுகிர்ப் படையுந்தேசு
வீங்கு சக்கர முன்னுண வெம்படை யஞ்சுமஞ்சந்
தாங்கு சூற்படையுங் கொண்டோர் தலைக்கலை நெய்த்தோரேற்ற
பாங்குசேர் வடுகப்புத்தேள் பதமலர்க் கன்புசெய்வாம். (11)

அகத்திய விநாயகக் கடவுள்

உயர்திணையு மஃறிணையு மாயவொரு திருவுருவமுற்று மேவும்
பெயர்வில கருணைக்கிணங்க வவ்விரண்டு திணையுபிறும் பேணித்
[தாங்க
லயர் வுலகந் தெரிப்ப விளமதியு முதுவரவு முடியலங்கந் தாங்கி
மயர்வுதப வீற்றிருக்கு மகத்திய வாரணத் தடிகள வணங்கஞ்
[செய்வாம் (12)

குமாரக் கடவுள்

நெடுவரை விற்பவன வொளிபடு வரைபைக் கூறுசெய்து நிலவுமண்
[டத்
தொடுவரைவிலுயிர்க்கு முடன்முதலியதன் கூறுசெயு மொருவேல்
[கொண்டோர்
கொடுவரையைக் கூறுசெய்த கடன்மாவுங் கூறுசெய்து கொடும்
[பக்கஞ்சார்ந்
தடுவரையிற் பொலிமயின்மேற் பொலிதரு சேவகன் மலர்த்தாள
[டுத்து வாழ்வாம். (13)

நந்தி தேவர்

வண்ணம் பொலியுமேரு மால்வரையை மேவு நகையினர் சீர்
விண்ணம் பொலியு மிளாவிரத மேவலென மான்மறிபிறுெடு
தண்ணம் பொலியுங் கைப்பரமற் சாரும் விருப்பறிவுடையோ
ரெண்ணம் பொலியுந்தனைச் சாரவிருக்கு மொருவன் பதம்பணிவாம்.

இடப தீர்த்தம்.

நதிநதமு நதிபதியுநபப் புனலுமற்று முளதாரம் யாவுந் [போயும்
துதிகெழுவப் படிந்தாடித் தாமீட்டும் பாவமெலாந் தொலைத்துப்
கதியருணின் மலமாகி யுயிரோப்புக வேரனருள் கன்னித் தீர்த்த
மதிசெய்யலாத் தீர்த்தமெனுமிய தீர்த்தததினையாம் வணக்கஞ்
[செய்வாம். (15)

தமிழாசிரியர்

மயிலை நிகரஞ்சாயன் மங்கையொடு மருள்பரப்பி வானோர்சூழக்
கயிலையமர் பெருமானிலு லோபா முத்திரையெனும் பேர்க்கற்பு
[வாய்ந்த

குயிலையடு பொழிலொடுஞ் செந்தமிழ் பரப்புமுனிவர் குழாங்
[குலவிச சூழ
வெயிலவிடு பணிப்பொதியத் தபருமொரு முனிவரன்றன் மேவி

திரு ஞான சம்பந்த மூர்த்தி நாயனார் [வாழ்வாம். (16)

தமரொடுவெள்ள நீந்தத்தவ முயன்றெழு நாளாற்றி
யமர் கொடுங்கணை யென்றுய்த்து வருந்து மாலவன் போலாது
தமரொடுவ நீநதநாள்ளவாய்க் கட்டவிழ்ததுத் தாவா
தமரொரு பதிகஞ் செவ்வாய் மலந்தவர்க் கடிமைசெய்வாம். (17)

திரு நாவுக்கரசு நாயனார்

பெறுபணி நிறத்தமைத்தும் பிறங்கு பொனனுடம்பிற் டோர்த்து
முறுபெருங் காவல்பூண்டோர்ந்துறங்கு பாயவன் போலாது
பெருபணி பொன்மலைலாங்கைப பேருழவாரததாற்சேர
வுறுபுறம விட்டானந்த வுறக்கஞ் செய்பவா தாளுள்ளாம். (18)

சுந்தர மூர்த்தி நாயனார்.

எண்ணி மாலயன் முன்னோர் குற்றேவல் செய்பெரும்பேறென்று
நண்ணிநா முய்வோமென்று நாளுங் காத்திருக்கவுள்ள
புண்ணிய முதல்வன்றனே போநது குறறேவல செய்ய
வண்ணிய தோழமைப பாலமைந்தவர்க் கன்புசெய்வாம். (19)

மாணிக்க வாசக சுவாமிகள்

பாயணைப் புறந்தழீஇ முன்பாற் சுவடுறுத்தாள்போலா
தாவகாதழீஇ யன்னை மண்சுமநதுபூன்றடியொலேறறறக்
காவின்மேல் கீழ்பினைன்னைக் கரைதருமொரு முப்பாலுந
திருமுறுசுவடு கொணமார் திசழ்நதவாக கன்புசெய்வாம். (20)

தண்டீச நாயனார்

பாதக வரக்கற்சொன்று படுபழி யலைக்கப்பட்டு
கோதக வடைநது தீர்ந்த கோணசிலையிராமனுண
மேதக வந்தணாள னாருயிர் வீயமாய்ததது
யாதக வையுமுதகி யருளினர் சரணஞ் சார்வாம். (21)

அறுபத்து மூன்று நாயன்மார்

தகைபெறு முண்மை வாய்ந்ததஞ் சரித்திரமேயாய
தொகைவிரியோர மூன்றுந் தொழுபெரியோர்க்குஞ் சொற்ற
பகைதவிர்க் குரவனுவான் படர்சடைப்பிரானேயெக
நகை கொளுமறுபான் மூவர் நறுமலர்ப் பாதம்போற்றி. (22)

சூசி பத்திரம்





பிழை திருத்தம்.

வரி	பக்கம்.	பிழை	திருத்தம்
17	3	வழிக்கும்	விழிக்கும்
24	5	மந்தரி	மந்திரி
27	5	பெருபானை	[illegible]
12	6	யெல்லாம	[illegible]
32	6	நிற்கும	நிற்கும்
35	6	சஞதி	சக்தி
38	6	யானைமுக [illegible]	யானைமுகக்கடவு
41	6	பொலியு [illegible]	பொலிவு [illegible]
25	7	ஆயிரால	ஆயிரகால
7	8	இடைவிட [illegible]	இடைவிடாதுறை
21	8	சிவபெருமன்	சிவபெருமான்
[illegible]	11	[illegible]	[illegible]
1	12	[illegible]	[illegible]
30	12	[illegible]	[illegible]
[illegible]	12	[illegible]	[illegible]
36	12	ஒருவககவெல்லை	[illegible]
7	13	மகிமையை	மகிமையை
11	14	ஆசையுறுப	ஆசையுறுப
14	15	சற்பாத்திர	சற்பாத்திர
31	15	ஆணையால	ஆணையால்
33	15	யறிந்த	யறிவித்த
10	16	கையிலுல்	கையினில்
2	18	நடந்துவா	நடத்துவா
12	18	5-தகடாக	6-தகடாக
15	18	ஆவிர்பபவித்து	ஆவிர்ப்பவித்து
17	18	தாமனமலா	தாமரைமலர்
23	18	பிறகு	பிருகு
25	18	பதின்மமீற	பதினமரே
3	19	நிராதிசை	நிராதிச
7	19	விரும்பியயங்கே	விரும்பியாங்கே
21	19	சாயிச்சிய	சாயுச்சிய
26	19	மனவி	மனைவி

வரி	பக்கம்.	பிழை	திருத்தம்
14	20	இருமாப்பு	இறுமாப்பு
26	20	பிரைச்	பிறைச்ச
6	21	விஷ்னு	விஷ்ணு
34	21	வந்தவாரெல்லாம்	வந்தவாறெல்லாம்
26	22	படிப்பாரோ	பிடிப்பாரோ
35	22	நோககிய	நோக்கிய
19	23	அலட்கியம்	அலட்சியம்
12	24	பிராணிகலெல்லாம்	பிராணிகளெல்லாம்
1	25	தக்ஷயாகசருக்கம்	யாகசங்காரச்சருக்கம்
30	25	விரவயம்	விரவியும்
32	25	கிளர	கிளர்
38	25	சாவாண்	சர்வாண்
31	26	பனவு	பாணம்
1	27	தக்ஷயாக சருக்கம்	யாக சங்காரச் சருக்கம்
41	27	சிரத்தினினும்	சிரத்தினிலும்
43	யோக	[illegible] சுழிந்தரு	மேலெழுந்தரு
44	மாயூர வ	தீர்வி	தீர்
45 36	28	சரணற	சரணா
12	29	விருஷ்பா	விருஷபா
19	30	சத்துரு	கத்துரு
21	30	விநதை	விநதை
28	30	வழுப்பட்	வழிப்பட்
5&6	31	மன்னுலக	மண்ணுலக
14	31	அழகினையுடை	அழகினையடை
17	31	மையில்	மயில்
25	31	இறிங்கி	இறங்கி
3	32	யேங்கி	ஏங்கி
15	32	நிலைபெற்று	நிலையற்று
22	32	கொண்டாட	கொண்டாடி
32	32	இப்பேர்ப்பட்ட	இப்பேர்ப்பட்ட
33	32	அத்தகைய	அத்தகையனை
15	33	இமயவர்	இமையவர்
38	34	சகுக்கம்	சருக்கம்
33	35	கடற்று	கடந்து

வரி	பக்கம்.	பிழை	திருத்தம்
2	36	புறமமெண	பு[illegible]மெண
11	36	வாதங்கடந்தாயிர்	வாதங்கடந்தாருயிர்
25	36	ஏசானியே	[illegible]ஞானியனே
31	36	பெறுமை	பெருமை
40	36	அறபதன்மை	புறபதன்மை
23	37	கிலே	குடை
35	37	பிரசமையமாய்	பிர[illegible]மாய
10	39	சோம[illegible]நம	சோமநாதம்
18	39	இ[illegible]பு[illegible]	[illegible]
21	39	[illegible]	[illegible]லவாய்
15	48	[illegible]ய்வீர	செய்வீர
15	51	[illegible]	[illegible]ர்
15	51	[illegible]	[illegible]
19	5[illegible]	உ[illegible]	உ[illegible]களு
19	52	[illegible]	[illegible]
30	53	கொண்ட	கடை
14	54	உ[illegible]	உ[illegible]
15	54	[illegible]	[illegible]
27	61	[illegible]	[illegible]
3	62	நாகு	காகு
1	64	46-(வது பக்கம)	64-(வது பக்கம்)
12	64	வையிரவர் பூசைபுரி சருக்கம்	வயிரவர் பூசைபுரி சருக்கம்
21	64	விஷ்ணுவை	விஷ்ணு
9	71	கொடுநஞ்சம	கொடுநஞ்சம
12	71	யெண்ணுமல	யெண்ணுமல்
5	73	பாவங்களைளழித்து	பாவங்களையழித்து
19	73	அத்தீர்த்தில	அத்தீர்த்தத்தில்
21	75	தோல்காப்பிராதிய	தொல்காப்பியாதிய
7	77.	வீற்றிருபபோய	வீற்றிருப்போய்
9	77	மற்றுளதென்று	மற்றுனதென்று
35	77	தருதலை	தறிதலை
3	78	விரலினை	விறலினை

வரி	பக்கம்	பிழை	திருத்தம்
7	78	ஸிங்கவிரல்	ஸிங்கவிரல்
13	78	பயநாட்டு	பயனாட்டு
5	79	விட்டினை	வீட்டினை
30	79	யுறலசெழு	யறல்செழு
30	79	யுரிதகிராசி	யுரிதகிரீராசி
6	80	கழலரிதார்	சபரிசாய
21	80	கமறப்புடவ	கபடப்புறவ
9	81	வணங்சாக்	வணங்காக
13	89	இமயால்	இமயமால்
3	90	மாஹிஷ்	மாஹிஷ்தி
3	90	ஸிசதிரத	ஸிங்கத
3	94	பாங்க	பாங்கா
21	95	பதனைவியை	பனைவிசைப
14	96	துக்கம்	தூக்கம்
18	97	பாகப்பாறு	யாகமெபாறு
22	97	சதலாகாகள்	[illegible]
4	98	விண்ஞுராமி	விஞ்ஞராமி
17	99	புலாவினையோ	புலாவிஜயே
18	99	ஆரக்கயாயினேன்	ஆரகியாயினேன்
14	102	வமவதிக்கும்	வவமதிசகும
21	103	வந்துறவாயிற்று	வசதுரலாயிற்று
22	103	விறைவினெடுத்	விணவினெடுத்
17	104	பாதவிந்தம	பாதாரவிநதம்
30	108	மங்காசாஸனம்	மங்களாசாஸனம்
12	115	பாலல்	பால்
7	121	இனிவாழ்ந்து	இனிதுவாழ்ந்து
32	122	ஐயாரப்பா	ஐயாறப்பர்
21	123	வரத்தித்தனை	வரத்தினை
3	124	உன்மனத்தில்	உடமனதகில்
3	125	மனமர்ந்து	மனனமர்ந்து
25	125	மூன்தெரு	மூன்தொரு
17	127	பரந்து	பரந்த
10	128	தேவலோரக	தேவலோக
28	128	மனைவிமா	மனைவிமார்





உ

சிவமயம

திருச்சிற்றம்பலம்.

மாயூர ஸ்தல மான்மியம்.

திருநாட்டுச் சருக்கம்.

கடலாடையுடுத்த மண்ணுலகத்தில் மாநுடர் உய்யவேண்டி சாப்பாபாணரும நீலக்கிரீவருமாகிய வள்ளலார் என்னும் மகத் தானபெயரை வாய்ந்த சிவபெருமான், விரும்பி வசியாநிற்கும் சோழநாட்டின் பெருமையைப பறறிச்சிறிது கூறுவாம். பூவினுக்கு தாமரையும் மாநுடவர்க்கங்களில் புருஷோத்தமாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியும் சோலைகளில் தேவலோகத்திலுள்ள கற்பகவனமும், பசுக்களில் காமதேனுவும் தருமங்களிற் கிருகஸ்தாசிரமதருமமும் எங்ஙனம் சிறந்தனவாயிருக்கின்றனவோ, அங்ஙனமே சோழவளநாடு நாடுகள் பலவற்றுள்ளும் மேம்பட்டதாயுள்ளது ஏராளமான பயிர்த்தொழிலாளரும் இல்லறவாழ்க்கையை நீத்து சத்காலக்ஷேபங்களிலன்றி வேறொன்றிலும் புலன்செல்லவொட்டாமலிருக்கிற சந்நியாசியாச்சிரமங்கொண்ட மகாபெரியவர்களையும் இச்சோழநாடுடையதா யிருக்கின்றது. இந்நாட்டின் செல்வமிகுதியாலே யாவரும் விரும்பி இங்குஅடையும்படியாயும், சதாசர்வகாலத்தும் குறைவில்லாத விளைவையடைந்து, எவ்வித கஷ்டம் நேரிடினும் பொறுமையுடன் சகித்து அரசிறையை வழுவாது செலுத்தும்படியான விசேஷமான பெருமைகளை வாய்ந்திருப்பதும் இச்செந்நிவள நாடேயாம். இமயபர்வதராஜ புத்திரியாகிய உமாதேவியார் மயிலுருவம்தாங்கி இங்கே சஞ்சரித்தாக்கிலாய

பதியாகிய சிவபெருமானைக்குறித்து அருந்தவர்கள் பல இயற்றிப் பெரும்பேறடைந்த தலமும் இச்சோழவளநாடேயாம். சோழ நாட்டில் எந்த விடங்களை நோக்கினும் அவ்விடங்களெல்லாம் அளவற்ற பெருமையுற்ற சிவஸ்தலங்களேயாகும். இங்குள்ள தீர்த்தங்கள்யாவும் பரிசுத்தமுள்ள புண்ணிய தீர்த்தங்களேயாம். நாம் செய்த பூர்வசன்மாந்திர வினைப்பயத்தால் இங்குவந்தடைந்த பேர் யாவருக்கும் விசேஷபாக்கியங்களை யுண்டாக்கி முத்தியுலகத்தையளிப்பதும் இச்சென்னிவளநாடேயாம்.

வேதமார்க்கத்திற் சொல்லியன வற்றினின்று வழுவியவர் இந்நாட்டிலிலர்; ஆகமசாஸ்திர நூலாராய்ச்சியில்லாதவர் இந்நாட்டிலிருப்பது அபூர்வமே. துன்மார்க்கர் என்கிற நாமதேயமே இந்நாட்டில் கேட்பதருமை; 'சோழவளநாடு சோறுடைத்து' என்னும் கூற்றுக்கிணங்க அவ்விஷயம் இந்நாட்டில் உண்மையாகவே இன்றும் அநுபவத்திற்காணலாகுமெனின், தேஹி யென்றிரப்பாருக்கு அன்னமளியாதவர் இந்நாட்டில் இலராவார் என்பதும் தேற்றம். இந்நாட்டிலுள்ளாரெல்லாம் இறைவன்மாட்டு உண்மையான பக்திபூண்டொழுகும் உத்தமபக்தர் என்பதை எவரும்மறுக்க மாட்டார்கள்.

இலட்சுமி கடாட்சம் நிறையப்பெற்றதால் தரித்திரப் பசிப்பிணிமுதலியன இல்லாமலும், அரசரின் செங்கோன்மையினால் பகைஞரால் உபத்திரவப்பட்டு ஜனங்கள் வாதையுறாமலும், இம்மாநிலத்திலுள்ளயாவரும் போற்ற இச்செம்பியர் வளநாடுமிக்க அழகுள்ளதாயுள்ளது; இத்தகைய சிறப்புவாய்ந்த சோழவளநாட்டில் சூல்கொண்ட கறுத்தமேகங்கள் சூழ்ந்து கொடுமையான உக்கிரத்தைக்கொடுக்கும் ஆதவனின் ஆற்றலைக்கெடுத்து சுபிட்சஞ்செய்யக்கருதிப்பெய்யும் மழையின் வளமும் பெருமையும் பேசலாந்தகைமைத்தோ? இப்படி மழைபொழிந்து இப்புண்ணிய நந்நாட்டினைச் செழிப்பிக்கும் பெருமை வள்ளலார் என்னும் சீரியபெயர் வாய்ந்த சிவபெருமானுக்கே உரியதேயாம். இத்தகைய ஜலவருஷம் எல்லாமலைகளின் மீதும், விசேஷமான விருக்ஷவகைகள் நெருங்கியுள்ள காடுகளிடத்தும், நீர்வருவாய்களான பல்லாயிரம் ஓடைத்தலைப்புகளிலும், தாமரைவர்க்கங்கள் அடர்ந்தகழிமுகக்கடற்கரைகளிலும் பெய்து வெப்படக்கிமாநிலமாக்களை மகிழ்வுறுத்துவதாகும். இப்பேர்ப்பட்ட மழைபொழிந்து எங்கும் நீர்மயமாய்த்துலங்கி சிற்சிலவிடங்களில் புற்புதர்கள் ஆங்காங்கே தோன்றியிருப்பது, பூமாதேவி இம்மழையினுண்டாகிய குளிரையாற்றுது ஓர் பசும்போர்வை போர்த்திருப்பதை நிகர்த்ததாகும். இத்தகைய பலவிதநன்மைகள் ஒருங்கே வாய்ந்து சிறப்போடோங்கும்

சோழவளநாட்டின் வளப்பங்கள் பலவற்றைக் கூறுவதென்றால் ஆயிரம்நாவுடைத்த ஆதிசேஷனும் சிறிதயர்வானெனின், மாறுடவேடம்பூண்டுத் திரியும் போலிகள் எவ்வாறு சொல்லவியலும்?

அவ்வர்ணனைத்தைக் காட்டிலும் பக்தியிலே மிக்க புலவர்களால் விசேஷமாகப் புகழ்ந்து கொண்டாடத்தக்க இந்நாட்டின் வளப்பத்தை மிகுதியும் வளர்த்துச் சொல்ல வேண்டுமென்பதை மேலடியிருப்பது எவருக்கும் சகஜமேயாகுமாயினும், எப்போது இவ்வாறேவாடு நெருக்கமாய்நிறுத்தி கூடியவரையில் எம்பெருமான் முக்கண்ணீசன் அருள்கொண்டு இந்நாட்டிற்கணியான விளங்கும் நம்மாயூர நகரத்தின்பெருமையையும் சிறிது கூறுவாம்.

(திருநாட்டுச் சருக்கம் முற்றிற்று.)

---

2. நகரச்சருக்கம்.

பெருமையினால் பொலிவடையும் மகாதபசிகள் பல்லோர்கள் இங்குவசிப்பதனாலும், சடைமருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்குநதிருநுதலும, இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணமும் புடைசூழ ஸ்ரீகைலாசபதியாகிய பரமேசுவரன் சோதிரூபமாய் இங்கு வசிக்குந்தன்மையினாலும், கௌரிமாயூரம் பூலோக சிவலோகமே என்று சொல்லத்தகுந்ததேயாம் என்பதற்கு ஆட்சேபணையுமுண்டோ? எல்லாவகைச்சாஸ்திரங்களும் பராபரமாகிய ஈசனிடத்திருந்தே உண்டாயதென்னும் தன்மையினாலும், பரமபதியாகிய சிவபெருமான் அகப்பொருளொன்றும், மற்றையதெய்வதங்கள்யாவும் புறப்பொருளொன்றும் பெரியவர்களால் தொன்றுதொட்டு ஒப்புக்கொள்ளப்பட்டுவரும் மாட்சிமையினாலும் கௌரிமாயூர க்ஷேத்திரம் நால்வேதங்களை நிகர்த்தது என்றும் சொல்லலாம். முத்துப்போன்ற தந்தவரிசைகளையுடைய கட்டழகினுடைய தேவதாஸிகள் எப்போதும் நெருங்கிச்சூழ்ந்துள்ள பூர்வீக நகரென்றும், பெரிய பொன்னகரென்றுமான பலவகைப் பெயர்களைக்கொண்டு இக்கௌரிமாயூரத்தை யழைத்தலும் சாலவும் அமைவுடைத்து; தேன்துளிக்கப்பெற்ற அருங்கூந்தலையுடைய அபயாம்பிகையோடு தெய்வத்தன்மைமிக்க தேவநாயகராகியவள்ளலார் வீற்றிருக்கும்படியான கௌரிமாயூர க்ஷேத்திரத்தை தேவலோகமென்றும பொன்னகர் என்றும் பெரியோர் பெயர் கொடுத்தழைப்பர்.

அன்புடனேகூட அருளொழுகுவதுபோலவும், அப்பேர்ப்பட்ட அருளுருவமாகிய சோதிசுவரூபமாகிய பரமசிவபிரநதுபக்தர்களுக்கு வேண்டியனவற்றை வரையாது கொடுத்தற்போல் மயிலாடுதுறை என்று சொல்லும்படியான மாயூரத்தைச்சேர்ந்தவர்க்கு நிழலோடு விசேஷமான இன்பத்தைக்கொடுப்பது மாயூரத்தை சூழ்ந்து அழகுதாாநிற்கும பெருமையுள்ள எண்ணிறந்த பூவளர் சோலைகள். இந்த க்ஷேத்திரத்தில் வயற்புறத்தே விளங்காநிற்கும் ஆகாயத்தையளாவிய கருப்பங்காட்டோடு பக்கத்தில் வானளாவி வளர்கின்ற மாமரங்களின் கனிகள் கலக்கும் தன்மை ஈசுவரகடாட்சத்தினால் ஞானப்பாலுண்ட இளங்குழந்தையாகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனருடன் வாகீசர் என்னும் புனைபெயருள்ள திருநாவுக்கரசு நாயனர் சுவாமிகள் நட்புக்கொண்டுறவாடியதுபோலும். ஊற்றெடுத்துப் பெருகிக்கொண்டிருக்கிற வாழை மாபலா என்னுமுக்கனிகளுடன் மற்றைய மாக்கனிகள் ஒன்றுசேர்ந்து இன்றும விசேஷமான நன்மணமளிப்பது வாகீசர் முதலான விசேஷபக்தர்கள் புகுந்திருக்குமிடத்து மற்றைய சில்லரைப் பக்தர்களும் சேர்ந்து உண்மையான பக்திகொண்டொழுகுவதையொத்திருக்கும். கரையோரங்களிலுள்ள கதலி விருக்ஷங்களிலுள்ள நீண்ட இலைகளின்மேல் வயல்களிலுள்ள செந்நெற்கதிர்கள் வளைந்து மோதிப்படிந்திருப்பது, குற்றமில்லாத தம்மேற்போர்வையாகிய உமியினின்றும் விடுதலை பெற்று, அரிசியாகி உலையிலிட்டுச் சோறாகப் பட்டபின்னர், மீண்டும் அவ்விலையிலேயே உண்ணப்படுமாறு தாம் வந்துசேரவேண்டுமென்னும் சுவதந்திரத்தை இப்போதே கொண்டாடிக்காட்டுவது போலுமுள்ளது. மயில்போன்ற சாயையையுடையவளாகிய குயில்போலும் இனிய அமிர்தவசனம பேசும் உமாதேவியார் அம்மயிலுருவமெடுத்து எம்பெருமானைப்பூசை புரிந்ததலமென்று, விசேஷமான வெயிலையும் நிலவு வெளிச்சமாகக்காட்டும் அளவில்லாப்பாதபங்கள் அடர்ந்த சோலைக்கண்ணுள்ள புஷ்பங்களாற் பொதியப்பட்ட மரக்கொம்புகள் தோறும் களிமயில்கள் தங்கள் கலவத்தை மிகக்களிப்புடன் விரித்தாடாநிற்கும்.சோலை சூழ்ந்த பற்பல ஓடைகளிலும் செவ்வாம்பற்புஷ்பங்கள் பல்லாயிரம் பூத்திருப்பது எண்ணிற்கடங்காத தீபங்கள்போலக் காந்தி வீசாநிற்கும்; இப்பேர்ப்பட்ட க்ஷேத்திரத்தின் மாடமாளிகைக்கண் வீற்றிருக்கும் மடநல்லார் தம் வீட்டில் சமைப்பதற்காகக்களையும் அரிசியின் கழுநீரே விசேஷ விஸ்தீரணமுள்ள வயல்களுக்கு நீராகப் பாய்ந்து விடுமென்றலும் அம்மாட மாளிகையினின்று உண்டாகும் நறுமணமுள்ள தூபங்களினின்றெழும் புகைகள் வானத்தை மூடுமென்றலும் இந்நகரின் பெருமையை இப்படிச்சொல்வதைவிட வேறெவ்விதமாக இன்னும் மிக்குயர்த்திச் சொல்ல

ளாம். தம்பொருளேபோலப் பிறர்பொருளின்மீதும் கவலை வைத்துப் பாதுகாத்தும், ஒப்புயர்வற்ற அவசியமான காரியத்திலன்றித் தம் பணத்தில் ஒரு இம்மியளவு காசேனும் செலவழித்தலில் நிரம்ப ஜாக்கிரதையுடன் சீர்தூக்கிப்பார்த்துக் குடித்தனத்தைச் செட்டாய்ச் செய்யும் செட்டிமார்களாகிய வணிகர் வீதிகள் பல இத்தலத்திலுள்ளன. பொருள்களைக் கொள்ளவேண்டிய தருணமான காலங்களில் இப்பொருள்களை வாங்கியும், அவற்றைத் தம் கையினின்று விற்கவேண்டிய காலங்களில் தவறாது இலாபத்தோடு விற்றும், சீராய் வியாபாரஞ்செய்யும் இச்செட்டிமார்களின் பெருமை அளவிடற்பாலதன்று. பிரமாதமாகக் காந்தி வீசுகின்ற கோமேதகம், வஜ்ஜிரம், முதலிய நவரத்தினங்களும், சந்தன அகிற் கட்டைகள், யானைத்தந்தங்கள், உயர்ந்த பொன், முத்து, இன்சுவையுடைய தீந்தேன் இத்தகைய பல் வேறுவகைப்பட்ட பொருள்களை வணிகர்கள் தங்கள் மாடங்களிற் சேர்த்துக் குவித்திருத்தலால் அம்மாடங்களை யாவரும் பார்த்தமாத்திரத்தில் மலைக்கும்படியான மலைக்கு உவமை கூறுவதும் முற்றும் பொருத்தமுற்றதாயிருக்கின்றது. இத்தன்மை வாய்ந்த வணிகர் வீதியைத் தினம் சோதிப்போரிடத்திலகப்படும் மணி முத்து வகையறாக்களில் சிறிதுபாகமேனும் அளகாபுரித்தலைவன் குபேரன் மனைவியர் முலைமுகட்டில் காணக்கிடைக்காதென்றால், தேவேந்திரனும் நம் நகரச்செட்டிமார்களுக்கு அவ்விஷயத்தில் தாழ்ந்தவன் என்று எடுத்துச்சொல்லலும் இன்றியமையாததன்றோ? இதன்றி யானைமுதலிய வாகனாதிகளில் ஏறிநடத்தி கம்பீரமாய்ச்செல்லும் அரச, மன்ன, மந்திரி, முதலியோர் வசிக்கும் வீதிகளும், குதிரைகள் கொட்புறவுலவும் செண்டுவெளியும் இந்நகரத்தில் உள்ளன. வேதங்கள் முறையிடும் முறைப்படி ஜோதிசுவரூபராகியும் திரிநேத்திரதாரியுமாகியசிவபெருமானை முறைப்படி வழிபடும் அந்தணர் வீதிகள் பலவும் இந்நகரத்தேயுள்ளன. பொன்னியென்று சொல்லப்பட்ட இனிய நன்னீராகிய காவிரியில் ஸ்நானஞ்செய்து புனிதமாய் மடிப்புடவையுடனேயே அறுசுவையுண்டிகளுடன் விருந்துணவுத்தயார் செய்து அன்புடன் அதிதியர்களை நல்வரவேற்று போஜனம் செய்வித்து இன்பமே அனுபவித்திருக்கும் இம்மாநகரத்திலுள்ள பார்ப்பனமகளிர் வீடுகள் இந்நகரத்தில் அநந்தம் உள்ளன

அறுபத்துநான்கு கலைஞானங்களையும் ஐயந்திரிபறவோர்ந்துணர்ந்த கௌரி மாயூர க்ஷேத்திரத்தில் வாசஞ்செய்யா நிற்கும் அந்தணர்கள் எப்போதும் மஹாதேவன் உருவமில்லாமல் மற்றெவ்வித பிம்பங்களின் உருவங்களை மனமொப்பிப்பார்க்கின்றவரிலர்; அன்னவர்களின் வாசக்கிரகங்களாகிய பிரம்மாலயங்கள் ஏற்பட்டிருக்கும் ஒழுங்கைப்பற்றி வெகுவாக வர்ணித்துக்கூறலும்

இயலுமோ? மகாமகிமை பொருந்திய சத்தியோஜாதாதி பஞ்சமுகங்களினின்றும் தோன்றி பொது சிறப்புவேதாகமங்களிலும் முறையே வல்லராய் பரார்த்தத்தோடு ஆன்மார்த்தத்தையும் விரும்பி அருச்சனைபுரியும் எண்ணில்லாத ஆதி சைவர்களின் திருமனைகள் இங்கு அமைந்திருக்கும் ஒழுங்கும் என்னே! வேதாகமங்களினின்றும் பிரிந்து பல்வேறு கிளைப்பட்ட சாஸ்திரக்கல்விச்சாலைகளும் எண்ணிறந்தன ஆங்குள்ளன. தம்மையடுத்துக்கல்வி பயிலுறவரும் மாணவர்களுக்கு ஐயந்திரிபு என்னும் அச்சங்களை யொழித்துதவும் சிறந்த ஞானாசிரியர்கள வாழிடங்களும் பல இங்குள்ளன அறியவேண்டிய நல்விஷயங்களையெல்லாம் நன்கறிந்து காமக்குரோத லோபமோக மதமாற்சரிய முதலியவைகளை யறவேயொழித்து தனித்திருந்து யோக சமாதியில் ஜோதி சுவரூபத்திலே கலந்து பிரமாநந்தத்தை அனுபவிப்பதிலேயே காலங்கழியா நிற்கும் பெருமைபொருந்திய சைவமுனிவர்கள் வாழிடங்களும் பல உள்ளன. முல்லையரும்பனைய அப்போது சமைத்த அன்னத்துடன் பொன்வர்ணமாயமைந்த பருப்பு, அவ்வளவிற்கேற்ற புத்துருக்கு நெய்யுடனும் கத்தபல இனிய வாசம வீசாநிற்கும் பொரிக்கறி புளிக்கறிசகிதமாய் போஜனம் தயார்செய்து அதிதி சத்காரம் செய்யும் அன்னசத்திரங்கள் அளப்பில்லாதன ஆங்குள்ளன. இனிமையான பானகமும், மணத்திற்கு இசைந்த வெட்டிவேர் விளாமிச்சிவேர் முதலியவைகளையிட்டு வாசனையாய்த் தயாரித்த இன்னிள நீருடனும், வாசனைப்புற்கள் முதலியவையும் அரைத்தொத்த பல சரக்குகளையுஞ் சேர்த்து இனிமையாய்த் தயாரித்துக் குடங்குடங்களாய் அடுக்கி ஆங்குவருவோருக்கும் ஏராளமாய் தாகவேட்கைதணித்தற்குரிய தண்ணீர்ப் பந்தல்கள் பலவும் ஆண்டு செவ்விதாய் இடங்கடோறும் விளங்கும். வாசனைமிக்க துளவத்தாமம் புனைந்த இலட்சுமி பதியாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி வாழ்கின்ற கோயில்கள் பலவும் உலகுக்குபகாரமாய் அப்போதைக்கப்போது தோன்றியுள்ள தேவதைகளின் கோயில்கள் எண்ணிறந்தனவும் ஆங்காங்கு சிறப்புற்று விளங்கா நிற்கும். உபப்பிரமர்களில் ஒருவரான தக்ஷப்பிரஜாபதியினது யாகத்தைச் சிதைத்த வயிரவக்கடவுள், மகிஷாசுரனைச் சங்காரஞ்செய்து உலகவாதையை அறவேயொழித்த நாராயணி முதலிய பல்வேறு நாமங்களைத் தரித்த சக்திஸ்வரூபியாகிய திரிசூலி, அஸ்தத்திலே உற்பவித்தமஹா சாஸ்தா என்னும் ஒப்பற்ற பெருங்கடவுள், ஆறுமுகக்கடவுள் என்னும் சுப்பிரமணியக்கடவுள் ஐந்துகரங்களையுடைய யானைமுகக்கடவுளாகிய விக்னேசுவரர் இப்படிப்பட்டவர்கள் பல்லோர்வாழும்படியான அளவிற்கடங்காத கோயில்கள் பல இங்கு செவ்விதாய்ப் பொலிவுடன் விளங்காநிற்கும்.

"மண்மகள் மார்பினுக்கு மாயூரமொருபதாகனி
கண்ணுமற்றதிற்பதித்த கதிர்மணியுமைநாயகந்
தண்ணறுஞ்சிறப்பார் நாட்பணியநமணிமேபோலும்
விண்ணவர் புகழ நாளும்வள்ளலார் விளங்குங்கோயில்."

இங்ஙனம் கீர்த்திமிக்க மாயூர க்ஷேத்திரத்தில் விசேஷமான வைடூரியமிழைத்த படிகளுடனும், தாமரை மலர்களுடனும் உள்ள தீர்த்தங்கள் பலவற்றுள்ளும் ஸ்நானஞ்செய்பவரின் சம்சார பந்தங்கள் அறுபடுவதுடன், அவருக்கு விசேஷமான நற்கதியுமுண்டாதல் கூடுமென்பதற்கு ஆட்சேபனைசிறிதுமின்று.

பெருமையுற்ற பர்வதராஜன் அருந்தவம் இயற்றிப்பெற்றெடுத்த உமாதேவியார் விருப்புடன் ஈசுரனை மயிலுருக்கொண்டு செய்யும் பூசையைக்காணுமாறு, பற்பல தேவர்கள் தங்கள் உயர்வான பல சிகரங்களையுடைய விமானங்களுடன் வந்து இங்கு தங்கியிருத்தல், பர்வதராஜனை யொத்த நண்பர்களாகிய பல மலைகள் அங்கு வந்து படிந்திருத்தல்போன்றுள்ளது. மயிலுருத்தாங்கிய அம்மை பூசை செய்தவிடமாகிய ஒப்பற்ற மாமரம், அதனடியில் தபஞ்செய்த அம்மையாகிய உமைக்கு நிழல் கொடுத்துபகரிப்பதன்றி இவ்வம்மையின் பூசையைக்காணுறுவான அங்கு வந்திருந்த தேவேந்திரன், பிரமன், நாராயணமூர்த்தி முதலிய தேவர்கள் மீதும் வெயில்பட்டு வருந்தாவண்ணம் விசேஷமான நிழலைத்தந்திருந்தது. இந்நகர்ப்பெருமான் கோயிலில் நிருத்த மண்டபங்கள் திருவிழாக் காலங்களில் உபயோகப்படும்படியான மண்டபங்களும் நல்லவேலைப்பாட்டுடனே சாஸ்திர விதிப்படி அமைக்கப்பட்ட அர்த்த மண்டபங்களும் நூறாயிரம் தூண்கள் வாய்ந்துள்ள ஆயிரக்கால் மண்டபங்களும் பார்ப்பவர் கண்ணைக் கவரும்படியான சித்திரவேலைப்பாடுகளுடனமைக்கப்பட்ட பலவகைப்பட்ட விசித்திர மண்டபங்களும் செறிந்துள்ளன. சதாசர்வகாலமும் மண்ணோர்களும், ஸ்தலதரிசனார்த்தம் இங்கு வந்தடையும் விண்ணோர்களும் தங்கள் தங்கள் பாதங்கள் அடிக்கடி பூமியில் பதிதலால் அழுத்தப்பட்டு கோயில் தெருவீதிகளில் தோன்றும் நவமணி வர்க்கங்கள் ஏராளமாய் எவரும் கண்ணுறலாம். தெருக்களின் ஓர் பக்கத்தில் பொற்கட்டிக்குவியல்களும், மற்றோர் பக்கத்தில் பலவித வர்ணமுள்ள பட்டாடைத்தொகுதிகளும் கவனிப்பாரின்றி, வறிதே விடப்பட்டிருக்கின்றன வென்றால் இந்நகரின் வளப்பத்தைப்பற்றிப் பின்னும் பின்னும் கூறல் வேண்டுமோ? எந்த வேளைகளிலாகட்டும் எந்த விடத்திலாகட்டும் எவர்கள் சேர்ந்த விடங்களிலாகட்டும், தேவார கோஷ்டிகளின் சப்தமும், திருவாசகம் ஓதுதலினுண்டாகிய ஓசையும், இருக்கு, யசுர், சாமம் அதர்வணம் என்னும்

நான்மறைகள் சந்தை சொல்லுமோதையும், ஆகமம் கற்கும் சபதமும், புராணங்கள் பலபடிபபோர் சப்தமும், ஹரஹர என்று அநுசரியத்தராய் பக்தாகள் சிவநாம சங்கீர்த்தனம் செய்யுமோதையின்றி அங்கு வேறேதும் ஓசையுங் கேட்கப்படவில்லை. மின்னார்வளைகளினின்றுண்டாகும் கலகலவெனும் ஒலியும், அன்னார் சிலம்பினின்றெழும் சப்தமும், மண்மங்கலப்போர் முதலியன பற்றி இடைவிடாவதனை விக்கப்படுகின்ற பேரிகைகளின் ஒலியும், வீணைகள் போன்ற நரம்பியங்களினின்றுண்டாகும் வாத்திய ஒலியும், கைத்தாளங்களை வாத்தியங்களுக்குத் தகுந்தாற்போல் தட்டுவதனால் உண்டாகும் ஓசையும், மற்றைத்தொளை வாத்தியங்களினின்று முண்டாகும் பலவகை ஒலிகளும் ஒன்றாய்ச்சேர்ந்து கடலொலியைக் கூடத் தம் வல்லமை மொய்ப்பட்டதனால் அடக்குவதாயிருந்தது. பேலாணசாசுவத பதம் கிடைக்கவேண்டி இந்திரனை யுள்ளிட்ட தேவர்களெல்லாரும் மறைறயோரும் விடைவிடாது மாயூரநாதர்கோயில் வாயில் புக்குக்காலையிலும் மாலையிலும் உச்சிகாலங்களிலும் அநேக விசைத்தண்டாகாரமாய் பூமியில் விழுந்தும், பிரதக்கணங்கள் பலமுறையே செய்தும் தரிசனம் செய்வாராகின்றார்கள். இத்தகைய மகாமகிமை பொருந்திய, கோயிலினகண்ணே எம்மம்மையாகிய அபயப்பிரதாம்பிகையோடும் பக்தர்கள் மனது சந்துஷ்டியாகும்படி சடைப்பெருமானாகிய சிவபெருமன் கிருபாநிதியாய் அரசுபுரியாநிற்பார்.

(நகரச்சருக்கம் முற்றிற்று.)

---

3. நைமிசாரணியச் சருக்கம்.

பண்டைக்காலத்தில் முத்திதரும நகரங்கள் ஏழனுள் ஒன்றதாய்விளங்கும் காஞ்சிமாநகரத்தின்கண்ஏதோஓர் காரணத்தைமுன்னிட்டு அன்னவாகனனும் மலர்மிசைக்கடவுளுமான நான்முகப்பிரமன்ஓர்கால் பிரசன்னமாக அன்னவனைக்கண்டஅருந்தவத்தோர்கள் பல்லாயிரவர் அவரைச் சூழ்ந்து பற்பல துதிகளாற்போற்றி, தாமரைமலரில் வீற்றிருக்கும் தேவே! நாங்கள் யாதொரு இடையூறுமுறுவண்ணம் பொருந்தி எங்கள் தவங்களைச்செய்தற்கோர் பொருத்தமான இடம் குறிப்பீராக என நயந்து கேட்டார்கள். விசேஷமான தபசினாற் சிறந்த முனிவர்கள் சொல்லியவற்றைச் செவியினாற் கேட்டவேதநாயகன் ஆங்குறு தருப்பை யொன்றினை யமுகிய நேமியாக்கி அபிமந்திரித்து அதனைப்பூமியின்மீது விசையாய் விட்டு ஏ!முனிவர்காள்! இந்நேமி எங்குப்போயுற்றதோ ஆங்கேயே சென்று நீவிர் அமைதியுடன் வீற்றிருப்பீர் என்னப்பணித்தான்.

[illegible] பணிந்து கேட்ட முனிவர் யாவரும், பூமிசையேகும் [illegible] செலுத்தானுகள பிரமனால் விடப் பட்ட [illegible] அநேக காலத்தைகள் [illegible] இமை பொருந்திய [illegible] நின்றது [illegible] அங்கு சென்ற முனி [illegible] நைமிசாரணிய [illegible] தில

'ப [illegible]
[illegible]
[illegible]
[illegible]'

ப [illegible] செய்யப்படும் [illegible] [illegible] முகப்பிரமனையும் [illegible] சிறப்புகள் வாய்ந்த [illegible] கூட்ட [illegible] முனிவர்க [illegible] பண்ணப்படுத்தும்; அவை [illegible] கையிலகப்பட்ட [illegible] கொண்டு அமமு [illegible] புரியும். இவைகளன்றி [illegible] கருதப்படுகிற [illegible] வகையாக [illegible] தங்கள் சருக்குகளினு [illegible] உதிர்ந்துள்ள கனிகளாலும், காய்களாலும் முனிவர்களுக்கு விசேஷமான உபசாரங்கள் செய்வனவாகும்.

இத்தகைய நாட்டில் புலியும், மானும், பசுவும், சிங்கமும் ஓர் துறையில் தண்ணீர் குடிப்பனவாகும். அழகிய படத்தைக் கொண்ட பாம்பினை முன்னும் மயில் தன் கலவம் விரித்தாடாநிற்

கும்; புலியும் தன் முலையினின்று பெருகும் பாலை மான்குட்டிகளை குடிக்கக்கொடுக்குந் தன்மையுள்ளது நைமிசவனம். இப்பேர்ப்பட்ட நைமிசவனம், யாகசாலைகள், பாகசாலை, வேதசாலை, நான்மறையோதுசாலை, புராணசாலை, முதலிய பலவேறுவகைத்தான பலகோடி நல்லிடங்களை பெற்று வாய்ந்து விளங்கா நிற்பது. குற்றமில்லா முனிவர்களால் தொகுக்கப்படும் வேதமுறுகரும் மகா பஞ்சாட்சர மந்திரசொரூபமாகிய பரமசிவமூர்த்தியை விதிப்படி அர்ச்சித்தேத்தநுசரித்துவந்ததாகிய விசேஷத்தையுடைய, சமுத்திர ஸ்நானசலமே ஒரேபடிச்சிறந்ததாக அடங்கியிருக்குந் தன்மைத்து. இப்பேர்ப்பட்ட நைமிசாரணியத்தில் ரிஷி. காசியபர், பரத்துவாசர், கௌதமர், வால்மீகர், பராசரர், சௌனகர், வாமதேவர், அத்திரிபுகர், கர்க்கஷி, வைசர், சமைநுவர், மார்க்கண்டேயர், பாத்திசித்தர், சுகபாண்டவர், கோமதசர், அகஸ்தி, அரதியன், சுகன், வாமதேவன், பிருங்கி, பிருது, நாராயணன், அப்பதம்பன், இலிகிதன், சுதீக்ஷணன், சாண்டில்லியன், புலகன், சந்திரசூடன், குபேரகன், புலத்தியன், ராபாஷி, சனற்குமாரன், நாரதன், ஆலிமாமாடவியன், அரபாதநன், காசிபன், விசுவாமித்திரன், கலைக்கோட்டுமாமுனி என்னும் பெயருடைய இருஷியசிருங்கன், கௌஷபாண்டன், மாசேதசன், குசருசு, பாரதகாம், சநந்தன, ஆசுவலாயனன, பராசரன், சநாதனன், சிருநன, சனகன், வசிட்டன், பிரசண்டன, துருவாசன், தத்தாத்திரேயன், தௌமியன், பப்பு, சரபங்கன், உபமனியன், அசிதகன், சுவனகன், கௌசலன், பாணினி, விபண்டகன், காலவன், பாதராயன், காசியபன், முற்சலன், கபிலன், அட்டவக்கிரன், வைசம்பாயன், பகவன், கவுண்டின்னியன், தூமபானன், செந்தமிழ்வியலை வகுத்த திரணதூமாக்கினி, சமதக்கினி, இத்தகைய பல்லாயிர மகருஷிகள் ஒருங்கு கூடி நைமிசவனத்தில் பெருத்த சத்திர யாகம் செய்ய ஆரம்பித்தார்கள். இப்படிச் சிவபிரானுடைய கூட வன்மையாக ஆரம்பஞ்செய்த இருஷிகள் சுபானுகிய பரமேசுவரரின் உபதிருவடிகளைக்கொண்டல் மறிபெருப் பிறவிமாய்ப்பதற்குரிய சாதனையாயிருப்பதென்றுன்னியவராய, அப்பேர்ப்பட்ட சாதனத்தை யார் எவ்வண்ணம் பெற்றுக்கடைத்தேறுவதென்னும் கவலையில் மூழ்கினவராயினார்.

அப்பேர்ப்பட்ட பரமபதியாகிய பரமசிவனது பாதாரவிந்தங்களைப்பாங்குபெறப் பெறுவது யாகத்தினாலோ? மகத்தான விரதாதிகள் அநுஷ்டித்து பரமசிவபந்தத்தை யடையலாமா? வேண்டியவர்களுக்கு வரையாது கொடுத்தால் அன்னவர் பதத்தை யடையலாமா? மகாயோகம் செய்துதான் அம்மாபுருடனைக் காணவேண்டுமோ? ஞானமார்க்கத்தில் நின்று அப்பரமபதியை யடையவேண்டுமோ? உலகப்பற்றுக்களிலகப்பட்ட மண்பொன்மாது என்னும் ஏஷணாத்திரயங்களை தம்மினின்றும் நீக்கி பஞ்சேந்திரியங்களையும்

[illegible]

... முனிவர்களே! நீங்கள் நல்ல கேள்வி கேட்டனிர்! அன்னவர் ... எல்லையற்ற பெருமையும், அப்பெருமான் ... அத்தலத்தினை ... பெருமைகளைத் தெரிந்தவர்கள் புகலக் கேட்டதும், ... தலத்தினைப்பற்றிய மான்மியத்தினைத் தனிமையில் சவணமாய்ப் பக்தியுடனும் கேட்டு மீட்டும் சிந்தித்த

ளும அமயகிமைகளைப்பிறரறிய விரித்துக்கூறலும், அன்ன தலத்தில் விரைவிற்சென்று மனத்திருப்தியுடன் வசித்திருத்தலும் அத்தலத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீரில் விதிப்படி ஸ்நானஞ்செய்தலும் அத்தலத்தில் அமர்ந்திருக்கும் பெம்மானைத்தரிசனம் செய்தலும், தேன்நிறைந்துள்ள புஷ்பங்கள்கொண்டு அர்ச்சித்தலும் ஆகிய இவைகளே ஈசுரன் பாதங்காண்டற்குரிய சிறந்த உபாயங்களாகும், என்றனர்.

இப்பேர்ப்பட்ட உபாயங்களில் ஏதேனுமொன்றினாலேயே நீங்கள் கொண்ட கருத்து நிறைவேறுமென்று சூதபுராணிகர் கூற, இவர் சொல்லியவைகளைத் தாமுண்மையெனவுட்கொண்டவராய் முனிவர்கள் பின்னும் கேட்கலுற்றார்:- ஓ! சூதபுராணிகரே! 'விசேஷமான சிறப்புக்கள் வாய்ந்த சிவத்தலம் ஒன்று சொல்லுங்கள்! அப்பேர்ப்பட்ட சிவத்தலத்தை எங்கு நின்று எற்று நினைந்தாலும், அஃதிருக்கும் திசை நோக்கி ஒருகால் ஸ்தோத்திரஞ்செய்தாலும் அஃது ஒருங்கே இவ்வுலக இன்பத்தையும், மோட்சபதவியையுமளித்தலோடு மேதாவிகள் பல்லோரும் வியந்தேத்தப்பட்ட தொர்தலமாயும், கொடிய பாதகங்கள் கோடானுகோடி செய்திருந்தாலும் அத்திருத்தலத்தின்பேர் சொன்னமாத்திரத்திலேயே அப்பாதகங்கள் பஞ்சாய்ப்பறந்துபோகும்படியாயும், நினைத்தமாத்திரத்தில் நினைத்த எவற்றையும் கொடுக்கவல்லதாயுமுள்ள ஒரு க்ஷேத்திரத்தின்பெயர் சொல்லுமின்!' என முனிவர் கேட்டார்கள். இப்படிக்கூறக்கேட்ட சூதபுராணிகர் அத்தியானந்தவசத்தராக ஒரு முகூர்த்தகாலம் தீர்க்காலோசனைசெய்து, குற்றங்குறைகளில்லாது மேம்பட்டு விளங்காநிற்கும் கௌரிமாயூரக்ஷேத்திரத்தினை நினைந்து பெரும் புகழ்பெற்ற இவ்வற்புதத்தலத்தினைக்காட்டிலும் இப்பூமண்டலத்தில் எல்லாவற்றிலும் மேம்பட்டு விளங்கும் ஸ்தலம் இல்லை எனத்துணிவுடன் முனிவர்க்கு கூறிய சூதபேரோன் அடியவர்களது அஞ்ஞானந்தகாரத்தை நீக்கி ஆன்மபோதத்தை விளைவிக்கும் அகத்திய விநாயகனையும் கிருபாகரமூர்த்தியாம் அபயப்பிரதாம்பிகாஸமேத வள்ளலார் என்னும் பெயர்வாய்ந்த சிவபெருமானையும் ஞானசிரியனாகிய ஸ்ரீஷண்முகக்கடவுளையும் மனதில் தியானஞ்செய்துகொண்டு, பதினெண்புராணங்களின் கர்த்தாவாகிய ஸ்ரீவேதவியாசாது சரணாரவிந்தங்களையும் மனதுட்கொண்டு சூதமாமுனிவர் கூறலுற்றார். ஏ! விப்பிரச்சிரேஷ்டர்காள்! நீவிர்கேட்டபடி யோசனைசெய்து பார்த்ததில், எல்லாப்பயன்களும் ஒருங்கேதரவல்லதாயிருக்கும் தலம் இப்பூமண்டலத்தில் கௌரிமாயூரமேயொழிய வேறொன்றின்று; இத்தலமகிமை இதற்குமுன் எவருக்கும் சொல்லப்பட்டதின்று; இப்பேர்ப்பட்ட சிறந்த க்ஷேத்திரத்தை நினைப்பதற்கு முன்னமேயே ஒருவித ஆநந்தம்

[illegible]னை எனச்சொன்னதைக் கேட்ட [illegible] மன்னன் [illegible] கடபோகிற [illegible] ஆனந்தம், [illegible] [illegible] ஏதாவது சிறந்த ஸ்தலம் இல்லையா [illegible] [illegible] புராவஜன்மத்தில் நல்லபூஜை செய்த [illegible] [illegible] பக்கொடுத்துவைக்கா [illegible] [illegible] [illegible]யைச்சொல்ல நான் ஆர்? [illegible] எல்லையில்லாப [illegible] [illegible] தால் [illegible] நான் [illegible] [illegible] மெய்யன்புடனும [illegible] [illegible] முனிவர் [illegible].

(நைமிசாரணியச் சருக்கம் முற்றிற்று.)

---

4 திலீபன் முத்தியடைந்த சருக்கம்.

ஸ்ரீ [illegible] பாதத்தியைச்சாண்டுவந்த புருஷ [illegible] மன்னுயிரைத் தனதுயிர [illegible] மறைவேதாரும் தன்னை [illegible] இடையறுபக்தி [illegible] நருடைகீழ் ஆட்சிசெய்துவரு [illegible] முகக்கடவுளின் புத்திரனாகிய [illegible] வாக்கங்கள் தம்மைச்சூழ்ந்துவர [illegible] முனிவர் வருகையைக்கண்ட [illegible] தன்னிருக்கையை விட்டெழுந்து, [illegible] எதிர்கொண்டுசென்று, மரியாதையுடன் அழைத்து [illegible] ஆசனம் [illegible] அர்க்கியபாதத்தியாசமனங்கள் [illegible] [illegible] தனங்கள்பல உள்ளன்புடன் செ [illegible] ஸ்தோத்திரம்செய்து, தன்னிருக [illegible] பண்ணிக்கொண்டு ஆசையுடன் சிலவார் [illegible] வளைப்பிளக்கும்படியாய் வேகமாய்ச்சகியபர் [illegible] பாற்பெருகி அலைகளுடைய கடலிலே கலக் [illegible] [illegible] பிரசங்களிலுமுள்ள மகாக்கியாதிபெற்ற [illegible] மகிமைகளைப்பற்றி எனக்குமுன்னமே சொல்லியிரு [illegible], திருவானைக்கா, திரிசிராமலை, ஆலந்துறை, திரு [illegible], திருவையாறு, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி [illegible] கும்பகோணம், திருவேரகம், திருப்பட்டீச்சுரம், சித் [illegible] வாம், திருவிடைமருதூர், கோமுத்தீசுவரம் முத [illegible] நலங்கள் தான் மேம்பட்டதென எனக்குத்தி [illegible] ருக்கின்றீர்கள். இத்தகைய க்ஷேத்திரங்களுள்

ளும், இன்னும் [illegible] சினோத
மாத்திரத்திலேயே முத்திகாலத்திலமாயிருக்க [illegible]
மெது சொல்லுமென்று முறையென்று முறையான் [illegible]
னேன். அதற்கு மாயூர க்ஷேத்ர [illegible]
[illegible] ரின் [illegible]
க்கு [illegible] அப்பொழுது [illegible]
ளவில்லை அதனை [illegible]
யுமாறு [illegible] அரசன் [illegible]
[illegible] சிவ [illegible] புராண [illegible]
சையுறுமவனை [illegible]
னுவான் [illegible]
டுகின்றனன் [illegible] மாயூர க்ஷேத்திரமகிமை [illegible]
உள்ளவாறு [illegible]
சிவபுராணங்கள் [illegible] தாயிருக்கும்
பெற்ற [illegible]
மாயூரமான்மியம் [illegible]
இப்புனுமகவனைந்து [illegible] விராயக
[illegible] தேக்ஷ
திரத்தில் அ [illegible]
அருள்பெற்ற விஷ்ணு [illegible]
அவ்வியா [illegible]
ய்தவிதமும் [illegible]
சிவார்ச்சனை செய்தவிதமும். [illegible]
ற்ற சிவபிரானை அன்னவுரு [illegible]
கிய சிவபெருமானை மிகக [illegible]
தேவியார், ஸ்ரீமந்நாராயணமூர்த்தி முதலியவர் [illegible]
தந்து அவர் [illegible]
மும், அதனை மாயூரநாதர் [illegible]
மும், அ [illegible]
டதும் [illegible]
[illegible] போற்ற, அன்னவிடமிரு
ந்து அரிதினவிடை பெற்று [illegible]
தாணிகளுடனும், குமரேசனுடனும் ஸ்தல [illegible]
காட்டப்புறப்பட்டு, [illegible]
கள் பலவற்றையும் [illegible]
சோடி அங்கு [illegible] விசுவநாதனைச் சேர்ந்து,
அவனைக்குறித்து [illegible] அங்கட
வுள் உள்ளன்புடன் ஸ்தோத்திரம் செய்துமீண்டு வழியில் அங்
காங்கு தன்னைத் தாபட்ட தலங்களையும் [illegible] இயடனை
தரிசித்து ஆங்காங்குள்ள அமரிகைகளையும் ஸ்தோத்திரஞ்செய்து

ங்கொண்டு ஸ்ரீசலம் வந்து சேர்ந்து ஆண்டு ஸ்ரீசைலேசனை வணங்கிப்போற்றினான். பின்பு திருக்கேதாரம், திருக்காளத்தி, திருக்காஞ்சிபுரம், திருவாலங்காடு, திருக்கழுக்குன்றம், திருவொற்றியூர், திருவண்ணாமலை, விருத்தாசலம், திருப்பாதிரிப்புலியூர், சிதம்பரம், சீகாழி, புள்ளிருக்கும் வேளூர், முதலிய சிவஸ்தலங்களோறும் தலயாத்திரை செய்து ஆங்காங்குள்ள கோயில்களிலுள்ள எம்பெருமானையும் உலகின்ற அம்மையும் தரிசனம் செய்தும், ஆங்குள்ள புண்ணிய தீர்த்தங்கள் பலவற்றுள்ளும் படிந்தும், காவிரி நதிதீரம் வந்துசேர்ந்தான். இவன் அங்குவந்து சேர்ந்தகாலம் துலாமாதமானமையால், அத்துலாமாதத்தில் பலமுனிவர்களுடன் இவ்வாசன்முறைப்படி அக்காலத்தில்காவிரியில்நீராடி, விபூதி உருத்திராக்கம் புனையப்பெற்ற திவ்வியாங்கங்களையுடையவனாய் பற்பல தானங்களையும் சற்பாத்திரங்களுக்கீந்தான். பின்னர் தன்னைச்சூழ்ந்துவந்த இராஜபரிவாரங்களுடனே மகாதேவன் வைகும் திருக்கோயிலிற்புகுந்து தமிழ்ப்பாஷை மணமிகுந்த செவ்விதான திருவாயினால் வேதவிதிப்படி அகஸ்தியர் அர்ச்சனைசெய்த பெருமை பொருந்திய அகத்தியவிநாயகரைத்தொழுது அவருடைய அநுக்ஞைபெற்றுவள்ளலாகிய சிவபெருமான் சந்நிதானம் சென்று மனம்நெக்குருகி எண்ணிறந்தமலர்களால் ஈசுவரனைப்பூசித்து பிரமானந்தத்தை அநுபவிப்பானாயினான். இப்பாதேவி அபயப்பிரதாம்பிகை கோயிலிலும் புகுந்து பூமியில் விழுந்து முறைப்படி வந்தனைகள் ஸ்தோத்திர வழிபாடுகள் முதலியன செய்து அந்த க்ஷேத்திரத்திலேயே நெடுங்காலமளவும் வசிப்பானாயினான். அம்மன்னன் இக்கோயிலுக்குவேண்டிய கோபுரத்திருப்பணிகளும், திருவிழாக்களும் ஈசுவரனுக்கும் ஈசுவரிக்கும் விலையுயர்ந்த எண்ணிறந்த பட்டாடையாபரணங்கள் சமர்ப்பித்தும் விப்பிரசிரேஷ்டர்களை மனப்பூர்வமாய் அபிமானித்தும், நெடுங்காலம் இத்தலத்திலேயே வசித்தான். இவ்வாறு அங்கு பலகாலம் வசித்த திலீபமன்னன் பரமேசுவரன் ஆஞ்ஞையால்தங்களதாகிய அயோத்தியாபுரி மீட்டும் சேர்ந்து வெகுகாலம் சுகமாக வசித்துப்பின்னர் சிவலோகப்பதவியையடைந்தான். இவ்வாறு நாரதமாமுனிவர் திலீபனுக்குச்சொல்லிய விதத்தினை யறிந்த நானும் அறிந்தவாறு சொல்லுகிறேனென்றார் சூதமாமுனிவர்.

(திலீபன் முத்தியடைந்த சருக்கம் முற்றிற்று.)

5. நான்முகன் சிருஷ்டித்தொழிலடைந்த சருக்கம்.

முன்னமொரு கற்பாந்த காலத்தில் துளசித்தாமம் புனைந்த ஸ்ரீ மந்நாராயணமூர்த்தியின் நாபிகமலத்தில் பரமேசுவரமூர்த்தியாம் பரமபதியின் இச்சாமாத்திரத்திலே, புகழ்பெற்ற நான்முகப் பிரமன் தோன்றினன். அவ்வாறு தோன்றிய வேதக்கிழவன் தாமரைத்தண்டின் வழியாய் இறங்கி விஷ்ணுவை வணங்கி ஏ! முகுந்த! ரக்ஷாமூர்த்தியே! நீவிர் எனக்கிடும் பணியாது என வினவினன். ஏ! புதல்வனே! நீ யாவர்க்கும், நினக்கும், எனக்கும், நாயகராவார் கூர்மையான சூலாயுதத்தைக் கையிலே தரித்த சிவபெருமானென்றுணர்! அன்னவனை நோக்கித் தவமியற்றி நின்சிருஷ்டித்தொழிலைத் தவறுதலின்றிச் செய்வாய் என்றனர் மகாவிஷ்ணுவும். இதனைச் செவியுற்ற மலர்மிசைக்கடவுள் ஆதியந்தமில்லா நித்திய பராபர வஸ்துவாகிய பரமேசுவரனை வழிபடும் தலம் யாதென நன்கு கருதிச் சற்று ஆலோசித்தனன். இங்ஙனம் யோசித்து நிற்குமளவில் பொன்னித்தென்கரையில் திருமயிலாடுதுறை என்று சௌரியமாய் விளங்கும் வனமொன்றிருக்கிறது, அதில் நீ தவஞ்செய்குவையேல் அர்த்தநாரியாகிய சிவபிரானருளால் திருஷ்டித்தொழிலடையப்பெறுவாய் [illegible] ஓர் அசரீரி கணீரென்று மொழிந்ததைப் பெருமையானாகிய பிரமன் கேட்டான்.

நினைத்தகாரியம் இனிது கைகூடலாமென்ற சந்தோஷத்துடன் விரைவுடன் நான்முகன் பூமியைக் குறித்து வந்து ஸ்ரீமயூரவனத்தினையடைந்தான். அவ்வனத்தருகிலுள்ள காவேரியிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து, விபூதி ருத்திராக்ஷங்கள் முதலியமுறைப்படி அணிந்து சர்வேசுவரனாகிய சிவபெருமானைப் பரிபூரணமாய்த் தியானிப்பானாயினன், "காமக்குரோதாதிகளை யறவேயொழித்து நான்முகன் ஈசுவரானுக்கிரகம் தனக்குமிக்குண்டாகும்படி பரமசிவனைக் குறித்து அருந்தவமியற்றுவானாயினன். பற்பல யுகங்கள்காறும் ஏகாக்ர சித்தனாய்த் தவம்புரிந்த நான்முகனை வியந்த பரமேசுவரன் இடபாரூடராய் அன்னவனுக்குக் காட்சி கொடுப்பாராயினர். இக்காட்சியைக் கண்ணுறக்கண்ட நான்முகன் ஆனந்தபுளகாங்கிதனாகி பலமுறை வந்தித்தெழுந்து பலவேறுவிதமாய ஸ்தோத்திராதிகள் செய்து இப்போதுதான் நான் கடைத்தேறினேன் என்றும் பலவிசை கூறுதலுற்று, இத்தகைய கோலம் பார்க்க இவ்விடமும் கொடுத்து வைத்தேனே எனமனமுருகிக் கூறுவானாயினன்.

இங்ஙனம் பிரமன் ஸ்தோத்திரங்களுக்கெல்லாம் திருவுளமிரங்கிய சிவபெருமான் பிரமனிடம் நின்று, அருந்தவமியற்றிக் களைத்தனை பிரம! என்று அவர் தமதுகையால் அவனது முதுகை தடவிக் கொடுத்துச் சிறப்புச் செய்தனர். ஐய! இத்தகைய [illegible] பெருமானே! நீவிர் [illegible] தந்தருளியதற்கு மேலான தோர்காரியம், [illegible] திருவுளமி [illegible] புரிதல் யாதும் இல்லை யென்று பிரமனை நோக்கி ஐய! பிரம! நின் விருப்பம் நிறைவுற்றது; நம் சுவரூபமாயுள்ள இலிங்கமொன்று தோன்றியுள்ளது; மற்றது சுயம்புவாய் அநாதி காலந்தொட்டு இருப்பது; இப்பேர்ப்பட்ட இலிங்கம் தினது நோக்கப்படுமேய மெய்யாகத்தக்க [illegible] பாவனையுடன், கோடாகோடி பாபங்களையும் ஒரு கண நோக்கில் ஒழிப்பதில் வல்லது. விசேஷமாய்ச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற இருக்குவேதாதிகளும் இதன் புகழுரைக்க இளைத்துவிடுகின்றன; இப்பேர்ப்பட்ட இலிங்கமூர்த்தத்தின் எதிரேயுள்ள பக்கத்துள்ள தீர்த்தத்திலே அபிஷேகஞ்செய்வித்துப் பூசித்து [illegible] நீ அடையவிருப்பதை [illegible] வாய். ஒப்புயர்வற்றவனே! இன்று முதல் இத்தலம் [illegible] பிரமபுரமெனப்படட்டும்! [illegible] கொண்ட நகரமாவ [illegible] பிரமபுரம் என்னும் நின் பெயரைப் பெறுக; நின்னால் பூசிக்கப்பட்ட இலிங்கம், [illegible] என்று கூறியருளினார். [illegible] கூறியபடியே பிரமன் இலிங்கத்தைத் [illegible] தம்பெயர் [illegible] முறை நாள் பழுதற இலிங்கத் திருப்பூசனை விதிமுறைப்படி செய்து

"போற்றி [illegible] கருணை யுருவான பரனை
போற்றி [illegible] திருவடிப்பணிந்த
[illegible] வாய்!
[illegible] தடம்புவை!" (3)

என்று இத்தியாதி பலவகையாய்த் தோத்திரம்செய்த பிரமனுக்கு முன் ஈசன் வெளிவிய விருஷபாரூடராய்த் தோன்றி சிருஷ்டித்தொழிலைப் பிரமனுக்குக் கொடுத்து அவ்விலிங்கத்தினுள் மறைந்தருளினார். சிருஷ்டி கர்த்துவத்தைப் பெற்ற நான்முகன் அவ்விடத்தைச் சிறந்த பட்டணமாக்கி, விசுவகர்மாவைக்கொண்டு சகல [illegible] சாஸ்திர விதிப்படி அமைத்து, முன்போலவே பல்வகைச் சிருஷ்டித் தொழில்களையும்

குறைவற நடத்துவானாயினன். பிரமன் தவம்புரிந்த வனம் என்னும்பெயருடையதாயும், அவன் பூசித்த சுயம்புலிங்கம் பிரமலிங்கம் என்னும் பெயருடையதாயும், அதன் வலது பக்கத்திலிருக்கும் தீர்த்தம் பிரமதீர்த்தம் என்னும் பேர்பெற்றும் விளங்கா நிற்கும். இவ்விதமான பிரமலிங்கத்தினைத்தரிசிப்போரும், பிரமதடத்தில் முழுகுவோரும், சிவசாயுச்சிய பதவியை எளிதிலடைவார். இங்ஙனமாகப்பிரமன் எல்லாமாயல்லவுமாயுள்ள ஒப்பற்ற ஒரு பெருங்கடவுளிடத்தருள் பெற்றுத்தன்னுலகமாகிய சத்தியலோக மடைந்து தன் சிருஷ்டித்தொழிலைச்சரிவர நடத்தாநின்றனன்.

(நான்முகன் சிருஷ்டித்தொழிலடைந்த சருக்கம் முற்றிற்று.)

---

5. தக்ஷயாகச் சருக்கம்.

மகத்தான வரங்கள் பலவும் பெறற முனிவர்கள், தேவர்கள் முதலிய மற்றோரும் இடைவிடாது சூழ்ந்து போற்றுநிற்கும் பிரமபுரத்திலுள்ள சுவயம்புலிங்கத்தில் ஆவிர்ப்பவித்துள்ள சிவபெருமானின் கிருபா கடாக்ஷ வீட்சண்ணியத்தினால் சிருஷ்டித்தொழிலையடைந்து தாமரைமலர் மேலுறைவானாகிய நான்முகன் பல அற்புதப்பொருள்களையும் விரைவாய்ப்படைப்பவனானான். இப்பேர்ப்பட்ட சிருஷ்டித்தொழில்கள் எல்லாவற்றையும் தானே நின்று செய்யல் சாத்தியமாகாதெனக்கருதி தனக்குதவியாய் நின்று இச்சிருஷ்டித்தொழிலைக்குறைவற நடாத்திப் புகழ்பெற தன்மனோ சங்கற்பத்தால் ஒன்பது உபப்பிரமர்களையும் சிருஷ்டித்தான். குற்றமற்ற பிருகு, புலஸ்தியன், புலகன், கிருது, ஆங்கிரசன், தட்சப்பிரஜாபதி, மரீசி, அத்திரி, வசிட்டன் என்று பெயரிட்டழைக்கப்படுகின்ற இவ்வொன்பதின்மரே மேற்கூறிய பிரமனால் சிருஷ்டிக்கப்பட்ட உபப்பிரமராவார். இப்படிச் சொல்லப்பட்டவர்களுள் தட்சப்பிரஜாபதியென்பான் குறைவற்ற தபோமகிமையின் காரணமாக அநேக பிள்ளைகளைப்பெற்று அவர்களையும் இச்சிருஷ்டித்தொழிலையே செய்யும்படி கட்டளையிட்டான். அன்னவர்களும் தந்தையினாணையைச் செய்யுங்காலையில் வீணாகானத்தினால் இடைவிடாது பகவந்நாமசங்கீர்த்தனம் செய்துகொண்டுலாவும் நாரத மாமுனிவன் ஆங்குத்தோன்றி, ஏ! மைந்தர்காள்! நீவிர்யாது செய்ய முயலுகிறீர்? இத்தொழிலினால் நீவிர் அடையும் பயன் யாது? நீங்கள் எல்லோரும் விசேஷ சிறப்புப்பெறுத இத்தொழிலினின்றும் நீங்கி, மூதாதையர்களாலும், மற்றுமுள்ள பெரியோர்களாலும் சிரேஷ்டமானதென்று வியந்தோதப்படுகின்ற பிரமபுரத்தை இன்றே அணுகி ஒருங்குசேர்ந்து ஆங்குள்ள சுவயம்புலிங்க

சதைகானப்பூர்வமாய் வழிபட்டு ஆராதித்தீர்களாயின்! அப்படிச் செய்வீர்களாயின் நீவிர் நிரதிசயானந்தம பெறுவதும் சுலபசாத்தியமாகும்! அதனால் மண்ணுலகத்தவர்களாலும் விண்ணுலகத்தவர்களாலும் பெரிதும் போற்றப்பட்டு என்றும் அழியாப் புகழுமடைவீர்கள்! என்றார். இம்மாதுரிய வசனம் கேட்ட தக்ஷப்பிரஜாபதியின் தனயர்கள் நாரதமாமுனிவரை விரும்பியாங்கே பிரமபுரம் நோக்கிக்கடுகிச்சென்றனர். அவ்விடத்து பிரம தீர்த்தத்தில் படிந்து உள்ளங்குளிர ஆடினர். ஆண்டுள்ள பிரமலிங்கேசுரனுக்கு வேதவிதிப்படி ஸ்நானஞ்செய்வித்து அர்ச்சித்து மிக்க வந்தனை வழிபாட்டுடனே மனப்பூர்வமாய் ஸ்தோத்திரஞ்செய்த பின்னர், அப்பிரமலிங்கேசனுக்கிரகத்தினால் அப்பரசிவத்துடனே அவர்கள் இரண்டறக்கலந்தனர். இவ்வாறு தம் மக்கள் பிரமலிங்கைக்கியமாயதுணர்ந்த தட்சப்பிரஜாபதி பெருமூச்செறிந்து மற்றுஞ் செய்வதொன்றின்றெனத்தெருமந்து, மீண்டும் பழையபடி பலபுத்திரர்களைத்தன் இச்சாமாத்திரத்தினால் சிருஷ்டித்து அவர்களையும் சிருஷ்டித்தொழில்கள் நடாத்திக் கொண்டிருக்குமாறு கட்டளையிட்டருளி தான் இனிமையாய்க் காலங்கழித்து வருவானாயினன். இப்படியுற்ற புத்திரர்களிடத்தும் முற்கூறியவாறே நாரதமாமுனிவர் சீட்டுமன்றி அன்னவர்களைப் பரமபக்தர்களாக்கி, பிரமபுரஞ் செலுத்தி இவர்களையும் சாயுச்சிய பதவியை யடையச்செய்தார். இப்படித்தம் புத்திரர் பலரையும் பரமபதத்திற்சேர்க்கப் பார்க்கப் பிரியப்படானாய் மனம் மிகுதியும் வெதும்பிய தட்சப்பிரஜாபதியும் மகதியாழ்முனிவராகிய நாரதரை நோக்கி, நமது சிருஷ்டித்தொழில்களுக்கு நம்மால் விளைவித்த எம்பிள்ளைகளையும் கெடுத்தமையால், நீயும் நின் மக்களையும், மனைவியையும் இழந்து வீணாய்க்கண்ட கண்டவிடங்களிலும் இடைவிடாமல் திரிபக்கடவாய் எனச்சாபம் கொடுத்தான். நிறைமையைத் தரும் சம்சார பந்தங்களிலே புகுந்து கெட்ட நெறிகளிலேயே சஞ்சாரஞ்செய்யாது பரசிவத்தினிடத்திலே பக்தியை யுண்டாக்கிப் பரமபதமடையும்படியான நன்னெறியை நின் மக்களுக்குக் கற்பித்த எம்மை நன்கு நிதானியாமல் இவ்வாறு சாபமிட்டதனால், ஏ! கொடியவனே! தேவர்களுக்கெல்லாம் உத்தமசிரேஷ்டனாகிய எம்பெருமான் முக்கண்ணப்பனது கோபத்திற்கு நீ இலக்காகி உன் புன்தலை துண்டிக்கப்படுவதாக! என்று பிரதி சாபத்தினையும் நாரதமாமுனிவர் தக்கனுக்கநுக்கிரகஞ்செய்து போயினர்.

இவ்வாறு நாரதர் தக்கனுக்குச்சாபங்கொடுத்து, நீங்குதலும் தனது தவத்தின் பெருமையினால், தக்கன் அநேக மகளிரைச்சிருஷ்டித்து அவர்களால் அநேக மருகர்களையுமடைந்தான்.

பின்னர் பால பெரியோர்கள் [illegible] அறுபது [illegible] பிறகேற்ற சராசரப்பொருள்களையும் படைத்து, [illegible] பெரியோர்களால் கருதப்பட்ட [illegible] ன்னையத் தக்கன் தன் மகளாகப் பெறுவான் [illegible] தவத்தின் பெருமையை, அவன் பூர்வஜன்ம [illegible] பற்றி [illegible] தக்கன் [illegible] என்னும் பெயராய்த் தக்கன் [illegible] சச்சிதானந்த கருணைப்பெருமாட்டியாய [illegible] அவளைப் [illegible] வியென்னும் கன்னிகை [illegible] லாம் தலைவனும் [illegible] மருமகன் [illegible] யின் [illegible] இவனை [illegible] தம திருப்பிடமாகி [illegible] கையில் [illegible] திரன், அவனை [illegible] வாகனுள், [illegible] மற்றையர்களால் [illegible] வற்புறுத்த, அவன் [illegible] ரோகத்தினால் [illegible] னு [illegible] இ [illegible] [illegible] [illegible] தலையிலேற்றுச சந்திரமௌலியாக [illegible] அறிந்த தக்கன் தன் அகங்காரம் [illegible] து காலமிருந்தனன் [illegible] சதுர்முகனிடம் விரைவுடன் சென்று அவரைக் [illegible] நீ யாகம் செய்யும் ஆசையுடையேன், யாகசாலை வகுத்தற்குரிய புண்ணியக்ஷேத்திரமொன்றுரைமின்' என்று [illegible] ஒருக்ஷண நேரம் மனத்தினில் சிவபெருமானைத் தியானித்து அன்னவன் அன்புடன் வசிக்கும்படியான சிவஸ்தலமொன்றினை யோசித்து " கீழ்க்கடலுக்கு மேற்றிக்கில் [illegible] காவிரிக்கரைத் தென்புறத்தில் [illegible] வனத்தின் ஆக்கினேய பாகத்தில் இவ்வியாகசாலையை வகுத்தல் முற்றிலும் பொருந்துமென்று சதுர்முகன் ஆதரவுடன் கூறினன். நான்முகப்பிரமன் கூறிய மொழியைத் தலைமேற்கொண்டு பலபேர்கள் தம்மைச் சூழ அவன் அத்தலத்திற்குச் சென்று அவ்வனத்தை யழித்துத் தெய்வத்தச்சனைக்கூவி யாகசாலை வகுக்குமாறு கூறலும், விசுவ

கோபுரமும், நான்கு திசைகளிலும் நான்கு உயர்ந்த மதில்கள் எழுப்பி அவற்றில் நான்கு வாயிற்படிகளமைத்து, அவ்வியாகசாலைக்குள்ளேயே ஹோமகுண்டங்களும், வேதிகைகளும், வேதப்பிராமணர்களிருப்பதற்கேற்ற ஸ்தானங்களும், திக்குப்பாலகர், மகாவிஷ்ணுவையுள்ளிட்ட தேவர்களிருப்பதற்குரியவிடங்களும், விரும்பிய நல்லார் கொண்டாடும் நல்மேடைகளியாவும், பாகசாலை களஞ்சியசாலைகள் முதலியன பலவும் அவ்வாகத்தில்.

'ஸ்ரீ [illegible] யாகசாலை
நல் வேள்வி [illegible] சாலை
மன்னுமறை [illegible] ராணசாலை
பன்னரும் [illegible] யாமால்.' (4)

இதுகண்ட அவ்வமயத்தில், இவ்வாறு யாகசாலை வகுக்கப்பட்டதைக்கண்டுணர்ந்த தக்ஷப்ரஜாபதி மிகுதியும் மகிழ்வுற்றவனாய், இவ்வியாகம் நடக்கிறதும் செய்தியை யாவரும் அறிந்து வந்துசேரும்படியாய் அதை அனுப்பவேண்டியவர்களுக்கு தூதர்களையும், ஸ்ரீமுகம் மூலம் தெரிவிக்கவேண்டியவர்களுக்கு அப்படிப்பட்ட பத்திரிகைகள் பலவும், தானே நேரே சென்று அறிவிக்கவேண்டிய அந்தஸ்துடைய மகாவிஷ்ணு முதலானோருக்கு நேரே சென்றும் தெரிவிப்பதற்காக இவன் ஸ்ரீவைகுண்டம் சென்று அவருக்கு யாகத்தின் செய்தி தெரிவித்தும், இதன்பின் தன் மருமகனாகிய கைலாசபதியாம் பரமசிவனுக்கு அறிவிக்கவேண்டி ஸ்ரீகைலயங்கிரிக்குப் புறப்பட்டுச் சென்றான். இவ்வாறு போயவன் வெள்ளியங்கிரி சென்று கோயிலின் முன்னே மலைபோல் படுத்திருக்கும் ஒப்பற்ற மகாப்பிரசித்திபெற்ற நந்திகேசுவரனின் அனுமதி பெறாமல், எம்பெருமானார் ஸ்ரீஉமாதேவியரோடு சிங்காதனத்தில் பரமபக்தர்கள் பலரும் ஹரஹரவென்று தோத்தரிக்கக் கொலுவீற்றிருக்கும் திருக்கோலத்தைத் தரிசித்தான். சர்வேசுவரனைக் கண்டதும் உடனே தண்டாகாரமாய்ப் பூமியில் விழுந்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்யத் தவறின தன் பிழையைச்சிறிதேனும் சிந்தியாமல், பெண்ணைக்கொடுத்தமாமனாகிய தனக்கு மருமகனானவன் வந்தனைபுரியவில்லை; சாம்பலைப்பூசியிலங்கும் பித்தன் என்று வாயில்வந்தவாறெல்லாம் அவரைத் தெழித்து அவ்விடம் விட்டு நீங்கி, 'யக்ஞாங்களும் பரமசிவன், யான் செய்யும் யாகத்தில் அவிர்ப்பாகம் கொள்ளுவதற்குத் தக்கானல்லன்; அன்னவனையும் யான் இவ்வியாகத்திற்கு அழையேன்! மரியாதை என்பது இன்னதென்றறியா அவ்வற்பனை யான் அழையேன், அழையேன், எனச்சொல்லிக்கொண்டே தக்கனும் தன் வேள்வியஞ்சாலைக்கு

னன்; பரிசுத்தமாய நான்கு வேதங்களும் நீண்ட காலமாகக்கத திக்கதறியும் அவர் சிரபாதங்களைக்காண முடியாத பரமசுயம்பிர காசனும் எம்பெருமான் நடந்த சங்கதிகளையெல்லாமறிந்திருந்தும், அறியான்போல நகையாடி வீற்றிருந்தான். மேற்கூறிய வாறு பிதற்றிக்கொண்டே [illegible] புரிகின்ற தக்ஷப்பிரஜாபதி, அங்கு சாக்ஷாத் மகாவிஷ்ணுவை முதல் கண்டு அவரை [illegible] த்தொழுது, 'ஓ! பரமவிஷ்ணுவே! [illegible] இவ்வியாகத்திற்கு வாராதவனைத் தடுத்துவந்தேன், தாங்கள் தான் யாகத்திற்குத் தடையின்றி நடத்திவைத்து யாகத்தை, விக்கினமும் நேரிடாவண்ணம் காப்பாற்றவேண்டியது,' என்று நெருங்கி நட்டனும், கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே என்னும் பழமொழிப்படி 'ஐயோ! பாவம்! இவனுக்கு நாசகாலம் சமீபித்ததே'யென மகா விஷ்ணு தம் மனதிலே நினைத்து ஒன்றும் பேசாமல் அமைவுடனிருந்தார். இப்படியிருக்குங்காலத்தில், பிரமன், அக்கினி, நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், இயமன், இந்திரன், கிம்புருடர், கின்னரர் யக்ஷர், வித்தியாதரர், கருடர், சித்தர், சாரணர், சூரியன், சந்திரனையுள்ளிட்ட நட்சத்திரங்கள் முதலியபலரும் யாகசாலை நோக்கி வந்தனர். விசேஷமான தட்சணையும் போஜனமும்பெறுவதற்குப் பிராமணக் கூட்டங்கள் பலவும் தட்சப்பிரஜாபதியின் ஜனங்கள் பலரும் யாகசாலைக்குள் வந்து சேர்ந்தார்கள். வந்தவர்கள் எல்லாரும் உமாதேவி சகிதரான சிவபெருமான் வராததன் காரணமென்னவென்று ஒருவருக்கொருவர் தங்களுக்குள் சேர்ந்து சேர்ந்து இரகசியமாய்ப் பேசிக்கொண்டார்கள். இவ்விதகாரியத்தைப்பற்றி நாம்பேசின், யாவர் நம்மேல் என்ன குற்றம் கண்டுபிடிப்பாரோ? யாவர் வந்தாலென்ன! போனாலென்ன! இவ்விசாரம் நமக்கேன் என்று சொல்லிப்பின்வருங்காரியங்களை யோசியாதவராய் நம்வேலையை நாம்பார்க்கலாம்என்று சும்மாயிருந்தனர் மற்றவர்களில் அநேகர். [illegible] யால எல்லாரும் யாகசாலை புகுந்தார்கள். [illegible] தேவர்களுக்கினிமையாயுள்ள யாகஞ்செய்ய ஆரம்பித்தான் தக்கனும். இப்படி ஆரம்பித்த தக்கனை நோக்கி ததீசி முதலிய மாதவப்பெரியோர் 'ஏ! தக்க! யக்ஞகர்த்தனும், யக்ஞேசுவரனுமான பரமேசுவரனை இகழ்ந்து அவரை நீக்கி இவ்வியாகம் செய்தலிற்பலனில்லை' என்று பலபலகூறியும் கேளாமலிருந்ததை நோக்கிய பல்லோர் யாகசாலைவிட்டகன்றனர். இவர்போயதைப்பார்த்தும் தக்கன் நன்னெறியொழுகாமல் தான்பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்றபடி, ஈசுரனுக்கு அவிர்ப்பாகமும் யாகத்திற்கு ஸ்ரீமுகமும் அவருக்குக்கொடுத்து வரவழைப்பதில்லை என்னும் பிடிவாதத்துடனிருந்தனன். தக்கன் செயலிவ்வாறாக, கைலாயகிரியில் பரமசிவனோடு இனிது வீற்றிருக்கும் உமாதேவியார், பரமசிவ

ஸ்ரீபாதங்களைத்தொழுது, 'யான் என் தந்தை செய்யும் யாகத்தைப்பார்க்கச்சென்று, வருகிறேன்' என்று சொல்லலும் பரமன் 'நங்காய்! என்னை அவமதித்த தக்கன் யாகத்திற்கு நீ போயினையாயின் நின்னையும் அவன் அவமதிப்பன் என்பது நிச்சயம்!' என்று சொல்லியும் என் தந்தையை யான்போய் நல்வழிப்படுத்தித் தங்களிடத்தும் நேரே வர ஏற்பாடு செய்வேன் என்று சொல்லி விடைபெற்று எம்பிராட்டியாம் எம்மன்னை சத்தியம்மை ஈசுவரனைவிட்டகன்று தம் தந்தையாம் தக்கன் யாகசாலை குறுகினாள்.

பிறைநுதலும் கருங்கண்ணும் சிவந்தவாயினையு முடைய எம்மம்மை பிரசன்னமாயதைக்கண்டும், அஞ்ஞானாந்தகாரம் நிறைந்த கொடியனிலும் கொடியனுமான தக்கன், தான் அன்னவளைப் பாராதவன் போல இருந்தனன். நால்வேதங்கள், அறுபத்து நான்கு கலைஞானங்களையும் ஐம்பதிற்றுந் தியுணர்ந்த மாயித் துவாரகை ஒருவனிருந்திடினும் ஈசானுக்கிரகம் பெறாத புன்மைத்தன்மை மிக்க கொடிய பாவாத்மாக் கர்மவாசனையால் பிறந்த ஆணவமலச் செருக்கு எக்காலும் நீங்காது ஈன்ற பெண்ணாகிய சதிப் பெயருடைய உமாதேவியார் தம்மை அழைத்திடாமல் இருந்தும், அவளும் தக்கனிருந்தவிடத்தில் ஒருபக்கமாய் நின்றனள். தாயும் தன்னிடம் வெறுப்புற்று அவமதித்த, மைத்துனர் முதலியோர் பொறுக்கலாற்றாதவளாய், மீட்டும் உமை தக்கனிடம் சென்று சினக்குறிப்போடும் பின்வருமாறு கூறலுற்றனள்.

'தீமதியமைந்த தியற்கை போயவம் புரிய
செய்கைகையோ மறைகளாயிரமும்
தாமதியாத பொருள் பரம்பொருளாந்
தத்துவங்கடந்த பேரொளியை
நீ மதியாமலிகழ்ந்த தென்னிகழ்ந்து
தீமொழிமொக்குளிற் சிதைவாய்
ஆமதியார்க்குமில்லையோ விங்குச்
சூழ்ந்துளா ரறிவுமிப்படியோ' (5)

ஏ! தந்தையே! உனக்கு இப்படிப்புத்தி கெட்டுப்போனதென்ன? யார் நினக்கு இங்ஙனம் புத்தி கற்பித்தார்கள்! வேதங்களினாலும் அறியப்படாத உண்மையாய பரம்பொருளை, நீரிலே இமைப்போதிலே உற்பவித்து அழியும் குமிழி போன்ற அற்ப ஆயுளையுடைய நராதமனாகிய நீ இகழ்தல் நேரிதோ? நல்ல ஞானவான்கள் இங்கில்லையா? உன்னைச் சூழ்ந்திருப்பவர்களின் அறிவும் இத்தன்மை அடைந்திருப்பதேயோ!' எனலும் இது கேட்ட தக்கன் மிக்கக் கோபங்கொண்டோனாய் நாயகக்குணப்பித்தனாய் பரமே

காரணமும் இந்த வருத்தத்திற்கு [illegible] என்னுடைய [illegible] பகைவனல்லன்! என்றான். இப்பாடலியின் மொழிகளைக் கேட்டபெற்றதவனாய் [illegible] தன் கைகளால் காதுகளைப் பொத்திக்கொண்டவனாகி, [illegible] நினைத்துப் [illegible] சிரித்துக்கொண்டு [illegible] ஓ! உபசரிக்கின்றேன்! [illegible]! [illegible] இருவரும் [illegible] கொல்! இவனுக்குப் [illegible] நாடல்வேண்டும் [illegible] இற்று; மலைகள் [illegible]; [illegible]; [illegible] நிலைவிட்டுப் பெயர்ந்தன; நக்ஷத்திரங்கள் [illegible] பிரமனது [illegible] அயிர்த்தனர்; ஆகாயம் அதிர்ந்தது [illegible] இங்ஙனம் [illegible] ஆனகபாரத்தை [illegible] ஒன்றின்மேல் [illegible] போன்றது [illegible] ஜீவராசிகளுக்கு [illegible] தேவி [illegible] கொக்கி! [illegible] தையால் [illegible] கெடு! [illegible] இறைவன் [illegible] அசப்பா [illegible] ஸ்ரீ [illegible] பிராணத் [illegible] றையர் [illegible] க்கு இவ்வுலகம் [illegible] தேக்கமடைந்து அவ்விலக்குமியைப் [illegible] வெறுப்புற்று [illegible] தொழில் [illegible] ஜனம் [illegible] ஏர்பாவையாய் [illegible] டொழிக்க, [illegible] னிவதித்தான் [illegible] வைம். [illegible] கடவுளும் [illegible] பிரமனும் [illegible].

[illegible]

தக்கன் யாகஞ்செய்த விதத்தையும், தேவர்கள்பல்லோரும் யாகசாலையில் கூடியிருப்பதையும், அவன் ஈசுவரன்றன்னை நிந்திக்க பூர்வதையும், அம்மை சதிதேவி யோகாக்கினியில் உயிர்மாய்த்துக்கொண்டதையும் நாரதமாமுனிவன் உணர்த்தினான். தனதுயிர்த்துணையைப் போட்டது போட்டபடியே விட்டு ஓடிவிட்டு, கைலாசகிரிக்காலைத் தேடிப் புறப்பட்டுப் போய்ப் பின் யாவருமறியா வண்ணம் கை லையங்கிரிக்கு ஓடிச்சென்று, ஸ்ரீ உமாபதியே! பெருமானே! தக்க யாகத்தில் போகாதே சிவயோகத்தில் மாயத்தைத் தன் ஆற்றுப் பயமுற்று வந்தேனென்றனன். தக்கனின் யாகத்தில் மிக நடந்தவனைத் துமறியான் போலக்கேட்கும் சிவபிரானுக்கு நாரதமுனிவர் மிக்க பயத்தோடும் அங்கு நிகழ்ந்தனவெல்லாவற்றையும் ஆதியோடந்தமாய் விரித்துரைத்தான். அப்படியுரைத்ததுதான் தாமதம், சுவாமிக்கு கண்களில் அக்கினிப் பொறி கக்கியது! உடனே கோபத்துடன் கண்ணுதற் தம் சடையினின்றும் இந்துசேகரன் ஒரு சடையைத் தனியாயெடுத்துத் தரையினிலறைந்தான். இவ்வண்ணம் அறைந்த சடையினின்றும் விண்ணடுங்க மண்ணடுங்க அகோரரூபத்தோடும் அகோர வீரபத்திரன், பத்திரகாளி சகிதமாய் எம்மை அழைத்ததென்னை தென்னவென்ன வென்று என் ஐயன்,

திருமுடிவிசும்பு பொழுத்திசை புயத்தடைய நீங்க,
மருமலர்ச்செய்ய பாதமண்டப்பகிரத்துமாசக்
கருகிருளனைத்து மெய்ந்து கண்ணெழு சுவாலை போங்க
வொருபானடிக் கீழ்த்தாழ்ந்தி துரைக்கலுற்றனன் வீரன். (6)

ஆகாயமண்டலத்திற்கப்புறங் கூடப்போய் முட்டியபடியான சிரத்தோடும், திசைகளை யளாவிய புஜங்களோடும் சர்வாண்டங்களும் வியாபித்திருக்கிற கால்களுடனும், நீண்டமேனியுடனும் விண்ணோர் மேகத்திடியென்ன வெடித்த குரலுமுடையவனாய், கண்ணோர் புகையும் கனலுமெழக்கனன்றகாலன் காலகாலனைய, வந்து தோன்றினன். தோன்றிய இவன் சிவபிரானை நோக்கி,

'ஏழுகடற்புனலுமுண்கோ விரவியைத் திருக்குமுர [கோ
முழுவதைப் பெயர்க்கோ மற்றைவரையெலா முதித்தலசெய்
கெழுபுவியடங்க வாங்கிக்கேழ்கிளர் வாயிற்பெய்கோ [7
செழுவியவண்ட மெல்லாஞ் சிதர்படச் சிதைத்தல் செய்கோ.

'என் ஐயனே! ஏழுகடலையும் குடிக்கட்டுமோ? சூரியசந்திரர்கள் சூழும் மகாமேரு மலையை அந்தரத்தில் பெயர்த்தெறியட்டுமோ? மற்ற எல்லாமலைகளை யெல்லாம் பொடித்தெறிவேனோ? இப்பூமண்டலத்தை அப்படியே சுருட்டி வாய்க்கல் பெய்து விழுங்குவேனோ? சர்வாண்டங்களையும் நிலைகுலுங்கச் செய்யவேண்டு

மோ? ஸ்ரீமந்நாராயண மூர்த்தி, பிரமன், இந்திரன் ஆகிய இவர்களை யெல்லாம் ஒருங்குசேர்த்து உள்ளங்கையில் வைத்து அரைத்துப் பொட்டாகத் தரித்துக்கொள்ளலாமா? நட்சத்திரமழை பூமியின் மீது எப்போது பொழிவிக்க சந்நிதானத்தில் உத்திரவாகுமா? மூங்கிலில் சுயம்பு வடிவாயமர்ந்த பராபரமூர்த்தியே! யாது செய்யலாகும், கிருபைகூர்ந்து கட்டளையிடுகவென்றான்.

கொடியனை தக்கன் ஓர் வேள்வி நடத்திக்கொண்டிருக்கிறான்; அதில் நமக்கு அவிர்ப்பாகமில்லையென்று மறுக்கின்றான், அம்மகச்சாலை சென்று பார்த்து அவிர்ப்பாகம் இல்லையெனின், உடனே அம்மகச்சாலையை நிமிஷநேரத்தில் பிணச்சாலையாக மாற்றி மீண்டுவருவாயென்று நடபதியாகிய பரமேசுவரன் வீரபத்திரரை நோக்கி மறுமொழி கூறலாயினர். அதனால், இவ்வற்பவேலைக்காகத்தானோ? ஜகதீசுவர! நம்மை வரவழைத்தீர் எனக்கூறி தக்கன் யாகசாலையை யழிப்பதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம்வேண்டுவதில்லை யென்று தன் ஜடாமகுடத்தை யிறுகியும் சுருக்கிக்கொண்டு பூதப்பிரேத பைசாசகணங்கள் பலவும் புடைசூழ அம்மகச்சாலை நோக்கி விரைந்துபோய், வாயிற்புறத்தில் ஒரு காவலாளியை நியமித்து உட்புகுதலும், புலியைக்கண்டமான கூட்டங்கள் போல் தேவர்களியாவரும் நடுங்கினார்கள். யாகஞ்செய்யும் கொடிய தக்கனிடம் இவர் சென்று பார்த்து அவிர்ப்பாகம் உளதோ? இலையோ? என்னக்கேட்டலும், அவனுக்கு இவ்வியாகத்தில் அவிர்ப்பாகம் வேதத்தில் விதிக்கப்பட்டதில்லை யென்றான். தக்கன் இவ்வாறு சொன்னதேனு இல்லையோ, ஆதியந்தமில்லாத பராபரவஸ்துவும், சர்வலோகங்களுக்கும் நாதனும் மகாவிஷ்ணுவினும், பிரமனும் முறையே, வராக அன்னவுருவெடுத்தும் தேடிக்காணமுடியாச் சோதிமூர்த்தியுமான பரமேசுவரனொருவனே யாகங்களுக்கெல்லாம் பதியும் மற்றும் எமக்கும் ஒப்பற்ற ஒரு பெருந்தலைவன்' என்று இருக்குவேதம் உருவெடுத்துடனே வந்து கூறிப்போயிற்று. 'மகாவிஷ்ணு பிரமாதிகளையுள்ளிட்டவானோர்கள் கடைந்தெழும் பொருட்டு ஆலாகல விஷத்தை அமிருதம் போல் பணிசெய்த நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனையன்றி வேறுயாவன் முக்கியமாய் யாகத்தில் அவிர்ப்பாகங் கொள்ளற்குரியவன்? தேவக்கூட்டங்களில் சிரேஷ்டமானவன் யாவன்? என்று யசுர்வேதம் முறையிட்டுக் கதறியது. 'எவருடைய கிருபாகடாக்ஷவீட்சணியத்தால் சம்சாரமாய பாசங்களின் சல்லிவேரற்றுப் போம்? எவனருளால் முத்தியுலகும் எளிதிற்கிடைக்கும்? எவனருளால் பஞ்சகிருத்தியங்கள் இடையூறில்லாமல் நடைபெறும்? எவன் உமையவளின் மணாளனாவான்? திரிபுரசங்காரஞ் செய்தோன் யாவன்? அவனே யாகங்களெல்லாவற்றிற்கும் நாயகன்' என்று

மூன்றும் வேதம் கூறிற்று 'எவன் கண்கள் மூடப்பட சர்வாண்டங்களும் இருண்டுபோம்? எவன் பயபக்தியாயுள்ளான்? இப்பேர்ப்பட்டவனே பக்தர்களால் வணங்கப்படுவான்' என்றது நான்காம்வேதம். நான்கு வேதங்களும் உருவெடுத்து வந்து நன்மதிபுகட்டியும் அவற்றைச் செவிகொள்ளாத தக்கனுக்கு யார் என்ன சொன்னால் தான் என்ன பிரயோசனம் உண்டாகலாம். வேதங்கட்குக் கவிழும் பூங்காமணியாக் கூறும் என்ற பிரணவமும் அகனை சரூபத்துடன் தக்கன் முன் பிரசன்னமாகி, 'எனக்கும், நாரணனுக்கும், பிரமனுக்கும், உலகிற்கும் யாகங்களெல்லாவற்றிற்கும் இப்பரமசிவனே தலைவனாவான்' என்று சொல்லிற்று. யாது சொல்லியும், மூர்க்கனாகிய தக்கன் தனது கருத்தைமாற்றிய மிக்கவெறுப்புடனேயிருந்தும் சிவனோ சொல்லொணாத, 'பேசினையாதியும், என்பனவிகளனும், தீமோருணர்ந்து சூரனைக் கடிந்துரைத்து வேள்வியாகத்தில் அவிசினையுமே கொடாதிருந்தான். சிவநிந்தையான இவ்வார்த்தைகள் செவியில் விழுந்தவுடனே நந்தியால் கூறப்பட்ட மாத்திரத்தில் பூதங்கள் மிக்க வீரத்துடன் பிரவேசித்து அவ்வாறே யாகத்தின் அவ்வப்பதார்த்தங்களையும் அவிசினையும் அழித்தனவென்று அதனை யாககுண்டத்தின் சூழ்ந்தவர் செய்யவில்லையா என். மாலின் ஒருவருங் கொண்டிருந்த யாகத்தின் செல்வியை மந்திரருவானியேல் அணிந்து, அந்தணர்களுடைய பிராமணரும், நாரணனையும் பிரமனையுஞ் செய்த அவர்களைப் பூமியில் குப்புறக்கிடத்திச் செய்து, குழியைப்பறித்து மூடிப்புதைத்தார். மதியைன் உடலைத் தேய்த்தார்; அக்கினியின் கரமறுபட்டது; பகனுடைய கண்கள் பிடுங்கப்பட்டன. யாகத்தினின்று தப்பியோடிய இந்திரனின் குயிலுருவத்தை அறுத்தபட்டது. இப்படியாக யாகசாலைக்கண்ணே வந்திருந்தவர்களெல்லாம் தக்கவாறு தண்டனைகள் செய்யப்பட்டதில், சிலரொழிந்தவர் அநேகர், காயமுற்றார் பலர்; மாய்ந்தார் சிலர்; வாழ்ந்தார் இல்லை. சிவநிந்தை செய்த மகாபாவியான தக்கனை பார்க்கும் கண்ணும், அவனுடைய வார்த்தைகளைக் கேட்கும் செவியும் பொல்லாதன, இப்படியாக வீரபத்திரர் யாகசாலையிலகப்பட்ட பல்லோரையும் கொன்று பின்னப்படுத்தி சிதறவடித்தார், தோரணங்கள், வேதிகைகள் முதலாயினவற்றை இடித்தும், நெய்க்குடங்கள் பலவற்றை உடைத்தெறிந்தும், ஆங்கு எதிர்ப்பட்ட பொருள்களை யெல்லாம் ஆங்குள்ள அக்கினியில் எறிந்தன அவருடன் வந்த பலபூதகணங்கள். இப்படியாக யாகசாலையைப் பாழ்ப்படுத்திய வீரபத்திரர் உடனே சிவபெருமானை மனதில் தியானித்தார். தியானித்தமாத்திரத்து மாதுபாகன் ஒருமானைக்காத்தினிற்றுங்கி, மற்றொரு மான்போன்ற கன்னாதேவியை சிரத்தினிலும், மூன்றும்பிறைச்சந்திரனைச்சிரத்தினின்றும், தாங்கிய பூதேவருங்கனகப் பூங்காமிழல்

வைகும் மாதேவருங்காணு மலரடியோனுகிய சிவபெருமான் ஆண்டு அவருக்குக்காட்சி கொடுத்தருளினர். வீரபத்திரர் ஈசுவரதரிசனம் பெற்றவராய் அநேகமுறை பூமியில் விழுந்தெழுந்து ஸ்தோத்திரஞ் செய்தான் யாகசாலை அழிந்து போனதன்மையும், பல்லாயிர உயிர்கள் துடிக்கும் விதத்தையும் பார்த்து மிகுதியும் இரக்கமுற்ருர். இரக்கமுற்ற பெருங்கருணைக் கடல் வீரபத்திரரை நோக்கி, யாகத்தில் இழந்துவிட்ட உயிர்கள் யாவரையும் ஒன்று விடாமல் எழுப்புக எனலும், அங்ஙனமே பத்திரரும் செய்தார். அயன்மாலிவர்முதலிட்ட எல்லாத்தேவர்களும், அஷ்டதிக்குபாலகர்களும், சித்தர், சாரணர், கருடர், நாகர், நக்ஷத்திரங்கள், சந்திரசூரியர், மடநல்லார் முதலிய யாவரும உயிர்பெற்றெழுந்து சர்வ ஜீவதயாபராபரன் பகவான் விடையின் மேலெழுந்தருளியிருப்பதை காணப்பெற்று, பூமியில் விழுந்து படிந்த நாராயணன் பிரமன் முதலியோர் வெட்கப்பட்டு எழுந்திருக்காததுகண்டு, எல்லோரும் எழுந்திருக்கவென ஈசுரன் ஆஞ்ஞாபித்தார். 'இப்போதாவது எமக்கு அவிர்பாகம் என்பீரோ இல்லையோ'வெனப் புற்றுதிக்க பின்னுகன் கேட்டலும், நாரணப்பிரமர்கள் கூறுவார்! சின்னடியாராகிய யாங்கள் அடிக்கடி ஆணவமமதைக்குட்பட்டுக் கெடுகின்ரேம்! தங்களும் எம்மைக் குரங்கு போலாட்டுவிக்கிறீர் தாங்கள், எங்கள் பிழை பொறுத்துக்கொள்ளும், என்று அடிக்கடி விண்ணப்பம் செய்ய எங்களுக்கு தெரியுமேயொழிய வேறொன்றுமறிய மாட்டோம். க்ஷீராப்திகடையுங் காலத்தில் கொடிய விடமொன்று வெகுண்டெழ, எங்கள் வேண்டுகோட்கிணங்கி, அவ்விஷத்தினை அமுதாககொண்டு எங்கள் மனைவியர்களின்மாங்கல்யத்திற்குபலமுண்டுபெண்ணினீர்! இம்மாதிரியான காரியங்கள் நீவிர் எமக்கு அநேகம் செய்திருந்து அடிக்கடி தங்களுக்கு அபராதமான காரியங்களையே செய்து நீவிர் அப்போதப்போது கண்டித்தபின்புதான் குணப்படுவோம்; தீர்த்தத்திலுள்ள பாசிக்கொத்துக்களை அடிக்கடி கையினுல் விலக்காவிடின் மீட்டும் அவை நம்மிடம் வந்து சேருமல்லவா? ஆதலின் இன்று நாங்கள் செய்த அலட்சியத்திற்குத்தக்க சிக்ஷை அடைந்து விட்டோம். இஃதே தாங்கள் எங்களுக்குச்செய்த பேருபகாரமாகும். இதற்குத்தக்கபடியாய் எங்களிடமிருந்துத் தாங்கள் எதிர் பார்க்கவேண்டிய கைம்மாறுதங்களுடையசரணுரவிந்தங்களைஇடைவிடாதுநாங்கள் பணிந்தொழுகுதலேயாம். இவ்வாறு பற்பல விசைப்பூமியில் விழுந்து, போற்றுநின்ற அரிப்பிரமாதியர்களை மிகவும் தேற்றி: ஏ! தேவர்களே! நீங்கள் செய்த பிழைகளை இன்றே பறித்துவிட்டோம்; இனிசெம்பொன்பள்ளிமுதலிய ஸ்தலங்களிற்கருகிலிருக்கிற பறியல் என்னும் க்ஷேத்திரத்தைத் தரிசித்து நீவிர் பாபத்தைப்

போக்குவீர்" என்ற பருஷ வார்த்தைகள் பலபகர்ந்தார். ஆ! வீர பத்திர! இனி நீயும் இத்தலத்தில் முனிசிரேஷ்டர்களின் பக்கத்தில் சூட்சம சுவரூபத்தோடு நின்ற யாககுமமூர்த்தியாசீர்வாய்ந்து சநிலையை நீக்கி பூரணியாகிய நீ என் பேச்சுக் கடங்கியதற்கேற்பத் தக்க பலனை உன்னுடைய செல்வியங்கனியே போல அடைந்தாய்! என்றும், தக்கவனத்தில் நின்ற கிளையினின்று விழுந்தமயிலினை அபிமானித்து அடியாளை ஆதாயாதலின் அம்மயிலுருவமே தாங்கி, பிரான் முன்னேறச்சால் யம்மைப்பூஜை புரிந்த தலமாகிய பிரமபுரம் சென்று, நீயும் என்னை யர்ச்சனை பூஜை செய்யக்கடவாய், யானும், பேசியபடி யுனக்கு நித்தியமாய் யங்கு வந்தேனென்று போல் சேர்வோம் என்று சாவிவிகதைப்படியாக அந்தர்த்தானமாயினர்.

(யாகசங்காரச் சருக்கம் முற்றிற்று)

மாயூரமான சருக்கம்.

தேவர்கள் எல்லோரும் அப்படியாக பரமேசுவரனிடமிருந்து விடைபெற்றுப் போய்விட்டபின், அப்பெருமையும் ஈசனுரைத்த மொழிப்படியே சோலையிலே போன்ற பைந்தாருடனும் பரவிய பெரிய உலகத்தினை மூடும்படியான அழகிய தோகையுடனும் வஞ்சனையில்லாமல் வனத்தில் உலாவும் பசியமயிலையொத்த அழகியமயிலுருவமெடுத்தாள், மலையிலுற்பவித்த மயிலென்றும், மயில்போன்ற சாயையுடையமகளென்றும் பெரியபுலவர்களால்உருவகித்து ஸ்தோத்திரம் செய்யப்பட்ட பார்வதிதேவி அன்மொழித்தொகைப்பெயரை மெய்ப்பிக்கும்பொருட்டு உண்மையான ஒப்பற்றகளிமயிலுருவங் கொண்டாள். பசுமையான ஒளியினாலும், கிளையிலே நன்குவீற்றிருந்த படியினாலும், இடபத்திலே வீற்றிருந்தமையினாலும் இளமைத்தன்மை வாய்ந்திருந்தலாலும் சுப்பிரமணியக்கடவுளைத் தன் குமாரனாகப் பெற்றெடுத்தமையினாலும் இடைவிடாது சர்ப்பங்களைக்கொல்லுந் தொழிலுடைமையாலும் சர்வாபரணாலங்கார பூஷிதையாயிருப்பதனாலும் முப்பத்திரண்டறங்களையும் வழுவாது நடாத்தியருளிய அறம்பெருஞ் செல்வியாம் தர்மஸம்வர்த்தனியம்மையை நிகர்த்த மயில்போன்றவள் என்றும் இவ்வம்மையைக் கூறலாம். சர்வாண்ட நாயகியாக எம்மம்மை ஒப்பற்ற மயிலுருவமடையக்கண்ட செந்தாமரையாள், வெண்டாமரையாள் தாமும் அழகிய சிறைகளையுடைய மயிலுருவம் பூண்ட

னர். தேவேந்திரன் மனைவியாகிய இந்திராணியும் மற்றுமுள்ள அநிந்திதை, கமலினி முதலிய தேவஸ்திரீகளும் மயிலுருவம் கொண்டு அம்மையுடன் கூடினர்; [illegible] முதலான சகலதேவர்களும் இப்பயிலுக்கு யாதொரு இடையூறுமில்லாமல் ஈச்வரத் யானப் பாதுகாத்துவருகையில் [illegible] மயில்க ளும் [illegible]; [illegible] ணேடினர்; பூமியில் காலால் படாமல் [illegible] ஆகாயத்தில் பறந்திட்டாற்போல் பறந்தும், [illegible] பிய பூங்கொம்புகளில் பறந்தாடினாளும். [illegible] ருவடைகளும், மற்றைய தேவஸ்திரீகள் [illegible] க்க விரும்பினர். [illegible] சொல்லும் தம் காமடைப்பேறுகள். [illegible] மனையாகிய அம்மை மயிலுருவமடைந்தும், பூமியின் [illegible] ள்ள [illegible]. [illegible] கிய யோகமி முதலானவை அருந்தின, பாதலத்தில் [illegible] பணமுடையோடு பூபாரந்தாங்கி வசிக்கும் [illegible]. ஆகிய சக்கிரங்களை விழுங்கும் இராகு [illegible] குப்பாய்ப்பட்டன. [illegible] சாகரத்தில் மூழ்க, அம்மை மயிலோடு [illegible] மாதாவைன [illegible]. மகாதபோ மகிமையினால் [illegible] சிரசின் மேல் [illegible], விஷ்ணுவாகனமாகிய [illegible] கருடா! கருடா! [illegible] விஷமும் பாம்பும் மகிமையாம் உண்மையான மயில்க [illegible] என்றால், பூமியில் வியாபித்திருக்கிற [illegible] மயிலம்மை யைக்கண்டு அஞ்சாநின்னலாம். [illegible] மயிலம்மையுருவமெடு த்துப் போந்ததன்றோ? அன்னவள் இங்கு [illegible] டெத்தும் மகிமையிறுலோ? [illegible] எங்குநாம் இப்பேர்ப்பட்ட அதிசயத்தைக்காணப் [illegible] என்று சொல்லும்படியாய் முதலிகள் [illegible] மயிலம்மை யை வழிபட்டு சதா சர்வகாலமும் இன்பமே அநுபவியாநிற் கும்.

இங்ஙனமாக அநேக தேவஸ்திரீகள் மயிலுருவமெடுத்துச் சூழ்ந்த எம்மன்னையாம் மயிலம்மை முன்காலத்தில், தேவர்கள் மனப்பூர்வமாய்ப் பூஜித்த சிவஸ்தலத்தில் புருஷ விசேஷமான வைப் பங்கள் வாய்ந்த நாட்டில் உலவிவருங்காலத்தில், அறுபதும் பல்லாயிரம் முனிகளும், மயிலுருத்தாங்கிய நம்மம்மையின் திவ்யவ ரூபத்தை ஞானதிருஷ்டியால் அறிந்தவராய், இத்திருத்தலம்

நால்வேத நிலையமிதோ? வேதாந்தமிதோ? தங்கி ஒளிர்கின்ற பிரண வன்மையிடமிதோ? [illegible] கமலமிதோ? என்று மனத்தில் ஆச்சரியங்கொண்டவராய் அந்த சாகரத்தில் மூழ்குவாராயினர். [illegible] சரியத்தின் மேலெல்லையாம் விளக்கினை யொப்ப மன்றலைத்தில் மண்ணவரா உயிர்கள் [illegible] கடந்தின்றாகித் துக் [illegible] மூன் [illegible] ஸ்யாதும், வியந்து கொண்டாட [illegible] கண்டு [illegible] பாதுகைஞனும் [illegible] ஆர்வ முற்று, [illegible] நின்று தன் தோ [illegible] அழ [illegible] ற்று. உலகமீன்ற [illegible] கன்னி [illegible] தங்க [illegible] உலகத்தினுள்ள [illegible] ஆநந்தக்கூத்தாட அம்பலத்தின் [illegible]; [illegible] கண் [illegible] ஸ்ரீ [illegible] தே வர்களையும் [illegible] மகாருத்திரபூமி யில் [illegible] ராம். [illegible] ஹா! ஹா!! ஹ!!! வென்று [illegible] ஆங்குள்ள மாயாத்தின் [illegible] சிறுவ்ளமேசா [illegible] பிரகாச ஙாங்கள் [illegible]. [illegible] இவ் ஆனந்த [illegible] பின்தொடரா நின்வங்கள்யாவு தன் உருக்கொண்ட கோலத்தினைக்கற்ற [illegible] தீந்து போயிற்று; இம் மயக்கத்தினின்று விடாதாராக [illegible] ஏற்று ஆநந்தித்தோ [illegible] அக்கோலத்திற் சேர்ந்து எனவினவினான்! அம்பிகை [illegible] போருந்துவானுவினான்.

கொண்டு [illegible]

[illegible] ஐயனே போற்றி போற்றி யழலவிர் மழுமானேந்து
[illegible] கையனே போற்றி போற்றி கையர்கண் காணுமேனிச்
[illegible] செய்யனே போற்றி போற்றித்தேவரைக் காத்தாண்ட
வார்த்[illegible] ஐயனே போற்றி போற்றி யெனவிதுவதுக்கலுற்றான். (8)

செய்து, [illegible] ந்தியாதிவிதமாகப்பரமேசுரனைப் போற்றி பின்வரும் [illegible] க்கண்டு [illegible] கலானான்! ஐயனே! அடியேன் செய்த [illegible] வும், நிவே[illegible] ந்ததுண்டானால், இத்தலம் வி[illegible] கள் பல செய்யவும், [illegible] சொல்லவும், கைகால்

கள் வாய்முதலியனவில்லையே என்செய்வோம் என மயில் சற்று நேரம் மயங்கித் தியங்கியா நின்றது, ஆயினும் ஒருவாறு மனந்தேறி மானஸீகமாகப் பூசை செய்யலாமென்று, அபிஷேகம் முதலாயினவற்றை மானத பூர்வகமாய்ச் செய்யலாயிற்று. மாடகத்தின் மேலேறிச் சென்று மூக்கினால் மாந்தளிரைக் கொண்டு ஈசன் திருமேனியிற் சாத்தும், கொக்குமந்தாரை, முல்லை, நந்தியாவட்டை, செவ்வந்தி, மல்லிகை யாதிய மலர்களால் ஸர்வாங்கசுந்தரனாகிய பரமேசுவரனை யர்ச்சிக்கும் செழுமையான செருந்தி, வில்வம், வகுளம், கோங்கு, கொன்றை முதலிய பல்வண்ண முள்ள மலர்களை பக்தர்கட்கெளியனும் பரமசித்த நாயகனுமாகிய பரமசிவன் மேனியும் உள்ளமும் நன்குகுளிர்தர இம்மயில் அர்ச்சனைகள் புரியாநின்றது. இவ்வாறாக இம்மயிலம்மைமுந்நூற்றறுபது வருடகாலம் எம்பெருமானைப் பூசைபுரிந்தமர்ந்தபோது தருமங்கள்யாவும் செழித்தோங்கின; நிலைபெற்று நின்ற முனிவர் பல்லோரும் சந்தோஷ சித்தரானார்கள்; கோவர்த்தனோத்தாரகரான திருமாலும், அயனும், ஈசனனுக்கிரகத்தைக்குறித்து ஆநந்த பரவசராயினார்கள். இங்ஙனமாக கௌரியே மயூரமாகவே வந்து உவப்புடன் எம்பெருமானைக் குறித்து எண்ணிறந்த காலவளவுகாறும் நற்றவங்கள் செய்தமர்ந்திருந்த காரணத்தால் இத்தலம் மண்ணுலகும் விண்ணுலகும் பெரிதும் புகழ்ந்து கொண்டாடப் போற்றத்தக்க கௌரிமாயூரமென்னும் சிறந்த பேர்பெற்றது. இத்தகைய மேன்மைபெற்ற கௌரிமாயூரமென்று ஒருகால் சொல்வோரும் உச்சரிப்பாராகில், அவர் பெரும்பாதகரேயாயினும் அவர் செய்த பாதகங்கள்யாவும் அறவேயொழிந்து அவர்முத்தியுலகம் சேர்வாரென்றால், இந்த க்ஷேத்திரமகிமையைப் பற்றி வேறென்ன சொல்லவேண்டும்? வேதமும், ஆகமங்களும் த்துப் போதிகாசங்களும் மற்றுமுள்ள நூல்களும் இக்கௌரி மேடத்தும் மகிம க்ஷேத்திரங்களுள்ளும் மிகச்சிறந்ததென இசைக்குமாம். இப்பேர்ப்பட்ட கீர்த்திமிக்க கௌரிமாயூரமென்னும் என்று சொல்லும்படியாய் ஜெபிப்போர் சிறந்தவராவார். இப்பெயை வழிப்பட்டு சதா சர்வகாலமும்பட்ட மந்திரத்தை மறந்து குடும். ஜீவன் முக்தனுவானெ

இங்ஙனமாக அநேக தேவஸ்திரீகள் மயிலுருவமெய்ச் சூழ்ந்த எம்மன்னையாம் மயிலம்மை முன்காலத்தில் வேத பூர்வமாய்ப் பூஜித்த சிவத்தலத்தில் புகுந்து விசேஷமான ...ன் வாய்ந்த நாட்டில் உலவிவருங்காலத்திலும், ஆங்குள்ள ...கௌம், மயிலுருத்தாங்கிய நம்மம்மையின் ...டியால் அதிர்கவராய். ...

9. தேவி வரம் பெறு சருக்கம்.

இவ்வாறு பரிபூரணையாம் தேவியானவள் பூசை செய்து சூலாவி வருநாளில், பரிபூரணமுடைத்துள ஈசுவரனும் திடீரென மறைவதாயினர். ஈசுரலோகத்தாயைப்பெருத அம்மை! யான் என்னபிழை செய்தேனோ தெரியவில்லையே! வெளிதினிற்காட்சிதாவல் லகடுக்கை வேண்சமேச வருகியபாலின் இன்று காணப்பெறுமல்மறை தற்குற்ற தவக்குறைகள் என்னவிடமிருந்தனவோ! இங் கேசர்வேசுவரான மறைந்துசெய்த அபராதத்தை இனி எத்தல த்தில் போய்த்தீர்ப்பது! என்று அகதறுவாளாயினாள். என்னைவிட்டுப் பிரியா இராமனைருபரி அன்பும் இவ்வுடம்பை வைத்திருக்கும் பாவியேன் செய்பூசையில் என்ன குறைவு நேரிட்டதோ என்று மனங்கசிந்து உடனே பிராகாரத்தில் படிந்து விசேஷ புஷ் பங்களைக்கொணர்ந்து ஆவியினிற்சிறந்த கோவை விசேஷமாக அர்ச்சனைபுரிய, பகவானும் மனதிரங்கினவராகி இமையவர் பலரும் ஸ்தோத்திரஞ்செய்ய மகாதபசிரேஷ்டர்களாகிய முனிவர்கள் ஹரா! ஹரா!! வென்று மிகவொலிப்ப விருஷபாரூடராய் அம்மை க்குக்காட்சிக்கொடுத்து நின்னுடைய தவத்திற்கு உவந்தோம் மீண்டும் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வாயாக என்னலும், மயிலுடம்மையும் தீர்த் தத்திற் படிதலும், பிணிமுக உருவநீங்கி கருங்கூந்தலும் செவ்வா யையும், பிரகாசம் பொருந்தியபிறைபோன்றநெற்றியையுமுடையபெ ழைய அம்மையுருவம் பெற்றவளாய்க் ககனந்தல் விருஷபாரூட ராயிருக்கும் நித்திய முகதனும் பரமேசுவரனின் மீது அன்பு மிக்கூர்ந்தவளாய் பலவிசைத்தரையினிற்படிந்தெழுவதானாள். எம் ம்மையைச் சூழ்ந்திருந்த மற்றைய மயில்களெல்லாம் தலைவியா கிய உமாதேவியாரைப்போலவே தாமும் மயிலுருவம் நீங்கப்பெ ற்றவையாய் ஈசுவரனையும் அம்பிகையும் பணிந்திருந்தார்கள். இவ் வாறு பணிந்த உமையவளை நோக்கி நின்னுடைய பாவங்கள்யாவு ம், இத்தடத்திற்படிந்தமையாலே அறவேயொழிந்து போயிற்று; நீ நமக்குச்செய்த பூசனையை மகிழ்ச்சியுடன் ஏற்று ஆநந்தித்தோ ம்! நினக்கு வேண்டிய வரம் யாது? எனவினவினான்! அம்பிகை யும்

ஐயனே போற்றி போற்றி யழலவிர் மழுமானேந்து
கையனே போற்றி போற்றி கையர்கண் காணுமேனிச்
செய்யனே போற்றி போற்றித்தேவரைக் காத்தாண்ட
வையனே போற்றி போற்றி யெனவிதுவக்குக்கனுமருள்'. (8)

இத்தியாதிவிதமாகப்பரமேசுரனைப் போற்றி பின்வரும் வரங் களைக்கேட்கலானாள்! ஐயனே! அடியேன் செய்த பூசைக்குத் தாங்கள் உவந்ததுண்டானால், இத்தலம் விஷ்ணுபிரமமாதிதேவர்மு

தனியோரால் கௌரிமாயூரமெனவேபெயரிட்டழைக்கப்படல்வேண்டும்; இந்நாமஞ்சொற்றவர் எல்லாம் [illegible], அடைய வேண்டும்; தாயுமாயும் உலகுக்கெல்லாம் [illegible] ஐயா! தாங்கள் மாயூரநாதனென்னப்பெயர் பூண்டு [illegible] இத்தல தீர்த்தங்களிலாடி நின்னை வணங்குபவர்கட்கு [illegible] பாதகங்களை யகற்றி யருளல்வேண்டும், நான் பூசை செய்த இலிங்காகாரத்தில் என்றும் பிரசன்னமாய், தேவரீ ராதனத்திலிருந்து நின்னை நினைத்த போகமும் முத்தியுமளிக்க வேண்டும். சூரியன் துலாராசியிற் சஞ்சாரஞ்செய்யும் துலாமாதத்தில் பொன்னி நீரில் அடியார்களுக்கெல்லாருக்கும் தீர்த்தமாகிச் செய்து, அதில் வந்து மூழ்கினருக்குப்புமாறு அருளபுரிய வேண்டும். [illegible] வழிசசெல்லும்போதோர் நாளில் [illegible] சாலோகத்தையும் மனப்பூர்வமாய் உன்னை வந்து மூன்றுநாள் தரிசித்தவர்க்குச்சாமீபத்தையும், இங்கேயே சில நாளிருந்து தரிசித்து வந்தவர்க்கு சாரூபமும் சதாசாவகாலமும் உன்னை விட்டு நீங்காமல் இத்தலத்திலேயேயுறைவோருக்கு சாயுச்சிய பதவியும் நீவிர் கொடுத்தருளல்வேண்டும். பிரமகத்தியும் ஸ்திரீஹத்தியும், சிசுஹத்தியும், பிதுர், மாதுர் ஹத்திகளும் நின்னைக்கண்ட மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல நீங்கவேண்டும். இத்தலத்திலுற்பவித்த புல்செடி, மரங்கள், பட்சி [illegible] காய், பன்றி, கீரி, பூனை, முதலிய எல்லா [illegible] ணனே! நின் சரணத்திலே [illegible] உன்னை ஸ்தோத்திரஞ்செய்யும் [illegible] ள்முதலிய சகல செல்வங்களையும் [illegible] செல்வத்தை மிகுதியுமடைந்து யாதொரு குறை [illegible] வாழ்ந்து கடைசியில் நின்னுடைய பாதாரவிந்தச்சேவையை யடைதல் வேண்டும். கண், கை, கால், செவிகள் முதலியன குறைந்த குருடர், செவிடர், மூடர் முதலாயினோர்கள் யாவரேயாயினும், குஷ்டரோகிகளாயினோர்கள்யாவரேயாயினும், கதிபெறுவகையில்லாதவர் யாவரேயாயினும் நின்னை பக்தியாய் வந்து இத்தீர்த்தத்தில் படிவாரேயாமாகில்,பழிபாதகங்கள் நீங்கி இன்பம் பெறுதற்கடைக்கேறும்படி அருள்புரிதல் வேண்டும். இப்படியாகப் பராபரையாகிய அம்பிகை கேட்டவரங்களெல்லாவற்றையும் ஈசுரன் கேட்டவாறே கொடுத்து, சுவயம்பு இலிங்கத்துள்ளே மறைந்தார். அரவணைத்துயில்வோனாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தி முதலாய தேவர்கள் யாவரும்மலர்மாரிதூவி ஹர! ஹர! என்று ஆர்ப்பரித்தார்கள்,

(தேவி வரம் பெறு சருக்கம் முற்றிற்று.)

---

10. மாயூரநாதர் வள்ளலாராய சருக்கம்.

தக்ஷப்பிரஜாபதியினது யாகத்தில் அகோரவீரபத்திரரால் அடிபட்டு முறிபட்டுப்போன அயன் மாலுள்ளிட்ட தேவர்கள் எல்லாரும், அஷ்டவீரட்டத்தானங்களிலொன்றாகிய திருப்பறியலூர் உற்று எம்மானைப்பூசைசெய்ய ஒற்றவர் மாயூரம் வந்து சேர்ந்தமை கூறுவாம். பராபரனாகிய பரமேசுவரனை அவமதித்து யாகஞ்செய்த பேயனைச்சேர்ந்தமையினாலே எம்முடைய அதிகாரங்களையுஞ்சுவதந்திரங்களையும் அறவேயிழந்ததோடு அகோர வீரபத்திரசுவாமியால் பொறுக்கலாற்றாத்தண்டனையையும் அடைந்தோம். இனி நாம் கடைத்தேறும் வண்ணம் மாயூரநாதனை அடைந்து கதிபெறுவோம் என்று தேவர்களெல்லாரும் மாயூரம் சேர்வாராயினார்கள். பிரமனால் முன்னம் இங்குண்டாக்கப்பட்ட பிரமதீர்த்தத்தில் முறைப்படி ஸ்நானஞ்செய்து மகிமை விளங்கும் விபூதி தூளனமும், அதன்மேல் திரிபுண்டரமும் ஆகம நூற்களிலே சொல்லப்பட்ட விதிப்படி தரித்து மகாதேஜஸையும் கொடுக்கும்படியான உருத்திராக்ஷதாரணமுஞ் செய்துகொண்டு, பஞ்சாக்ஷர மகாமந்திரத்தை மனதிலே ஜபித்துக்கொண்டும் அயன்மாலையுள்ளிட்ட எல்லாத் தேவர்களும் மாயூரநகரை நோக்கிப்புறப்படலானார்கள். எம்பிரானை உள்ளங்குளிர ஆட்டுவதற்குற்ற விசேஷமான தைலங்களும், அவருக்குச்சூட்டத்தக்க வில்வம் முதலாய அருமையான புஷ்பங்களும், சாலியன்னம், சித்திரான்னம், பக்ஷியம் முதலான நைவேத்தியங்களும், தூபங்கள் தீபங்கள் முதலியன பலவும் யதேஷ்டமாய்ச்சேகரிக்கலானார்கள் அருமையான யோகியர்களின் மனதில் ஜோதிசுவரூபமாய் வீற்றிருக்கும் பிரபுவாயும், உலகத்தவர்களின் க்ஷேமார்த்தமாக கொடிய நஞ்சினை அமுதமாகவுண்ட பெருமை தங்கியவனும், முன்னொருகால் பிரமன் வந்து தன் குறையிரப்ப அக்குறையை நிவர்த்தித்தவனும் தக்ஷயாகஞ்சிதைத்தவனுமான எமமுல்வனாகிய பரமேசுவரனை மேற்கூறிய உபகரணங்கள் கொண்டு பூசித்துமிகுதியும்வந்தித்துப்பின் வருமாறு எல்லாத்தேவர்களும் தங்கள் குறைகளையிரந்து துதிக்கத்தொடங்கினார்கள்.

'அருவாயுருவாயருவுருவாயனைத்துங்கடந்த வசஞ்சலனாய்ப்
பெருநான்மறையின் படிப்பொருளாய்ப் பெரிதாய்ச்சிறிதாய்ப்பேரு
பொருந்தும்புலனைந்தபிராகம் புற்ற துரியாதீதங் கடந்து [ணர்வாய்
கருதாவெளியாயமர் மாயூரேசநின்றாள்கைதொழுதேம். (9)

ஒன்றாயுருவாயுருவாய் மற்று பயனாயொன்பதுங்கடந்து
நின்றாய் மலமலமிருளா னெருக்குண்டுடைய மூவுயிர்க்கு
கன்றாபுணர்வுபுணர்த்திடுவானையனுமானைய மாமாலைய
என்றுமிரண்டிற்றனுவாதி யியைப்பாய் நின்னைச்சரணடைந்தேம். (10)

[illegible]ருஷவகை யகத்தவழ் முள்ளும் புறமுமெனப்புகலு
[illegible]திருப்பரீட்டத்து நகொளப் பொருத்தியிவ்வாறு தொழிற்படுத்த
மருவார் [illegible] புலன் வழிச்சென்றுற்றும் வினைசுவாசகம
கரு[illegible] பப்பிதது கறிப்பிப் பாய திற்புகல் புகுந்தேம். (11)

[illegible] பருவ [illegible] னைகளொக்குஞ் சமரோகதி
[illegible] திசத்தே யயைாத சகலந்தனி [illegible]
[illegible] சுத்தந்த [illegible] வயக்க
[illegible] னின்னைச்சரணடைந்தேம். (12)

[illegible] னைகடந்து கரு யெனபவொங்கடந்து
[illegible] யிர் கடந்து [illegible] னொருடர் கடந்து
[illegible] பரசை ராய்ப்பிரியாச் சுகஙாரி [illegible]
[illegible] பமபொருளேநினைனைச்சரணடைந்தேம். (13)

அல்லார் கண்டத்தர்புதனே யடியார்க்கெளிய கருணையனே
சொல்லார் மறையின் முடியானே தூயபிறைசார் வேணியனே
செல்லார் கூந்தலுமை [illegible] செறியோர் பாதிமேனியனே
கல்லார் புகழுமாயூரநாதா நின்னைச்சரணடைந்தேம்.' (14)

இவ்வாறு ஸ்தோத்திரஞ்செய்த நாராணனுக்கும், அட்டதிக்குபாலகர்களுக்கும், மற்றையதேவர்களுக்கும் அருள்செய்வதற்காக அவ்விலிங்கத்தினின்றும், ஜகதீசுவரன் பிரசன்னமாயினான். இப்படிப்பிரசன்னமான ஈசன் அத்தேவர்களை உபசாரத்துடனும் பூஜைக்கும் பிரார்த்தனைக்கும் மிகுதியும் மெச்சினோம்! உங்களுடைய பாபங்களெல்லாம் என்னுடைய தரிசனமாத்திரத்திலே விமோசனமாய் விட்டன. பிரமனே! விஷ்ணுவே! இந்திரனே! குபேரனே! இயமதர்மராஜனே! வருணனே! ஈசானியனே! சந்திரனே! சூரியனே! நக்ஷத்திரகூட்டங்களே! நீங்கள் பண்டைபோல உருவங்களையடைந்து உங்களுடைய அபீஷ்டப்படி உங்களுடையமனைவிமார்களுடனும் இருந்து உங்கள் தொழிலைச்செய்து உலகத்திற்குபகாரமாயிருப்பீர்களாக! மாயூர க்ஷேத்ரத்திலுள்ள என்னை தரிசித்து அப்பெறுதற்கரிய பெறுபேற்றைப் பெற்றீர்கள்! இனியாதும் உங்களுக்குக்குறைவில்லை. நீங்கள் யதாஸ்தானம் போய்ச்சேருங்கள்! என்று விசேஷமான வரங்கள் பலவற்றை வரையாது கொடுத்தருளிஇலிங்கத்துள் மறைந்தார். மலரவனும் நெடுமாலும், தேவேந்திரனும் இப்படிக்கைமமாறு கருதாமல் [illegible] யபூடோவேண்டியவரங்களைத்தமக்கு [illegible] ளிய ஸ்ரீமகாதேவனுக்கு வள்ளலா[illegible] தகுதியாகச் சூட்டினார்கள். கொடிய [illegible] தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய் [illegible] போற்றி செய்து, தன [illegible] பரிசுத்தமாய்ச்சிவலோக பதம் சேர்ந்தான். இப்படியாகத் தமபால

சூழ்ந்தகுற்றங்களை நீக்கி அருமையானவரங்களீந்தவள்ளலாரை வாழ்த்திக்கொண்டே எல்லா வானவரும் தத்தம் யதாஸ்தானங்களை இனிதணுகினார்கள்.

(மாயூரநாதர் வள்ளலாய சருக்கம் முற்றிற்று.)

---

11. தேவி பூசைபுரி சருக்கம்.

உலகிற்கெல்லாம் காரணியாகிய உமாதேவியார் ஸ்ரீமாயூரநாதரைப்பூஜைபுரியவேண்டி பிரமதீர்த்தத்தில் முறைப்படி ஸ்நானஞ்செய்து அங்கிருந்தே கமலினி முதலிய பல்லோர் இருளையார்கள் தன்னைச்சூழ்ந்துவர நந்தவனம்புக்கு நந்தியாவட்டை, மல்லிகை, மந்தாரம், செவ்வந்தி, பாடலம், மாதுளை, குராவகுளம் வில்வம், கடுக்கை, தேங்கொன்றை, செவ்வகத்தி, நீபிடமான், புன்னாகம், குருந்து, பொன்னாவிரை, வன்னி, குசமலை, வேமகை கொங்கு, கொக்கு மந்தாரை, வெட்பாலை, அப்பாசம் கருவிளங்குவளை, ஆம்பல், சதகுப்பை, கண்டங்கத்திரி, அலரி, நாவல், எலுமிச்சை, பாரிஜாதம், காந்தை, மத்தம், மருக்கலம், முதலிய மலர்களும், பத்திரங்களும் வேதாகமங்களிற் சொல்லியபடி கிரமப்படி எடுத்து, பெரிய மாலைகள், தண்டை மாலைகள் முதலியனவாய்ச்செய்து, கங்கை, யமுனை கோதாவரி, ஸரஸ்வதி, நருமதை, ஸிந்து, காவேரி முதலிய நதிதீர்த்தங்களுடன் பனிநீர், கர்ப்பூரம் முதலியனவும் அதிற்சேர்த்து புதுக்கலசத்தில் ஸ்தாபித்தும், நறுமணமுள்ள தைலங்கள், இனியதேன், பசும்பால், தயிர், கருப்பஞ்சாறு முதலியனவும் கிளைத்தீபங்கள் பற்பலவும், குடை, கொடி, சாமரை, கண்ணாடி, சிவிறி, முதலிய பல உபகரணங்களுமொன்றேனுங் குறைவில்லாமல் சேகரித்து வைத்துக்கொண்டு உச்சிகாலத்தில்சர்வநியமத்துடனும் விசேஷமான வாத்திய ஒலியுடனும், பஞ்சாட்சரத்தைச்சதாகாலமும் தியானித்த இதயத்துடனே ஆகம சாஸ்திரத்திற்சொல்லிய விதமாய் ஒன்றுங்குறைவில்லாமல் அவ்வவ்வபிஷேகங்கள் ஆகும்போதும், அப்போதப்போதுந் தக்கபடி தூபதீப நைவேத்தியாதிகளையும் குறைவறச்செய்து கடைசியாக பஞ்சபக்ஷ்யபரமான்னங்களுடன் இறைவன் உவக்கும்படி மகா நைவேத்தியமும், கற்பூர தீபாராதனையும், விபூதிரக்ஷையுமிட்டு பக்தர்களுக்குப பிரசாதங்களையும் மனமுவந்து கொடுத்திருக்குங்காலத்து, இலிங்கத்திலிருந்து சர்வேசுவரன் மலர்ந்த முகத்துடன், ஆவிர்ப்பவிப்பாராயினர். பிரசன்னமாய் சர்வேசுவரன் உமையவளை நோக்கி, அம்பிகாய்! உனது பூசனைக்கு மிகுதியும் உவந்தோம்! இனி

நீ என் வாம பாகத்தமர்ந்து பக்தர்களுடைய சம்சார பந்தங்களை யறவே நீக்கி, அவர்களுக்கு வேண்டிய எல்லாவரமும் பாலிப்பாய் என்று சர்வேசுவரன் திருவாய்மலர்ந்தருளியபடியே இலிங்கத்துள் மறைந்தான்; சர்வேசுவரியாயஜகதீசுவரியும் அபயம்பராம்பிகை என்னும் பிரக்யாதியான பெயரையடைந்து அப்பெயருக்கேற்ப பக்தர்களுக்கபயம் கொடுத்து வருவாளாயினள்.

(தேவி பூசனை புரி சருக்கம் முற்றிற்று.)

---

12. ஸ்தல மகாத்மியசருக்கம்.

கும்பிபாகம், இரௌரவம, கொடியதவனம், வாலுகம், முதலிய பாதகர்களுக்கென்று சிருஷ்டிக்கப்பட்ட நரகங்களில், தாங்கள் எடுத்த ஜன்மங்களில் கொடியவைகளைப்புரிந்த தீயர் பல்லோர் பின்னர்க்கொண்டு செலுத்தப்பட்டு விசேஷ தொந்தரவடைவார்கள் என்று சாஸ்திரங்கள் கூறுவனவாகும். குரு மனைவியை யிச்சித்து அவளைப்புணர்ந்த தீயவன், அவன் இறந்தபின்னர் நரகத்தில் கொண்டுவைக்கப்பட்டு, அவனது குறியிலூசிச்செருகி வதைத்து அந்நரகத்தில் வெகுநாள் வைத்திருந்தபின் பின்னர் கோட்டான், ஆமை, நாய்முதலிய ஜன்மங்களெடுத்து மீட்டும்மீட்டும் மீளா நரகத்துக்காளாவான். தனனுடைய பெறறதாயையும், தன்னினும் மூத்தவளையும், சகோதரன் மனைவிகளையும், வேதியர்மனைவிகளையும, பதிவிருதைகளையும், தந்தையின் சகோதரிகளையும், மாமன்மனைவியர்களையும், மாமிமார்களையும், சிறுதாயார்களையும், இச்சித்தவர்,குருமாரின் மனைவியைச்சேர்ந்ததனுல் அனுபவிக்கத்தக்க நரகத்தையடைந்துத்தான்புறுவர். பந்திவஞ்சனை, குடும்பவஞ்சனை, பெரியார்முந்திபோஜனஞ்செய்தல்,சந்நியாசி ஈசுவரதூஷணம், நல்லாரைப்பொல்லாரென்றல், வேதத்தைப்பணத்திற்கு விற்றல், பிரமகத்திசெய்தல், இப்பேர்ப்பட்ட பாதகங்களைப்புரிந்தோர் கும்பிபாக நரகத்தில் பலநூறுயுகங்கள்காறும் கொண்டுய்க்கப்பட்டு அவஸ்தைப்பட்டு பின்னர் பன்றியாய்ப்பிறந்து நீண்டகாலம் உழன்று திரிவார். இப்படிப்போல செய்யப்பட்ட மாபாதங்கள் பல கோடியுண்டு. அப்பலகோடி பாதகங்களுக்கென்று சிருஷ்டிக்கப்பட்ட நரகங்களும், அக்கொடுஞ்செயல்களுக்கென் றேற்பட்ட தண்டனைகளும் பலகோடியுள்ளன. இப்பேர்ப்பட்ட பலகோடி பாதகமும் நீங்கி ஈசுரபதவியடையவேண்டுமானுல், ஈசுரபக்தி மிகுதியும் இருத்தல் வேண்டும். அத்தகைய பக்தி அம்முன்னவனை மனப்பூர்வமாய் அர்ச்சித்தேத்துவதனுல் உண்டாகலாம். அவ்விதமாக காம

அக்கொடிய நரகங்களிலிருந்தும் வெளிவரவேண்டுமானாலும ஈசுர
பக்தியைத்தவிர வேறு மருந்தில்லை. அப்பேர்ப்பட்ட யாவும் வல்
லவன் இன்புற்றமர்ந்திருக்கும் சிறந்த தலத்தினைத்தேர்ந்தெடுத்
தும் பெரியவர்கள் சொல்லக்கேட்டுத் தெரிந்துகொண்டு நாம் அங்
குச்சென்றடைந்து அம்மகாபுருஷனை மனமொழி மெய்களால்
வழுவாமல் தியானமோ, அர்ச்சனையோ, தொண்டோ இவைகள்
புரிந்து அன்னவனை மனமகிழப்பண்ண வேண்டும்.

காசி, குருக்ஷேத்திரம், திருப்பருப்பதம் திருக்கேதாரம்,
சோமநாதம், கோகர்ணம், விரூபாட்சம், திருக்குடந்தை, திருக்
காளத்தி, காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், திருவொற்றியூர், திரு
ப்பாசூர், திருவாலங்காடு, திருவேற்காடு, திருவெண்பாக்கம், திரு
முல்லைவாயில், திருக்கச்சூர், சிறுபாக்கம், அரசிலி, புறவார்பனங்
காட்டூர். திருக்கோவலூர், திருவதிகை, திருவண்ணாமலை, திருநாவ
லூர், திருத்துறையூர், பெண்ணாகடம், திருக்கண்டீசுவரம், திருக்காவ
லூர், திருப்பாதிரிப்புலியூர், திருவெண்ணெய்நல்லூர், விருத்தாச
லம், அவிநாசி, திருப்பாண்டிக்கொடுமுடி, சாயாவனம், சுவேதா
ரண்யம், திருச்செங்காடு, சீகாழி, திருக்கோலக்கா, திருப்புன்
கூர், ஓமாம்புலியூர், புள்ளிருக்கும் வேளூர், திருக்குறுக்கை, திரு
நள்ளாறு, ஸ்ரீவாஞ்சியம், திருவாரூர், திருப்பனந்தாள், திருவா
லங்குடி, திருவாப்பாடி, திருவிடைமருதூர், திருவாலவாய், இரா
மேசுவரம், திருநெல்வேலி திருக்குற்றாலம், இப்பேர்ப்பட்ட பல
ஸ்தலங்களுள்ளும் கௌரிமாயூர க்ஷேத்திரம் அதிக மகிமை வாய்
ந்தது என்று வேதங்களே கூறும். இத்தலத்தினைச்சுற்றி எத்திக்
கிலும் ஒரு யோசனையளவுதூரம் இருக்கப்பட்ட தலங்களைப்போல
த்தலங்கள் இப்பூமண்டலத்தில் இருப்பதின்று. மற்ற எத்தலங்க
ளும் இக்கௌரி மாயூரக்ஷேத்திரத்திற்கு ஒருபடி தாழ்ந்ததே
யன்றி உயர்ந்ததில்லை என்பது வேதத்துணிபேயாம். இப்பேர்ப்
பட்ட க்ஷேத்திரமொன்றிருக்கிறதென்று அறியாதவராய்த்திரித
ரும் புல்லறிவாளராயினோர் யாவரேயாகிலும் அன்னவர் பைத்தி
யம் பிடித்தவராய் அநேக தீராநோய்களுக்காளாகிக்கடைசியில்
இறந்து நரகவாதனைக்குட்படுவதும் திண்ணமேயாம்.

மாயூரத்தெல்லையை ஒரு முறை பிரதக்கணம் செய்பவர் சுவ
ர்க்கமும், இரண்டினால் உம்பர்வாழ்வும், மூன்றினால் சத்திய
லோகமும், நான்கினால் வைகுண்ட பதவியும், ஐந்தால் சகலலோக
சஞ்சாரத்துவமும், ஆறினால் குபேர பதவியும், ஏழினால் ஷண்மு
கன்பதியுலகமும், எட்டினால் இயமனுலகத்தையும், ஒன்பதனால்
பராசத்தியுலகமும், பத்தினால் திருக்கயிலாய பதவியையும், பதி
னொன்றால் சிவலோகத்தில் சாயுச்சிய பதவியும் பன்னிரண்டுபதின்

மூன்றினால் முறையே சாமீப சாரூபங்களையும், பதினொன்றுகால் ஈசனிடம் இரண்டறக்கலக்கும் மோக்ஷபதவியும், அடைவார்கள் என்பதும் நிச்சயம். பிரதமையில் மாயூரப் பிரதக்ஷிணம் வருவாராகின் பாவம்போம்; துதியையில் விசேஷவரமும், சுவர்க்கபதவி திரிதியையிலும், சதுர்த்தியில் இந்திரபதவியும், பிரமபதம் பஞ்சமியிலும் சர்வலோக அரசாட்சி ஷஷ்டியிலும், சப்தமியில் விசேஷ ஞானமும், அஷ்டமியில் இஷ்டபூர்த்தியும் நவமியில் கணத்தின் தலைமையும், தசமியில் பரசிவபதமும், ஏகாதசியில் வைகுண்டலோகமும், துவாதசியில் கைலாசபதவியும், எஞ்சிய நாளில் சிவலோக சாலோக சாமீபசாரூப, சாயுச்சிய பதவிகளும் மாயூரத்தை வலம் வருபவருக்குக் கிடைக்கும். மேருகிரிபோன்ற பெரியோர் தருமத்தை மற்றைத் தலத்தில் செய்து விசேஷமான புண்ணியத்தைச்சம்பாதிப்பதை சிறியோர் தருமம் மாயூரக்ஷேத்திரத்தில்செய்து எளிதில்அப்பயனைச்சம்பாதித்து விடலாம். மற்றோர்தலத்தில்இலக்ஷப்பிராமணபோஜனம் செய்வித்தலினாலுண்டாகும் மகத்தான புண்ணிய விசேஷத்தை இம்மாயூர க்ஷேத்திரத்தில் ஒரு சண்டாளனுக்குச் சிறிதன்னம் இடுதலினால் சம்பாதித்துவிடலாம். ஆயிரவருடம் மற்றொருதலத்தில் வசித்தடையும் பெருத்த இலாபத்தைஒருகணத்தில் மாயூரக்ஷேத்திரத்தை மிதித்தும்,நினைத்தும் அடைந்துவிடலாம். பிறிதோர்தலத்தில் காலவருந்தக்கடந்தடையும் பாக்கியத்தினை, மாயூரத்திலே நினைத்தமாத்திரத்திலேயே சுலபசாத்தியமாய் எளிதில் அடையலாகும் என்பதற்கையமேயின்று. பிறிதாயதோர் தலத்தினிற்சென்று ஸ்தலோபவாசமிருந்து அதனால் அடையும் பேற்றினை, இக்கௌரிமாயூரக்ஷேத்திரத்தினில், நல்லபால், நெய் தயிர் மோர் முதலாய பலவகைப்பட்ட பஞ்சபட்சிய பரமான்னங்களுடன் உடம்பு பருத்துக் கொழுக்கவுண்டு பரிசுத்தமான கணிகைமாதர் பலரோடும் இனிமையாயபோகமனுபவித்திருந்தாலும் எளிதில் பெறுவது நிச்சயமேயாம் என்பதும் துணிபு.

ஆசையுடனே கௌரிமாயூர க்ஷேத்திரத்தினைப்பிரதக்ஷணம் வருமொருவரை பூலோகத்தவர்பலரும் தேவனெனப்போற்றுகின்றார் என்று சொல்லப்பட்டிருக்கிறது சதுர்முகன் முதலியதேவர்கள் யாவரும் அன்னவரையே பிரம்மசுவரூபமாகப்பாவிக்கின்றார்களென்னில் இப்பிரதக்ஷணமகிமையைப் பெரிதும்விரித்துக்கூறுவது அவசியமற்றதே. சிவபிரான் இனிதமரும் புனிதமான மாயூரக்ஷேத்திரத்தில் உற்பவிக்கும் செடி கொடி புல் பூண்டு விருக்ஷவர்க்கங்களியாவும் சற்றில் ஈசனின் சாரூபத்தையே காலடிப்பாய் அடைகின்றன வென்பதினாலேயே இந்த க்ஷேத்திரமகிமை நன்கு அறியக்கிடக்கின்றது. ஊர்வழிப்பிரயாணத்திலாகிலும், வியாபார

முறையிலாகிலும், இந்த க்ஷேத்திரத்திலுள்ள கணிகை பாதர்களை யுத்தேசித்தாகிலும, ஒரு நண்பனை யுத்தேசித்தாகிலும், மற்றெவ் விதத்திலாகிலும், மாயூரம் ஒருவன் சேர்ந்தாலும், விசேஷமான நன்மையை யடைவான் என்பதும் நிச்சயம்.

காசி க்ஷேத்திரத்தில் வசிக்கும் மகா பெரியவர்கள் கூட தம்மரும்புதல்வர்களுக்கும் புதல்விகளுக்கும் விசுவநாதன், அன்ன பூரணி, விசாலாட்சி என்னும் பெயர்களையே முறையே வைப்பதை மனத்தி லெண்ணாதவர்களாய் மாயூரநாதன், அபயாம்பிகை, ஞானாம்பிகை என்று முறையே பெரிதும போற்றி வைத்தழைக்கின்றார்களென்னின், இக்கௌரிமாயூரம் என்னும் திருப பெயர் மாகா மந்திரமென்று கருதப்படுகிற பஞ்சாக்ஷரத்திற்கும் மேம்பட்டது என்ற, கூறவும வேண்டுமோ? கௌரிமாயூர க்ஷேத்திரத்தில உள்ள தலங்களெல்லாம் புண்ணிய தீர்த்தங்களெனறும், கறகளெல்லாம சிவலிங்கவடி வென்று முறைதநதால், இந்த க்ஷேத்திரத்திற்கிணை இப்பூமண்டலத்தில் எதுவென்று எடுத்துரைக்கலாம்? இபபடியிருப்பதனால், இந்தத் தலத்தில் வசிப்போரெவரும் சிவசாயுச்சிய மடைதற்குரியவரே என்று சொல்வது செவ்விதாசப் பொருந்துமென்பதறகையமே யின்று.

புண்ணிய க்ஷேத்திரமாகிய மாயூரத்தில் வந்து, ஈசுவரனை த்தரிசிக்கப் பிரியமுடையோரெவரையும நல்வரவேற்று, அவர்க்குத் தகுந்த உறைவிடங்களையும உண்டிகள முதலாயவற்றையும் பிரியமுடன் உதவுவார்க்குக் கிடைக்கும பாக்கியம், அளவிறந்ததாகும் என்பதில் சந்தேகமே யில்லை. தேவப் பிராமணர்கள் பல்லோருக்கும் போஜனமளித்துதவுவோர் அடையும பாக்கியத்தைப்பற்றி, ஈசுவரனையன்றி வேறெவரும சொல்லத்திறமல்லர் என்றால் இந்த க்ஷேத்திரத்தில் செய்யும அன்னதானத்தின் பெருமையையும் சொல்லலாம் தகைமைத்தோ ?

மாயூரத்திற்கு உள்ளம மகிழ்ந்து போந்து, அத்தலத்தினை ஆநந்தமாய்ப் பிரதக்ஷணம செய்தும், அத்தலத்திலிருந்து அநேக தான தருமங்களையும வழுவறச்செய்பவர்கள், பஞ்சமாபாதகர்களேயாயினும, அவர்கள் அப்பாதகம் நீஙகி ஈசுவர ஸாந்நித்தியத்தினை யடைவார்கள் என்பதும் திண்ணம்! திண்ணம்!!

மாயூர க்ஷேத்திரஞ் சேர்ந்து, ஈசுவர வழிபாடு, தான தருமங்கள் முதலியவற்றை முறையே சாஸ்திர விதிப்படி செய்பவர்கள், நரக வாதனைக்குட் படாமலும், கொடிய கூற்றுவனுக்கஞ்சாமலும், வேறு பிறப்புக்கள் பல எடுக்காமலும், பரமேசுவரனுடன் இரண்டறக்கலக்கும் நிலையான பதவியையும், உறுப்புகள் குறைந்து அகௌரவ மடையாமலும், இருப்பார்கள் என்பதும் தேற்றம் மாதுபாகனுகி வாழும் அர்த்தநாரீசுவரராகிய எம்பெருமானும், மேற்கூறியவற்றிற்கெல்லாம் சாக்ஷிபூதமாக விளங்குபவராவார். ஏ! உண்மையையுள்ளபடி யுணர்ந்த மெய்ஞ்ஞானிகளே! இதுவே மாயூரத்தலத்தின் மான்மியமாகும் என்பதை நன்குணர்வீர்! இம்மாயூர க்ஷேத்திரப் பிரதக்கணத்தினுல் அடையும் பேறுகளோ அநந்தம் என்பதற் கையமே யின்று என்று சூதபுராணிகர் நைமிசாரணிய வாஸிகளைப் பார்த்துத் திருவாய்மலர்ந் தருளினுர்.

(ஸ்தல மகாத்மியச் சருக்கம் முற்றிற்று.)



13 கௌரி தாண்டவ சருக்கம்

இவ்வாருகக் களிப்புடன் இனிது வீற்றிரா நிற்கும் எம்பெருமாட்டி ஜகதீச்வரனின் ஒப்பற்ற பாதங்களைப் போற்றி, அநாதியானவனே! முன்னம் மயிலுருவமெடுத்து பெண்மயிலுடன் உபகரணங்களாகிய பக்க வாத்தியங்களில்லாமல் நடனம்புரிந்தாய்! நாரணனை அயன் முதலிய தேவர்கள் பல்லோரும் ஹர ஹர வென்று துதிக்கும்படியாய்ப் பற்பல சராசரப் பொருள்களும், எல்லாத் தேவர்களும், யானுங்கண்ணுறக் கண்டின்புறும் படியாயும் தில்லையன்றி லையுள்ள நடனமும் இம்மாயூரத்திலுள்ள தென்று எவரும் நினைத்துப்போற்றற் கிடமாயும்; ஆநந்த தாண்டவம் புரிதல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டனள். 'ஏ! அம்மையே! நின் கருத்தின்படியே இசைவேன்; குற்றமற்ற இத்தலத்தில் அப்படியான ஒரு நடனம் நாம் புரியவேண்டுவதும் அவசியந்தான்; முகில் போலுங் கூந்

தலையுடைய கௌரியாகிய நின்பொருட்டே அத்தாண்டவத்தை யாம் புரியா நிற்பேம். அத்தாண்டவம் கௌரிதாண்டவமேனவே பெயர் பெறும், என்று கூறிய சர்வேச்வரன் நந்தியம் பெருமானை உடனே விளித்து, இத்தலத்தில் யாம் செய்யக்கருதிய தாண்டவத்தைக் குறித்து,பிரமன் முதலான சகல தேவர்களுக்கும் செய்தி சொல்லி யனுப்புக எனத் திருவாய்மலர்ந்தார். நந்திகேசர் ஈசன் பணித்தவாறே செய்தனர். எல்லாத் தேவர்களும் இமைப்பொழுதில் ஈசனுடைய நர்த்தனம் கண்ணுறுவான் வேண்டி,கௌரி மாயூரம் சேர்ந்தனர். இவ்வாறு வந்து சேர்ந்தோர் யாவரும், பாவநாசம செய்யும் பிரமதடம் புக்குப் படிந்தாடி விபூதி தரித்து, உருத்திராக்கமணியினைக் கழுத்திற் செவ்விபெற வணிந்து அபயப்பிரதாம்பிகாசமேத கௌரிமாயூரேசனின்னிருதாள் வணங்கி நர்த்தன தரிசனம் விழைந்து இமையாதவர் நின்றார்கள். இப்படியாகச் சகலரும் வந்த செய்தியை அம்மையால் அறிந்த உமாதவன் தன்னிச்சாமாத்திரத்தினுல் மண்டபமொன்று நிருமித்து, நாரணன் மத்தளம் போடவும், நான்முகன் தக்கபடி தாளங்கள் போடவும், தும்புரு நாரதரிசை பாடவும், யோகியருளத்துறை பெம்மான் ஆநந்தத்தாண்டவம் புரிதலுற்றான். இப்படியான நர்த்தனம் நிகழா நிற்புழிக் கண்ட முனிவர்கள் ஹர ஹர என்று புகழ்ந்து சலித்தார்கள். அடியவரெல்லாரும்களிப்பென்னும் கரையிலாக் கடலிலாழ்ந்தனர். நடனத்திற்குத் தகுந்தாற்போல் வேய்ங் குழல் பலர் ஊதினர். வான் தோயும் தமருகம் ஒரு கையினிலும், மான் ஒரு கையினிலும், மழு ஒரு கையினிலும் ,சின் முத்திரை ஒரு கையினிலும் தாங்கி, எம்பிரான் ஆநந்தநடனஞ் செய்து பக்த பரிபூரணனாய் விளங்குவாராயினுர்.ஜகதீசனின் கபர்த்தமென்னும் சடை எண்டிசைகளிலும் விசாலமாய் விரியவும், மூன்றும் பிறைச்சந்திரன் சந்திரனோடுதுள்ளவும், புலியதளாடை அரையிலிலங்கவும், என்புமாலை புஜங்களிலும் மார்பிலும் தொங்கவும், பக்தபரிபூரணனும் கிருபாகரன் குஞ்சித பாதத்துடன் நர்த்தனம் செய்வானாயினான். செவிக் குண்டலங்கள் அசையவும், புருவம் நெறியவும், பிரணவ மலர்ப் பெருமாலை மணம் வீசவும், வேதச் சிலம்பு உண்மையிற் கலகல வென்றொலிக்கவும்,

உரியவஞ் செழுத்தெட்டெழுத்தாறெழுத்தோங்காரலெழுத்தப்பாற்
பிரியமிக்கபிஞ்செழுத்தெனயாவரும்பேசுமூவெழுத்தெல்லாந்
தெரியநின்றதாமீரெழுத்தோரெழுத்தென்னுமெண்டிறனுதி
யரியமாமறையந்தத்திற்படிபவனுனந்த நடஞ்செய்வான்.

இம்மாதிரியான ஈசன் திருநடத்தினைத் தரிசியாநின்ற மால் முதல் தேவர்பலருங்கௌரியும் துதித்தனர். இவ்வாறே இந்த க்ஷேத்திரத்தில் நடனஞ்செய்யத் திருவுளங்கொண்டருளுவீர்எனக்கேட்டுக்கொண்ட அம்மையின் வார்த்தைக்கு, ஈசனும் ஓமெனவிணங்கினர். இப்பேர்ப்பட்ட மாயூரத்தில் கௌரிதாண்டவ தரிசனம் செய்வார் அடையும்பேறு அளவிடற்பாலதன்று. பிரமன் மால் முதலிய தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி, உமையை மணப்பதாக ஈசன் அருளிச் செய்ய, அன்னவர்களும் உமையின் திருமணத்தைக் கண்ணுற்று நற்பேறுபெற்றுய்ந்தார்கள்.

(கௌரி தாண்டவ சருக்கம் முற்றிற்று)

---

14 திருக்கலியாணச் சருக்கம்

இந்திரன், பிரமன், நாரணன் முதலிய தேவர்கள், கௌரி தாண்வட தரிசனம் செய்த பிறகு உலகீன்ற, அம்மைக்கும் பராபர வஸ்துவாகிய பரமேசுவரனுக்கும் நிகழப்போகும் கலியாணக்கோலத்தைக் காணுவான் பெரிதும் அவாவுற்றிருந்தனர். ஐப்பசிமாதத் திங்களில் இந்நாடு செய்த தவமே தவம்! ஈசனுக்கும் உமாதேவிக்கும் கலியாணம் நிகழவேண்டியதற்குரிய ஆயத்தங்கள் பலவற்றை நம்மாலானது முடிப்போம் என்று, தேவர்களெல்லாரும் மனதுட்கொண்டு, விசுவகர்மாவைக் கூப்பிட்டு ஈசுவரனுக்குக் கலியாண மண்டபம் ஒன்று கட்டும்படி ஆஞ்ஞாபித்தனர். நீலமாமணியால் வேதிகையாக்கி, மரகதத்தாற் படிகளும், அவ்வேதிகைமேற்பளிங்கினால் சுவர்களு மமைத்து நாலுபுறத்திலும் வாயிற்படிகள் வைத்தும், இன்னும் நவரத்தின முதலாயவைகளினால் கலியாணகூட

ங்களு மமைத்து, மண்டபத்திற்கு முன்வாயின் முகமெல்லாம்முத்தெ டுத்தார்கள். தாமரைவெண்முளைகள் பாய்ச்சினூர்கள். பின்வாய் மணிக்கலசத்தில் பொற்செந்நெற்கதிர் சூட்டி விளங்க வைத்தார்கள். கமுகு கதலிகளோடு தோரணம் வாயிற்புணர நாட்டினூர்கள். இப்படியாக மகோன்னதமாக அமைக்கப்பெற்ற மண்டபத்தில், ஈசனின் திருக்கலியாண நாளினைக் குறிப்பிட்டு, நகரத்தாருக்கும் வள்ளுவரைக்கொண்டு பேரிகையால் தெரிவித்தார்கள் ஈசனின் திருக்கலியாணத்தைக் கேட்டோர், நகரத்துள்ளார் யாவரும் இன்றுதாம் கடைத்தேறினோம்! இந்த பாக்கியம் இன்று தான் நமக்கு லபித்ததென ஆநந்தக்கூத்தாடி, மனமகிழ்ந்து, தம் நகரத்தைச் சிறப்பாய் அலங்கரிக்கலானூர்கள்.

நகரத்தார் யாவரும் இக்கலியாணத்தைத் தத்தம் வீட்டுக் கலியாணங்களெனவே கருதித்தத்தம் வீடுகளின் ஒவ்வொரு பாகத்தையும் நன்கு அலங்கரிக்கலானூர்கள். தங்கள் தங்கள் மாளிகைகளின்மேல் அநேக கொடிகளையும், நறுமணமுள்ள பல நிறமுள்ள மாலைகளையும் கட்டித் தொங்க விட்டனர். கரும்பு, கதலி இவைகளை பந்தற்கால்களிலலங்காரமாகக் கட்டினர். இக்கலியாண கோலத்தைப் பார்க்கவேண்டி அநேகர் யானை, குதிரைகள், தேர், பல்லக்குகள் முதலியவைகளிலேறி வந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்தினரும், தத்தம் வீடுகளில் அறுசுவையுண்டிகள் தயார்செய்து அந்தணர்களுக்குப் போஜனம் திருப்தியாய்ச் செய்வித்து, சந்தனதிகளால் உபசாரம் செய்தும், தாம்பூலங்கள் வழங்கியும், புஷ்பமாலைகள் போட்டும் உபசரித்தார்கள். மகளிர்கள் பலரும், புதிதான ஆபரணங்களையும், புத்தாடைகளையும் உடுத்திக்கொண்டு குழல்களில் புதிதான புஷ்பங்களை வைத்துக்கொள்ளுவதானுர்கள். கணிகை மாதர் பல்லோர், தெருவீதிகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற நர்த்தனசாலைகளில் இன்னிசைகளுடன நடனமும் புரியாநின்றனர், இப்படியாகச் சிறப்புடனேங்கும் மாநகரத்தில் பிரமாதிதேவர்களை யுள்ளிட்டவர்களெல்லோரும் கூடிக் கலியாண நாளுக்கு முதனூள் மிருத்துசங்கிரகணம் செய்து பாலிகை விதைகள் விதைத்தார்கள். வேதகோஷங்களும், வாத்தியங்களும் மிக முழங்க, ஒப்பற்ற எம்பெருமானை, ஜோதிமயமாய்ப் பிரகாசியா நின்று

பொன்னாதனத்திலமர்த்தித் தேவர்கள் யாவரும், தம் கைகளைச் சிர மேற் கூப்பிக்கொண்டு அஞ்சலியஸ்தராய் ஸ்தோத்தரிக்கலுற்றார் கள். பீடபூஜை, புண்ணியாகவாசனம், கலசபூஜை, சங்கபூஜை முதலியன முறைப்படி யியற்றி, கங்கையாதிய நதி தீர்த்தங்களைக் கொண்டு எப்பெருமானை உள்ளங்குளிர்தர ஆட்டவேண்டியதற் காக ஈசனைப் பார்த்து "ஓ சர்வேசுவரனே! செஞ்சடையையும், தோலாடையையும், சர்ப்பாபரணங்களையும், கபாலமாலையும், முத லானவைகளையும் ஒழித்து, தங்கள் வேறோர் அழகிய உருவங்கொ ள்ளின், தங்களை அபிஷேகம் செய்வதற்கு எங்களுக்கு நிரம்பவும் சௌகரியமாகயிருக்கும்" என்று விண்ணப்பஞ் செய்ய, எம்பிரா னார் அங்ஙனே ஆகுக, என்று சொல்லி ஸ்ரீமந்நாராயணமூர்த்தியும் பார்த்து மிகுதியும் மோஹிக்கும்படியான திருவுருக்கொள்ள, தேவர்கள் யாவரும் உருத்திரநமகசமகத்தோடு ஆகம விதிகளிற் கூறியபடி, வெகு ஒழுங்காக அபிஷேகஞ்செய்து, பட்டாடைகளும், மின்னும் நவரத்தினாபரணங்களும் சாத்தி, நெற்றியில் விபூதி சந்த னம், திலதம் முதலிய பொட்டுகளினால் அலங்கரித்து, ஈசனின் திருவுருவின் அழகுக்காக திருஷ்டியுங் கழித்து நாரணனாதிய வானோர்கள் யாவரும் செப்பருந்துதி செப்பினார்கள். பின்னர் ஈசுரனை தெருவில், பவனி வரவேண்டும் என்று சொல்லிப் பொன் விமானமொன்று கொண்டு, சந்நிதானத்தின் முன்பு வந்தார் கள். இவ்வித சமாசாரத்தைக் கேட்டு தேவர்கள் யாவரும் அங்குப் போந்து சூழ்ந்து நின்றார்கள். முரசு, தண்ணுமை, தடாரி, மொந்தை முதலிய நரபபு, தோல், தொளை முதலியவைகளால் செய்யப்பட்ட பற்பல வாத்தியங்களும், கடலொலிபோல் அரசு முறைக்கேற்ப முழங்காநிற்கவும் சோடி குடை ஆலவட்டம் முத லிய விருதுகளும் முன்னே மங்களகரமாய்ப் போகாநிற்ப, நெடிய வன், பிரமன் முதலியவர்கள் பாதுகைகள் நீட்ட அவற்றின்மீது அடிவைத்து கருணைமூர்த்தியானவர் நடவாநின்றனர்.

'மறைமுடி யமர்வான் வந்தான் மாயூரநாதன் வந்தா
னறைபெருங் கமலச் செல்வி யஞ்ச நாயகியை வேட்கு
முறையுடன் மணாளன் வந்தான் மூவுலகாளி வந்தா
னிறைவடவன் வந்தான் வந்தானென்று சின்னங்களார்ப்ப'

இங்ஙனம் வாத்தியகோஷங்கள் பல முழங்காநிற்கவும், பழமறைகள் பின்னின்று முறையிடவும், தேவலோகத்தவர் பல்லாண்டு பாடவும், குற்றமற்ற முனிவர்களெல்லாரும் சிரங்களில் கைகளை முகிழ்த்து ஹரஹர வென்றார்ப்பரிக்கவும், நவரத்தினகசிதமான பொன்விமானத்தில் ஆரோகணித்து நகர்வலம் வராநிற்கையில் சந்திரனையொத்த முத்துப்போன்ற தந்தவரிசைகளையுடைய மடநல்லார் யாவரும், ஆங்காங்கு கூடி ஈசுவரன் உலாவரும் கோலத்தைக் காணவிருந்த ஆசைகொண்டு நின்றனர் இப்படியாக ஈசுவர தரிசனம் செய்து நின்ற இளம்பெண்களை மன்மதனும் பார்த்து, அவர்களின்மீது பாணப்பிரயோகம் செய்வானாயினன். இப்பாணம் பொறுக்கலாற்றாது கருமையான கூந்தற் பாரமும், இதயமும், பிளந்து, இப்பெண்களுக்குக் காமமதிகரித்தது இடையும் உயிரும் மிகுதியும் துன்பமுற்றது. இரேகைகளையுடைய கைவளைகளும், மோதிரங்களும், தம்மாடையும் ஒருங்கே நழுவிவிழ, மாதர்கள் தங்கள் உயிரிழப்பதற்குமானார்கள். மடமைத்தன்மைமிக்க மயிலேபோலும் சாயையும் வனப்புமுடைய உமாதேவியாரைக் கலியாணம் செய்து கொள்ளப் போகுமவர், மங்கைப்பருவமுடைய எங்களையெல்லாம் மயக்கத்திலாழ்த்திப் போதல் வேண்டுவதவசியந்தானோ? இதுவும் எமது தலையில் அன்று பிரமன் எழுதியிருந்த விதமோ? கலியாண சுந்தரனே! சொல்லுவீரென்றார்கள்.

ஈசுவரனைக் கண்டு காமுற்ற ஒரு பெண், எம்மண்ணலே விளித்து, உம்மைப் பார்த்து மையல் கொண்ட நான் விரும்பியவற்றை நீவிரோ கொடுக்கமாட்டாத சிறப்பு வாய்ந்திருக்கிறீர், நீவிரோ தரித்திரராயுமிருக்கவில்லை. உமக்கு யார் வள்ளல் என்று பேர் கொடுத்தார்கள்? அப்படிப் பெயர் கொடுத்தவர்களை நான் கண்டு உம்மைப்பற்றிப் பேசவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன என்றாள். பக்தர்கள் நினைத்தனவற்றை யெல்லாம் நினைத்தபடியே ஈயவல்லவர் நீவிர், என்று பெரியோர் சொல்லுவார்களாயினும், யான் நினைத்தபடி யென்னவோ தாங்கள் அருள் புரியக் காணேம்! என்னெண்ணப்படி சிறிதேனும் எனக்கு கொடுத்தருளமாட்டீர் என்றாள் ஓர் மாது. இன்பசாகர ரூபமாகிய நீவிர், ஏதோ ஓர் பெண்ணின் இன்பத்தைக் கருதி,

அவளைப் பாணிக்கிரகணம் செய்யக்கருதிப் போகின்றீர். எம்மைச் சேர்ந்தின்பந்தாருங்கள் என்று கேட்பாராகிய எம்போலியர்கட்குச் சிற்றின்பம் தந்தருளமாட்டாத தாமோ, பேரின்பத்தைக் கொடுக்கப் போகின்றீர்? என்றாள் ஒரு நங்கை. கொங்கைகள் பொருமிடவும் இடை நுடங்கவும் ஓர் மாது சென்று ஈசுவரன் முன் தோன்றி, ஏ! ஐய! கௌரிமாயூரக்ஷேத்திரத்தில் வந்து நம்மைத் தரிசனம் செய்தோர், அஞ்ஞானாந்தகாரம் ஒழிய, மற்று ஞானமார்க்கமடைவர் என்னும் புராணம் கூறும் மொழி என் மட்டில் பொய்யாய்ப் போய்விட்டதேயோ என்றாள். விருஷபவாகனருடான பரமேசுவரன் முன்னமொரு தெரிவை போந்து நின்று, என்பு மாலையணிந்த முகூர்த்ததோடு எம்மிடம் வந்து, நனவிலேயே சேரீராயினும், கனவிலேயாவது நள்ளிரவில் எம்முடன் வந்து கூடமாட்டீரோ? அப்போது நீவிர் அனுஷ்டிக்கும் விரதம் எங்கேயாவது பறந்துவிடுமே! என் செய்வீர் என்றாள். ஒரு மங்கை, தந்தையாகிய தக்ஷப்பிரஜாபதியினிடத்துப் போதல் கூடாதென்று சகிதேவிக்கு யாது சொல்லியும் கேளாளாய் சென்று, அன்று உம்முடைய சொல் தவறியதனால் யோகாக்கினியில் தன்னின்னுயிரைத் தானே மாய்த்துக்கொண்டனள். அப்பேர்ப்பட்டவளை இன்று நீரே போய் விவாகம் செய்துகொள்ளப்போகிறீர்! உம்முடைய உத்திரவுக்கு எள்ளளவேனும் பிசகாமல் நடக்கிறேன்; எம்மை வதுவைசெய்து கொள்ளுமென்று என்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டாலும் சம்மதியீர்! இதுவும் தக்கதோ! என்றாள் ஒரு தையல். சகல புவனங்களுக்கும் கர்த்தாவாகயிருக்கப்பட்ட சாம்பமூர்த்தியாகிய தங்களையன்றி மன்மத விரக துக்கத்தினின்றும் எம்மை நீக்குபவர், யாவரேயிருக்கிறார்கள்? என்று நங்கையொருத்தி கூறினள், மான் போன்ற கங்காதேவியைச் சிரத்தினிலும், உமையெனுந் தரும் மான் போன்றவளை இடப்பாகத்தினிலும் வைத்த, பெரிய நீவிர், ஏன் எம்மை மற்றொருபாகத்தில் வைத்துக்கொள்ளக்கூடாதோ? எம்முடைய உடம்பு காம விரகத்தினால் பசந்துபோயிற்று கண்டீர்! ஒப்பற்றவரே அருள் செய்வீராக! என்றாள் ஒரு தெரிவை. உம்மீது வேட்கை மிகுதியுங் கொண்டவளாய் எம் உடைமுதலானவை யாவையும் இழந்தேம். இவ்வழகுடைய எம்மைக் கடைக்கண்ணால் பார்த்துக் கிருபை புரிமின்! உங்ஙனம் நீவிர் கிரு

பையை பாலிக்க மாட்டீரேயாமாகில், உம்முடைய மூன்றாவது கண்ணையாவது விழித்து, எம்மை எரித்துப் பொடி சூர்ணமாக்கி விடுங்கள்! வென்றி மழுப்படையீரே! என்று விளித்துக் கோபமாய்க் கூறினள் ஓர் பூவை.

இம்மாதிரியாக பேதை அரிவை தெரிவை மங்கை பேரிளம் பெண் பருவம் முதலான பல்வேறு வகைப்பட்ட பருவமுடைய பெண்களும், காமுற்றுக் கருத்தழிய எத்தகையோரும் கைமுகிழ்த்து ஸ்தோத்திரம் செய்ய, சடைப் பெருமானாகிய பரமேசுவரன் தன் கோயில் வாயிற்படியை அணுகுவாராயினர். விமானமுற்று இழிந்து, சபா மண்டபத்தில் போய் நவரத்தின கசிதமான சிங்காதனத்தில், சம்பன் வீற்றிருந்தானாக, அரம்பையர்களையொத்த கணிகை மாதரிற் பல்லோர், ஒருங்குகூடி பரத சாஸ்திரப்படி ஈசன் முன்னே நாட்டியஞ் செய்வாராயினர். இலட்சுமி தேவி முதலாய மற்றைய தேவஸ்திரீகள் நம்மம்மைக்குக் கையில் டோர்காப்புகட்டி மங்கள ஸ்நானஞ் செய்ய, திருமஞ்சனசாலைக்கு அழைத்துப்போவாராயினர். ஜகதீசுவரிக்கு உன்னதமான தைலாதிகளினால் அப்பியங்கன ஸ்நானத்தை மங்களகரமாகச் செய்வித்து, ஆடை தரிப்பித்தார்கள். பின்னர் தந்தச்சீப்பினால் அன்னையினது குழலை வாரி, சடை பின்னி, சடைக்குவந்த அநேக ஆபரணங்களிட்டு, நெற்றிக்குத் தக்கதோர் திலதம் தீட்டியும், கண்ணுக்கு மை தீட்டியும், அரையில் பட்டாடையை கலியாண கோலத்திற்கேற்ப கொய்து கட்டியும், கொங்கைகளாகிய மலைகளின்மீது சரிந்து விழுகின்ற நதியே போல முத்தாரங்களை மார்பிலே புனைவித்தும், வளை கடகம் முதலிய வளைகளை முன்கையிலே அணிந்தும், ஒவ்வொரு விரலுக்கும பொன் மோதிரங்கள் பலவற்றைக் கோத்தும் ஒட்டியாணம், மேகலாபரணம், முதலியனவற்றை இடுப்பில் சேர்த்தும், பாத சாலங்கள் பலவும் சேர்த்தும், தேவியைக் கலியாண கோலத்திற் கேற்பத் திவ்யாலங்காரம் செய்வித்தார்கள். சோதிட கணித சாஸ்திரம் வல்ல நிபுணர், இது தக்க முகூர்த்தம், தேவியை யழைத்து வாருங்கள்! என்று சொல்ல அமர மடந்தையர் சர்வாபரணாலங்கார பூஷிதையை அழைத்துக் கொண்டு வந்து எம்மையனும் ஈசனின் பக்கத்தில் உட்கார வைத்தார்கள். சூரியனும் அதன் கிரணமும் வேறு வேறிரு

ந்ததுபோல் முறைமையே வீற்றிருந்த பரமனையும் பரமேசுவரியை யும், அயன் மாலாதி விண்ணோர்கள் பார்க்க, இப்போது தான் நாங்கள் பாக்கியம் பெற்றவரானோம் ! ஆனோம்!! என்று சொல்லித் துதியா நிற்க, செந்தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சந்தோஷ சித்தராய் எழுந்திருந்து தம்பதிகளுக்கு மதுபர்க்கம் கொடுத்து, பூஜைகளை வழுவற நடத்தி எந்தையாகிய எம்மையன் உமாதவன் கரத்தில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி தாரை வார்க்கவும், அவனியிலுள்ளாரெல்லாரும் ஹர! ஹர! ஹர! என்று சிவநாம ஸங்கீர்த்தனங்கள் செய்துகொண்டு முகிழ்த்த கையினராய் ஸ்தோத்திரஞ் செய்யலானார்கள். செம்மலராளுமையன் ஓம குண்டத்தில் செந்தீயிட்டு, சமித்துக்களையும், நெய்யையும் ஆகுதி செய்ய, அக் கினியும் வலஞ்சுழித்துச் சுவாலித்து எரியாநின்றது. அநேக விதமான வாத்தியங்கள் கடலொலியினும் மிக்கொலிப்ப, அந்தண ர்கள் மகதாசீர்வசனங்கள் கூற, சுவர்க்க மத்திய பாதலத்திலுள்ளார் யாவரும் மிகுதியும் போற்ற, மங்களமாகத் திருமாங்கல்யத்தை சுந்தரனும் வள்ளலார் தம் திருக்கையில் தாங்கி எம்மம்பிகை திருக்கழுத்தில் கட்டினார். இச்சமயத்தில் அநேக வாத்தியங்கள் மிக்கொலித்தன. முனிவரர் பல்லோரும் ஆசீர்வசனங்கள் கூறினர். வேத கோஷங்கள் அப்போது மிகுதியும் பலத்திருந்தன. மாயூர நாதரும் அம்பிகையின் பாணிக்கிரஹணம் செய்த வண்ணமாய் அக்னியை வலம் வந்து, அம்பிகை சமேதராய் அதில் லாஜ ஹோ மம் செய்தார். பின்னர் அம்மி மிதித்தல் முதலியன சடங்கு கள் முறைபெற நடந்தேறி, அபயப்பிரதாம்பிகா சமேதராய் மாயூரநாதர் வீதிகளில் மீண்டும் திருவுலாப் போவதானார். இப்படி அம்பிகை சமேதமாய் எழுந்தருளுவதைக் கண்டுவகை பூத்த மடவார் பலருள், வேதமுடிக்கும் எட்டாதிருக்கும் ஈசுர னின் திருக்கோலமே சிறந்ததென்பார்; அதனைக் காட்டிலும் ஈசு வரியின் அழகே மேம்பட்டதென்பார் சில்லோர். இருவருடைய அழகும் ஒன்றுக்கொன்று தோல்வியில்லை என்பார் மற்றும் சிலர். பூமியிலுள்ள நாம் பார்க்கக் கொடுத்து வைத்ததுவே சிறந்த தென்பார் சிலர். நாம் நேத்திரமடைந்ததற்குப் பிரயோசனம் பகவத் தரிசனம் கிடைத்ததே, அது தான் சிலாக்கியமானதென்பார் சிலர்; இச்சன்மம் மிகுந்த ஸாபல்யம் பெற்றுவிட்டது; ஏதோ

நல்ல ஜன்ம மெடுத்ததின் பயனோ என்னவோ? இப்பேர்ப்பட்ட பகவத் தரிசனம் பாக்கியங் கிடைத்தது. இந்த ஜன்மம் பூர்வத்தில் செய்த பூஜா பலன் தானோ? நாம் கொடுத்து வைத்த பாக்கியம் தான் இதற்குக் காரணமாயிருக்கலாம் என்றும் சொல்லிக்கொள் வார்கள் சிலர். நகர் வாழ்வோர் பல்லோர் ஏராளமான புட்பங்களை வாரியிறைப்பார், சிலர் ஏராளமாய்ப் பொரிகளை எடுத்து ஙங்கள கரமாய்த் தூவுவார்கள்; பலர் பனி நீர் பொருந்திய நறுமணங் கமழும் சந்தனச் சேற்றினை அள்ளியிறைப்பார். பலர் பொன்காசுகளை அங்கு மிங்கு மிறைப்பவர். ஈசுவரன் வரக் கண்டவர் பல்லோர் தத்தம் வீட்டு வாயிற்றிண்ணைகளில் தீபம் ஏற்றி வைப்பார். பல்லோர் மஞ்சளுடன் சுண்ணாம்பு கலந்த நீரைப் பாத்திரங்களிலிட்டுச் சுழற்றிக் கவிழ்ப்பவராவார்கள். இவ்விதமாய் நகரார் மகிழ்வெய்தும் வண்ணம் திருவுலாப் போந்த பரமமூர்த்தி அம்பிகையோடு சுவர்ண மயமாப்க் கோபுரச் சிகரங்களையுடைய தம கோயில் வாயில் வந்துற்றார். ஆங்கு நிறைவேற வேண்டிய சடங்குகள் யாவு முடிந்த பின்பு, மாயூரநாதர் கீர்த்தியினால் மிகவோங்கும் விருஷப தீர்த்தம் சேர்ந்து ஸ்நானஞ் செய்யப் பெற்று, தன் கலியாணத்தின் பொருட்டு வந்த ஸ்ரீமந்நாராயண மூர்த்தி, பிரமன் முதலிய தேவர்களுக்கும் விருந்துகளும் உபகாரங்களும செய்து அவரவர் யதாஸ்தானங் கள் போய்ச் சேரும்படி ஆஞ்ஞாபித்து இலிங்கத்தில் அந்தர்த் தானமாய் மறைவதானான். மயிலியலாகிய அபயப் பிரதாயம்பிகை யும், அபயாஸ்தமான கையொன்றுடனும் இடப்பிலொரு கையுட னும் உலகத்தில் நிலைபெற்றிருக்கும் ஜீவன்களெல்லாவற்றிற்கும் இன்ப வாழ்வை யளித்து அமர்ந்திருந்தாள். இத்தகைய கலியாணத்தை வருஷவாரியில் ஒழுங்கு பெறவும், விசேஷமான செலவுடனும் நடாத்துவோர் இலட்சுமி கடாக்ஷம் நிறையப் பெற்றவராய் வெகுகாலம் இவ்வுலகத்தில் ஜீவதசையோடிருந்துக் கடைசியில் சிவசாயுச்சியத்தை அடைவார் என்பதும திண்ணம்.

(திருக்கல்யாணச் சருக்கம் முற்றிற்று)



15 கஜ ஸம்ஹாரச் சருக்கம்

சகல ஜீவப் பிராணிகளும் மற்றைய யாவும் விசேஷமான இன்பத்தை யநுபவிக்கும் மாகாத்மியம் உடையதாகிச் சிறப்புற் றோங்கும் மாயூரம், என்னும் க்ஷேத்திரத்தின் தென்மேற்றிசையில் தாருகாவனம் என்றோர் வனம் உள்ளது. இவ்வடவியில் வாழும் முனிவர்கள் பல்லோர்களும், கரும மார்க்கமே பிரதான மென்று அநுசரித்தவர்களாய், சத்தறிவின்பரூபத்தனிமுதல் வேறில்லை யென்று கருத்துள்ளவராய், ஈசுவரனை மிகுதியும் அவமதித்தவராயிருந்தனர். இவர்களுடைய இல்லற வாழ்க்கையைக் குறைவற நடாத்துவதில் உதவியாயுள்ள இவரது மனைவியரும், தம்மைக் காட்டிலும் கற்பிற் சிறந்தவர் இப்பூமண்டலத்திலிலரென்றும் மிகச் செருக்குக் கொண்டவர். இப்பேர்ப்பட்டவர்களின் கர்வ பங்கத்தைக் கருதி ஸ்ரீநாரதமாமுனிவர் மாயூரநாதரின் திருமுன்தோன்றி, அன்னவர்களின் குணநிசயத்தைப்பற்றி அவருக்கு அறிவித்தலும் உமேசன், முகுந்தனை நினைத்தலும், அவரும் திடீரெனத் தோன்றினார். அவரை நோக்கி, எம்பெருமானும் ஏ! நாராயண! மோகினிப் பெண் வடிவங்கொண்டு தாருகாவன இருஷிகளின் செருக்கினை யடக்குதி! என்னப் பணித்ததற்கு, ஓமென வணங்கினன் முகுந்தனும். முகுந்தன் மோகினிப் பெண்ணைத் தாருகா வனத்து முனிவர்களெல்லாரும் கண்டு, மன்மதன் அம்பு பட்டு தம் தவத்தினின்றும் தவறினார்கள். சில இருஷிகள், அம்மோகினியின் முலை யொன்றையே கண்டு மயக்குவாராயினர். சிலர், அவளது புருவத்தை மட்டும், சிலர் சிற்றிடையிற் கட்டப்பட்டுள்ள கலையொன்றை மட்டும் கண்டு தவங் குலைந்து மயங்கி நிலைகுலைந்து வீழ்வாராயினர். இப்படிக் கரும மார்க்கத்தையே சிறந்ததெனக் கொண்ட முனிவர்கள் கோலமிவ்வாறாக, சடைப்பிரானாகிய மாயூரநாதர் சந்நியாச வேடங் கொண்டவராய், அம்முனிவரின் கற்புடைப் பத்தினிகளிருக்கும் தெருவிடை, காவி வஸ்திர தாரியாய், திருக்குறுக்கை என்னும் தலத்தில் அநங்கனை உருவமின்றி, நெற்றித் தீயால் எரித்த பின்னர் தானே அவனுடைய வேலையைச் செய்தற்கு ஒப்புக்கொண்டவர் போல், வேடமெடுத்துக்கொண்டு கோடி சூரியர்கள் பிரகாசித்தாலொப்ப அழகு வாய்ந்தவராயும், களங்க மற்ற சந்திரன் போன்ற முகத்துடனும்,

பொன்னுற் கடையப்பட்டாற்போல தோளுடனும், அழகிய நறுமண மலர் மாலையை யணிந்த மார்புடனும், கருணா ரஸம் வழிந்தோடும் திருக்கண்களோடும், பரிசுத்தமான வெண் முறுவலைத் தோற்கச் செய்யும் திருவாயுடனும், ஆஜானு பாஹுவாயும், மலர்ந்த முகத்துடனும், யாவர் மனதையும் உருக்கும்படியாய் மனதிற்குள்ளேயே இரம்மியமாய்ப் பாடும் கனிவான கீதத் தொனியுடனும், நெற்றியில் மகிமை பொருந்திய விபூதியுடனும், காதில் இலங்கும் குண்டலங்களுடனும், முனிவரை மயக்கச் செய்த மோகினியும் மயக்கமடையும் படியான திருக்கோலம் தாங்கி, வேதப் பாதுகையில் கால வைத்தேறி, ஒரு கையில் தமருகத்தை ஒலி செய்துகொண்டும் மற்றொரு கையில் பிட்சை கொள்ளும் கபாலத்தைத் தாங்கியும், முனிவரரின் இல்லறக்கிழத்திகள் வாழும் பெருஞ் சேரியிடம் பிட்சை யெடுப்பான போல் அணுகி, துடியென்னும் வாத்தியத்தை முழக்கலும், வீணா கானம் ரஸமாய்க் கேட்டு இன்புற்று அசையாமலிருக்கும் அசுணப்பட்கள் போல, தம் கையிற் பிச்சையோடு ஸ்திரீகள் வெளிவந்துற்றார்கள். பிட்சையிட வந்த ஸ்திரீகள், பராபரனின் முகத்தையும், கண்ணையும், புயத்தையும், மார்பையும், செங்கைகளையும், காலையும் முதலாய எல்லா அவயவ இலக்கணங்களையுங்கண்டு காமங் கொள்ள, இது தான் சமயமென்றுணர்ந்த மதனன இந்நங்கைகளின்மீது தம் பாணப் பிரயோகம் செய்வானாயினான், தன்னுடைய வஸ்திரம் அவிழ்ந்து வீழ்ந்ததைக் கவனிக்காமல் பிச்சை யெடுக்க வந்தீரே! உம்முடைய ஆடையை எங்கே வைத்து வந்து விட்டீரென்னலும், பிட்சை போட வந்தனையே! நீ என்ன இனுசாய் வந்திருக்கிறாய் என்றார். இதைக் கேட்ட ஸ்திரீ நாணங் கொண்டாள். ஏ! அடியவரே! நான் தனப்பிச்சை கொடுப்பேன்! கலத்தில் ஏற்றுக் கொள்ளும், என்றொருத்தி கூறவும், கருணை வள்ளல் கூறுவார். ஏ! அம்மே! நீ இரண்டு அர்த்தம் உண்டாகும்படியாய்ப் பேசுகிறாயே! என்றார் கருணையாம் கபாலியின் உருவெளித் தோற்றத்தைக் கொண்ட மற்றொரு மங்கை, ஏ! கருணாகரனே!! பிட்சைகொள். என்று தன் கையிலுள்ள பிட்சையைப் போடவும் அது மண்ணில் விழுந்ததைக் கண்டவள், என்ன பிட்சா பாத்திரம் ஓட்டையோ, என்றாள். ஆலகால விஷத்தை மறைத்துப் பிட்சை யாண்டி வேடம் புனைந்து வந்த ஸம்பானை

நோக்கி பக்தர்கள் கொடுக்கும் பலியை ஏற்றுக்கொள்ள வந்தீரோ, அல்லது என்னுயிரையே அப்படியே பிட்சையாகக் கவர்ந்துபோக வந்தீரோ, சொல்லுமின்!' என்றாள், காமமயக்கத்தால் உடம்புமுழுவதும் மெலிந்தாளோர் மாது. பிட்சையிடப்போன வோர் மாது தன் வளைகள் கணையாழிகள் முதலாயினவற்றை பிட்சா பாத்திரத்தில் நழுவ விட்டாளாக' யான் மாலானேன்; தயவு செய்து அவ்வளைகளையும், மோதிரங்களையும் எனக்குக் கொடுத்தாயென்றால், எனக்கு வேறொரு மனக்குறை' யென்னலும் 'உன் இடைக் குறை குறையாய்த் தானிருக்கும் அது மாறாததே' என்றார் ஈசுவரனும் காமமிக்க வளொருத்தி 'ஐயனே! என்னுடைய குறிப்பறிந்து, உடன்படமாட்டீரோ! நீரிரக்கமனமில்லாதவரோ' யென்னலும், இரக்க மனங்கொண்டே வந்தேன் நங்காய்!' என்றனன் புனித மூர்த்தி. ஐயனே! நின்னையடையுமாறு உன்னருகே சேரவும் அறியக்கூடாதவராயிருக்கிறீர்; ஏன்! மாலறியாயோ? என்றாள் ஒரு மாது. 'மாலறியானே யான், அதற் கென்ன செய்வதென்றான் எம்பிரானும். இவ்வாறாக, முனிவரின் இல்லறக் கிழத்திகள் யாவரும் ஒருங்கே வந்து ஈசனுகிய பிச்சை யாண்டி முன் தோன்றி நிறையழியப்பெற்றார்கள். இப்படி முனிவரும் பத்தினிகளும் தம நிலை கெட்டழிந்த பின்னர் விழித்துக் கொண்டவர்களாய், ஓங்கு வான் மாயூர நாதனே! நம்மை இக்கோலம் கண்டதென்றுன்னிச் சினமிக்கூர்ந்தவராய் ஓமகுண்டத்தில் ஒரு பெருந் தீயை வளர்த்து மந்திரோச்சாரணைகளோடு ஆகுதிகள் முதலாயின செய்ய, அக்குண்டத்தினின்றும், ஐராவதம், புண்டரீகம், வாமனம், புஷ்பதந்தம், சார்வ பௌமம் முதலிய அட்ட திக்கயங்களும் பயப்படவும், கடலும் பூமியில் பொங்கி வழிதரும்படியாயும், அந்தகனும் பயப்படும்படியாயும் மிக்க கோரரூபத்தோடும், கோபத்தோடும், நீலப்பெருமலை போலவும், பிறைச் சந்திரன் போல வக்கிர தந்தங்களையும், நீண்ட துதிக்கையையுமுடைய ஓர் யானை உற்பவித்தது. இவ்வேழத்தை முனிவர் ஈசுவரன் மேலேவலும், அது வேகமாய்ப் போய் ஈசனை ஒரே வாயில் விழுங்கிவிட்டது. இது கண்ட மறைகள் தேவதைகள் யாவரும் கூக்குரலிட்டன. எல்லாரும் வெருண்டனர்கள். ' இஃதென்ன விபரீத காலமென்னத்தயங்கினார்கள், சுப்பிரமணிய மூர்த்தியோடு அணைந்த பார்வதிதேவியே, இனியாம் என் செய்வது என்று

ஒருவாறு பயப்பட்டாளென்றால், மன்பதைகள் என்ன பாடு பட்டிருக்கும்? இக்கோலத்தைக் கண்டு என்பதையும் ஒருவர் எடுத்து மொழியவும் வேண்டுமோ? பக்தி வலைப்படுவோனாகிய எம்மானை யாரே யுணர்ந்து சொல்லவல்லார்?

பரம் பொருந்திய தந்தியின் வயிற்றிலுள்ளவன், அதனைக் கிழித்து அக்கஜத்தின் தோலைத் தன்னுடம்பில் போர்த்துக்கொண்டு மழை மூடிய கதிர் போலவும், நீறு பூத்த நெருப்புப் போலவும் வெளிப்பட்டு விருஷபாரூடராய்க் காட்சி தர, எம்மையனை ஸ்தோத்தரித்த வண்ணமாய், தேவர்கள் தங்கள் அருகிலுள்ள கற்பகத் தருமலர்களைப் பறித்துப் பறித்து ஏராளமாய்த் தூவினார்கள். பூவுலகினரும் ஈசனின் மீது புஷ்ப மாரி பொழியலானார்கள்.

கரும மார்க்கமே விசேஷமாகக் கொண்டவராகிய முனிவர் இப்போது மிகவும் வெட்கினராய், விருஷபாரூடனின் சந்நிதானம் வந்து சேர்ந்து அவருடைய பாதார விந்தங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து 'எண்ணரும் புவனநாத! நாங்களறியாது தவறு தங்களுக்கிழைக்கலானோம்' இவ்வபராதத்தைப் பொறுக்கத் தகைய செய்ய வேண்டும் எனலும், 'கிருபாகர மூர்த்தி நம்மைப் பரம்பொருளாகக்கொண்டு, நீவிர் கௌரி மாயூர க்ஷேத்திரத்திற் சென்று, பிரம தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்து தவஞ் செய்மின்' என அப்படியே செய்த எல்லாமுனிவர்களும் கெடுதலில்லாப் பேரின்ப வீட்டை யடையலானார்கள். முழுமறையாவராம் முனிவரும், அவர் பத்தினிகளும் கொண்ட எண்ணம் மாறுபட்டு விட்டமையாலே, இப்போதும் அப்படி இவர்கள் கொண்ட காரியத்தினினைவும் ... வழுவிய விடம் வழுவூர் என்றும், கஜ ஸம்ஹாரம் நடந்த விடமாதலால் பற்றி வீரட்டாகாசத்தலமென்றும் பெயர் கொடுத்தழைப்பர். தபசிகளால் புகழ்ந்தோதப்பட்ட பறியல் வீரட்டானம்போற் சிறந்து விளங்கும் வழுவூரில் திருக்கோயில்கொண்டிரா நிற்கும் பாலாங்குராம்பா ஸமேத ஸ்ரீகிருத்திவாஸேச்வர சுவாமியைத் தரிசனம் செய்வார், இம்மையிலும் மறுமையிலும் பெரும பாக்கியமுடைந்து சிவ சாம்பிராச்சியத்தை யடைவார். இப்பேறுபட்ட தல தரிசன மடைந்தோர் அடையும் பேற்றினை, எவரறிந்து கூற வல்லார்? முனிவர் வாசஸ்தானம், ஓமகுண்டம் ஸ்தாபித்த இடம்,

விசேஷமான கர்மாக்களுடன் அவர்கள் பயின்ற விடம் இப்பேர்ப் பட்ட இடங்கள் பலவும் ஆங்காங்கு இன்னமும் பார்க்கக் கிடைப்பதாகும். இம்மாயூரத் தெல்லையைச் சூழ்ந்து ஏழு யோசனை எல்லைக்குள் செம்பொன்பள்ளி, நனிபள்ளி, பறியல் முதலிய வூர்களோடு முனிவர் மயமாயிருக்கப்பட்ட வழுவூரின் பெருமையும் இவ்வளவு மிகுதியாகுமானால், மாயூரத்தின் புகழைப் பற்றிப் பின்னும் பின்னும் விரித்துக் கூறலும் வேண்டுமோ?

(கஜ ஸம்ஹாரச் சருக்கம் முற்றிற்று)



16 கவுண்டின்னியன் பிதிரர் முத்தியடைச் சருக்கம்

கீர்த்திகளாற் சிறப்புற்றோங்கும் கங்கைக் கரையில் வேத வித்தாகிய கவுண்டியனென்னுமோர் இருஷி தன பர்ணசாலையில் வசித்து வருவாராயினர். அவர், அக்னிஹோத்திரம் முதலாயவை செய்தற்குத தேவையான ஹோமச சமித்துக்களும், புரச இலைகள் முதலிய கொண்டுவருதற்கும், மரஙகள், செடிகொடிகள், மலிந்துள்ள அடர்ந்தமோர் காட்டினிடத்தில் புக்கு, பலவிதச் சமித்துக்களை ஒடித்துக் கொண்டிருக்கையில கூ கூ வென்ற கூக்குரல் திடீரென அருகில் கிளம்புவதை இருஷி கேட்டார். இச்சபதம் ஆங்குள்ள ஒரு பாழ்ங்கிணற்றிலிருந்து எழுந்தது போலும என்று உணர்ந்தார். பின்னர் முனிவரும் ஆங்கு அணுகிய அவரும கிணற்றினைக் குனிந்து பார்த்தலும், ஆங்குள்ள பிதுர்ஸ்வரூபமாயுள்ள தொறறு முனிவரை நோக்கி! ஐய! ய... உம்முடைய பிதுர் வர்க்கத்தைச சேர்ந்தவர் ! எம வாழ்நா... ஒருவருக்கு ஒரு தானமும் கொடுத்ததில்லை ! அநேகரிடமிரு... எண்ணிறந்த தானங்கள் பலவாங்கி மஹா பாபியாய்ப் போ... னோம், சிவ நாம சங்கீர்த்தனத்தை மறந்தாவது, ஸ்மரிப்பதில்லை யாதலின் நான் கொடு நரகுக்காளாகி யலமந்து தவிக்கின்றோம். எங்கள் குலத்தில் ஜனித்தவன் நீ யொருவனே, அருமருந்தே போலிருக்கின்றாய் ! நீ எம்மான் மூக்கணப்பன் இனிதமரும்

தலமொன்றிற் சென்று எங்களுடைய நரகவியோசனார்த்தஞ்செய்ய வேண்டிய பிதிர்க் கடன்களைச் செய்து கடைத்தேற்றுவாய்! என்று அப்பிதிரர்ப் பூதஞ் சொல்லக் கேட்ட கௌண்டின கோத்ரத்தான், தன் ஆச்சிரமம் புக்கு, தன் பிதிரரைக் கரையேற்றுவான் கருதி, எத்தலத்தில் சென்று, தான தருமங்கள் செய்யலாமென யோசியாநிற்குமளவினில், மகதியாழ் முனிவன் ஆண்டுத் திடீரெனத் தோன்றினன். இம்மாதிரி பிரசன்னமாய முனிவனைக் கண்டு அடி பணிந்தெழுந்த கௌண்டினிய மகருஷி ஏ! நாரதபகவானே! எம் பிதிரர் கொடிய நரகில் அகப்பட்டு வருந்தா நிற்கின்றனர். அன்னவர்களை கரையேற்றுவதற்கு எத்தலத்தில் போய் எவ்விதம் செய்தால் தகுதியாயிருக்கும் என்று கருதிய எமக்கு,புண்ணிய ஸ்தலம், அப்பேர்ப்பட்ட கார்யத்திற்குத் தகுந்ததேதென்று தேவரீர் திருவாய்மலர்ந்தருளல்வேண்டும், என்னலும் நாரதர், ஏ! கௌண்டினிய! நீ விரைவின் சௌரி மாயூர க்ஷேத்திரம் சேர்ந்து வள்ளலார் சந்நிதியின் எதிரிலிருக்கிற சிவ கங்கையில் ஸ்நானஞ் செய்து, அங்குள்ள ஈசுவரனை வழிபடு, நின் இஷ்ட சித்திகளெல்லாம் தானே நிறைவேறும் என்றார். கௌண்டினியன் மாயூர க்ஷேத்திரத்திற்குக் கடுகிச் சென்று பிரமதீர்த்தத்தில் இனிதாடி ஸ்தலோபவாசம் ஓர் நாளிருந்து அபயப்பிரதாம்பிகா ஸமேத மாயூரநாதேசுவரரை மனமொழி மெய்களால் தொழுதும், இவ்விருஷியின் பிதிரர்கள் யாவரும் தாங்கள் பாபம் கொடியில் தொலையப் பெற்றவராய் சிவ சாயுச்சிய மடைந்தனர். இப்பிதிரர் தங்கள் சிவலோக சாதனமாய மாயூரக்ஷேத்திரத்தில் போந்து சத்காரியங்கள் செய்த மகனை நோக்கி! ஏ! 'கௌண்டினிய! பிள்ளை என்றாலும் இப்படிப்பட்ட பிள்ளையைப் பெறவேண்டுமப்பா! இத்தலத்தில் உன் சிறந்த தவத்தால் நாங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல பேம்பதவி யடைந்தவரானேம்! இத்திருத்தலத்தைப் பால புண்ணியத்தை எளிதில் ஈவது இவ்வகன்ற பூமண்டலத்தில் வேறொரு தலமில்லையே யென்னலாம்; இனி நீ தலைமுறை தலைமுறையாக நல்ல சந்ததியோடு சுக ஜீவியாக வாழ்ந்து கடைசியில் சீவன் முக்தனாவாய்' என்று அப்பிதிரர் கவுண்டியனுக்கு அருள் செய்தார்கள், இபபடி சொல்லிய பிதிரர், கௌண்டினியன் பார்த்திருக்க சிவலோக பதவி யடைந்தார்கள். பூமியிலுள்ளோர் காணுமாறு தம் பிதிர்க்கடன்களை நாரதமுனிவரருளால் முடித்த கவுண்

டினிய மஹாருஷி ஸந்தோஷ சித்தனாய மாயூரக்ஷேத்திர வாஸத்தையே பெரிதும் அவலம்பித்து நெடுநாளங்கிருந்தான்.

தீம் பிதிரர் தனக்குரைத்தபடி அநேக தானதருமங்களை அத்தலத்திலேயே வேதநெறி முறை வழுவாது செய்தான். விசேஷமாய்ப் புராணங்கள் சிறப்பித்துக் கூறும் சிவராத்ரி வ்ருதத்தையும் பெரிதும் அனுஷ்டித்து பூர்த்தி செய்தான். தன் பேர் சொன்னமாத்திரத்திலேயே பாபங்களெல்லாம் நீங்கும் மஹா தபஸ்வியான கௌண்டினிய மஹாருஷி பல விரதாநுஷ்டானங்களுடன் அந்த க்ஷேத்திரத்திலேயே நெடுநாள் தாமஸிக்கலானார்.

ஒரு தினம் செய்கின்ற தபஸினாலேயே தம் பிதிரர் பலர் தாம் கருதிய நல்லுலகம் சேர்ந்தின்பமடைவதற்குக் காரணமாய இம்மாயூர க்ஷேத்திரம் விளங்கிற்றேல், இந்த ஸ்தலத்திற்கு ஒப்பாக எந்த க்ஷேத்திரத்தை ஒப்புக் கூறலாம். இதற்கு வேறோர் க்ஷேத்திரம் நிகரில்லை என்றே கூறவேண்டும். இப்படிப்பட்ட புனிதமான க்ஷேத்திரத்தில் நெடுநாள் வாஸமாயிருந்து பின் கௌண்டினியமஹாருஷி யதாஸ்தானம் சேர்ந்தார்.

(கௌண்டினியன் பிதிரர் முத்தியடைச் சருக்கம் முற்றிற்று)



17 சுசன்மன் முத்தி பெற்ற சருக்கம்.

நால் வேதங்களையும் அறுபத்து நான்கு கலைஞானங்களையும் ஐயந் திரிபற உணர்ந்து அநேக விதமான யாகங்களை செய்த சுசன்மன் என்னும் பெயரிய அந்தணனொருவன் சி[illegible] சுத்தி யில்லாதவனாயிருந்தான். சகல கலை ஞானங்களையும் ய[illegible] கள் பலவற்றினையும் ஆற்றியும் தான் மனத்தூய்மை பெற்றிராமை[illegible] யற்றி மிகுதியும் வருந்தியவனாய், இந்திரனைக் குறித்துத் தவ[illegible] யியற்றினான். இவனுடைய தவத்தினைப் போற்றிய இந்திரன் பிரசன்னமாய், அந்தணனை நோக்கி "நினக்கு வேண்டியது யாது"? எனலும் சுசன்மன், ஐய! தேவலோகாதிபதியே! இம்மைக்கும்

மறுமைக்குமுரிய எல்லாக் கர்ம காரியங்களை விதிப்படி யான் ஆற்றி யும் மனத் தூய்மை யில்லாது தடுமாறுவதினின்றும் நீக்கி, நல் வழியிலுய்க்கும் நல்லுபாய மொன்று தயவுசெய்து திருவாய் மலர்ந்தருளல் வேண்டுமென்று கேட்க, ஏ! சுசன்ம! நல்ல கேள்வி கேட்டனை! இதோ சித்த சுத்தி யடைவதற்குத் தக்கதோர் உபா யங் கூறுகிறேன் கவனமாய்க் கேள். பூவுலகத்திலுள்ளோர் பல ரும் ஏத்திப் போற்றிக் கொண்டாடும்படியான கௌரி மாயூர க்ஷேத்திர மொன்றுளது! அஃது யாவர் எது நினைத்தா லும் எளிதில் கொடுக்க வல்லதாயுள்ளது. தாமரை மலரில் வீற்றிருக்கும் தேவாகிய பிரமதேவனுக்குச் சிருஷ்டித் தொழிலை முன்னம் கொடுத்தது, தக்ஷப்பிரஜாபதி தனது யாகத்தில் செய்த அபராதத்தினைப் பறியலூரிடை அவன் செய்த தவத்தினால் பறித் துப் பின்னர் மாயூரஞ் சேர்வித்து அவனை நல்வழியிலுய்த்தது; மகா விஷ்ணு முதலாய தேவர்கள் பல்லோரும் இத்தலத்தில் எம் பெருமானை உள்ளங் கனிந்துப் பூசனைகள் பல புரிய அவர்கள் விரும் பிய வரங்களைக் கொடுத்தது; அம்பிகையே மயிலுருவம் பெற்று ஈசனைப் பூசனை புரிந்து, சுய உருவம் பெற்றது. தாருகா வநத்து இரு ஷிகளும் அவரது பத்தினிகளும் செருக் கொழிந்து முத்தி பெற்ற தும் இத்தலத்திலேயே! தக்ஷப் பிரஜாபதியின் புத்திரர்கள் பலரும் நாரத மாமுனிவர் அநுக்கிரகத்தால் பிரமலிங்கா நுக்கிரகம் பெற்று முத்தியடைந்த தலமுமிதுவே! யோகவித்தமன் என்னு மந்தணன் சிற்றின்பங்களை நீங்கிப் பேரின்ப மடைந்ததும் இத் தலத்திலேயே, கவுண்டினியன் என்னும் இருஷிச் சிரேஷ்டனும் தன் பிதிரர்களைக் கடைத்தேற்றிய விடமும் இதுவே! சாந்திரா யணம் முதலிய பல விரதாநுஷ்டானங்களினால் பல தலங்களில் வசித்திருந்து பெறும் பாக்கியத்தினை மாயூரத்தெல்லையை மிதித்த மாத்திரத்தினால் அடையலாகும். இத்தலத்தினைக் காட்டிலும் சிறந்ததோர் தலம், சொர்க்க மத்திய பாதாள மென்னுமிடங் களில் எவ்விதம் தேடினும் கிடைப்பது அபூர்வமேயாகும். அபயப் பிரதாம்பிகையோடு கூட வள்ளலார் என்னும் சீரிய பெயர் வாய் ந்த சிவபெருமான் பக்த பரிபாலகராய் வீற்றிருக்கும் நகரும் மாயூர ஸ்தலமே யாகும்.

ஸ்ரீவள்ளலார் எதிரில் அமுதம்போல் விளங்கா நிற்கும் பிரம தீர்த்தத்தைத் தியானியாத எவரையும் உலகத்தவரும் மனிதராக மதிக்கமாட்டார்கள்; அங்ஙனம் தியானியாதவர் பேரின்ப சாகரத்தில் முழுகாதவரே யாவார்; பாபவிநாசம் செய்யும் அத்தகைய பிரம தீர்த்தத்தில் முறைப்படி படிந்தாடி பேரானந்தம் அநுபவிப்பவராய் முத்தியடைந்தவரநேகரெனின், அப்பிரமதீர்த்தத்தின் மகிமையினை ஒரு நாவினால் சொல்லலாம் தகைமைத்தோ? காவிரி நதியின் மத்தியில் சிறப்புற்றோங்கி விளங்காநிற்கும் விருஷப தீர்த்தத்தின் மகிமையைத் தான் சாதாரணமாய்ச் சொல்லிவிடலாமோ? வல்வினைகள் பலவும் சிதைக்கவல்லதாயிருக்கும்படியான அவ்விருஷப தீர்த்தத்தின் மகிமையைப் பகுத்துப் பகுத்துக் கூறுவதென்றால் ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் முடியாது என்பது நிச்சயம். இத்தகைய மகிமை மிக்க கௌரி மாயூர க்ஷேத்திரத்தினை நீ விரைவின் அடைந்து அத்தீர்த்தங்களில் படிந்தாடி ஈசுவரனை உள்ளன்பு கூரப் போற்றுவாயானால், நீ கருதிய மனத் தூய்மையை யடைந்து பேரின்பத்தை யடைவதில் சிறிதேனும் ஆட்சேபணையில்லை என்று கூறி ஐராவதத்தன் தன்னுலகம் புக்கனன்.

தேவேந்திரன் தன்னுலகு போய பின்னர் சுசன்மப் பெயரினோன் மாயூர மாத்தலம் சென்று நீறு பூசி, மாமறைகளினால் சிறப்பித்தோதப்பட்ட கண்மணி போலும் அக்கமணிகள் பல பூண்டு பிரம தீர்த்தம் முதலியன படிந்து கபர்த்தம் என்னும் சடையையுடைய எம்பெருமான் ஸ்ரீமாயூரநாதர் சந்நிதானம் சேர்ந்து உரோமஞ் சிலிர்ப்ப, கண்களில் ஆநந்தக் கண்ணீர் ததும்ப வாயார மனதார ஸ்தோத்திரஞ் செய்து சித்த சுத்தியை யடைந்து ஈசுவர சாந்நித்திய மடைந்தனன். இம்மாதிரி அடைந்த மாத்திரத்தில் சித்த சுத்தியை சுசன்மன் பெற்றான். சம்சார பந்தங்களை நீக்கிச் சித்த சுத்தி தர வல்லதாயிருக்கப்பட்ட இம்மாயூர நகரத்திற்கு நிகரான ஸ்தலமொன்று இப்பூமண்டலத்தில் எங்கேனும் உள்ளதோ?

(சுசன்மன் முத்தி பெற சருக்கம் முற்றிற்று)

---

18 வாயசம் பூசை புரி சருக்கம்.

பொன் மயமாய் விளங்கா நிற்கும் மகாமேரு பர்வதத்தின் ஓர் ஆலமரப் பொந்தில் புசுண்டன் என்னும் பெயரிய காகமொன்று அநேக யுக காலமாக வசித்திருந்தது. மனத் தூய்மையுடனும் அநேக கற்பகாலமளவு வசித்திருந்ததைப் பார்த்தார் வசிஷ்டர் முதலாய பல்லாயிர இருஷிச் சிரேஷ்டர்களும், இப்படிச் சிரஞ்சீவியாகி வசித்திருந்த காகத்தைத் தரிசனம்செய்யவேண்டி வசிஷ்டர் முதலான பெருநல்லோர்களும் ஆங்குப் போயுற்று வாயசத்தைக் கண்ணுற்றார்கள். காகமும்! இப்படித் தம்மைப் பார்க்கவந்தவர்களை நோக்கி ஸ்வாகதமா? வாருங்கள்? பாகவதோத்தமர்களே! ஸத்தியம்வத! தர்மஞ்சர! என்றித்தியாதி விதமான இனியநல் வசனங்கள் பல கூறிற்று. வாயஸத்தை நோக்கிய முனிச் சிரேஷ்டர்கள், ஏ! வாயசமே! நீ நெடுங்காலமாக நல்லறிவினோடும் இங்கு ஜீவித்திருக்கின்றனையே! அதற்குக் காரணமறிவதற்காகவே, உன்னிடம் யாங்கள் போந்தோம்! அப்பேர்ப்பட்ட தன்மையை எவ்வாறு பெற்றனை என்பதை எங்களுக்கு விளங்க உரைக்க வேண்டும், என்று கேட்க! வாயசம் பின் வருமாறு கூறலுற்றது.

"முனிச் சிரேஷ்டர்களே! தேவர்களே! பதினன்கு உலகங்களும் எனக்கு போற்றி ஏத்தும்படியான சீரும் பேரும் பெற்ற கௌரிமாயூர க்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தங்களில் நன்றுபமர்ந்தாடி அவ்விசனுக்குரிய வந்தனை வழிபாடுகளுடனே ஆங்கேயே பன்னாட்காறும் யான் வசித்து வாராநின்றேன். இங்ஙனமமர்ந்த எனக்கு ஈசுவரன் விசேஷமான அருள் கூர்ந்து என் முன்பு பிரசன்னமாகி, எனக்கு அளவில் கற்பங்கள் பூவுலகத்தில் சித்த சுத்தியோடும், மெய்ஞ்ஞானத்துடன் பிரமாதி தேவர்களும் பார்த்துப் புகழ்ந்து கொண்டாடும்படியாய் வசித்து வருமாறு பெறுத்த வரந்தந்தருளினார். இப்படியான மாக்ஷி தந்ததன்றோ அம்மாயூரமென்ற ஒப்பற்ற தலம் என்று பின்னும் அப் பட்சி உரைப்பதாகும்! மனதிற் கினியத மயூர வடிவு தாங்கிய அம்மை இரண்டு தரம் இமாயூர க்ஷேத்திரத்தில் வந்து பூசை பெற்றுப் பேறுகள் பலவடைந்திருப்பதை நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன்; மலர்மிசை யேகினுறைகிய வேதன் இம்மாயூர க்ஷேத்திரத்தில் பஞ்ச முகங்களுடன்

வந்து ஒன்பது தரம் பூசித்தது கண்டிருக்கிறேன். அன்னவனே நாகுன் முகங்களுடன் இங்கு வந்து பத்துத் தடவைகள் போற்றிப் பழிச்சிப் பேறுகள் பெற்றதையும் யான் நன்கு அறிந்துளேன். மாயோனாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி தவள ஸ்வரூபத்தோடும் பரிசுத்த மூர்த்தியாம் பரமபதியின் பாதங்களைப் பத்துத்தரம் பணியக்கண்டுளேன். அத்தகையவனே மீண்டும் கரிய திருமேனியை யடைந்து பன்னிரு தடவை மாயூரேசனைப் பணிந்து போற்றிப் பெறலரும்பேறுகளைப் பெற்ற விதத்தினை என் கண்ணிணைகளாலும் தரிசித்தவன் யானேயாவேன்."

"நாரணன் நான்முகர்களே இப்படிப்பட்ட விதமாய் அநேக விசை மாயூரேசனை விரும்பிப் பூசனைகள் பல புரிந்து நற்பேறு பெற்றுப் போயினார்கள் எனின், தேவேந்திரனை யுள்ளிட்ட தேவர்கள் அவரவர்களின் க்ஷேமார்த்தத்தைக் கருதிப் பண்ணிய பூசைகளைக் கணக்கிட்டுரைப்பதென்றால் என்றால் முடியாததாகும்; கைலாயபதியாம் பரசிவ சொரூபனே இத்தலத்தில் இனிது வீற்றருள் புரிகிறான் என்னில், இந்த க்ஷேத்திர மகிமையை யாரே உரைப்பதில் வல்லவராவார்! அப்பேர்ப்பட்ட ஈசுவராநுக்கிரகம் எனக்கு மிக்கிருந்ததனாலே நரர்கள் வதியு மிப்பூமி பல்காற் சாம்பராயினமையும் என்னிரு கண்களால் அநேக தடவை தரிசித்துள்ளேன்; இன்னுங் கேளுங்கள்! இப்பூமி மீட்டும் வேறுருவமைந்ததும் அநேக தடவைகள் பார்த்துளேன், கொடியனாகிய அசுரன் பூமியைக் கவர்ந்ததும் பல தடவைகளில் பார்த்திருக்கிறேன், பூமியை மீட்டும் சரிப்படுத்துவதற்காக அநேக தடவைகள் வராக அவதாரங்களை எடுத்ததையும் நான் பலகாலும் பார்த்துளேன்! ஓ! நீதி தவறாச் சன் மார்க்கத்திலேயும் ஞான மார்க்கத்திலு மன்றி வேறொன்றிலும் புத்தியை வீணே செலுத்தாத தவச் சிரேஷ்டராகிய வசிஷ்டரே! உம்மைப் போன்ற வசிஷ்டர்கள் ஏழு பேரை இதற்குமுன் கற்பங்களில் பார்த்திருக்கிறேன்; காரியாகாரியங்களைச் சீர்தூக்கிச் செய்யவல்ல வேத வியாசர்கள் பல்லோர்கள் அப்போதப்போது ஜனித்து வேதங்களை விளக்கி உரைத்தவற்றையும் பல விசைகளில் பார்த்துளேன்."

ஸ்ரீமந் நாராயண மூர்த்தி அமிருத மெடுப்பதற்காகத் திருப் பாற்கடலைப் பன்னிரு தடவைகள் கடைய யான் பார்த்திருக்கி றேன். இனேனுகை வயிற்றில் ஸ்ரீமகா விஷ்ணு ஆறு தடவை ஜனனமாயதை நான் பார்த்திருக்கின்றேன். ஸ்ரீமகா விஷ்ணு புத் தாவதாரமெடுத்ததை முப்பது தடவைகளில் கண்டிருக்கிறேன். எம் பெருமான் உருத்திர மூர்த்தி அநேக தடவைகளில் திரிபுராசுர சங்காரங்கள் செய்ததையும் யான் கண்டுளேன். மாயவன் பாண மாகி எட்டுத் தடவை வந்துளதைப் பார்த்துளேன். பரிசுத்த மூர்த் தியாம் திருமால் பதினொரு தடவை இராமாவதாரம் எடுக்கக் கண் டேன். அன்னவனே ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி யம்சமாக பதினறு தடவை அவதரிக்கக் கண்டிருக்கிறேன். அன்னவரே பார்த்தசாரதி யாக விருந்து எட்டுத் தடவை பாரதப்போர் நடத்தக் கண்ணுற் றுளேன். சோம சுந்தர மூர்த்தி மூன்றுதடவை மன்மத தகனமும், இரண்டு விசை அந்தகாசுர வதமும், எட்டுத் தடவைகளில் வேதக் கிழவரின் சிரக்கண்டனமும் செய்துள்ளதை யான் சாட்சிபூதமாய் நின்று பார்த்துளேன்.

இத்தியாதி விஷய தரிசனங்களாலே நான் அடைந்த பிர யோசனம் என்னவோ சிறிதேனுமில்லை; ஆனால் இவ்வுடற் பாரத் தைத் தாங்கி இன்னும் இப்பூமியில் நிலவ வேண்டுமென்னும் விருப்பம் சிறிதேனும் எனக்கில்லை. இனி ஞான மார்க்கத்திலேயே என் புத்தியை ஒருங்கு செலுத்திப் பரம்பரன் அடியையே சாரும் அவா பெரிதுமுடையேன். பூதவுடம்பு பெற்றிருக்குமளவும் உறக் கத்தை நீத்திருத்தலவசியமானது. மடமைத் தன்மை மிக்க இவ் வுறக்கமுற்றால் அநேக பிறவிகளை யெடுத்து மண்ணுலகத்தில் மன்னி அவஸ்தைப்பட வேண்டி வருமாதலின் நீவிரெல்லாரும் கௌரி மாயூர க்ஷேத்திரம் சென்று, எல்லா மாயல்லவுமாயிருக்கப் பட்ட ஸ்ரீமாயூர நாத தரிசனம் பெற்று கிருதார்த்தராகக் கடவீர் என்று முனிவர் முதலாயினோர்களுக்கு வாயசம் விரிவாய்க் கூறிற்று.

வாயசம் உரைத்த வார்த்தையைக் கேட்டபோதே எல்லோ ரும் சந்தோஷ சித்தர்களாகி, சிறப்புற்றோங்கிய கௌரி மாயூர க்ஷேத்திரத்தைச் சேர்ந்து பிரம தீர்த்தம் விருஷப தீர்த்தம் மு

லாய தீர்த்தங்களிற் படிந்தாடி மகமேரு கிரியை வில்லாகக்கொண்ட ஈசுவரரின் பாதத்தை மெய்யன்புற ஸ்தோத்தரித்து பேரானந்த சாகரத்திலாழ்ந்தவராயினர்கள். இத்தகைய கீர்த்தி மிக்க மாயூர ஸ்தலத்தின் புகழைப் பற்றி ஆதிசேஷனேயாகிலும் எவருக்காவது நன்கு எடுத்துரைத்தலும் முடியுமான காரியமோ? தவத்திறற் சிறந்த இருஷிச் சிரேஷ்டர்களே! இத்தலத்தினைத் தியானியாதவர் யாவரேயாயினும் அவர் பூஜ்யரேயென்று வேதங்கள் கூறுமென்னில், மாயூர க்ஷேத்திரத்தைத் தியானியாதவர் பாபம் அறாமல் துயர்க்காளாவார் என்பதும் சொல்லவேண்டுமோ?

(வாயசம் பூசை புரி சருக்கம் முற்றிற்று)

---

19 வைரவர் பூசை புரி சருக்கம்.

நினைத்தவற்றை யெல்லாம் ஒருங்கே தரவல்லதாயுள்ள மாயூர க்ஷேத்திரத்திலுள்ள மாயூரேசனின்னருளால் சிருஷ்டித் தொழிலையடைந்த பிரமன் தனக்கு மேலானவரொருவருமிலர், என்னுமகிசெருக்கினை ஓர் காலத்தில் அடைவானாயினன். ஈசுவரனின் வரப்பிரசாதத்தினால் எல்லாச் சிருஷ்டிகளையும் யாமே செய்து நமதாணைப்படியே பூமியை அரசு புரிவோமென்னும் கருத்துட்கொண்டவனான பிரமனது தந்தையாம் திருமாலும் அவனிலும் மிக்க கர்வம் கொண்டவனாயினன்.

விஷ்ணுவைப் பிரமர்களின் மனக்கோளகள் இவ்வாறிருக்கையிலோர் நாள் திருமால், பிரமனிருப்பிடம் சென்றான். இவன் வருகையைக் கண்ட நான்முகனும் எழுந்திராமலும் வந்தவனை விசாரித்துபசார மொழிகளும் கூறாமலும் மௌனியாயிருந்தான். இஃதறிந்த நெடியவனும் பிரமனை நோக்கி என்னே! நான்முக! ஏன் இன்னணம் இருக்கின்றனை! வந்தால் மரியாதைக் குறிப்புடன் எழுந்து நீ போற்றுவதுமில்லை; நல்வரவேற்றுயுமில்லை; பேசினையுமில்லை. இன்று என்ன உனக்கு நேரிட்டதெனப் பிரமன் ஏ! விஷ்ணுவே! நான் தான் பெரியவன் என்பதை ஏன் நீ நன்குணை

ர்ந்திலை! என்னைத் தேடி வந்த நீ என்னகம் புக்கதும் என்னை வந்திப்பதை விடுத்து, என்மேல் குற்றமும் சுமத்தி நிற்கின்றனையே! நும்பாற்றம் நன்று! நன்று!! என்று கர்வ மேலிட்ட மறையவன் கூறினன். இது கேட்டலும் புருஷோத்தமன், இப்படித்தான் இதுவரையில் நடந்து வந்ததோ? உனக்கு எத்துணைத் தரம் வந்தனை யான் செய்துளேன்? மொழிதி எனலும் பிரமன், ஏ! விஷ்ணுவே! சகல உலகங்களையும் உன்னையும் கற்பங்கள் தோறும் நவநவமாகப் படைக்குமாற்றல் மிக்குடைய என்னை நீ வந்திப்பதற்கென்னை? உனக்கு முறைமை தெரிந்ததில்லை என்றான் சதுர்முகன். இவ்வாறு கூறிய பிரமனை நோக்கி முராரி, ஏ! பிரம!! மூர்த்தி உன்னை என் நாபி கமலத்தில் முளைத்தெழும் தாமரையில் உற்பவிக்கச் செய்ததை நினைக்காமல் வாயில் வந்தவாறெல்லாம் பிதற்றுகின்றனையே யெனலும், கோபம் மூண்ட தாமரைக் கிழவன், நீயேயோ என்னைப் படைத்தாய்! உன்னுரை நன்றாயிருந்ததென்று சொல்லிக் கொண்டே நாரணனின் கதுப்பிற் பொட்டெனப் புடைத்தனன்.

அறை பட்ட நாரணனும் பிரமனிடம் தோல்வியுற்றனாய் அவனுடைய கதுப்பில் இவனும் பல அடிகள் கொடுப்பானாகி, வாய்ச் சண்டையிலிருந்து கைச்சண்டைக்கு வந்துவிட்டது. கைச்சண்டையினால் இவ்விரு திறத்தாரும் அலுத்துப்போய் தண்டமெடுத்தடித்துக் கொள்ளவும் புக்கனர்; இந்த கோர யுத்தத்தைத் தாங்காத தேவேந்திரனை யுள்ளிட்ட தேவர் யாவரும் இச்செய்தியைப் பற்றி கைலாச கிரீசனிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொள்ளத் தனது குறு நகையினால் வயிரவக் கடவுளைச் சிருஷ்டித்து, பிரம விஷ்ணுக்களினிடையில் விளைந்திருக்கும் கலகத்தை யடக்கிவாவென்று பரமேசன் அனுப்பினர், வயிரவக் கடவுளும் அன்னவர்களிடம் சென்றான். இப்படி வயிரவக் கடவுள் இவ்விருவரிடம் செல்வதை யுளவினாலறிந்த மயோன் அவ்வடுக நாதர்க்கு அஞ்சி ஒருவருடனும் எதுவும் சொல்லாமல் தன் வைகுந்த நகரமேயோடி ஒளித்துக் கொண்டான்.

வடுகப்புத்தேள் வருவதைப் பார்த்தும், சிறிதேனும் இலக்ஷியம் செய்யாத பிரமன், ஏ வடுக! என் மகனே! வருதி! வருதி!

இவ்விடம் வருதி!! ஈண்டை இருத்தி! எனலும் கோபம் மிக்க வடுக நாதன் ஞெமேலெனப் பிரமன் மேற் பாய்ந்து, அவர் அழகிய தலைகளிலொன்றனைத் தன் கையிலுள்ள உகிரினால் பறித்து விட லும், நான்முகன் பதறிக் கதறி வீழ்ந்தழுதனன்.

வீழ்ந்த பிரமன் கடைத்தேறுமாறு அருள் செய்து கொய்த தலையினையும் கையகத் தேந்தி விரைந்து வைகுந்த நகரம் புகுந்து ஆசார வாசலிற் காப்போனான விஷ்வக்ஸேன மூர்த்தியைத் தனது முத்தலைச் சூலத்தினால் ஒருவாறு தேய்த்துக் கொண்டே உள்ளே சென்று திருமாலைக் கண்டித்து அவனது உதிரத்தைக் கபாலத் தேற்றான்.

தண்டஞ் செய்யப் பெற்ற மகாவிஷ்ணு மூர்ச்சித்து வீழலும் மாங்கல்ய பிட்சைக்காக வடுக நாதரிடம் முறையிட்ட இலட்சுமி தேவியின் பொருட்டுத் திருமாலையும் விஷ்வக் ஸேனரையும் மீட்டும் ஜீவ பிட்சை கொடுத்தெழுப்பி, அவருக்கு முன் போல இறை மாகுதி நல்கிக் கங்கா நதியாற் சூழப்பட்டுள்ள காசி மாநகரம் விரைந்து புக்கனன்.

காசி சென்றுற்ற வடுகப்புத்தேளும் கங்கை மாநதியில் விதிப் படி படிந்து ஆங்குள்ள அன்ன பூர்ணி விசாலாக்ஷி ஸமேத விசுவே சரை மனமொழி மெய்களால் உள்ளன்புடன் போற்றி செய்ய, விசுவேசரும் பிரசன்னமாகி, இத்தலத்தைக் காட்டிலும் சிறந்த தலம் ஸ்ரீ கௌரி மாயூர மென்பர்; அத்தலத்திலேயே அம்மை விசாலாட்சியோடு நாம் இனிது வீற்றிருந்து பக்தர்களுக்கு வேண்டிய அருள் பாலிப்போம்; ஆதலின் அந்த க்ஷேத்திரத்தினை விரைவின் அணுகிப் பிரம தீர்த்தத்திலும் மற்றுமுள்ள தீர்த்தங் களிலும் விதிப்படி படிந்தாடி எம்மை அர்ச்சித்தேத்துதி! அப் பொன்னி சூழ் மாயூரத்தில் உனக்குவேண்டிய வரங்களை வேண்டி யாங்கே ஈவோம்' எனலும், வடுகப்புத்தேள், மாயூர க்ஷேத்திரம் அடைந்து வள்ளலார் என்னும் புனைவு பெயருடைய அபயப்பிர தாம்பிகா ஸமேத மாயூரேசரைத் தரிசித்து அவரது கிருபா நுக்கிர கத்தாலும், அவர் சந்நிதானத்துள்ள தீர்த்த மகிமையாலும், தன் பூர்வ சன்மார்த்திர வினைப்பயத்தாலும், நற்பேறு பெற்றதோடு, ஈசுவரன் வடுக நாதன் முற்றேன்றி, ஏ! வடுக! நீ இன்று முதல்

இந்நகர்க் காவலனாக விருந்து நின்னைப் போற்றுபவர்களுக்குத் தேவையான வரங்களைக் கொடுத்து வாழ்வாயாக' என்று அருளிச் செய்யவும் வடுகனும் ஓமென வணங்கி ஆங்கே வதிவானாயினான்.

(வயிரவன் பூசை புரி சருக்கம் முற்றிற்று)

---

20 திருமாலவதார மூர்த்திகள் பூசை புரி சருக்கம்.

சோமகாசுரன் வேதங்களனைத்தையும் கவர்ந்து சமுத்திரஞ் சென்றொளிக்கையில், பரமேசுவரானுக்கிரகம் பெற்ற திருமால் மச்சாவதார மெடுத்துக் கடலிற் புகுந்து அசுரனைக் கொன்று நால் வேதங்களையும் மீட்டுங் கொணர்ந்து, அதனால் செருக்குற்று நான்கு திக்குகளும் பூமியும் பிறவும் நிலை கலங்குமாறும் பிலத் துவாரங்களுட் புகுந்து உபத்திரவப்படுத்தும் சமயத்தில், இந்த அநர்த்தத்தைக் கைலாசபதிக்கு அறிவிக்க, அவர் மஹா சாஸ்தாவை ஏவினார். அவரும் மீன் பிடிக்கும் பாவனையாய்க் கடலில் தம் வலையை எறிந்து இம்மீனைப் பிடித்து நன்கு சவட்டி விழி யெலும்பைக் கழற்றி மோதிரமாக்கி எம் சிவபெருமான் கையினில் மோதிரமாகத் தரிப்பித்தலும், புவியிலுள்ளோர் விண்ணுளோர் தங்கள் பயம் தீர்ந்தார்கள், ஸ்ரீமகாவிஷ்ணுவும் தம் பாபத்தைத் தொலைப்பானெண்ணி மாயூர க்ஷேத்திரம் புகுந்து தீர்த்தங்களிற் படிந்தாடலும், மாயூரேச னனுக்கிரகத்தினால் மீட்டும் சிருஷ்டித் தொழிலும் வைகுண்ட நகராட்சியும் பெற்றுப் போனார்.

திருப்பாற்கடலை அமிருதம் வேண்டி திதி அதிதி மைந்தர்களுடன் முறையே மேருகிரியைக் கொண்டு கடைந்த போழ்தத்து ஆமை யுருவடைந்து திருமால் மேருகிரியைத் தாங்கிப் பின்னர், அதே வலிகொண்டு, அக்கடலைப் பெருங் கோபத்துடன் கலக்கி உலகிலுள்ள உயிர்களுக்கு ஆபத்து விளைப்பதை யோர்ந்த பிரம ருத்திராதிகள் கைலையங் கிரி புக்கு உமாபதியிடம் தங்கள் குறைகளை யிரக்க தந்தப்பிரான் முகத்தை ஈசன் நோக்கலும், அன்னவனும் விரைவினெழுந்து சென்று கமடத்தைக் கசக்கிக் கொணர்ந்து அதனை மாதேவன் மார்பிலணிந்தான். பின்னர் இப்பிழை

பொறுக்க மாயூரத்தில் வந்து தவஞ் செய்ய மகிழ்ந்த மாயூரேசன், அன்னவருக்குப் டண்டைப் போல வைகுண்ட லோகத்தையும் அரசு முறையும் ஈந்து விடையளித்தனுப்பினார்.

ஓர் காலத்தில் இரணியாட்சன் பூமியைப் பாயாச் சுருட்டிக் கொண்டு போயதை மீட்டும் கொண்டுவர சுவேத வராஹ ஸ்வரூப மெடுத்த ஸ்ரீமந்நாராயண மூர்த்தி பிலம் புக்கு அச்செம்பொற் கண்ணனைக் கொன்று தன கொம்பின் நுனியில பூமியை எடுத்து மீட்டுங் கொணர்ந்ததுமன்றி அவ்வலி பெற்ற தன் கொம்பின் வல்லமை கொண்டு பூமியிலுள்ள வரைகளையெல்லாம் எடுத்துப் பந்துபோல் விளையாடியதனால், மாநுட மாக்களுக்கும், வானவர்களுக்கும் துன்புண்டாய்,மீட்டும் அவர் கைலாசபதியை யணுகலும், உமாதவன் தம் மைந்தனும் குமர வேளினை நோக்கியருளினர்; அவரும் விரைவிற் சென்று அவ்வேனத்தின் ஆற்றலை யடக்கி, அப் பன்றியின் எலும்பை ஈசன் மார்பில் அணிவித்தான். ஸ்ரீபுருஷோத்தமனும் தான் செய்த மறம் களைவான், மாயூரம் நகரம் புக்கு மேலவதாரங்கள் போல முறைப்படி மாயூரேசனை வணங்கலும், அன்னவரின்னருள் பெற்றுச் செல்வானயினன்.

ஹிரணியன்றனது மைந்தனது பக்திக்கு வியந்து, நர மடங்கலாய் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி தூணினின்று உதித்து ஹிரணியாசுரனது வயிற்றைக் கிண்ட பின்னர், விஷ்ணுவுக்கு இரத்த வெறி மேலிட்டு உலகுக்குத் தொந்திரவு விளைத்தலும், உலகினர்க்குள்ள உபத்திரவத்தை நீக்குவான், வீர பத்திரனை சரப வுருக்கொடு ஏவினர் சிவபிரானும். அன்னவனும் நரமடங்கலைக் கொன்று உலகிற்கு நன்மை பயக்க, விஷ்ணு தெளிவுற்றவராய் மீட்டுமொப்பற்ற மாயூரமடைந்து அபயப் பிரதாம்பிகை ஸமேத மாயூரேசனைப் பெரிதும் போற்றி நற்பேறு பெற்றனர் என்பர்.

வாமனவுருக்கோடு மாவலியிடம் மூன்றடி மண் யாசித்து நெடிய திரிவிக்கிரம ஸ்வரூப மெடுத்து மாவலியின் செருக்கையடக்கிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி செருக்கு மிக்கோனாய்ப் பூமிக்குத் தொந்தரை விளைப்பதை யறிந்த கைலாசபதி வடுகநாதனை ஏவலும், அப்பிரான் கடுகென வந்து நெடியவனின் தோலை யுரித்து சட்டை

போல் அதனைத் தன் மேற் போர்த்துச் சட்டை நாதனெனப் பேர் புனைந்தான். அந்நெடியோனின் முதுகெலும்பாந் தண்டினை கையிலே தனியெடுத்துத் தாங்கிய தன்மையினால் தண்டபாணியென்னும் சீரிய பெயரை இவரே பெற்று உலகத்தை இரட்சிப்பாராயினர். அத்திரிவிக்கிரமப் பெருமானின் குதிகால் நரம்பினைத் தனியெடுத்து மாலை போலணிந்ததனாலும், நரம்பணியன் என்னும் நாமதேயமுடன் ஒளிர்வானாயினன். இப்பேர்ப்பட்ட மகாபாதகங்களைத் தணிப்பதற்காக ஸ்ரீவாஸுதேவமூர்த்தியும் மாயூரக்ஷேத்திரமடைந்து உருத்திராக்ஷமாலை விபூதி முதலியன முறைபெற அழகாய் அணிந்து ஈசுவர சந்நிதானத்தில் முன்னொடிபானாய் நின்று, வன்னி மயிலைப் பெருமானை, வள்ளலெனும் பெயரானை, யொண்மயிலோர் புறத்தானை யுவந்தேத்தி வழிப்பட்டான். நெற்றிக் கண்ணினையுடைய சிவபிரானும் ஸ்ரீமகாவிஷ்ணுவின்பேரில் அன்பு மீக்கூர்ந்து "ஏ! திருமாலே! இதுவரையில் நீ அறியாது செய்த பிழைகளைப் பொறுத்தனம்" இனியாவது அற்ப புத்தியுடையோனாய் ஒழுகாதிருக்கக் கடவாய் என்று நற்புத்தி புகட்டிய ஈசனை நோக்கி நாராயண மூர்த்தி, எம்பிரானே! எல்லா நினதருளேயன்றி, வேறில்லை என்று தொழுதேத்தி, தன் யதாஸ்தானம் சேர்ந்து திருமாமகளோடும் இனிது வீற்றிருந்தான்.

திருமாலவதாரமெடுத்துச் செய்த பிழைகளைக் களைவதே மாயூர க்ஷேத்திரமென்னில், இப்பேர்ப்பட்ட தலம்போன்ற சிறந்த தலம் விண்ணகரில்தேடினும் கிடைக்காதென்றேநிறுதிட்டமாய்ச் சொல்லலாமாதலின் ஏ! முனிவர்களே! இந்த க்ஷேத்திர மகிமையைப் பற்றி நான் சொல்லிய இவ்வாறான வசனத்தையும் கவனமாய் மனதில் பதித்து வைத்துச் சிந்தியுங்கள் என்று நைமிசாரணிய வாசிகளை நோக்கிச் சூதபுராணிகர் கூறினர்.

(திருமாலவதார மூர்த்திகள் பூசனை புரி சருக்கம் முற்றிற்று.)

---

21. இயம தருமன் பூசனை புரி சருக்கம்.

மேதக்க முனிவர்கள், தேவர்கள், பிரமன், மால் முதலியவர்களாலும் சிறப்பித்துச் சொல்லப்படும் பெருமை வாய்ந்த திருக்கட

லூர் என்னும் சிறந்த க்ஷேத்திரத்தில் மார்க்கண்டன் என்னும் மழ முனிவன் லிங்கப் பிரதிஷ்டை செய்து தினந்தோறும் சுகந்தமுள்ள பல்வகைத்தான பத்திர புஷ்ப தூப தீப நைவேத்திய சகிதமாய் சமஸ்த தேவோபசார இராஜோபசாரயாக அன்பு மீக்கூர்ந்து எம் பரமேசனைப் பரிந்து பூசித்து வாராநிற்கையிலோர்நாள், வைவசுவத மன்னனும் இயம தரும ராஜன், இம் மார்க்கண்டேய முனிவனது வாழ்நாள் குறுகினமை கண்டு தன் அங்குச பாசக் கயிறுகளுடனே கறுத்துப் பருத்த உருவத்துடன் மகிஷ வாகனனுடராய் தன்னுடைய படர்கள் தன்னைச் சூழ்ந்துவர ஈசுவரபூஜை புரியாநிற்கும் பரம இளைஞன் சிவபக்தனும் மார்க்கண்டேயன் முன்பு தோனறினன். கூற்றுவன் எதிர்நிற்றலை யுணர்ந்த மார்க்கண்டேயன் அஞ்சாநெஞ்சுடன் எம்பார்வதீசனை நோக்கி,

‘கூற்றுவரக்கண்டு சங்கரவோ! கொடுநெஞ்சமுண்டு
போற்று பிரமன் முதலோர்க் குயிர்தந்த புண்ணியவோ!
வேற்றுமிசையுவந் தொள்ளடியாரை யெதிர்பவவோ!
தோற்று பயந்தவிர்த்தான் புகலென்று துதித்தனனே.’ 17

இவ்வாறு துதியாநின்ற மழவிளங் குமரனைக் காப்பான் கருதி இலிங்கத்தினின்றும் பார்வதீசன் ஆவிர்ப்பவித்து கூற்றுவனை மண் விழுந்து மாண்டுபட உதைத்து வீழ்த்தினன். இவ்வாறு மாண்ட சமன் ஈசுவரானுக்கிரஹம் பெற்றுப் பின் கதை என்னும் ஆயுதந் தாங்கிய கையுடனெழுந்திருந்து எம்மானைப் பணிந்து எமக்குத் தாங்கள் அருளும் பணிவிடை யாதென்ன, தூயவனும் பரமேசனும்' எ! கூற்றுவ! நீ யாம் இனிது வீற்றுப் பக்த பரிபாலனஞ் செய்யும் மாயூரம் புகின், நின் குறைகள் யாவும் நிறைவேறுமென லும், உடனே தாமுமெழுந்து இயமன் அத்தலம் நோக்கி விரைந்து சென்றான். அங்கு சேர்ந்து பிரம தீர்த்தம், விருஷப தீர்த்தங்களில் படிந்து விபூதி ருத்திராட்ச தாரணங்களுடன் சிவ பிரானையும், அம்பிகை அஞ்சனாயகியும் பணிந்தேத்திப, பின்னர் அம்மேன்மை பெற்ற மாயூர க்ஷேத்திரத்தின் ஈசானிய திக்கில் ஓரிலிங்கம் ஸ்தாபித்து, ஆங்கு ஓர் தடாகமும் உண்டாக்கி அவ்விலிங்கத்தினை நன்கு வழிப்படலானான். தான் பிரதிஷ்டை செய்த லிங்கத்திற்குப் பூசனைகள் முதலியதும் நன்காற்றிய பின் கௌரி மாயூர க்ஷேத்தி

ரத்தில் வீற்றிருக்கும் மாயூரேசன் கோவில் புக்கு அம்மையாரையும் பணிந்து பின் வருமாறு போற்றுவானுவான்,

'அத்தாவெனி லவர்தன்மை யெண்ணு மலருள் சுரக்கும்
பித்தா கொடிய வெனையுநன்காண்டருள் பேசரிய
சுத்தா தொழும்பர்த மெய்ப்பில்லைப் பேசுடரார் மணியே
முத்தா செழும் பொழின் மாயூரமேய முழுமுதலே! 18

காவாவெனி லவர்தன்மை யெண்ணுது கடைக்கணிக்குங்
கோவா யெனை யுங்குறித்தாண்டுகொள் கொடிநஞ்ச முண்டுஞ்
சாவாய் மறைமுடிக்கெட்டாய் மெய்ஞ்ஞானத் தனிச்சுடரே
மூவாய் செழும்பொழின் மாயூர மேயமுழுமுதலே! 19

அன்னேவெனிலவர் தமைமையெண்ணுமலருள் சுரக்கும்
பொன்னேவெனுஞ் சடையாய் யடியேனையும் பொற்புறவாள்
பன்னேகைவும் தவிர்தாயாரும் பரிந்துதொழு
முன்னேப் செழும்பொழின் மாயூர மேயமுழுமுதலே.' 20

என்றிவ்வாறு தோத்தரிக்கும் இயம தரும ராஜனுக்கு உமாமகேசன் பிரத்தியட்சமாய் ! ஏ! நமனே ! இனி நமது பக்தரிடத்து மட்டும் நீ போதல் தவிர்! அப்படிப் போனுயெனின் நீ இறந்துபடுதல் திண்ணமென்றுணர் ! இனியுன் பாபம் யாவும் இம்மாயூர க்ஷேத்திரத்தை நீ அடைந்த மாத்திரத்திலேயே போய்விட்டதென்னலாம்' நீ இனி நின்னூர் புகுந்து நினது தொழில்களை வழுவறச் செய்து வருவாய்! என்று பணித்தார். பின்னும் ஈசன் அவனை நோக்கி! ஏ! தரும ! நீ அன்பினுல் ஸ்தாபித்து அர்ச்சித்த இலிங்கத்தில் யாம் என்றும் வீற்றிருப்போம் ! நின்னால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தமும் நகரும், நின் பெயர்கொண்டே அழைக்கப்படுவதாக என்று கூறி ஈசுவரன் அந்தர்த்தானமாயினுர். ஈசுவரன் பணித்ததைச் சிரமேற்கொண்டு தன்னூர் புக்கான் இயமனும்; தருமன் வரம் பெற்ற காரணத்தால் அத்தலத்தில் விளங்கியிருக்கும் லிங்கம், தருமலிங்கம் எனப் பெயர் பெற்றது. அவனுல் ஸ்தாபித்த தடமும், அவன் பூசித்துப் பேறுபெற்ற விடமும் முறையே தருமதீர்த்தம், தருமபுரமெனவே பெயர் பெற்றனவென்பர் அறிவுடையோர், நீலகண்டப் பெம்மான் நமனைக் கோபித்துப் போரியற்றிய காரணததால் அத்தலமும் வீரட்டமாயது.

(இயம தருமன் பூசனை புரி சருக்கம் முற்றிற்று)

22 காமன் பூசை புரி சருக்கம்

ஹிமோத்கிரி ராஜனுக்கு உமாதேவி கன்னிகையாய் உற்பவித்த காலத்தில், மாயூர க்ஷேத்திரத்தில் கடுக்கை, கொன்றை முதலிய விருக்ஷங்கள் நிறைந்ததோர் வனத்தினிடை எம்பெருமானாகிய சிவபிரான் தட்சிணாமூர்த்தி, யவசரமாக வீற்றிருந்தனர். அக்காலையில் தேவர்கள் பண்டைகள் யாவரும் எப்போது ஈசன் உமையோடு சேர்வதனால் அசுர வதம் ஆகிச் சுகமடைவோமெனக் காத்திருந்தனர். விஷ்ணுவும் தம மானஸிக புத்திரனாகிய மன்மதனை விளித்து, நாயகன் மேல் பாணம் தொடுக்க ஏவினன். தந்தையின் சொற்படி மன்மதனும், பாணம் பிரயோகித்தலும் ஈசனும் தன் நெற்றிக் கண்ணினால் மதனனை சுட்டெரித்தனர். இரதி தேவியாம் மதனின் மனைவி, துயரக்கடலாழாத வண்ணமாய் அநங்கனாகுமாறு மதனனுக்கு வரமளித்தனன்.

ஈசனுக்கு இத்தகைய அபராதம் செய்தோமே என்னும் கசிந்த மனத்தினனாகி, தன்னுடைய பத்தினியுடனும் அநங்கவேள் மாயூர மாநகர் சேர்ந்து விதிப்படி ஈசனை அர்ச்சனை செய்து இஷ்ட சித்தி பெற்றான். நட்டமாடியாம சிவபிரான், நெற்றிக் கண்ணிற கெக்காகி மன்மதனுடல் சுட்டிட்டு, சாபமாக்கப்பட்ட ஸ்தானம் விட்டமாயது. இத்திருத்தலத்தை முந்தி எவர் போற்றினும், மேம்பட்ட அருமையான பேறுகளையும் எளிதிலடையலாம்.

(காமன் பூசை புரி சருக்கம் முற்றிற்று)

---

23 தீர்த்த விசேடச் சருக்கம்

வள்ளலார் என்னும் பெயரிய மாயூரநாதர் வீற்றிருக்கும் திருக்கோயிலுக் கபிமுகத்திலிருக்கும் தீர்த்தம் எப்பாவத்தையும் எளிதில் நீக்கலால் பாவநாச தீர்த்தமெனப் பெயர் பெறும். அட்டமூர்த்தியாம் பரமேசன் ஆதிகாலத்தில் அழகிய தம் கையினில் தரித்த சூலத்தால் கீண்டி யெடுத்த காரணங்கொண்டு சூலதீர்த்த

மென்னவும், ஆதி நாள் முதல் விசேஷமான வரங்களை எண்ணினார்களுக்கு ஈந்துள்ளதால் ஆதி தீர்த்தமெனவும் படும்.

தேவாதிதேவராகிய ஸ்ரீவள்ளநாதர் திருமுன்பு இலங்குமித்தீர்த்தத்தில் படிவோருடைய பாவங்களையழித்து விடுதல் பற்றி பாவநாசதீர்த்தமென்று எல்லாரும் புகழ்ந்துரைப்பதான பெயர் பெற்றது அத்தீர்த்தம். தருமமார்க்கத்தையும், அருத்தத்தையும், இஷ்டகாம்யங்களையும் முத்தியையும் முறையே நல்கலாலும் அத்தீர்த்தத்திற்கும் தருமதீர்த்தமென்றும் அத்ததீர்த்தகாமதீர்த்தமென்றும், முறையே பெயர்வந்தன. ஸ்ரீமாயூரேசர் கட்டளையினைச் சிரமேற்கொண்டு மயிலுருக்கொண்ட அம்மை ஸ்நாநஞ்செய்து பண்டை வுருவெய்தியதே, மற்றைய கொடிய பாதகங்களையும் அத்தீர்த்தம் முழுகி எழுந்த மாத்திரத்தில் நிவர்த்திக்க வல்லது என்பதற்குச் சாட்சியாகும்

வாவிக் கரையிலுள்ள மரங்களிற்குலாவும் மாயயில்களின் உருவம் படிந்துத் தண்ணீரில் பிரதிவிம்பித்துத் தோன்றும் காட்சி, முன்னம் மூழ்கி எழுந்துத் தம்புருவ மடைந்துபோன மயில்களின் தேகங்களை அவ்வாவி தன்னுள் இன்னும் வைதுக் கொண்டிருப்பது போலுமுள்ளது. அன்னம் முதலான எண்ணிலாப் பறவைகள் அத்தீர்த்தத்தில் கூடிக் குலாவிக் களித்திருத்தல், முன்னம் தேவ உருவமடைந்த மயில்கள் போலவே இப்போது நாமுமடையலாமென இச்சைகொண்டிருப்பதுபோலும் உலாவுவது போலுமிருக்கும். இத்தகைய பாபநாசதீர்த்த மகிமை சொல்லப் புகுவோமானுல் நமக்குப் படிக்க காலமும் எழுதக்காலமும் போதாதென்னில், அதன் மகிமை எண்ணிறந்ததென்றே சொல்லவேண்டும். இத்தீர்த்தக் கரையில் சிராத்தம் செய்யின் அவரவர் பிதிரர்கள் பத்து நூற்றாண்டு காறும் சிவலோக பதவியை விட்டு நரலோகம் வரார் என்பதும் திண்ணம். வருஷப் பிறப்பு, தட்சிணாயன, உத்தராயண புண்ணிய காலங்கள், மாதப் பிறப்பு, கிரகண புண்ணிய காலங்கள், இப்படிப்பட்ட விசேஷ காலங்களில் இப்பாவநாசதீர்த்தத்தில் படிவது விசேஷ பயன் தர வல்லதாயுள்ளது. வேத விதிப்படி சங்கற்ப முதலியன செய்துகொண்டு சத்பிராமணர்களுக்குத் தக்ஷிணையும் கொடுத்து இத்தீர்த்தத்தில் படிந்

நாட வேண்டுவதவசியமாகின்றது. அத்தீர்த்தத்தில் ஸ்நாந மாடித் தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தவாறு சத்பாத்திரங்களுக்குத் தான தருமங்கள் செய்து, வேதங்களும் தேடித்தேடி காணமுடியாத வள்ளலாருக்கும் அபயாம்பிகைக்கும், குளிர்ச்சியாக அபிஷேகம் செய்து வைத்தலும் அதி விசேஷமாகும்.

ஈசுவரன் அங்கியில் பக்தர்கள் எல்லவருக்கும் தீர்த்தவாரி செய்யும் அச்சுபதினத்தில் தாமும் அத்தீர்த்தத்தில் மூழ்கி, குற்றமற்ற சாவியன்னத்தை அத்தீர்த்தக் கரையிலேயே அடியார்களுக்கு இனிதுதவுதலினால், அவர்களடையும் பேற்றை யாரே கண்டறிந்து சொல்ல வல்லவர்? அத்தீர்த்தத்தை என்றும் அழிவடையாமல் காப்பாற்றுவோரும், சிலமடைந்த காலத்தில் அதனைப் புதுக்கிச் சீர்ப்படுத்துவோரும் அத்தீர்த்தக் கரையில் அளவில்லாப் பொலம் பூச்சொரியும் நந்தவனம் அமைப்போரும்,விசேஷமான சாம்பிராச்சியம் பெற்று ஈசுவர பதவியை இனிதடைவார் என்பதும் திண்ணம்.

இதுவரையில் சொல்லி வந்த தரும மார்க்கங்களில் அநுஷ்டிப்பதில் சில குறைவுகள் நேருமாயினும், அத்தீர்த்தத்தில் படிந்து, அநுதினம் செய்யாதிருத்தலே மேதக்க அறமாகப் பாவிக்கப்படும். இந்நெறியை யாவது அநுசரித்தால் அவர்கள் மேலான சிவபதமடைவார்.

இத்தகைய மகா மகிமைபொருந்திய தீர்த்தம்தன்னில் எத்தேயத்தவரும் வந்து இனிதமர்ந்தாடி எம்மானருள்பெற்றுப் போகலும் இன்றியமையாததேயாம், அவர்களால் கால்நடந்து வந்து இத்தீர்த்தத்தில் படிந்தாடிப் போவது அசாத்தியமென்னில் வாகனாதிகளிலாவது ஏறிவந்து அன்னணம் செய்து போதலே வேண்டும். அதுவும் முடியாதென்றால் பின்னர் சொல்லியவாறு செய்மின்! அத்திருத்தலம் புக்கு அத்திருத்தீர்த்தம் படிந்தவரின் காற்றுவது படியுமாறு எவரும் பார்க்கவேண்டும். அதுவும் கூடாத காரியமாயாகிவிடுமாகில் அத்தீர்த்தம் படிந்து வந்ததாக மனோபாவனையாக சிறிது நேரம் செய்தலே போதுமானதாகும்; இந்தக் காரியம் கூட ஒருவனுக்கு இயலாதென்னில் அன்னவர்க்கு

யாம் சொல்லவேண்டுவ தொன்றுமில்லை. சூலை, காசம், குட்ட நோய், காட்டுவாதம், குன்மம் முதலிய எக் கொடுநோயை யுடைய வனாயிருந்தாலும் இத்தீர்த்தத்தின் ஓர் ஆசமனத்தால் இந்நோய்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்து ஓடாநிற்கும். இன்ன தன்மையதான சிறந்த மாயூர க்ஷேத்திரத்தின்கண் பற்பல விடங்களில் ஆங்காங்கே பல் வேறு வகைத்தான இன்னும் பல பல தீர்த்தங்கள் விளங்காநிற்பதை பின்னர் ஆங்காங்கே சொல்லப் போவதை ஏ! பக்தி வைராக்கிய சீலர்களே! கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள் என்று சூதபுராணிகர், நைமிசாரணிய வாசிகளுக்குத் திருவாய் மலர்ந்தருளினார்.

(தீர்த்தவிசேடச் சருக்கம் முற்றிற்று.)

---

24 அகத்தியர் பூசை பூரி சருக்கம்.

பொதியமாமலை, மலையாசலம் என்னும் சிறிய பெயர்கள் கொண்ட மலையில் இனிது வசித்திரா நிற்கும் அறிய தவத்தவனாகிய விந்த மடக்கினோன் குடமுனி குறுமுனி என்னும் பெயர்கள் பல வாய்ந்த அகத்திய மாமுனிவன், தொல்காப்பியர் முதலிய தன்னுடைய பன்னிரு சீடர்களை யுடன்கொண்டு அம்மலையிலிருக்கையிலோர் நாள் மாயூரேசன் சன்னிதானம் சென்று போற்றிக் கதி பெறவேண்டுமென்று எண்ணுவானாயினன். அங்ஙனம் நினைத்த அக்கணமே குடமுனிவன், தன்னுடைய தொல்காப்பியாதிய பன்னிரு மாணவர்களுடன் மலையாசலம் நீங்கிக் கானமும் குன்றும் நதியும், கடுஞ் சுரமும் கடந்து, சகல சாம்பிராச்சியங்களினும் குறைவற்றதா யிருக்கிற ஸ்ரீ கௌரிமாயூர க்ஷேத்திரம் புக்குச் சிவத்தலங்கள் பல பலவற்றுள்ளும் புகுந்து, மிக இனிமையாய்ப் பால் போற் பெருகி வாராநிற்கும் பொன்னித் தடாநதி நீராடி வராக ஸ்வரூபமாயும், ஹம்ஸரூபியாகியும் முறையே அடிமுடிகளைத் தேடியும் காணக் கிடைக்காத ஸ்ரீவள்ளலாரின் தியான பூர்வகமான த்ரியம்பக மந்திரத்துடன் உச்சாரணம் செய்து விபூதி தரித்து உரித்திராக்கம பல புனைந்து, ஈசுவரன் கோவில் புகுந்து விசேஷமான காந்தியை

விசாகின்ற ஒப்பற்ற ஒற்றைக் கொம்பையுடைய விக்னேசுவரரின் பிம்பத்தை ஸ்தாபித்து அதனைப் பூசனை புரிவாறாயினன், பன்னிருசீடர்களும் அகஸ்தியர் சொற்படி திருமஞ்சனத்திற்கு வேண்டிய வரிய பொருள்கள் பலவற்றை முறையே எடுத்துக் கொடுக்கக், குறுமுனி கணபதிக்கு பூசை பலவற்றை மந்திர பூர்வகமாய் முறைப்படி ஆற்றித தண்டாகாரமாய்ப் பூமியில் விழுந்து நமஸ்கரித்துதன்னிருவினைகளை நீக்கி ஆட்கொண்ட விநாயகருக்கு அகஸ்தியவிநாயகர் என்னும் திருப்பெயரிட்டு எழுந்து, கைமுகிழ்த்து நின்றுகொண்டு பின்வருமாறு தோத்தரிக்கலாயினன்,

விநாயகர் துதி.

மண்ணவ ராதியர் சூழ்ந்தினி தேத்திடு மாமயி லாடுதுறைக்
கண்ணவர் செய்பணி கண்டருள் செய்யுமக த்திய வாரணமே
கண்ணவ ராகமுன் னுபவை மாற்றிக யகதரு கற்பகமே!
பண்ணவ ருட்கொள்சிந் தாமணி பேரீ பல்லாண்டு பல்லாண்டே!21

எத்திக்குந் தன்னளை யாடைய னப்புனை யீசன் திருமகனே
முத்திக்கு வித்தென யாவரும் பேசமு ளைத்தவ மொய்யமர்செ
யத்திக்கி ரங்கிய ருள்பதித் தூர்ந்த வகத்திய வாரணமே
பத்திக் கினிய பராபர னேநீ பல்லாண்டு பல்லாண்டே! 22

வாசவன் மாமல ரோனெடு மான் முதல் வானவர் தொழுதேத்தப்
பேசரி தாயிடை யூறுதவிர்த்துப் பெரிதருள் புண்ணியனே
யாசமை யாச்சிவ யோக ருளத்துறை யகத்திய வாரணமே
பாசமொ டங்குச மேந்திய கையாய் பல்லாண்டு பல்லாண்டே! 23

இவ்வாறு தோத்திரஞ்செய்து அகஸ்திய மகாருஷி கணேசன் அநுஞ்ஞையைப் பெற்று ஸ்ரீ வள்ளலார் சந்நிதானத்தின் முன்பு சென்று, திருமஞ்சனமாதிய பலவற்றைக் கொண்டு அபிஷேகாதிகளை மன்னு முருத்திர நமக சமகத்தால் வானவர் கோனும் எம்பெருமானது திருவுள்ளம் உவக்க கீராட்டி தூப தீப நைவேத்தியாதிகள் குறைவற நடாத்தி, அவர் திருமுன்பு பலமுறை பணிந்து எழுந்து நின்று பின்வருமாறு தோத்தரிக்கலுற்றார்.

ஈசன் துதி.

ஒருபோது மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா—தரவு.

'மாமேவு முகிறவழு வளமேவு பல்சிமயத்
தாமேவு சையமெனுந் தனிமேவு வரைநின்றும்

வியங்குபல மணித்திரளுமால் யானைக்கோகேளு
மியங்குகதிர் புரைபொன்னு மெறிவிரைச் சந்தனிற்றணியு
மிருகோடுஞ் செறிய வெடுத்தெறிந்து நுரைவைத்தெவ் விடத்து
மருங்கோடும் புனற்பொன்னி யாறலருஞ் சோணாட்டிற்
காமருபல் வளம்பொலியுங் கவுரிமாயூரத்தின்
மாமருவுஞ் சுடர்பரப்புமணிக் கோயில்வீற் றிருப்போய்! 24

அடைப்பது மத்தவனுலே யன்பினூராறிக்கப்
படைப்பது மற்றுளதென்று பாங்குபெறக் கொடுத்தருளிக்
கலங்கா வலவுணருளங் கலங்காமல் வடிறைஞ்ச
இலங்காவ லுனக்கின்று நேர்ந்தன மென்றருள்செய்து
புரந்தரன் முனெண்மாகளும் பொருந்துமலர் தூயிரப்ப
நிரந்தர மெண்டிசைக் காவலர் புரிபினைப் போக்கி
வானோரு மிருகதிரு மண்ணோரும் பாதலம்வா
ழோருந் தொழவிளையத்த விளிதளித்த வருளோய்கேள். 25

தாழிசைகள்.

அம்மையொரு பறவையுருவாக வருள்புரிந்தனை நீ
செம்மையொரு பறவையுருச் செறிந்தமைக்குத தகல்குறித்தோ!
மயிலுருவப் பூசையினோ மாதேவிபன்னாளும்
பயிலுருவப் பூசையினோ பரம்பர நிற்கதி விருப்பம்!
மயிலுருவப் பூசையெனில் வயங்குமின் மேனியிலுமைமுன்
பயிலுருவப்பூசைபோற்பஃறொடிக்கை நேயாதே
தோகையாய் நடித்ததிலுஞ் சுந்தரிக்கு மன்றிடைநின்
றோகையாய் நடித்தது மிக்கோதையாய் முடிந்ததே!
மாவடியின் வீற்றிருப்பாய் வடிவரியே யெனப்பாய்மென்
பூவடியாள் கொடுத்தவடிப் புகழிசெயும் வடிவன்றே,

அருளப யாம்பிகையை மணமாற்றி னுயார்ஞ்ஞயேற்
பெறருளமறை விதித்த விதி தெளிவிப்பாரிலையன்றே! 26

அராகங்கள்.

அரிபமன் முதலிய வமரர் பலருழுய
வருவிட மமுதுசெய் மணமலி கருணையை!

இமையவர் முதலிய வெவருமுன்றுலேதர
வமைதர திரிபுர மழல்செயு முறுவலே

வருவது கருதலின் மறையவனிதிவரை
தருதலை கரமுறுதகை புரிபுனிதனை

திரிசர ரிறைவன்மெய் நெறுநெறுநெறுவென
வசியொடு வரைநிறு வடிவொரு விரலினை, 27

தாழிசைகள்.

ஒலிகொண்ட படைதநல்புர வுள்ளனவிற் றொருங்கழிக்கும்
வலிகொண்ட நினக்கொருவன் மகமழித்த தொருபுகழே!
சிங்கவிரன் மாய்த்துரி கொடிறலுடைய நினக்கொருமா
தங்கவிரன் மாய்த்துரிமேற் போர்த்தியதாந் தக்கதே! 28
எண்ணில் கூற்றெய்திறுமாய்த் தெழுகின்றோர் காமமெனித்
கண்ணில் கூற்றேன் றனுக்காக்கா லெடுத்த லழுகிற்றே
நினைக்குறிப்பார் பல்காமர் நேர்வரிறு மாய்த்திடவெய்
வினைக்குறிப்பா ரொருவனுக்கா விழிதிறத்தல் வேண்டுமே! 29
பல்லுயிரை மயக்கிவினைப் பயனூட்டுந் திறலாய்க்குச்
சில்லுயிரை மயக்கி மயத்திற மூட்டலருமைத்தே
இத்தலத்தின் புற்றுருக்கேனியையட யரிதாகி
கைத்தலத்தா பலகமெனக் காட்சிதரும் கருத்தென்னே 30

அம்போதரங்கம். நாற்சீர்

போரகவித்தமனெனு மொருவன் போற்றவி
வேகவித்தயக் கறிவிழைந்து கல்கினை
குண்டின கோத்திர குமரர்க்காகர
கண்டின பிறிருக்கறன் சுரந்தனை 31

அம்போதரங்கம். நாற்சீர்

அரியயன் முதலியர்க் கரியகாட்டியை
மரிய வெவ்வுயிரினு மருவுமாட்டியை
பிரியமிக்க வருளம்பிறங்கு மாட்சியை
புரியவொண் பஃதெட்டா றொருவும் பூட்சியை 32

அம்போதரங்கம் (முச்சீர்).

மறைமுத லெவையு நவின்றனை
மருவினர் பிரிவற நின்றனை;
மறையடியவர் பெறுமொன்றனை
யவரிடு மலவலி கொன்றனை
கறைதபு முயிரெம தென்றனை
கருதலர் வலிகெட வென்றனை
நிறைதர நடநவின் மன்றனை,
நிகழ்கருணை யொடுகெவின்றனை 33

அம்போதரங்கம் (இருசீர்).

இந்துருடினை வந்துகூடினை எதகீக்கினை பேதயாகினை
பந்தமாற்றினை சந்தமாற்றினை பண்செய்வாயினை எண்செயாயினை
நிந்தைபற்றினை அந்தைசெற்றனை நேயம்மூட்டினை மாயம்விட்
[டினை
சுந்தரத்தினை யந்தரத்தினை தொக்கசோத்தினை நக்கடத்தினை 34

இவை பதினாறு மிருசீரோரடி யம்போதரங்கம்.

எனவாங்கு (சுரிதகம்) (தனிச்சொல்).

யாவரும் வழுத்து மெண்டோட் செல்வ
பாவரும் புகழுப யாம்பிகைபாக
மறைமுடி விளங்கு மாயூரேச
நிறைதர வெவையுநிரப்பு பெருவள்ளால்
விழைந்தடியேன் செய்விண்ணப்ப மொன்று
குழைந்த நின்னடியார் கூட்டம்பொருத்தி
பொன்றியு மொன்றுறுவக்கு
நன்றிசெயின் பயநளிக்குகவே 35

வின்னம் பொருந்திய பாசுரங்கள் பலவால் முக்கணப்பனுகிய ஸ்ரீமாயூரேசனைப் போற்றி செய்த அகஸ்தியனார் அபயப்பிரதாம் பிகையின் சந்நிதானத்தின் முன்புகு திருமஞ்சனமாதிகளை நிறைவுசெய் கொண்டுபோய், அன்னவளுக்கு அபிஷேகாதிகள் நைவேத்தியாதிகள் முதலியன முறை பெற நடாத்தியபின் குறுமுனிவர் அம்மையின்திருமுன் தண்டாகாரமாய்ப் பலவிசை வீழ்ந்தெழுந்து நின்று மெய்யனபுடன் பின்வருமாறு தோத்திரிக்கத் தொடங்கினர்.

அப்பிகை துதி.

'கருமுகில் விளர்ப்பக கறுத்து நெய்த திரைவன் கண்கவா கருங
[குழல் போற்றி
யொரு பரமபரன் செஞ்சடைப் பிறைவிளர்ப்ப வுறவொளிர திருநு
[தல் போற்றி
பெருமறைத துதியோடிழிநதவென்றுதியும் பிறஙகவேற்றருள்
[செவிபோற்றி;
மருவுடல்லுயிருய் வாழ்தரக் கருணை வழிதரு விழிதுணை போற்றி
விறல்கேழு மேருவில்லினையப் பொருது வெலும்புருவச்சிலைபோற்றி
யுறலகெழுகாமபி யுரிதநிரநாசி யொள்ளிய குமிழ்மலர் போற்றி

யறவிலாதலைமந்த நீர்நிலையென்ன லாவியகபோலங்கள் போற்றி!
விறல்செய்வெவ் விடமுண்டவர் மறைச்செவ்வாய்க்கின்பஞ் செய்பவ
[ளாய் போற்றி 37

அழனகைக் குளிருநன்னகை யாகவணிநகை யெழுநகை போற்றி
தழல்சுடுகுழலும் யாழுமொவ்வாது தமிழ்விசர்த் தெழுமொழி போற்றி
கழலரிதார் மங்கலம்பூண்டு கந்தியிற்பொலிகளம்போற்றி
புழல்படுபசுவேயிணை தாராதழ லுட்புகப் பொலிதோட்டிணை போற்றி 38

ஓரும்யாழ்த் தண்டின்னைப் புறச்சுவட்டி யொளிவினர் முன்கரம்
[போற்றி
பூருவி ஞென்றுபதிய வெவ்வுயிர்க்கு பயந்தபு மொருகரம் போற்றி
சேருமொண் காந்தளி தருணமுச் சேந்துதி கழிருகை விரல்போற்றி
சாருவின் மூக்கிற் பொலிந்துசேந்தொளிருந் தண்மலர் விரலுகிர்
[போற்றி 39

வாருபொன்வடமும் புனைந்து மெய்ஞ்ஞானம் வழிதரத்தருமுலை
(போற்றி
பாருமற்றுலகு மடங்கியுந் தோற்றுப் பண்புதரத் தெழில்போற்றி
கூருநல்வனப்பினந்தியாவட்டம் குலவுமுந்திச் சுழிபோற்றி
தேரு மூவலருளிருப்பது தெரிந்துத் திகழுமும் மடிப்பெழில்
(போற்றி 40

செய்யவான் பொதிந்தமின் னனைவுடுத்த செம்பட்டுச் சிற்றிடை
போற்றி
புய்ய வெவ்வுயிரும் வெளிவரத்தோற்றியுருக்கினர் கடிதடம்போற்றி
மையசெய்பட்டான் மறைத்திடபட்ட வரம்பையங்க வானெழில்
(போற்றி
மையகல் காமதேனுவின் மூச்காமணி டு பூந்தாளெழில் போற்றி. 41

திருவளர் கணைக்கால் போற்றி யொண்கமடாஞ் சிறுதராசுத் துணை
(போற்றி
புருவளர் கமடப்புடவடி போற்றி யொளி கெழுவிரலுகிர் போற்றி
மருவளர்தளிரிற் சேந்தடியேங்கண் மனம்புகு முன்னடி போற்றி
குருவளர பயாம்பிகைப் பெருமாட்டி குலாவுகின் பேரெழில்
(போற்றி 42

இன்னவிதமாய் அபயாம்பிகையை மெய்யன்புற ஸ்தோத்திரஞ் செய்த பின்னை குன்றமெறிந்த குமரவேளின் கோயில்புக்கு, அவருக்கு அபிஷேகாதிகள் குறைவற நடாத்தி அர்ச்சனைகள் முதலியன இனிது முடித்து, பிரதக்கண நமஸ்காரங்கள் முறையே

விதிப்படி செய்து முடித்து வள்ளிமணாளனாகிய ஸ்ரீ சுப்பிரமணிய மூர்த்தியையும் பின்வரும் பாடல்களால் மனங்கசிந்து தோத்திரிக்கலுற்றார்.

சரவணபவன் துதி

வேறு

பூமிமணவாளனு மொண்புண்டரிகத்தவனு
காமித்து செய்குவதென்று நயந்துளத்துட் கருதித்
தோமிரிய வடைந்தேத்துஞ் சங்கரனைக் குமர
சாமிதனை வணங்காத் தலையென்ன தலையே
சரவணபவனை வணங்காத் தலையென்ன தலையே 43

மூந்தனுயிர்க் குயிராய முதல்வனை யடியவர்சம்
பந்தன் வலிகெழு புயங்கள் பன்னிரண்டு மிளையுஞ்
சந்தமொரு பிறையனைய தந்தனிளையவனைக்
கந்தனுருக் காணாத கண்ணென்ன கண்ணே!
கடம்பனுருக் காணாத கண்ணென்ன கண்ணே 44

கடியேறு மலரோனைக் கடுஞ்சிறையில் வைத்து
படியாதி யெவ்வுலகும் படைத்தருளும் பிரானை
முடியாத முதலோனை மூவர் பெருமானை
வடிவேலன் றனைப் பேசாவா யென்னவாயே
வள்ளிமணாளனைப் பேசாவா யென்னவாயே 45

காவலான் முதற்றேவர் கைகுவித்துப் போற்ற
வேலவனாகிய சூரேறு பொழியச்சவட்டி
மேலவா னிலிதனையும் விண்ணாடுபுரந்த
சேவலான் சீர்கேளாச் செவியென்ன செவியே
செவ்வேடன் சீர்கேளாச் செவியென்ன செவியே 46

நந்தனை முகற்கிளைய நாயகனை யெமக்கும்
தந்தானைத் தன்சரணந் தன்னடியார்க் கொருதோ
முந்தானை யுலகீன்ற வுடையாள் கண்மணியின்
மைந்தானை நினையாத மனமென்ன மனமே
மயிலானை நினையாத மனமென்ன மனமே 47

தீங்கோயு மவுணர்குலஞ் சிதைத்தழியமாட்டி
பாங்கேயு மமரர்சிறை விடுத்தருள் பண்ணவனை
நாங்கேடில் பதமடைய நன்று புரிந்தருளுங்
காங்கேயன் றொண்டுசெயாக் கையென்ன கையே
கந்தவே டொண்டுசெயாக் கையென்ன கையே! 48

இவ்வாறாகத் தெய்வயானை மணாளனும் சாமிநாதனை வணங்கிப் பின்னர் தம் பாளுங்கர் கூட்டத்தோடு மீட்டும் எம்பெருமான் திருமுன்னர்ச் சென்று அவனதருள் பெற்று மீண்டும் அந்நகர் விட்டு நீங்கி மாயூரத்தின் யோசனை சுற்றளவு தூரத்திலிருக்கும் பல பல சிவத் தலங்களிலேயும் சென்று ஆங்காங்கு எம்பெருமானையும் அம்பிகையையும் வணங்கி திரும்பவும் தன் யதாஸ்தானமாகிய பொதிய மாமலை சென்று தவத்தில் இனிதமர்ந்தனன்.

அகத்திய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட அகத்திய தீர்த்தத்தில் ஸ்நானம் விதிப்படி புரிந்து, அன்னவன் அர்ச்சித்த அகத்திய விநாயகரை யர்ச்சித்து வழிபாடு முறைப்படி செய்வான், சம்சாரபந்தங்களை நீங்கி விடுபடுவான் என்பது நிச்சயமேயாம். அத்தகைய விநாயகருக்கு (மோதகம்) கொழுக்கட்டை முதலியன வேண்டியவளவு நிவேதனம் செய்து மூவிலைத் தூர்வை சாத்தி, மனப்பூர்வமாய் அத்தகைய கணபதியைப் பூசை செய்வோரெவரும் பஞ்சமா பாதகங்களும் நீங்கப்பெற்று பரகதி செல்லுவாராவார்.

குறுமுனிவன், விக்கினேசுவரன், உமாமகேசன், அம்பிகை, சுப்பிரமணியக்கடவுள் முதலாயினோரைப் பற்றி ஸ்தோத்திர பூர்வகமாய்ச் செய்துள்ள பாடல்களை குற்றம் நீங்கக் கற்று, அநுதினமும் தோத்திரஞ் செய்யும் மாட்சிமை யடைந்தோர் யாவரேனும், தரித்திர தசையை யடையாமலும் யாதொரு துன்பத்தையுமடையாமலும் சுகஜீவிகளாய் இம்மண்ணுலகத்தில் மன்னிப் பின்னுலகத்தில் பேரானந்த பேற்றையே யடைந்துய்வார்களென்பதும் தேற்றம்.

(அகத்தியர் பூசை புரி சருக்கம் முற்றிற்று)



25 கண்ணுவா பூசை புரி சருக்கம்

ஆச்சிரமம் விட்டுக் காசி யாத்திரைக்காகத் தம் தர்ம பத்தினியுடன் பெயர் போந்த கண்ணுவ முனிவர் கல்வரையும், கானாறும், பல்சுரமும் கடந்து போதும போது, இடைவழியில் மட

மைத் தன்மை மிக்க மாதரார் மூவர் உடம்பு மிகுதியும் கறுத்தவராய், அவரெதிர்ப்பட்டார்கள். எதிர்ப்பட்ட மடவார்கள் பழி விளைத்த மடமாதர் என்று நினைத்து, வழிவிட்டு விலகி யப்புறத்தே செல்லுங்கள்! என்று அவரிடம் பேசாதும் மௌனமாய்ச் சாடை காட்டினார் கண்ணுவமுனிவர்.

இச் சைகை காட்டியு மகலாமல், இவரெதிரே யம்மூவரும் வரக் கண்ட இருஷிச் சிரேஷ்டன் சினம் மிக்கோனாய், ஏ! புலைச்சியர்களே! எப்படித்து நெருங்குதலடாது! அடாது!! அப்புறத்தே போவீர்கள்! எனக் கூறவும், மடவார் ஐய! நீவிர் யாவர் விளங்க வுரைத்திர் என்றனர், முனிவரும், தான் கண்ணுவனென்றும், தன்னுடன் வருபவள் தன் தர்ம பத்தினி யெனவும், தான் கங்கையாடப் போவதாயும் புகன்றனர். கண்ணுவனிவ்வாறு கூறக் கேட்ட மடமாதர் கல்லென நகையாடி, ஒண்ணுதலாளாகிய மந்தாகினி யென்பவள் முனிவனைப் பார்த்து, ஏ! முனிவா! கேள். "யான் தேவகங்கை" என்னொருபுடை வருபவள் ஸரஸ்வதி, மற்றொரு புற மிருப்பவள் காளிந்தியாவாள் என்று கூறினள். இதைக் கேட்ட கண்ணுவ முனி, ஓ! பெண்கள் நாயகங்களே! நீவிர் இப்புலையுருவ மெய்தற்குற்ற காரணம் யாது எனவும், கங்கை ஈதுரை செய்வாள்:—ஏ! புலவோய்! உலகத்துதித்த பாபாவிகளெல்லாரும் எம்முடைய தீர்த்தங்களிற் படிந்தாடியதனால் அப்பாவங்களை யேற்று யாங்கள் உடம்பு கறுத்திழிவுற்றோம். இந்த வைகய பாவ விமோசனமாக கௌரி மாயூரத்தில் காவிரியின் விருஷப தீர்த்த கட்டத்தில் ஸ்நானஞ் செய்து எம்பிரானும் மாயூரேசனின் இன்னருள் பெற்றுக் கடைத்தேறப் போகின்றோம் என்று தம் வழிச் சென்றார்கள். அம்மூன்று மடமாதராரும். இவ்வாறு சொல்லிய மடமாதாரின் கதி யென்னாமோ பார்ப்போம் என்னும் அவாப் பெரிது முற்ற கண்ணுவர், அவர்களின் பின் தொடர்ந்து தம் தர்ம பத்தினியுடன் செல்வாராயினர்.

புலை மாதர் மூவரும் மாயூரத்தை யணுகி, அழகு மிகுந்த இடப தீர்த்தத்தில் படிந்தாடி புலைச் சரூபம் நீங்கப் பெற்று மகா திவ்விய தேஜஸுடன் தம் பண்டையவுருவமடைந்து, எம்பெருமானையும், அஞ்சநாயகியையும் உள்ளன்புடன் தொழுது தேவ

பொருந்திய மலர்களால் அர்ச்சித்துப் பெரிதும் ஏத்திப் போற்றி தத்தம் இஷ்டசித்தி பெற்றவராய்த் தத்தமிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

சேர்ந்ததைத் தன்னிரு விழிகளாலும் உற்று நோக்கித் தெளிவடைந்த கண்ணுவ மாமுனிவன் தானும் அவ்விடப தீர்த்தப் புனலாடி அத்தீர்த்த மகிமையை மாநில மாக்களுக்கு இனிதெடுத்துப் பின் வருமாறு பகரலுற்றான்.

"எல்லீரும் இது கேண்மின! கேண்மின்! ஜான்னவி, மந்தாகினி, வாணி முதலாய மூவரும் தம் புலைச் சன்மத்தை இத்தீர்த்தத்தில் மூழ்கி, அச்சன்மம் நீங்கப் பெற்றார்கள். இப்பேர்ப்பட்ட மகத்துவத்தை யடைந்த தீர்த்தத்தில் அம்மூவரும் ஸ்நானஞ் செய்து நற்பேறு பெற்றதை யானே பார்த்திருந்தேன்! இப்படி இத்தீர்த்தம் மிகுந்த மகத்துவம் பொருந்தியது உமாதேவிச் சகிதரானவள்ளலாரின் கிருபாகடாக்ஷ வீட்சணியத்தினாலே யென்பதும் திண்ணம். இப்படி இத்தீர்த்த மகிமையைக் கண்ணுவரினிதெடுத்துரைக்கக் கேட்டிருந்த மண்ணோர் பல்லோரும் அத்தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்து மகிழ் சிறந்தார்கள். விண்ணோர் பல்லோரும் தம் மருங்கே தம் கைக்கெட்டிய மந்தார மலர்களை மாரிபோல் இடைவிடாது பொழிந்து ஆநந்தக் கூத்தாடினார்கள்.

விசேஷ களிப்பினை யடைந்த கண்ணுவ முனிவரும் தம் தரும பத்தினி சகிதராய் அவ்விடப தீர்த்தத்திற் படிந்தாடி அக்கமணியும் விபூதியும் தன் மேனியிலிலங்க ஸ்ரீபஞ்சாட்சர மகா மந்திரத்தை உட்கொண்ட ஹிருதயத்தினராய்ப் நவரத்தின கசித மான கோபுரங்களுடன் விளங்கும் ஈசுவரன் கோயிலை யடைந்து, பெரிதும் அவரையும் அம்பிகையையும் ஸ்தோத்திரஞ் செய்து தம் இஷ்ட பூர்த்தி யடைந்து, பல நாள காலமும் இம்மாயூர க்ஷேத்திரத்தினிது வசித்து தன் மனைவியுடன் தன்னாச்சிரமம் புக்கனன்.

உள்ளங்கை நெல்லியங்கனியெனவே கங்கை முதலிய மூவருடைய எண்ணிறந்த பாவங்களை இவ்விடப தீர்த்தம் விமோசனம் செய்ததெனில், பெரும் புகழ் பெற்ற இவ்விடப தீர்த்த

மகத்துவத்தைப் பற்றி எம்மானுடைய எம்பெருமானை யல்லாது எவரும் சொல்லி முடியாது என்பதும் நிச்சயம்.

(கண்ணுவர் பூசனை புரி சருக்கம் முற்றிற்று)

26 இலக்குமி பூசனை புரி சருக்கம்

இந்திரப் பிரஸ்தமென்னும் நகரத்தில் இந்திரதத்தனென்னும் துவிஜனொருவன் அதிரூபவதியான இலட்சுமியென்னும் பெயரினளாகிய தன்னில்லறக் கிழத்தியோடும் இல்லறம் வழுவாது நடாத்திவரும் நாட்களில், தன் மனைவி தன் குடும்ப சொத்துகளில் பலவற்றை தன்பிறந்தகம் கொண்டுசேர்ப்பதை அறிந்தவனாக அவள் மீது மிகுதியும் சினங்கொள்வானாயினன். இச்சினங் காரணமாகவே இலக்குமி தன் கழுத்திற் சுருக்கிட்டுக் கொண்டு மாண்டனள். இப்படி அற்பாயுளால் மாண்டவள் பேயுருவமாகிப் பூமியில் சஞ்சரித்த வதிப்படுங் காலையிலோர் நாள் இப்பைசாச ரூபம் சாந்த முனியாகிய சாபாலியைக் கண்ணுற்று அவன் சேவடி வணங்கிப் பேயுருவம் நீக்கத் தக்க மாற்றுபாயம் யாதென வணங்கிக் கேட்டது. அன்னோன் அப்பிரேத மாதை நீ யிவண் வந்த விவர முரைத்தி என்னலும், அது தன் வரலாறு முற்றிலும் கூறிற்று. ஏ! பைசாசமே! நீ மாயூர க்ஷேத்திரமடைந்து அங்குள்ள விருஷப தீர்த்தத்தில் முழுகி, வள்ளல் நாயகரையும், நாயகியையும் தரிசித்து இவ்வுருவம் நீங்கி மகா தேஜஸுடைய பெண்ணுருவ மடையப்பெற்று பிரம தத்தன் என்னும் மறையவன் நின்னை மணப்பச் செழித்து வாழ்வாய் எனச் சாபாலி முனிவன் கூறினன்.

ஆங்கவன் கூறியவற்றைத் தலைமேற் கொண்டு பேயுருவம் சாபாலி யிடத்திலிருந்தும் விடைபெற்று மாயூர க்ஷேத்திரமடைந்து இடப தீர்த்தத்தில் படிந்து நாயகனையும் நாயகியையும் போற்றிப் பணிந்துத் தன் சுய வுருவமடைந்து, பிரமதத்தனை முனிவன் கூறியவாறே கண்டு மணந்து எண்ணிறந்த புத்திரப் பேறுகளை யடைந்து மண்ணுலகோர் யாவரும் கொண்டாட வாழ்ந்திருந்தாள்.

(இலட்சுமி பூசை புரி சருக்கம் முற்றிற்று)

27 விசாலன் பூசனை புரி சருக்கம்.

தெய்வத் தன்மை பொருந்திய சங்காநதி பாயப்பெற்ற அங்கவள தேசத்தில் செங்கோல் செலுத்திவந்த விசாலன் என்னுமோர் அரசன் கொலு பண்டபத்திற்கு ஓர் நாள் வந்த வீர வைஷ்ணவர் பல்லோர் தம் வைணவ சமயத்தைப்பற்றிப் பிரசங்கம் பலவாய்ச் செய்து அதனால் அவ்விசாலனும் சிவத் துரோகியாயினன். வைணவர்களை உபசரிப்பதையே பெருந்தொழிலாகக் கொண்ட இவ்விசாலன், சைவர்களைக் காணின் மிக்க வெறுப்புற்று சிவாலயங்கள் பலவற்றினை இடித்துப் பொடிசெய்துகொண்டு வாழுபவன், பாஞ்சராத்திரக் காரராகிய வைணவர்களைக் காணின் மிகுதியும் விருப்புற்று அவரடி மலர்த் துணையையே பெரும் பற்றுக்கோடெனக் கொண்டு வாழுபவனுக்கு மோர் நாள் சாங்காலம் வந்துற்றது.

கூற்றுவன் தம் கீழுள்ள பல படர்களைக் கொண்டு இவனைப் பாசக் கயிறு கொண்டு கட்டிக் கொடுமைப் படுத்தி தம்முலகம் சேர்த்துக் கொண்டு சித்திர குத்தனைக் கூய் இவ்வரசன் செய்த பாவச் செயல்களின் கணக்குகளைக் கேட்டதும், இப்பேர்ப்பட்டவனைக் கொடு நரகத்தினில் கொண்டு அவஸ்தைப்படுவித்தார்கள். புலிக் கூட்டங்கள் பாய்வது போல் இவ்விசாலனைச் சூழ்ந்து, வாளைக்கொண்டு இவனைக் கண்டம் கண்டமாய்ப் பலர் அந்நரகத்தில் சிதைப்பாராயினர். பலர் வலிய இருப்புலக்கையால் மண்டை சுக்கு நூறாகுமாறு புடைப்பர். பல்லோர் இவனைத் தளதளவென்று கொதிக்கும் நெய்க் கொப்பரையிற் கொண்டு அமுக்குவார். சிலர் இவனுக்கு இத்தண்டம் போதாதென்று சொல்லிக்கொண்டே, பனங்காய்களிடமிருந்து நுங்குகளை எடுப்பது போல் இவன் கண்களைக் குத்தி எடுப்பர். பலபேர் இவனை பொங்குகின்ற நெய் நிறைந்த பாண்டத்தில் போட்டு புரட்டிப் புரட்டி வதக்கி வறுப்பர். பல பேர் இவன் வாயில் ஈயத்தை உருகக் காய்ச்சி ஊற்றுவர்; இப்படியாக இச்சிவத் துரோகியை ரௌரவாதி நரகங்களிலே இட்டுத் தொந்தரவுக் குட்படுத்திய பேயுருவுடன் பூமியில் சஞ்சரித் தலைந்தலைப்பட விடுக்கப் பட்டவன், வீந்தமால்வரைச் சார

லைச் சார்ந்தான், இவன் தாகம் பசி முதலிய பிணிகளுக் காட்பட்டு வந்து திரிதருங்கால் பூர்வ சன்ம கன்ம பலத்தினால் தெய்வாதீனமாய் அகத்திய முனிவன் வதியும் மலயாசலம் வந்துற்று அன்ன முனிவன் பதங்களைப் பெரிதும் பரவி தன் கன்ம பலம் மாற்று மருந்து யாசித்து அழுது நின்றான். நின்றவனை நோக்கிய அகஸ்தியரும் சிவத் துரோகியாகிய நின்னுடைய முகத்தில் விழித்தலே தகாது! ஆயினும் என் செய்வது? ஏகா! ஒரு விதமாய் உன் சாப விமோசனத்திற்கு ஒருவழி சொல்லுகிறேன் கேளெனக் கூறி முனிவன் கூறலுற்றான்.

பைசாசமே! கேள்! வடதிசைக் கிறையாங் குபேரன் மாளிகையிலிருந்த சுசிரவா என்னுங் கந்தருவன் புத்திரி மனோக்கினி என்னுமோர் வனிதை ஓர்நாள் நாடு காட்சியின் பொருட்டு ஆகாய சஞ்சாரியாய் வந்தவள் ஓர் நாள், இந்துவாகினியின்கணடைந்து, ஆங்கு நற்றவமியற்றிக் கொண்டிருக்கும் மற்றுணத்தினும் உருசி மாமுனி புத்திரன் மித்திரனென்னும் பெரிய கட்டழகுள்ள இளைஞன் தவப்புரியா நிற்பதைக் கண்ணுற்றுக் காமுற்றாள். தனதெண்ணத்தை அவனுக்கு எடுத்துக் கூற அன்னவனும் ஈசுவர சங்கற்ப மெப்படியோ அப்படியாகுமென்று ஈசனிடத்துப் பாரத்தைப் போட, எப்போது தன்னெண்ணம் சித்திக்கும் என்பதையே வெகு காலம் எதிர்பார்த்திருந்த மனோக்கினியும் வெகு காலம் மித்திரனருகிருந்து காத்திருந்தும், அவன் தன் தவம் விட்டுப் பெயர்ந்தானல்லன். இவளோ காம மிக்கவளாய் தவத்திலிருக்கப்பட்ட மித்திரனை வலிதிலே புணருவான் எண்ணி, அன்னவன் மார்பகத்தை யணைத்து முயங்க, அவன் இவளைத் தன்னொரு கையினால் விலக்கி, மிகுதியும் சினந்து அவளைப் பேயுருவாகெனச் சபித்தலும், மனோக்கினி மாது பேயுருவமைந்து திரிந்து, தூய்மையுள்ள அசிதன் என்னும் முனிவனைச் சார்ந்து அன்னவனாணையால் மாயூர மடைந்து இடப தீர்த்தம் படிந்து வள்ளலாரையும் அஞ்சநாயகியையும் பணிந்து தன்னுருப் பெற்று மீண்டும் மித்திரனை யடைந்து உருசி, அசிதன் இவர்களிருவரும் சேர்ந்து மித்திரனுக்கும், மனோக்கினிக்கும் மணம் புணர்வித்தார்கள். அப்படி அவ்விரு தம்பதிகளும் பல காலம் ஜீவதசையோடிருந்து முத்தியடைந்தார்கள்.

மாயூர க்ஷேத்திரம் மேற்கூறிய மாதிரி, நினைத்தவற்றை நினைத்தாங்கே தரவல்லதாதல் பற்றி, அத்திருத்தலம் புகுந்து, உன் சிவத்துரோக நிவாரணமும், பேயுரு நிவாரணமுமடைந்து போதி, எனக் குறுமுனிவன் சொல்லியபடி விசாலன் என்னும் அரசப்பேய் அவ்வனம் சென்று, இடப தீர்த்தத்தில் புகுந்து நீராடி பாபவிமோசனம் அடைந்து மோட்ச சாம்பிராச்சியம் பெற்றது. சிவத் துரோகியான விசாலன் அடைந்த துன்பத்தை யறிந்த பின்னராவது எவ்வீர வைஷ்ணவரும், சமத்துவ புத்தியை யடைந்து பேறுபெறும் படியான வழிகளைத் தேடுவர் என்பதும் தேற்றம்.

(விசாலன் பூசனை புரி சருக்கம் முற்றிற்று)



28 யானை முத்தியடைந்த சருக்கம்

தும்புருவோடு நாரதமுனி இயாழ் ஒலியில் உலவி வருங் காலையிலோர் நாள் ஓர் யானை அவரைக் கண்டு வணங்கி, ஏ! முனிவரே! நான் முன் சன்மத்தில் யாசாந்தன் என்னும் பெயரிய பிராமண புத்திரன்; விஷ்ணு பக்தனாயிருந்தேன்; அப்போது, அகத்தியர் முதலான பல்லோர் சிவ பக்தர்கள் கைலாயங் கிரிவாசனாகிய உமாபதியைத் தரிசிக்கச் செல்லக் கண்ட யான், அவரை அவமதித்துச் செருக்குற்று அவருக்கு மரியாதைகள் செய்யாமல் அசைவற்று உட்கார்ந்து, இகழ்தல் முதலியன செய்தமை பார்த்து, அவர் என்னை மதங் கொண்ட யானை யுருவாகெனச் சாபங் கொடுத்த பின்னர், அவரை வணங்கி, சாபவிமோசன தினத்தினை இரந்தேன்; அவரும் கருணைகூர்ந்து "நூறாண்டு போயதின் பின்னர் நாரத முனிவரால் சாப விமோசன மாகு"மென்றனன்.

இவ்விஷயம் கேட்ட நாரதமுனிவன், ஏ! இடமே! நீ சிவனடியார்களுக்கு அபராதம் விளைத்தமையால் நீ இச்சாபம் பெற்று இந்நாள் காறும் தொந்திரவுற்றனை! இனி நீ மாயூரம் சேர்ந்து இடப தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்து முத்தி பெறுவாய் என்று நாரத முனிவன் கூறினர். அப்படியே யானையும், மாயூரக்ஷேத்திரம் புக்கு, விருஷபதீர்த்தத்

தில் இனிதமர்ந்த மாயூரேசனையும் அஞ்சநாயகியையும் தரிசித்து அவர் வரப்பிரசாதத்தினால் கன்னுருவு நீங்கப்பெற்று உருவத்தை யடைந்து ஈசுவரனைப் போற்றிக் கடையில் சிவசாயுச்சியமடைந்தது.

(யானை முத்தியடைந்த சருக்கம் முற்றிற்று)

29 குதிரைகள் முத்தியடைந்த சருக்கம்.

அயோத்யாபுரி மன்னன் திலீபனிடத்துக் குதிரைகள் இரண்டிருந்தன. அவைகளின் காதுகள் கறுத்தும் உடம்புகள் வெளுத்து மிருந்தன, இத்தகைய குதிரைகளி லொன்றிற் கொன்று பின் வருமாறு பேசலாயிற்று. ஒரு நாள் மற்றொன்றினைப் பார்த்து "நம் அரசன் முன் சன்மத்தில் மறையவனாயிருக்கையில் நான் வணிகனாகி, ஏராளமான பொன்னை இவன் கையில் கடன் வாங்கி மீட்டுக் கொடுத்துக் கழிக்கவில்லை. அதனால் மகிஷ ரூபமாகப் பத்துத் தடவை ஜனனமெடுத்து உழைத்து, இப்போது குதிரையாக உழைத்து வருகிறேன்" என்றது. மற்றொன்று, "யான் முன் சன்மத்தில் சூத்திரனாயிருந்து, நம்மரசன் முன் சன்மத்தில் மறையவனாயிருந்த காலத்தில், கடன் வாங்கி மீண்டும் கொடுத்திலன்; ஆதலின், நான் யானையாக ஐம்பது ஜனனமெடுத்து உழைத்துப் பின்னும் இப்போது அசுவரூபமாகித் துன்புறுகின்றேன்" என்று இரு குதிரைகளும் தங்களுக்குள் பிரலாபித்துத் துக்கித்ததைக் கண்ட சப்தவேதி சாஸ்திரம் வல்ல நிபுணனாகிய திலீபன் தன் ஆசிரியனாகிய வசிட்டனையடைந்து நடந்தவற்றைக் கூறலும், இவற்றிற்குச் சாப விமோசனம் செய்விக்க, மாயூர மாநகர் சென்று ஆங்கு இவ்விரு அசுவங்களையும் இடப தீர்த்தத்தில் முழுகுவித்துக், கடைத்தேற்றுவது நின் கடமையாகும் என்று கூறினார். குரு வாக்கினை மேற்கொண்ட திலீபனும் அவ்வாறே செய்வித்து அவ்விரு குதிரைகளும் முன்னுருவமடையப் பார்த்து ஈசுவனைத் தொழுது, ஈசுவராஞ்ஞையின் வண்ணம், அயோத்திமா நகர் புக்கான். தம்முருவ மடைந்த குதிரைகளும் ஈசுவரானுக்கிரகம் பெற்று நெடு நாள் இப்பூவுலகில் மன்னிக் கடைசியில் சிவலோகம் சேர்ந்தன.

(குதிரைகள் முத்தி பெற்ற சருக்கம் முற்றிற்று)

30 கரமும் கழுகும் முத்தி பெற்ற சருக்கம்

மாஹிஷ்மம் என்னும் வளநகரரசாள்வோனாகிய சித்திரத்துவஜனென்பானொருவன் ஓர்கால் காட்டகத்தில் வேட்டைக்குச் சென்று, பல்லாயிர மிருகங்களை ஒருங்கே வளைத்து வளைத்துக் கொன்று மிகுதியும் இளைப்படைந்து, தாகவேட்கை மிக்கவனாய், ஆரணியத்திலுள்ள பாரத்துவாஜாச்சிரமம் புக்கு ஆங்கு யோகத்தில் வீற்றிருந்த முனிவர் தன் வருகையைக் கண்டு அலட்சியஞ் செய்திருந்ததாகக் காரணங் கொண்டு அன்னவனை யுதைத்தனன்.

யோக நிஷ்டையினின்றெழுந்திருந்த பாரத்துவாஜனும், அரசனைப் பார்த்து, ஏ! சித்ரத்துவஜ! ஞானவீனனாய் என்னை உதைத்து யோகினை யழித்தனை யாதலால் நீ கழுதையாகுக! வென சாபமிட்டனன். அரசன் கழுதையாக மாறிக் கண்ட கண்ட விடங்களெல்லாந் திரியாநின்றனன். மாஹிஷ்மதி நகரத்தார் அன்னவன் பிள்ளைக்கு மகுடஞ் சூட்டி, அரசனாக்கிக் கொண்டனர்.

கர்த்தபமாகத் திரிகாநின்ற அரசனை ஓர் கன்னான் கையிற் சிக்கியதும், அன்னவன் இதன் முதுகின்மீது அளவற்ற புதுப் பாத்திரச் சுமைகளையேற்றி எம்பெருமானுக்குத் திருவிழா நடக்கும் ஸ்தலங்களிலெல்லாம் வியாபார நிமித்தமாக இக்கழுதையைக் கைக்கொண்டு போகாநிற்கையிலோர் காலத்தில் ஐப்பசி மாதத் திருவிழாக் காலத்தில் அக்கன்னார வணிகன் அக்கழுதைமேற் பாத்திரங்களுடன் மாயூரம் சேர்ந்தனன். கழுதைமேற பாத்திரங்களை யிறக்கியதும், கர்த்தபம் மண்ணில் விழுந்து புரண்டது.

கழுதை விழுந்து புரளுகையில், ஓர் கழுகு அதனருகில் வந்துற்று, ஏ! கழுதையே! நீ யாரென்ன வினவலும், தான் அவ்வுருவமடைந்ததனைக் கர்த்தபம் கூறிற்று. கழுகும்! ஏ! கர்த்தபமே! என் பிறப்புணர்த்துகிறேன், கேட்டருள்! 'நான் விந்தமலையில் வசித்த கிராதன்; அங்கு வருவோருடைய பணம் முதலிய பொருளெல்லாம் கவர்ந்து அவருடைய உயிருடன் அவரைத் தின்றும் வந்து நாய்ப் பிறப்பிலும் கடைப் பிறப்பை யடைந்தேன். நான் அகத்திய தரிசனமடைந்தமையான், மூதுருவம் இன்ன

தென்றறியும் வரமடைந்துளேன். ஆயினும் முன்னம் செய்த அகோரமான கிருத்தியத்தினால் பாழ் நரகமடைந்து உபத்திரவப் பட்டுக் கடைசியில் இக்கழுகுருவை யடைந்துளேன். இவ்வுருவைப் போக்கி முதலுருவமடைந்து, ஈசுவரத் தியானம் செய்வதற்குத் தக்க உபாயம் தேடுவான் பொருட்டுத், தலங்கடோறும் தீர்த்தமாடி வருகிறேன்; இவ்வினிய நகரத்தை மாயூர மாத்தலமென்று யாவரும் சொல்லாநிற்பர்; நீயும் எழுந்திரு! விருஷப தீர்த்தத்தில் முழுகுவோம் என்று சொன்ன வார்த்தையைக் கேட்டுக் காகமுடன் பின் தொடர்ந்து சென்று கழுகையும், விருஷப தீர்த்த தடாகத்தில் முழுகியதும், திவ்விய சரீரங்கள் பெற்று தேவலோகத்திலிருந்து வந்த பொன் விமானங்களில் ஏறி இவை பொன்னுலகம் புகுந்தன.

(காகமும் கழுகும் முத்தி பெற்ற சருக்கம் முற்றிற்று).

31 பாம்பு முத்தியடைந்த சருக்கம்

இந்திரப் பிரத்தத்தில் யாகத்தின் பொருட்டு ஒரு சமயம் போன கண்ணபிரான், வேட்டைக்காகத் தருமனுடன் காட்டினுட் சென்றனர். காட்டிற் சென்றதும மாயவன் பாம்பொன்றினைக் கண்டு இது சிலம்பு கோலோவென மயங்கினன், மலைபோலப் படுத்துறங்கிய பாம்பினை நோக்கிய, புருஷோத்தமனும் ' ஏ! பாம்பே! நீ இவ்வண்ணம் உறைதற்குக் காரணமென்னை? நீ தேவனோ? அவுணனோ? சாற்றுவாய் எனலும், "சூரிய குலத்துத் தோன்றிய நகுஷனாகிய யான் முன்னர் இந்திர பதவியை யடைந்து, நூறு அசுவமேத யாகம் இயற்றித் தேவலோகஞ் சேர்ந்து ஸப்த ருஷிகளால் சுமக்கப்பட்ட பல்லக்கிலேறி தேவலோகத்தில் பவனி வருங் காலையில் சசிதேவியைச் சீக்கிரத்தில் சேரப் பிரியப்பட்ட யான், பல்லக்கு சுமப்போராய முனிவர்களை சாதாரண பல்லக்குப் போகிகளாக மதித்து, ஸர்ப்ப! ஸர்ப்ப!! என அவசரப்படுத்தலும் அவர்கள் என்னைச் ஸர்ப்பமாகுமாறு சபித்து, என்னைப் பூமியில் போகட்டெறிய, யான் இச்சர்ப்பமாக மாறிக் கிடந்துழல்கிறேன். இவ்வுருவம் நீக்கத் தக்க உபாயம் யாது எனக் கண்ணபிரானைப் பாம்பு இரந்து வேண்டலும், நீ மாயூர ஸ்தலம் சேர்ந்து விருஷப தீர்த்தத்தில் முழுகுவாயாகில் இவ்வுருவம் நீங்கப் பெறுவாயென்றான். இது

கேட்டபாம்பு வெகு தூரத்திலுள்ள அந்தத்தலம் யான் போய்ச் சேருவதெப்படி? மிக்க கஷ்டமாயிருக்குமே! தேவரீரே அத்தலம் போய்ச் சேருதற்குத் தக்க உபாயஞ் சொல்ல வேண்டு மென்ன, கண்ணன் கருணை கூர்ந்து அவ்வுரகத்தினை தன் மலர்க் கரத்தால் எடுத்து விட்டெறிய, மாயூரத்திலுள்ள இடப தீர்த்தத்தில் விழுந்து, பாம்புருவம் நீங்கப் பெற்று சுய உருவ மடைந்து ஈசுவரனைப் பக்தி செய்து சிவ சாயுச்சியம் பெற்றது.

(பாம்பு முத்தி யடைந்த சருக்கம் முற்றிற்று)

32 நரியுங் குரங்கும் முத்தி பெற்ற சருக்கம்

அழகிய அவந்தி மாநகரில் ஒரு காலத்தில் இரண்டு சூத்திர நண்பர் வாழ்ந்திருந்தனர் காலகதியினாற் பரலோகம் புக்கனர். இப்படிப்பட்ட நண்பரிருவரும் யமனுலகத்தினின்று ஒருவர் பின்னொருவராய் மீட்டுங் நரியுங் குரங்குமாகப் பூமியிற் சனித்தனர். இவ்விரு நரியுங் குரங்கும் ஒரு சமயத்தில் மரத்தில் குரங்கும், கீழே நரியுமாக ஒன்று கூடித் தமக்குள்ளே நட்பு கொள்வனவாயின. இப்படி யிருக்குங்கால் ஒரு நாள், கொம்பில் வாழும் வாநரம், ஏ! சம்புவே! என்ன பாபம் செய்து இவ்வுலகில் இவ்வுருக்கொண்டு பிறந்தனை சொல்வாயாக என்னலும், சம்புகம் ஏ! கபியே! பிராமண தக்ஷிணை கொடுப்பேனெனும் கொடாத கிருபணனாய் உலகத்து முன் சன்மத்தில் வாழ்ந்திருந்தனனாதலால் பிணந் தின்னும்படியான இச்சன்மம் லபித்தது. உன் ஜன்ம காரணம் யாது கூறென்று நரி கேட்கக் கபி கூறலுற்றது' ஏ! நண்ப! சம்புகமே! பரத் திரவியங்களைக் கவர்ந்து முன் ஜன்மத்தில் சுகமாய் கழித்து வந்த யான் இவ்வானர வுரு வெடுக்கும்படி நேர்ந்தது என்று, இவை யொன்றற் கொன்று பேசுங் காலையில் இவ்விரண்டிற்கும் நற்காலம் பிறந்ததை யொப்ப, காசிப முனிவன் ஆங்குப் பிரசன்னமாய் இவ்விரண்டினையு மழைத்து உங்களுக்கு நற்காலம் பிறக்க வழி தேடுகிறேன் என்று சொல்லி, அழைத்துப் போய், மாயூர இடப தீர்த்தத்தில் விட்டு முத்தி பெறச் செய்தனன்.

(நரியுங் குரங்கும் முத்தி யடைந்த சருக்கம் முற்றிற்று)

33 கங்கை முத்தி பெறு சருக்கம்

நல்லொழுக்கம் நன்கு வாய்ந்த நிருமேதன், அருச்சேபனென்னு முனிவரிருவர் தீர்த்தயாத்திரை செய்யத் தமதாச்சிரமம் நீங்கிப் புறப்பட்ட அந்நேரத்தில் மாயூரம் விருஷப தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து மாயூரேசனையும் அபயப் பிரதாம்பிகையையும் தொழுதநீக்கிலை மேதக்கது, அஃதே சிறந்ததென அசரீரி வாக்கொன்றெழுந்தது. இவ்வாக்கினைக் கேட்ட பனவரும் விரைந்து அந்த க்ஷேத்திரங் குறுகுவாராயினர். இப்படி மாயூரம் வருங்காலை வழியில் ஓர் பைசாசம் நடுவில் தோன்றி, இவர்களை விழுங்கிவிடப் பார்த்தது. இவ்விப்பிரர் சிரேஷ்டர்களை விழுங்க வந்த அப்பைசாசத்தை நோக்கியோர் ஹுங்கார சப்தமிட அப்பேய்க்கு ஞானோதயமா யிற்று. ஞானோதயமாய் அப்பேய் இம்முனிவரை நோக்கி! ஓ விப் பிரரே! “யான் கங்கையென்னும் பெண். என் பிதா என்னை என்னது ஏழாவது வயதான கன்னிகைப் பருவத்தில் கன்னிகா தானஞ் செய்யப், பத்தாவது வயதில் தெருளடைந்து பன்னிரண்டாவது வயதில் விதவையானேன்; கணவ னிறந்த துக்கங் கருதாது நான் பொருளீட் டுவதே தொழிலெனக் கொண்டு அதனுள்ளேயே கருத்தைச் செலுத்தி அன்ன சத்திரமொன் றேற்படுத்தி, வருபவரெவராயினும் வேண்டியவளவு பொன் வாங்கிக் கொண்டே அன்ன மளிக்குந் தொழிலை ஏற்றுக் கனகத்தை மேன்மேலும் தேடினேனேயல்லாது எச்சிற் கையாற் கூட, யான் காக்கையை ஓட்டுவதில் பெரிதும் வெறுப்புடையவள்; நான் அந்நாளைக் கிருபண சிரோன்மணியா னேன்; எள்ளளவேனும் தருமத்திற் செலவழிக்காது என் எண் பத்திரண்டாவது வயது காறும் பொருளைத் தேடி வைத்து நிலை குலைந்து மாண்டு போனேன்; இப்படிப்பட்ட மகா பாதகியானதால் இப்பேயுடம்பு தரித்துழலுவேன்; தமது தரிசன மாத்திரத்தில் நல் லறிவு பெற்றேன். ஆகவே, இப்பேய் உருவம் ஒழியுமாறு நீவிரே யருள் புரிதல் வேண்டுமென்ன இரந்து வேண்ட, இவ்விரு முனிவரும் இப்பேயைத் தம்முடன் கூட்டிச் சென்று மாயூரத் தலம் புக்கு விருஷப தீர்த்த நீராடி, அஞ்ச நாயகியையும், சிவபெருமானையும் தொழுது போற்றி யாவரும் முக்தியடைந்தனர்.

(கங்கை முத்தி பெறு சருக்கம் முற்றிற்று)

---

34 பூனையுங் கிளியும் முத்தி பெறு சருக்கம்

மந்தாகினி என்னும் பெயர் வாய்ந்த கங்காநதியின் பாங்க பாரத்துவாசன் என்னும் இருஷியாச்சிரமத் தருகேயுள்ள நீங்கிருள் வெய்யோற் கொதுங்கிப் புக்கிருந்தாலன்ன பொழிலொன்றினிடத்தே, பல்லாயிரம் பறவைகள் இனிது வசித்துவாரா நின்றன.

இப்பறவைகளுள் அப்பொழிலினில் தம் பெட்டைப் பறவை கிளியுடன் பேரலருங் கனிகள் பலவற்றைக் கோதிக்கொண்டு பேரழகுவாய்ந்த கிளியொன்றும் இன்பமாய் வசித்து வந்தது. இப்படி இக்கிளி வாழுமேயோர் நாள் இஃதுறங்கும் சமயம் பார்த்து பூனையொன்று மெள்ள மெள்ள வந்து இக்கிளியைப் பிடித்து ஹிம்ஸிக்க ஆரம்பிக்கையில் கிளியும் "ஏ! பூனையே! யான் ஒன்றும் நினக்குத் தீங்கிழைத்திலேனாக, நீ என்னை இன்னணம் வருத்துவது நீதியாமா? இது நினைக்கத்தக்கது! நின்னுடைய முற்பிறப்பும் எனக்கு ஞாபகம் வருகிறது, வேண்டுமாயின் கூறுகின்றேன், எனப், பூனை ஏதோ சொல் கேட்போம் எனவும், கீர்த்தி பொருந்திய விதர்ப்ப நாட்டில் முன்னம் பிருகத் திரதப் பேர் வாய்ந்து அரசாண்ட மன்னனாகிய நீ, கொடுங்கோல் புரிந்தாயாகையால், நின் மரணத்திற்குப் பின்னர் அது காரணமாக பல்வகைய கொடு நரகுகளிலேயு முழன்று, பின்னர் மூன்று அயுதவளவு காலங்காறும் பூமியிலே இழிவாய பல் பல்வேறு பிறப்புகளு மெடுத்துழன்று திரிந்தனையாய். இப்பிறப்புகளுக் கெல்லாமேற்றற்குப் பின்னர், இப்போது பூனையாக பிறந்தனை. முன் சன்மாந்தரத்தில் யான் நினக்குப் புரோகிதனா யிருந்த பெருந் தோஷத்தினாலே கொடிய வெவ்விய நரகங்களுள்ளும் உழன்று கடைசியில் நாயினுங் கடையாய பல பிறப்புக்களு மெடுத்துக் கடைசியில் இக்கிளியா யுருவெடுத்து இவ்வுருவுக்கோர் விமோசனத்தைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனென் என்னும் இத்தியாதி விதமான உண்மையை யறிந்து சுகம் கூறிற்று. இவ்விஷயங்களை அருகே யிருந்து அறிந்துணர்ந்த பாரத்துவாஜர் பொருக்கென இவற்றினருகிற் போந்து நமக்கு இப்பிறப்பு தீர்வுறுமாறு உபாயம் மாயூர க்ஷேத்திரத்திற்குப் போய் இடப தீர்த்தத்திலேயாடி மாயூர நாதரையும் ஞானாம்பாள் அபயாம்பாள் என்னும் அம்பிகைகளையும் தரிசனம் செய்தலே எனக் கூறவும், பூனையும்

முனியும் அவ்வாறு அந்த ஸ்தலத்திற்குச் சென்று விருஷப தீர்த்தத்தில் புக்கு விதிப்படி ஸ்நானஞ் செய்து, தர்மருபமடைந்து மனமொழி மெய்களால் எம்பிரானைத் தொழுது சிவலோகஞ் சேர்ந்தது.

(பூனை முனிகள் முத்தி பெற்ற சருக்கம் முற்றிற்று)



35 சயதுங்கன் முத்தி பெற்ற சருக்கம்

தென்னாட்டிற் சிறை களித்தமர்கின்ற காசி நகரானும் பண்புடையனாகிய, சயதுங்க ராசனென்பான் நீதி நெறி தவறாமல் செங்கோலோச்சு நாளில், பொல்லாத வைஷ்ணவ மதப்பற்றுக் கட்டுப்பட்டு, சிவ சமயம் பொல்லாததென்றும், அச்சமயத்தினரை வாயில் வந்தவாறெல்லாம் தெழித்துரைத்து நடையர்களிலும் கடையனாய் வாழ்ந்திருக்கும் நாளில், அந்நகரில் சாத்திரங்கள் பலவற்றையும் கண்டாராய்ந்த நீந்த தேவசாமி என்னும் வேதியன் மைந்தன் எல்லாராலும் மிக்க இகழ்ந்துரைக்கப்பட்ட அரிசாமி என்பவன் தான் மணம் பூண்டு கட்டிய மனைவியுடன் ஓர் நாள் பள்ளியறையிற் துயின்றனன். அப்போது அவனுடைய மனைவி ஆடை தரிக்கவில்லை. அக்காலத்தில் மதன வேகனெனுங் கந்தருவன் மாய விஞ்சைகள் பலவு முணர்ந்தோனாய் அரிசாமியுறங்குமிடத்தணுகி, அழகின் மிக்க அப்பெண்ணையக் கண்டு மயங்கி, அவள் மீது வைத்த ஆசையினால், அவளை எடுத்துக்கொண்டு ககனத்தெழுந்தான். இதற்கிடையில் அரிசாமி துயிலெழுந்து தன் துணைவியைக் காணாது நெஞ்சம் அலைந்து அவளிருக்குமிடம் என்னென நகர முழுவதும் தேடி, அலைந்து திரிவானாயினன். இப்படி, இருக்கையில் அரிசாமியுடைய பத்தினி மிக்கலைக்க, இவன் பதுமநாபன் என்னும் ஒருவனையணுகி தன் மனைவி காணாத வண்ணம் கொண்டு ஓர் இடத்தில் வைத்திருந்து புசித்தக்கால் கொடுவிட முள்ள பாம்பொன்று புசித்து அனைவர்க்கும் விஷம் இட்டு அரிசாமி புசித்துப் அவ்வன்னத்தில் விஷத்தை அறிந்து புசிக்காமலிருந்தனன். அதனால் இப்பாதகன் நமனுலகு கடிதிற் செல்லவேண்டியதாயிற்று. இது பலராலுங் கேட்டுணர்ந்த பதுமநாபன், அன்னவனுக்கு அன்னமிட்ட தன் மனைவி பாப மிக்கவளாயினள் என்று தன் காதலியுடனே அத்திரி இருஷியினிடம் அணுகினன்.

அரவினைக் கருடன் வருத்த அது விஷம் ஒழுக்கிற்று; பசிப் பிணி வருத்துதலான் கருடனும் அவ்வரவினை வருத்திற்று; அவன் பசிப் பிணி தணிப்பான் கருதியே உன் மனைவியும், அவ்வதிசாமிக்கு அன்ன மளித் தனளாகையால் இம் மூவருக்கும் இப் பாவம் சேராது காண் என்று அத்திரி மகருஷி அவர்களைத் தேற்றும் காலையில், "ராஜா ராஷ்ட்ர கிருதம் பாபம் லபதே நாத்ர ஸம்சய:" என்றவாறு இப்பாவங்களெல்லாம் இந்நகரின் செங்கோல் மன்னனாகிய சய துங்கனைச் சார்வதாக என்னுமோர் வாக்கு ஆகாயத்தினின்றும், கணீ ரென எழுவதாயிற்று. இதைக் கேட்ட மன்னன் மிகுதியும் திடுக் கிட்டான், இப்பாவத்தைத் தொலைப்பான் சயதுங்கன் உறுதி பூண் டனன். இப்பாவத்தினால் பீடிக்கப்பட்டவனாய் ஹா! ஹா! இதற் கென்ன செய்வோம் என்று மிகுதியும் கிலேசப் பட்டோனாய், தூக்கம் சிறிதேனும், கொள்ளாமலும் தன்னுடம்பின் செவ்வியைச் சிறிதேனும் நோக்காமலும் பேய் பிடித்தவன் போல ஊரூர்களோடும் திரதரா நின்றான். அந்தோ! அருநும மார்க்கங்களை அறவே யொழிக் கின்ற சைவ நெறியை மறியா திருந்தால் ஒருவனை இலேசில் விட்டு விடுமோ?

பன்னாட்களாகவும் இவ்வாறு இந்நிலை யடைந்துழலுகின்ற சயதுங்கன், கங்கை முதலிய பற்பல தீர்த்தங்களுள்ளும் விசேஷ மாகப் படிந்தாடியும், ஸ்தல மூர்த்திகளைத் தரிசனம் செய்தும் தானங்கள் பல சற்பாத்திரங்களுக்கீந்தும் அலுத்துவிட்டானே யொழிய, அவனைப் பிடித்த பாவம் அவனின்றும் நீங்குவதென்ப தோ மிகவும் அரிதாயிருந்தது. இங்ஙன மிருக்கையிலோர் நாள் சனகன் என்னும் இருஷி யொருவர் இச் சயதுங்கன் முன்பு போந் தாராக, ஏ! விப்பிரரே! இப்பாவம் தொலைதற்குரிய உபாயமெனக் கருள வேண்டுமென்ன விரந்தனும், அவர் கொடியோனே! சிவத் துரோகியாகிய உனக்குக் கழுவாயுரைத்தலாகாது! ஆயினும் எம்மானாகிய நடராஜப் பெம்மானை யடிபணிதலே மேதக்கது; கீர்த்தி மிக்க மாயூரத் தலத்தில் விருஷப தீர்த்தத்தில் படிந்தாடி அவ்வூரில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் பெம்மானைவழுத் துதலே மேதக்கதெனச் சொல்லவும், அவ்வாறு மாயூரத்தலை மடைந்து காவிரியின் கண்ணுள்ள இடப தீர்த்தத்தில் படிந்தாடி

'மறைமுடிவினிடமாகும் வள்ளலார் பதம் போற்றி,
அறைகருணைப் பெருவாழ்வாமஞ்சநாயகியென்னு
மிறைவிபதங்களும் போற்றி யெண்ணில் விழாச்சிறப்பித்து
தறைபுகழுஞ் சயதுங்கன் சைவசிகாமணியானன்' 49

ஆலயப் பணியும், திருவாபரணப்பணியும், பொற்கலப் பரிவட்டப்பணிகளும், பேரன்பு மேலிட்டினால் ஈசனுக்குச் செய்து சிவனடியார்களுக்கு ஸமாராதனைகளும் பல செய்து, விபூதி உருத்திராக்ஷ தாரணங்களும், புனைந்து உமாதவனை இதயத்தில் பெரிதும் தியானித்து, கைலாசபதியின் விடைபெற்று தன் காசிநகர் மன்னிப் பல காலங்காறும் செங்கோலினிதோச்சி சந்ததமிகு சைவசமயமே சிறந்த சமயமென ஸ்தாபித்து வள்ளலார் அருளினால் உயர் சிவலோகமுற்று நனி வாழ்ந்திருந்தனன்.

(சயதுங்கன் முத்தி பெறு சருக்கம் முற்றிற்று)



36 தீர்க்க சங்கை முத்தி பெறு சருக்கம்

அயோத்தியாபுரியை யரசாண்டு வந்த தசரதராமனென்டான் இராவணனைச் சங்காரஞ்செய்த பின்னர் அசுவமேதயாகமொன்று செய்யா நின்றான். அவ்வேளை காண்பான் அட்டகோண்முனிவன் முதலாய பல முனிவர்களும் வந்திருந்தார்கள். பின்னர் உரோமேச முனிவன் வந்தான். இம்முனிவர்களைப் பார்த்த இராமன் முதலியோரெல்லாரும் தொழுது அர்க்கிய பாத்யாசமனங்களை முறைப்படியே ஈதலானார்கள்.

உரோமசமுனி அப்போது அட்டகோண முனியைப்பார்த்து. ஓ! முனிச் சிரேஷ்டரே! நீவிர் நூறு கற்பம் யாண்புறக் கண்டு வாழ்வாய்; யான் அதிற்பாதிதான் கண்டேன்; ஆதலின் நீவிரே பெரியவர் என அட்டகோண்முனி அதனாலேயே உயர்வு தாழ்வு கருதிட வேண்டாம்; மாயூரத்தில் வருடந்தோறும் இஷ்ட சித்திகளை விசேஷமாய்க் கொடுக்கும்படியான விருஷப தீர்த்தத்தில் படிந்து ஸ்நானம் செய்வாயாகில் அப்போது என்னைக் காட்டிலும் நீவிரே பெரி

யவராவீர் என்றனர். அவரே பின்னும் கூறுவார்:—திராவிட தேசத்திலே குண்டின கோத்திரத்திலே யுற்பவித்த மேலோனாகிய நற்குணத்தானாகிய விண்ணுசாமி என்போனாகிய ஒருவனுக்கு இரேவை என்னும் மனைவியினிடத்தில் அரி, கவி, சிவன் என்று மூன்று குமாரர்கள் பிறந்தனர். அவர்களில் அரி என்பவனுக்குத் தகப்பன் கலியாணம் செய்வித்தான் மற்றிரு குமாரர்களும் உழு தொழிற் செல்வராகி தம் முன்னோனிடத்திற் பிரியம் வைத்திலராகி தனித்தனியே பிரிந்து அப்புறமே போதலானார்கள்.

மூன்னோனும் தன் மனைவிதன்னை தன் மாதுலனகத்தேவிட்டு ஐப்பசித் துலாத்தில் மாயூரம் விருடப தீர்த்தத்தி லாடுவேனென்றுள்ளங் கொண்டவனாய்ப் புறப்பட்டு சித்திர கூடம் வந்து சேர்ந்தான். வழிநடந்த இளைப்பினால் மிக்கப் பசியோடு வருபவன், ஒரு வீட்டினின்று புகை எழுவதைக் கண்டு இங்கு ஏதாவது புசித்திடற் கன்னமகப் படுமென்றுளத்திற் றேர்ந்து, அக்கிருகத்தினை நோக்கி வருகையில், அன்னோன் வருகையைக் கண்ட அரக்கி யொருத்தி திவ்விய சுந்தர ரூபத்தோடு முள்ள இளம் பெண்ணாய் சமைப்பதற்கென்று ஏதோ விறகு தேடுவாள் போன்று, அவ்வீட்டினின்றும் வெளியே வந்தாள். வந்தவளைக் கண்ட மறையவனும்' ஏ கற்புடைக் காரிகாய்! நான் மிகக் களைப்புற்றேன், எனக்குப் பசிப் பிணி தீரச் சிறிதன்னமளிப்பையேல், என் உயிர் தரித்திருக்குமெனவும், அவளும் ஓமென விணங்கி, இவ்வேதியனை உள்ளழைத்துச் சென்று, இவனைச் சிறிது நேரஞ் சயனிக்கச் சொல்லி, அம்மகள் அடுப்பில் நெருப்பு மூட்டினாள். வழி நடந்த இளைப்பினால் வருத்தமுற்றபர்வுற்றுத் துயின்ற அம்மறையவனின் இன்னுயிர் கவர்வாள், இவ்வரக்கி தன் மனத்திலெண்ணுவாளாயினாள். இப்படி இவள் எண்ணுங்காலையில் பழியினஞ்சு மெங்கள் பரம்பரனும் மாயூரேசன் கிருபா கடாட்ச வீட்சணியத்தால் 'ஏ! அரக்கி! அம்மறையவனைக் கோறலினால் பாபம் நினக்கு வந்து சூழும்; அம்மறையவனாலேயே உனது பைசாச உருவம் நீங்குவதாகும், நின் கொடிய எண்ணத்தைத் தவிர்' என்றுமோர் ஆகாய வாக்கு ஆண்டு எழவும், மறையவன் விழிப்பானாயினன். அரக்கியும் ஞெரேலென வெழுந்து நமஸ்கரித்து மறையவனின் பாதம் போற்றி, அன்னவனிடம் தன் முற்பிறப்பினைப் பின்வருமாறு கூறலாயிற்று. ஏ! மறையவ! இப்போது தீர்க்க சங்கை

என்னும் பெயரிய பான் முற் சனனத்தில் யமுனு தீரத்திலிருந்த இராமனென்பவனின் அருமைப் புதல்வி, வேங்கடியா சாமம் பூண்டவள், எம் தந்தை என்னைக் கிருட்டின னென்போனுக்குப் பாணிக்கிரகணம் செய்விக்க யான் கிருகிணியின் காரியத்தைச் சரியாகச் செய்தலில் சிந்தைப் பூண்டிலளாயினேன்; யான் யாமி பாமன்மார்களை வைது போராடல் செய்வேன். இவ்வாறு புலிக்கெனத்தோன்றிய தூமகேதுபோலக் கிருகத்திற்றேன்றிய வென்னைக் கலக்கப்படாம லிருக்கச்செய்ய, என்னையும் என் புருடனையும் தனியாக விருக்கச் செய்தனர். யானே அங்ஙனமிருந்தும் அகமுடையானை மதிப்பதில்லை; அவனை உபத்திரவம் செய்வதிலேயே எனது சிந்தை நாடும்; ஒரு நாளுக்குப் பதக்கு சாதம் சாப்பிடுவேன். இப்போர்ப்பட்ட என் கொடுமைகளுக்குப் பயந்து என் புருடன் விண்ணுலகம் சேர்ந்தனன்.

யானும் பின்னர் பைசாசம்போல் உறக்கங் கொள்ளாது பல விடங்களும் திரிந்து பொருள் மிகுதியும் தேடி வைத்துக் கால கதியால் இறந்து கொடுமையான நரகத்துள்ளழுந்தி பல பிறப்பும் பிறந்துக் கடைசியாக பச்சைப் புலாலினையே பெரிதும் விருப்பி யுண்ணும் இத்தகைய கொடிய அரக்கியாயினேன். இனி எனக்கு இவ்வுருவம் நீங்கத்தக்கப் பிராயச் சித்தம் சொல்லியருளல் வேண்டுமென்று இரந்து கேட்கும் அரக்கியை மறையவன் நோக்கி, ஏ! அரக்கியே! நீ என் பின்னே மாயூரம் வந்து சேர்ந்து விருஷப தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வாயாகில் சாப விமோசனம் நினக்காகலாம் என்ன, மறையவன் சொற்படியே தீர்க்க சங்கை அவன் பின்னை தொடர்ந்து போயினள்.

பிராமணன் ஆஞ்ஞையின் வண்ணம் விருஷப தீர்த்தத்தில் படிந்தெழுந்த தீர்க்க சங்கை யென்னும் அரக்கியும் முன்னுருவமடைந்து பொன் விமான மேறி, பனவனையும், மாயூரேசனையும், அம்பிகையையும் தொழுது விண்ணுலகடைந்தனள்.

வேதியன் இச்செய்தி கண்டு அற்புதமடைந்தவனுய் தானும் இஷ்ட சித்திகளைப் பெற்றுப் போயினன். அப்பேர்ப்பட்ட இடப தீர்த்தத்தில் வருடந்தோறும் நீயே உத்தம வேதியன். நின்னை ஒப்பாரொருவருமில்லை; அத்தகைய உன்னையே யான் மிகு

தியும் வணங்குவேன் என முனிவன் சொல்ல யாவரும் சந்தோஷித்தனர்; இவ்விஷயம் உண்மையது தான் என்று அங்குள்ளோ ரெல்லாரும் ஒப்புக்கொண்டார்கள்.

(தீர்க்க சங்கை முத்திபெறு சருக்கம் முற்றிற்று.)



37 பார்க்கவி பூசனை புரி சருக்கம்

மணமும் மதுவும் பொருந்திய குளிர்ச்சி மிக்க துளசிமாலை யைப் புனையும் சக்கிர பாணியாகிய திருமாலினுக்கு திருமகள், புவி மகள், நீளை யென்னும் மூவர் இன்னுயிர்க் காதலிகளுளர்.

இம்மூவரில் திருமால் நீளையிடத்தே விசேஷமான காதலினை யுடையான். முகுந்தன் இவ்வாறு நீளையிடம் காதல் மேலிட்டவ னாய் ஒழுகு நாளிலொரு நாள் திருமகள் பால் அதிவிருப்ப முற்று அவளிடம் சேர்தற்குப் போயினன். நீளையிடத்தன்புடைமையி னாலே அழுக்காறு மேற்கொண்டு திருமாலினுக்குத், திருமகள் சிறிதேனும் முகங் கொடுத்துப் பேசினளல்லள். திருமகளைத் திருமால் அன்பு மேலிட்டுத் தழுவலும், திருமகள் சினமீக்கூர்ந்த வளாயும், வெறுப்பு மேலிட்டவளாயும் விலகிக் கொண்டு அயற் புறத்தே நின்று கடுகடுப்பாளாயினள்; தூங்கு மஞ்சம் விட்டுப் பெயர்வாளாயினள். அன்ன நாரணனைத் தன் பகைஞனைப்போற் பார்ப்பாளாயினள்; நாரணனும் அம்மங்கையை நோக்கி "ஏ! பெண் கள் நாயகமே! உண்மையில் உன் மேலேயே விருப்பு மிக்குடை யன் யான்; பெருஞ் செல்வமே! பேதே! நீ என் கோபித்துக்கொள் ளலும் நேரிதாமோ" என்னக் கூறினன். அதற்குத் திருமகளும் "நீளை நின்னைக் கோபிப்பாள்' இங்கு வாராதே அவளிடத்தே போகுதி; யாது சொல்லினாயாயினும் என்னின்பம் நினக்கு மிக்க கசப்பே! கரும்பனைய இன்பமளிக்கும் நீளையினிடம் போதி! போதி! என மொழிந்தாள்' கமலை; எவ்வித குற்றஞ் செய்யினும் பொறுத்துக் கிருபைகூர்ந்து ஏ! மலர்ச் செழுந்தோகாய்!! எனக்கு நினின்பளி த்தி! நின்னின் சுவை வாயூறல் சிறிதெனக்கு அருந்தாயேல் என் னுயிர் நீங்கொழிவது சத்தியமென வுரைத்தனன்' நெடியவனும்.

நீ யாது கூறினும் மேலாது; யானோ சிறிதேனும் நினக்கிணங்கேன்; நீ நீள பாலைநிலை மேதகவுடைத்து என்றிசைத்தனள் மாமகள். திருமால்! ஆற்றன்று! எம்பொன்னே! மாமணியே! நீ சினங் கொள்ளல் தகாது! என்று ஆசைமேலிட்டவனாய் அவளடி விழுந்து நயந்து தொழுதான்.

செந்தாமரை மலர் மேலுறைவோளாகிய திருமாமகள் புருஷோத்தமனின் இத்தகைய காரியத்தையும் கவனிக்கிலளாகித் தன் தாளினால் அத்திருமாலின் முடிமிசை யுதைத்து அப்புறத்தகன்றனளாக, மாயவனும் அம்மகளை நோக்கி மனங் கவன்று! ஏ! காரிகாய்! கொடுந்தொழிலுடைய நீ இனி மாநிடவுருவெடுக்கவெனச் சபித்தான். பதுமாசனியும் அச்சாப மொழிப்படியே பிருகுவின் பெண்ணாக ஜனித்தாள்.

பிருகுவின் புத்திரியாகிப் பார்க்கவி என்னும் பெயர் பூண்டு மங்கைப் பருவமடைந்து தன் தந்தையை நோக்கி எனக்குத் திருமால் கொழுநனாகத் தக்க உபாயமருளுதி எனலும், இருஷிச் சிரேஷ்டர் நீ கௌரி மாயூர க்ஷேத்திரம் சென்று, காவிரியின் விருஷபதீர்த்தத்தில் படிந்தாடி வள்ளலாரையும் அஞ்சநாயகியையும் போற்றின் நின் விருப்பப்படி திருமாலினை மணப்பாய் என அருளிச்செய்தார்.

அவ்வாறே பார்க்கவி அத்திருத்தலமடைந்து ஐப்பசித் துலாத்திடை விருஷப தீர்த்தத்தில் தோய்ந்தாடி ஈசுவரனையும் ஈசுவரியையும் ஸ்தோத்திரஞ் செய்து வாழ்ந்து வரு நாளில் வள்ளலாரின் அநுக்கிரகத்தால் நெடியவன் பிருகுவின் ஆச்சிரமம் புகுந்து, நின்மகளை எனக்களிப்பாயாக வென பிருகுவினைக் கேட்டலும், ஓமெனவிணங்கிய பிருகு, மாயூரம் வந்து பார்க்கவியைத் திருமாலினுக்களித்தான்.

மால் கொண்ட பார்க்கவியோடும் வைகுந்த லோகம் சேர்ந்து தேவர்கள் போற்றிட வெற்றி தரத்தக்க பஞ்சாயுதங்களோடும் அரசு புரியாநின்றனன். ஈசுவரானுக்கிரகத்தால் அன்று தொட்டு மாப்பாதலைன் என்னும் பெயர் கொண்டு பிருகு மாமுனியும் மாயூரேச னின்னருளை வியந்து கொண்டு தனதாசிரமம் புக்கு இனிமையாய்க் காலங் கழிப்பானாயினன்.

(பார்க்கவி பூசனை புரி சருக்கம் முற்றிற்று)

38 வாணி பூசனை புரி சருக்கம்

முன்னமொருகால் சத்திய லோகத்திற்றோன்றிய வாலகில்லியருருவத்தைக் கண்டு எள்ளி நகைத்த காலையிலவர் சினந்து, எம்பரித்த தேகம் கண்டு நக்க நீ மானிட பாதாகுதி என்ன சபித்ததை கண்ட வாணி நயந்து, முனிவரை நோக்கி, அம்மா நடவுருவமெய் இக் கழியுமாறு திருவருள் புரிதல் வேண்டுமென்றிரந்து கேட்க முனிவர் கூறலுற்றார்.

அத்திரி முனிவனுதியர் ஓர் வனத்தில் முன்னொருகால் வதிதருங் காலையில், அவர்கள் யாவரும் நடுநடுக்கமுறக் கொள்ளிவாய்ப் பேயொன்று அவர்கள் முன்னிலையில் தோன்றிற்று. தோன்றியதைக் கண்ணுற்ற முனிவர் நீ யார் என்னக் கேட்டலும் அது, "யான் பிராமண குலப் பெண், என்னுடைய கணவனோடுறையுங்கால், அவனை மிக்க வயவதிக்கும் குணமே வாய்ந்த தன்மையினால் இக்கொடுமையான கொள்ளிவாய்ப் பேயுருவம் தாங்கினேன்; ஓ முனிவர்களே! இவ்வுருவம், நீங்குமாற்றருளிச் செய்யல் வேண்டுமென, முனிவர், ஏ' பேயே! நீ மாயூரஞ் சார்ந்து, இடப தீர்த்தத்தில் முழுகி இச்சாப விமோசன மடையக்கடவாய் என்னும் இவ்வார்த்தையைக் கேட்டவக்கணமே அப்பேய் பெயர்ந்து போய் மாயூரத் திருத்தலம் புக்கு விருஷப தீர்த்தத்தில் முழுகித் தன்னுருவமடைந்து, நற்கதி பெற்றது போல், ஏ! வாணி! நீயும் மாயூரமடைந்து நற்கதி பெறக்கடவாய் என்ன வோதிய முனிவன் மொழிப்படியே வாணி கௌரிமாயூரமடைந்து, விருஷப தீர்த்த கட்டத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்து ஈசனுக்கும் அம்பிகைகளுக்கும் முறையே பூசனைகள் புரிந்து பிரம லோகம் சேர்ந்தாள்.

(வாணி பூசை புரி சருக்கம் முற்றிற்று)

39 இடப வரலாறு உரைக்கும் சருக்கம்

திரும்பினு மினிக்குமாறு மாயூர க்ஷேத்திர மகிமைகளை விரித்தோதி வாரநின்ற சூதமுனிவர் கதைகளில் அத்தியாநந்த வசத்தராய் ஈடுபட்ட நைமிசாரணிய வாசிகள் அவரை நோக்கி

"விருஷபதீர்த்தம், விருஷபதீர்த்தம் என்று பலகாற் கூறினீர்களே! அவ்விருஷபம் பொன்னித்துறையில் வந்ததெவ்வித மென்னோ? எனக் கேட்பாராயினர். அதற்குச் சூதர், கைலாச கிரியில் உமையோடும் வசியா நின்ற கண்ணுதல் மாயூரேசன், சத்தி தேவியார், மயிலுருவமெடுத்துப் பூமியில் வசிக்கும் நாளில், அப்பெம்மான் விநோதார்த்தமாகப் பூமியில் சஞ்சாரஞ் செய்வானெண்ணி, தம்முடைய விருஷப வாகனத்தின் மீதேறி, மலர்மிசைக் கடவுளாகிய பிரமதேவனும், திருப்பாற்கடலின்கண் வளரும் மாயோனும், தேவேந்திரனும் தேவர்கள் முதலிய பல்லோரும் தத்தம் வாகனாரூடர்களாய்த் தன்னைப் புடைசூழ, கைலாயகிரியைவிட்டு நீங்கித் திருவுலாப் போவதாயினர்.

இங்ஙனம் போகும் ஈசுவரன் பின்னே அவரதின்னருள் பெற்ற நாரணன் முதலிய வானநாடர், எம்மானது அடியிணையையே தொடர்ந்து செல்லுவாராயினர்.

ஈசனை ஊர்ந்து வாராநின்ற விருஷபமோ, எம்மானைத் தாங்கும் பெருமையினால், என்னைக் காட்டிலும் தேவேந்திரன் முதலிய தேவர்களின் வாகனாதிகள் சிறப்புற்றனவோ வெனவே கர்வ மிக்கதாய் ஒரு க்ஷணப் பொழுதில் சர்வாண்டங்களையும் பிரதக்ஷணம் வந்து சிறப்புற்றோங்கிய மாயூரப் பொன்னியாற்றிடையினில் வந்துறவாயிற்று.

உரகங்களை யெல்லாம் விறை விளைடுத்தயிலுதலேயே தன் தொழிலாக கொண்ட பக்ஷிராஜாவாயும், விஷ்ணுவாகனமாயுமுள்ள கருடன் விருஷபவாகன கதிக்குச் சரியாய்த் தொடர்ந்து வர முடியாமல் இடபத்திற்குப் பத்து லக்ஷ யோசனைக்குப் பின்னாலேயே நின்று இளைப்புற்றுத் தரையில் விழுந்தன்மையுற்றது.

நான்கு இலக்ஷ யோசனை தூரத்தில், விஷ்ணு வாகனத்திற்கப்புறத்தில் பிரமனூர்தியாகிய ஹம்ஸரூப, அதிலிருந்து நானூறு லட்ச யோசனைக்குப் பின்னால் ஆயிரங் கண்ணையுடையவனை தேவேந்திரனின் ஐராவதமென்னும் வெள்ளை யானையும் இளைப்புற்று விருஷபத்தோடு தொடர்ந்து வர மாட்டாமல் பெருமூச்செறிந்து நின்றன.

அக்கினி தேவன் முதலாய தேவர்கள் எழுவர்களின் வாகனங்களும், பொன் கழல்கள் பூண்ட மற்றைத் தேவர்களின் வாகனங்களும் இளைத்து வெகு தூரத்திலேயே அப்புறம் செல்லமாட்டாமல் நின்றனவெனின், எம்பிரானும் பரமேசுவரன் ஏறி யருளிய விருஷபத்தின் வேகத்தைப் பற்றி சொல்லலாம் தன்மைத்தோ?

இப்படிப்பட்ட பல்லோர் தேவர்களுடைய வாகனங்களைப் பின்னிட்டுத் தோற்று நிற்கச் செய்தமையாலும், உத்தமோத்தமமான பொன்னி நதியின் மத்தியப் பிரதேசத்தில் தான் தனியாய் வந்துற்றமையாலும் இவ்விருஷபம் மிகுதியும் செருக்குக் கொள்ளா நின்றது.

செருக்கு மிகுதியும் விருஷபம் கொண்டதென வுணர்ந்து கண்ணுதல் அதனை யடக்குவான் கருதி, தன் தாளினால் ஏற்றினை மெதுவாக அழுத்தலும் இடபம் விரைந்து பாதலம் புகாநின்றது.

புகாநின்ற விருஷபமோ மிக்க வெருட்சி கொண்டதாய், யான் அற்பத் தன்மை மேலிட்டும், இறுமாப்பு மிகுதியுமடைந்தும் இவ்வாறு இத்தகைய செருக்குக்கொள்வானாயினேன். தேவரீரது பாதவிந்தமின்றி, பூமியில் விடப்பட்ட நான் மிகுதியும் அவதியுறுகிறேனே, என்று கண்ணீர் ததும்பத் ததும்ப பின் வரும் பாடல்களால் மனங் கரைந்து துதிக்கலாயிற்று.

'அடியனே னறிவிலாமையாற் செருக்குற்றேனோலங்
கொடியனேன்றீங்கு மாய்த்துக் குறிக் கொளல் வேண்டுமோலங்
கடியவாளரக்கன் வேண்ட களிந்தருள் புரிந்தாயோல
கெடியவன் முதலோர் தேரு நின்மலப் பொருளேயோலம்' 50

'நினைபவர்தமை யெப்போது நினைபவ வோலமோலம்
புனைதருமம்ஃதிலாரை மறந்தருள் புராணவோலம்
மினைதரு மிலங்கை வேந்தற் கின்னருள் புரிந்தாயோலங்
கனைகட லஞ்சமுண்டு கடவுளர்ப் புரந்தாயோலம்' 51

'செறிதருமடியார் செய்த தீமையை மறப்பாயோல
குறிதரு. மேனோர் செய்யுங் குணங் கொள்ளாயோல
முறியுடை லிலங்கை வேந்தற் கின்னருள் புரிந்தாயோலம்
வெறிதருபுகழ் மாயூர வித்தக வோல மோலம்' 52

நீ[illegible] சன்பநெ அகஸ்திய மு[illegible] சொல்லியபடியும் பயபக்தி[illegible] [illegible] [illegible] ! [illegible] [illegible] [illegible] [illegible] ஆற்றி[illegible] [illegible] [illegible] கரைக்கு உருகி [illegible] [illegible] பொன்னி [illegible] [illegible]! இடபமே! [illegible] தாங்குதற்கும், இங்கு [illegible] [illegible] இஷ்ட சித்திகளைப் [illegible] [illegible] அம்சம் என்னை [illegible] மாயூரேசன், [illegible] செருக்கினால் [illegible] [illegible] [illegible]

[illegible]

தூ மாயூரப் பேர் புண்ணியம், இக்கலியின் [illegible] பிரசன்னமாவோம்! அத்தலம் [illegible] பெயர் பெறும்; அத்தலத்தில் [illegible] ஆகேச[illegible] திருமூர்த்தி சமேதராகி உண்மை ஞானம் அளிப்போம்; அப்போது நீ [illegible] முன்டாகும், என்று சொல்லி மறைந்தனன் கருணைமூர்த்தி.

இப்படிமாதப் பௌர்ணமியில் நாம் ஞானப் பெறும் யோகியோரே, அக்காலம் எப்போது வரப்போகிறதென்று எதிர்பார்த்த தாய் அவ்விருஷபம் அகமகிழ்ந்து [illegible] பொன்னி நடுவில் வசியா நின்றது.

அமுருபிக்க தருமவிருஷபம் தங்கியிருந்தலால் அத்தீர்த்தம் விருஷப தீர்த்தமென்றும் பெயர் பெற்றது. சொல்லற்கரிய அப் பொன்னித் துறையில் முழுகுவோர்கள் விசேஷ செல்வவான்களாகி கதி பெற்றுய்வர் என்பதில் ஐயமின்று. இப்படி இச்சிரிய இடபம் இங்கு தங்கப்பெறும் தகைமையினாலே கங்கை முதலாய நதிகள் யாவும் இங்கு துலா மாதத்தில் தவறாது வந்து கூடுகின்றன.

விருஷபத்தின் நான்கு கால்கள் நால் வேதங்களாகும். சாத்திரமனைத்தும் மயிர்களாம். வால், கொம்புகள் முதலாயின சிவ சொரூபம், சுருதி ஸ்மிருதிகள் நேத்திரங்களாம். பிரணவம் விருஷபத்தின் சுவாசம்.

'மதவிடையுமை சொரூபம் வாண்முக மலரின் மேயோன்
சுதமிலாக மங்கவெனைற்றி தொக்க புன்காலின் மூலம்
பதமிகு தீர்த்தமெல்லாம் பைந்துழாய்க் கொண்டல்கண்ட
முதவுறுரியான முஞ்சமாதிய மோங்குகாது' 53

மற்றுமுள்ள அமரர்களெல்லாம் அவ்விருஷபத்தின் மற்றைய உறுப்புகளிலுள்ளார்கள். இத்தகைய இடப ஏற்றினை நீலமேக சாமளனாகிய மகா விஷ்ணு முதலிய தேவர்களும் வந்து வணங்கிப் போயினார்களென்றால் இஃது மோர் ஆச்சரியமாமோ?

பஞ்ச மாபாதகர்களாயினும் இவ்வாறு விஷ்ணு வாதிய தேவர்கள் பல்லோராலும் வியக்கப்பட்ட விருஷபத்தைக் காணின் அத்தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்து, அவ்வேற்றினைப் பிரதக்கணங்கள் பல புரிந்து விசேஷமான அபிஷேகாதிகள் செய்து அஞ்சலி செய்தலே மேதக்கதாகும். இப்படியாகச் செய்து மகாதேவன் கோயில் புக்கு எம்பிரானையும் எம்மம்மை அஞ்சநாயகியையும் ஸ்தோத்திரஞ் செய்தலும் அளவற்ற பயன்றரவல்லதாகும். இதுதான் அவ்விருஷபம் காவிரி யாற்றிடை வந்த காரணமென்னச் சூத முனிவன் கூறிப் பின்னும் உத்தரமாயூர மகிமையைப் பற்றியுங் கூறலுற்றார்.

(இடப வரலாறுரைத்த சருக்கம் முற்றிற்று)



40 உத்தர மாயூரமான சருக்கம்

முன்னம் விருஷபத்திற்கு ஞானமுதவுவேன் என்றருளிச் செய்தவாறே சோதிலிங்கப் பெம்மான் சுரர் முதலிய யாவரும் போற்ற காவிரியின் வட பாகத்தில் சுவயம்பு இலிங்க வடிவமாக முளைத்தனன். இப்படி இலிங்கமாக ஆவிர்ப்பவித்த எம்மானைத் தேவர் முனிவரா யாவரும் போந்து கொண்டாடினார்கள்.

முன்னொருநாள் பிரம விஷ்ணு[illegible] முதல்வ[illegible] யான் முதல்வன் என்று என்[illegible] பிரமனின் தலையைக் கொய்து கலத்தை[illegible], இப்[illegible] அப்புறம் உணர்ச்சி மிக்[illegible] செய்தது மிக்க தவறு என்று [illegible] மொழி மெய்களால் தொழுதனர். [illegible] முன் தோன்றி "[illegible]! [illegible] ந்து விருஷப தீர்த்தத்தில் [illegible] இவ் வித்திகள் பெறுக" வெனத் திருவாய் மலர்ந்தருளினர்.

இவ்வாறு இறைவன் கூறியதை [illegible] இருவரும் அத்தீர்த்தத்தில் [illegible] மாதிகொண்டு ஈசனுக்கு வி[illegible], நைவேதனங்கள் [illegible] பின்வருமாறு போற்றலுற்றனர்.

'சராசரமானாய் போற்றி தத்துவாதீத போற்றி
பராபரப் பொருளே போற்றி பத்தியா தரிப் போய் போற்றி
தராதலம் வெளியியங்க நடத்திய சாமிபோற்றி
யராவணி சடையாய் போற்றி யற்புத மூர்த்தி போற்றி' 5[illegible]

'சத்தறி வின்பரூபத் தனி முதற் புராண போற்றி
மத்த வெங்களிறு கீண்டுபோர்த்திய வல்லாய்போற்றி
யுத்தர மாயூரத்தி லெழுளிர்தரும் [illegible] போற்றி
பித்தரெந் நிலைதீர்த்துப் பேரருள் செய்வாய் போற்றி' 5[illegible]

இவ்வாறு உளமுருகி ஸ்தோத்தரிக்க இவர்கள் முன் ஈசன் பிரசன்னமாகி, அவர்களது தீமையை [illegible], இவர் களும் உத்தர மாயூரேசனிடமிருந்து விடைபெற்று [illegible] மாயூ ரேசனின் சந்நிதானம் புகுந்து அவனின்னருள் பெற்று, தத்தம் லோகம் சேர்ந்து தம் தொழிலைக் குறைவற நடத்தா நின்றனர்.

(உத்தர மாயூரமான சருக்கம் முற்றிற்று.)



41 சத்தபுரி சருக்கம்

காசிரிஷியின் ... கைலாயத்தில் தட்சிணாமூர்த்தியினைச் சமயாசி ருகக் கொண்டு முதலானவர்களுக்கு ஞானோபதேசமொழிந்திட வேப உடப தேசித்தருளிய பொழுதிலாம் அன்னைகள் கைலாசகிரியை பிராமி யாதிய சப்த மாதர்கள் நாம் பூசனை புரியவேண்டுமென்று கேட்ட னர்கள். அதற்கு அவர் ஆசாரியத்தி கன்னியர்கள்! நீவிர் மாயூரம் சென்று இடப தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விதிப்படி அர்ச்சித் தேத்துமன்! என்றார்.

அவ்வார்த்தைப் படியே பிராமி, மகேசுவரி, கௌமாரி, வயிஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி முதலிய ஏழு கன்னியர் களும், மாயூரம் புக்கு சுவாமியைத் தரிசித்தவாறே இடப தீர்த்தத்தில் முறைப்படி படிந்தாடி, அபிஷேகாதி சாமக்கிரியைகள் முதலியன ஏராளமாய்க் கொண்டு தாந்தோன்றீசுரம், கருணைபுரம், கஞ்சாரு பசுபதீச்சுரம், சக்திபுரி, தருமபுரம், உத்தர மாயூரம் முதலிய பதி களில் முறையே பூசித்துப் போற்றிப் பேறு பெற்றார்கள். இச்சப்த மாதர்கள் பூசித்த ஏழு தலங்களுள் ஒன்றையாயினும் தியானிப்ப வர் மோட்சபதவியை தடையின்றிப் பெறுவர் என்பதும் நிச்சயம்.

(சத்த புரி சருக்கம் முற்றிற்று.)

* 42 சுகந்த வனச் சருக்கம்

முன்னம் தைத்தியர் குலத்திற் றோன்றிய விதலாசுரன் என் பானொருவன், தன் குருவாகிய மழைகோடன் சீர்பாதங்களை வண ங்கி பணிவிடையாற்றெனக் கேட்டலும், குருவும் நான் முகப்பிரம னைக் குறித்துத் தவம் பெரிதியற்றி அவனருள் மிகப் பெற்று, எண்டிசாமுகங்களிலும் சென்று கடல்சூழ் மண்ணுலகையும் விண் ணுலகையும் ஒருங்கே ஜயித்தானால் விண்ணுடரெல்லாரும் உளது வலித்த மிகுதியும் பயந்து மாயூர க்ஷேத்திரம் சேர்வார்கள்.

---

* இது மாயூரத்தருகிலுள்ள விஷ்ணு க்ஷேத்ரம். ஸ்வாமியின்பெயர் பரிமளரங்கர். தேவியின் பெயர் ரங்கநாயகி. திருவிந்தளூர் என்று ஆழ் வார் மங்களாசாஸனம் பண்ணின இந்த க்ஷேத்ரத்தையே, இப்போது திரு விழந்தூர் என அழையாநிற்பர்.

அக்கணத்திற் புகுந்த விருஷப தீர்த்தத்தில் ஓடி அந்த ஞாயிறையும் [illegible] பரிவர்த்தனை பண்ணிச் சித்திர சாத்திரத்தில் உள்ளதுங் கால [illegible] இந்த உண்மையைத் தவிர் மாயூரத் தலத்தில் இவர்கள் [illegible] அங்கு சென்று வசித் திருந்தி வாழும், குரவர் தாந்தனை [illegible] கொண்ட விதலா சுரன் [illegible] தெரிந்து [illegible] நினைத்தான்.

வேதத் தெய்வமான பிரமாவும் விதலாசுரன் தவத்தில் மிகுதி யும் சந்தோஷப்பட்டவராய் அவன் முன்னே தோன்றி, அவ னுக்கு வேண்டிய வரங்களை அவன் மனம் மகிழக் கொடுத்தார். மகத்தான வரங்களைப் பெற்ற விதலாசுரன் மமதை கொண்டு முத லாக எட்டுத் திக்குகளிலும் சென்று தேவர்களோடு சண்டையிட்டுப் பூமியை முழுதும் தம் வசப்படுத்தி, பின்னாட்டி லும் புகுந்து அந்நாட்டையும் தன் ஆதிபத்தியத்தின் கீழ்க் கொண்டான் இவன் செய்த தவப்பயனால் வாளேந்திப் போய்ப் போரிட்டு வானவர்கள் புறங்கொடுத்து ஓடினர். இப்படியாக வாகை கொண்டபின் புண்ணிய க்ஷேத்திரமான மாயூரம் புக்கு இத்தேயர் கள் முனிவர்கள் என்று தம் குரவன் உபதேசித்த வாக்கினை தன் மனதிற் கொண்ட விதலாசுரன், உடனே தானே தன் படை களுடன் மாயூர க்ஷேத்திரம் புகுந்து திசைதோறும், முனிவர்கள் தேவர்கள் முதலியோர் மாயூரத்தில் புகாதபடி காவல்கள் பல வைத்துத், தான் அந்த க்ஷேத்திர மத்தியில் வசித்து அங்குள்ள மாக்களுக்குக் கொடுமையே செய்வானாயினன்.

யாகக் குழியில் அக்கினி ஜ்வாலித்து எழாமல் அவித்தான். வேதியர் யாவரும் இவன் செய்த கொடுமையினால் வயிற்றெரிச்சல் படும்படி அவர்களை வருத்தினான். விருஷப தீர்த்தம் புக்கு அங்கு நின்று ஸ்நானம் பண்ணுவாரை அது செய்யாமல் தடுத் தலைத்தான். தான தருமங்கள் விதலாசுரன் கொடுமையினால் நடக் காமல் நின்று போயினவாதலால், வானம் மழை வழங்காது போ யிற்று. பஞ்சப் பிணி உலகனைத்தும் பரவி உலகுயிர் மாக்களைக் கொள்ளை கொண்டன என்பதே தவிர இவனது கொடுமையினால், உலகத்தில் வேறென்ன நடக்கக்கூடியதென்று விஸ்தாரமாய்ச் சொல்லக் கூடியது.

வானுலகத்திலும், பல முறைகளில் அபயமாக் செயல்களில் வசியாநிற்கும் வானவர்களும், தபசிரேஷ்டர்களும் தத்தமிடங்களிலிருந்தே "அதர்மம் மேலிட்டு நமக்கு மேன்மேலும் துன்பம் கொடுக்கிறது. இதற்கென்ன செய்வோம்' என்று மயூரேசனுடைய திருவடிகளை நினைத்துத் தியானிப்பாராயினர். அப்பொழுது 'மாயூர க்ஷேத்திரம் போக்கு இன்றதனை வணங்காமல் அந்த க்ஷேத்திரத்திற்குச் சமீபத்தில் பல வைஷ் இருக்கிறோமே? ஆ... எம்பெருமான் திருவுள்ளம் சம்மதந்தானோ?' என்று இவர்கள் கலிங்குகிறார்கள்.

இப்படி இவர்கள் கலங்குகின்ற காலையில் இடர்களைத் தீர்க்கும் மாயூரநாதிய எம்பெருமான் விதலைவான் கவலைகளின் அறியாமல் மாயவன் இங்கு வருவானாயின் எனக் கினைந்தனன், அங்கு மாயவன் போந்து ககனம் புல்லைப் புல்லியிருந்து, விண்ணவர் கணங்களாயதம் வலியுடைய பனைகளைப் போரிட்டுப் பார்த்து அவ்வுணப்படையை வலியறச் செய்து அதருமம் அழிந்து தருமம் நிலைநிற்க நாட்டி எம்பெருமானை நோக்கி,

'இத்தலத்து வைப்பதனுஞ் செல்வாருங் காமுறுவார்
கைத்தலத்தா மலகமெனப் பயனளிக்குங் காரணத்தா
லெத்தலத்துஞ் சிறப்புற்று நீங்காமை மருமவனை
பைத்தலப்பாப் பணிப்பாம பாங்குபெற வருளென்றான்' 56

இத்தலம் அவரவர் இஷ்ட சித்திகளை உள்ளங்கை நெல்லிக் கனிபோல கொடுத்தலால் இதில் வசிக்க எல்லாரு மாசைகொள்வது சகஜமே. ஆகலின், நானும் இத்தலத்தில் வசித்து அப்பேறு பெறும் வகையை அருளிச்செய்ய வேண்டும், எம்பெருமானே' என்றான். அவனது வேண்டுகோள்படி பரிமளவனம் என்னும் பெயர்கள் வாய்ந்தவிடம் சென்று பரிசுத்தமான கோயிலொன்று அமைத்து, அன்பு மிக்க திருமகள், விஷ்வக்ஸேனர் முதலிய பல்லோர் நெருங்க எல்லாக் கவலைகளையும் ஒருங்கே ஒழிந்தவனாகி சந்தோஷசித்தனாய் தனது பாம்பணையில் அறிதுயிலமர்வானாயினன்.

துளசி மாலையைப் புனைந்து இலட்சுமி தங்கப் பெற்ற ஸ்ரீமந் நாராயண மூர்த்தி இளைப்பின்றி இனிதுறையத் தான்றோன்றீசுவரத்தின்

சுன்னினை ஸ்வயம்பு லிங்கமாய் ஆவிர்ப்பவித்திருக்கிற ஸ்ரீமங்கள மகா தேவனைத் தரிசித்துக் கொண்டு பொருந்திச் சேவித்து சுகந்த வனத்தில் திருக்கோயில் கொண்டான்.

(சுகந்த வனச் சருக்கம் முற்றிற்று)

43 யோக வித்தும சருக்கம்.

சங்காதிரத்தில் யோகவித்துமன் என்னும் பெரிய விப்பிரன் தனது தர்ம பத்தினியாகிய சண்டி யென்பவளோடு வசித்து வந்தான். இந்தப் பிராமணோத்தமனுக்குப் புத்திரர் பல்லோர் ஜனித்திருந்தனர். யோக வித்துமனென்னும் பெரியோன் ஸாதுவான தன்மையுடைய வேதியனாயிருந்தாலும், முன் ஜன்மாந்திர வினைப் பயனாலும், இந்த ஜன்மத்தில் அபர்க்கு ஆகாத்து மகா தரித்திரத்துக்குட்பட்டு, விசேஷமான புத்திரர்களாலும், சண்டி யென்னும் பத்னி முதலானவர்களைக் காப்பாற்றுவதனாலுண்டான விசேஷமான சிரமத்தினாலும் பட்ட கஷ்டத்திற்கும் துக்கத்திற்கும் கங்கு கரையில்லை. மனுஷனுக்குத் தரித்திரத்தைக் காட்டிலும் கொடிய கஷ்டமும் உண்டோ? இல்லையே யென்னலாம்.

இப்படித் தரித்திரத்துக்காட்பட்டுக் கஷ்டப்பட்டுத் தவிக்கும் பிராமணன், கொடிய தபஸ்கள் பல செய்து இத்தரித்திரத்தைத் தன்னினின்று நீக்க நினைத்து, அவ்வாறே உக்கிர தபஸ் செய்தான். இத்தவத்தினால் உண்டாகிய அக்கி தேவலோகத்திற் புகுந்து தவிக்கலாயிற்று. இப்படித் தபாக்னி தம் முலகம் புகுந்து வருத்துவதையும், யோக வித்துமன் என்னும் விப்பிரன் தவம் செய்யு மாறற வினையும் வானநாடார் யாவரும் சேர்ந்து தம்முடைய பதியாகிய பிரமனுக்கு எடுத்துரைத்தார்கள். மலர்மேலுறைபவனாகிய வேதாவும், உக்கிர தபஸ் செய்யும் பிராமணன் முன்னே ப்ரஸன்னமானான். பிரமன் வந்ததுணர்ந்த பிராமணனும் பிரமனைப் பலவாறு ஸ்தோத்திரம் செய்து நின்றான். அவ்விஜோத்தமனை நோக்கிப் பிரமனும் யாது வேண்டுமென்று கேட்க யோகவித்துமனும், தான் வறுமைக் கடலில்

அழுந்திக் களைகாணுத இருக்குந் தன்மையை விடுக்குமாறு, தன் வறுமையை யறவே யொழிக்க வேண்டுமென்று வணக்கமாய் உரைத்தான். இது கேட்ட பிரமன் புன்முறுவல் செய்து உன தெண்ணப்படியே வேண்டிய திரவியம் கொடுத்தோம். இத்திரவியத்தினைக் கைக்கொண்டு அநுபவித்து பிறர்க்குங் கொடையாயுங் கொடுத்தும் ஸுகஜீவியாய் வாழுவாய் என்று சொல்லிப் பிரமன் அந்தர்த்தானமாயினுர். பிராமண சிரேஷ்டனும் இவ்வாறு இனிதாகப் பெற்றுத் தன் மனையடைய, இவனுடைய குழந்தைகள் யாவும் இவனை மொய்த்து நெருங்கின. அந்தணன் தான் பெற்ற செல்வப் பேற்றினைப் பற்றி யாவரும் அறியும்படியாகத் தான் தவஞ் செய்த விதத்தினையும், பிரமன் ப்ரஸன்னமாயதையும், அவ்வாறு வரங் கொடுத்தமையும் விவரித்துக் கூறினுன். இப்பெருஞ் செல்வத்துடன் யோகவித்தமன் என்னும் விப்ரன் ஸுகயோக ... யாகத் [illegible]

இடிந்து உளவே வீழ்வுப ... ஒர் ... உடையது ... தென்றறிய ஐயன் யோகவித்தமன் அவ்விடத் தேகி நடந்தான். குற்றமில்லாத ஜோதிமயமான பொன்பெருவெள்ளம் பெற்றாற்போல, அங்கே பொன் புதையலைக் கண்டான். அப்புதையலைத்தனையும் யோகவித்தமன் கைக்கொண்டு தன் மனைபிற் சென்று, தன் மனையாட்டியினிடம் ஒப்புவிக்க, அவள் பட்டில்லாச் சந்தோஷத்துடன் கணவனை ஆலிங்கனஞ் செய்துகொண்டும் ஸ்தோத்திரஞ் செய்தும், தன் புத்திரர்களுடன் அத்தனைத் திரவியத்தையும் மகிழ்ந்தநுபவித்தாள்.

விசேஷமான இபவியத்தைப் பெற்ற அந்தணச் சிரேஷ்டன், வருவார் யார்க்கும் அன்ன தானம் செய்யவும், அவரவர்கள் வேண்டியன வேண்டியாங்கு கொடுக்கவும், சாஸ்திரோக்தமான சிறந்த பலவிதமான தருமங்களை விதிப்படி செய்யவும், பூர்ணமனதுடையவனாய் இருந்தாலும், அத்திரவியத்தைப் பெற்ற சண்டியோ தன் கணவனுடைய அபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாறுபட்டிருந்தாள். குழந்தைகளும் கூட தன்னுடைய பிதா தர்ம கைங்கர்யங்களில் திரவிய விரயம் பண்ணுவதை ஒத்துக்கொள்ளவில்லை. இதனால் மனம் பெரிதும் புழுங்கினுன் யோகவித்தமன். பிரமனருளினுல்

கிடைத்த மாநிதியம், பிறருக்குபயோகப்படாமற் போமானால், ப்ரயோசனப்படாமற் போகுமே! நம்முடைய பணம் நல்வழியிலுபயோகப்படுவதற்கு ஆஸ்பதமில்லாமற் போய்விட்டதே! என்று துக்கப்படுவான், இதை நினைத்து நினைத்துத் துக்கப்பட்டு வியர்வையினால் தேஹமுழுவதும் நனைத்துக்கொள்வான் அடிக்கடி உஷ்ணமான பெருமூச்சு விட்டுக்கொண்டு தவிப்பானாயினன்.

விசேஷமான நன்மையைத் தரத்தக்க கல்வி பயிலாதவன், நோயற்ற வாழ்வினை யடையாதவன், நல்ல ஸாது சங்கத்தைச் சேர்ந்து பழகாதவன், தான் சொன்ன வார்த்தையை அங்கீகரித்துக் கேளாத மனைவி மைந்தரையுடையவன், இப்படிப்பட்ட மனுஷன் உலகத்திலே சராசரங்களுடனே ஸஞ்சரிப்பானாயினும் நீண்ட பெருமூச்சோடுகூடிய பிரேதத்திற்குச் சமானனே யாவான் என்பது நிச்சயம்.

வாயிலில் விருந்தினர் காத்திருக்க அவர்களை யுபசரியாது தன் மனைவியும் தானுமட்டும் கதவினைத் தாழிட்டு இன்புறச் சாப்பிட்டானேல், இல்லற தருமம் அமைந்ததாகுமோ? ஒப்பற்ற வேதவித்துக்களான பிராமணர் அகத்தில் வந்து யாசிக்க அவர்களிடத்தில் மிகுந்த கோப முகம் காட்டி அவமானம் செய்யும் துர்க்குணத்தை யுடைய இச் சண்டியாகிய மனையாளை நீங்கி, என்று ஸுகமா யிருப்பேன் என்ற கவலை மிக்கவனானான் யோகவித்தமன். துர்க்குணியாகிய மனைவியுடன் உலகமெல்லாம் சிரிக்க, உயிர் வாழ்வதைக் காட்டிலும் எந்த உபாயம் தேடியாவது அப்பேர்ப்பட்ட பிராணனை மாய்த்துக்கொள்ளலாம் என்னும் விதி யிருக்கின்றது. அப்படி ஜீவலயம் செய்துகொள்ளல் தன்மரணமென்று சொல்லப்படாது. வேதவித்துக்களான ப்ராமணாவமானம் செய்தல் வீணாக ஒருநா[ளும்] போகாது. அப்படிப்பட்ட பெரியோரும் வேதவித்துக்களுமாய ரிஷி ச்ரேஷ்டரான பிராமணாவமானம் செய்தல்லவா அஷ்டை[ச்வர்ய] ஸம்பன்னனான நகுஷன் என்னும் மஹாராஜனும் [...]ருவத்துடன் ஸ்வர்க்கத்தினின்று பூமியில் வீழ்த்தப் பட்டா[ன்].

இப்படியாகப் பல பல யோசனை செய்த பிராம[ண]ன யோகவித்தமன், துஷ்டர்களான தன் மனைவி மக்களுடன் [வ]ஸிப்பதனால் ப்ரயோசன மில்லை யென்று எண்ணினான். அப்படி அவர்களுடன்

வஸிப்பதனாலாய ப்ரயோஜனம் நரக ப்ராப்தியே யாதுமென்று தீர்மானித்தான். தன் உயிர்க்குறுதி பயக்கும்படியான கார்யங்களைச் செய்துகொள்ளலே சிறந்ததென மதித்துத் தன் மனைவி மக்களைத் துரும்பாய் மதித்தான். தன் கைக்கு வேண்டிய பொருளை எடுத்துக் கொண்ட மறையவன், இல்லம் நீங்கி விருத்த கங்கைக்கு யாத்திரை போய் அத்தீர்த்தத்தில் படிந்தாடினன். பின் அவ்விடம் விட்டு அவாசி என்று க்ஷேத்திரமடைந்தான். வேத சாஸ்திரங்களிற் சொல்லியபடி சிறந்த தானங்களெல்லாம் செய்வோமென்னில், அதற்கு எந்த க்ஷேத்திரம் சிறந்ததென்றும் ஆலோசிப்பானாயினன். இப்படி யாலோசித்துக் கொண்டிருக்குந் தருணத்தில் ஆகாயத்தில் அசரீரி வாக்கொன்று, ஏ! "அந்தண! மாயூர க்ஷேத்திரம் அடைவாய், நீ எண்ணியபடி ஆங்கு செய்யின் உனதெண்ணப்படி இஷ்ட சித்தியாகு"மென்றது. இவ்வசரீரி வாக்கினைக் கேட்ட தன்னெண்ணம் பலிக்கச் சொல்லிய அவ்வற்புத வாக்கினை வியந்து பெரிதும் போற்றினன் யோக வித்தமனென்னும் பிராமணன். முன்னாலேயே இந்த க்ஷேத்திரம் சிறந்ததென்று பல்லோர் பெரியோர் சொல்லக் காதிற்பட்டிருக்கிறது. அதனை உறுதிப்படுத்திய தெய்வவாக்கும் எழுந்ததென்றால், அந்த க்ஷேத்திரத்தின் மஹிமையைப் பின்னும் பன்னிக் கூறவேண்டுவதின்று. ஸாக்ஷாத் உமாதேவியே வியந்து அத்தலத்தில் அமர்ந்து பூசனை புரிந்த தலமாகிய அம்மாயூரத்தில், தூயோனும் பரிசுத்த மனமுமுடைய யோகவித்தமன் சென்றடைந்தான்

மாயூர க்ஷேத்திரம் சேர்ந்து வள்ளல் நாதர் சந்நிதானம் சேர்ந்து சிவ கங்கையில் ஸ்நானம் செய்து, விருஷப தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் செய்தும் மஹிமை பொருந்திய விபூதி முதலியன முறைற அணிந்து, வேதியர் பல்லோர்க்கும் அந்த ஸ்தலத்தில் செய்யா கூடிய தானங்களை சாஸ்திர விதிப்படி செய்தான். பூதானம் வற்றுக்குச் செய்தான் அழகிய சிறிய வத்ஸங்களுடன் பால் சுரக்கும் கோக்களை சிலர்க்குத் தானம் செய்தான். கல்யாணம் ... ணிக்கொள்வதற்கு வேண்டிய பணம் உதவி சில ப்ரம்மசாரிகளுக்கு ... ல்லற தருமம் நடத்த வழி செய்யும்படியான தானங்களைச் செய்தா... வசிக்க வேண்டிய கிரகங்களுடன் அவற்றிற்கு

வேண்டிய உபகரணங்களுடன் சில கிரக தானங்கள் செய்தான். மற்றப்படி தன் விருப்பப்படி பலவேறு தானங்களை பலர்க்கும் செய்தான்.

இப்படியாகத் தானங்கள் பல தன்னிஷ்டப்படி செய்த யோக வித்தமன், அழுக்காகிய அஞ்ஞானாந்தகாரம் நீங்கப்பெற்ற மனத்தினனாய், ஈச்வரன மாயூரேசன் மலர்த்தாள் வணங்கும் மனமிக்கோனாய், ஈச்வரன் கோயில் புக்கான் எண்ணில் பாவங்களை யிமைப்பளவில் நீக்கும் மாயூரேசனின கோபுர தரிசனம் செய்து அநேக முறையாய் வணங்கி, கோயிலுள் வணங்கி, அதனை பாதக்ஷணம செய்து, அகஸ்திய விநாயகரை அஞ்சலியஸ்தனாய் ஸ்தோத்திரஞ்செய்து அவருடைய அனுக்ஞையுடன் ஈச்வர ஸந்நிதானம் சென்று மாயூரேசனின்பாலல் பரிவு கூர்ந்து இளகிய மனத்துடன் அவர் மலர்த்தாளை மலர்ந்த ஹிருதய கமலமுள்ளோனாகிய யோகவித்தமன் வணங்கினான். ஈச்வர தரிசனமானபின், ஞானம்பிகை அபயப் பிரதாம்பிகைகளையும் முறைபெற வணங்கினான். உருகிய நெஞ்சுடனும், உரோமஞ் சிலிர்த்த சரீரத்துடனும, இன்பம பெருகு மனத்துடனும், ஆநந்த பாஷ்பம் பொழியும் கண்களுடனும, பக்தி பரவசத்தினால் நாக்குழறவும் அம்பிகையை வாயார, மனமார ஸ்தோத்தரித்தான். இந்த சிறந்த மாயூர க்ஷேத்திரத்திலேயே பல நாள் காறும் வசித்திடும ஆசைகொண்ட யோகவித்தமனென்னும பிராமணன் விருஷப தீர்த்தத்தில் ஸ்நாநத்துடன், பல காலம் அங்கு வசித்தான். இப்படி எண்ணிறந்த தருமங்களும் தானங்களும் செய்து இடைவிடாத அன்புடனும், பக்தியுடனும் அத்தலத்தில் தீர்க்க காலம் வஸித்து வந்ததன பலன், அவனுடைய தர்ம சிந்தனை யில்லாத இல்லாளையும், அவனது புத்திரர்களையும முத்தி யுலகத்தில் சேர்த்ததென்றால் அத்தலத்தின் மஹிமையைப் பற்றி வேறு யாது கூற வேண்டும்.

(யோக வித்தம சருக்கம் முற்றிற்று.)

---

41 மாயூர வள்ளல் நாற்றிசை வள்ளலாகிய சருக்கம்

ஹரிப் பிரம்மாதிகள் அவுணர்களின் உபத்திரவம் தாங்கமாட்டாது தவித்து எம்பெம்மானாகிய மகாதேவனிடம் அபயம் புகுந்த காலையில், திரிநேத்திரதாரியாகிய சிவபெருமான் மேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும் ஏற்படுத்தித் தம் வில்லை வளைத்து அம்பைத் தொடுத்து திரிபுர சம்ஹாரம் செய்யலாயினர்.

இத்தீய கணை தாக்கா முன்னமே ஈச்வரனின் மந்தஹாஸத்தினால் முப்புரங்களும் வேகாநிற்க, இக்கணை போயுற்ற தலத்தினைக் காண்பான் வேட்டு, தேவேந்திரனும், பிரமனும், மகாவிஷ்ணுவும் போகத் தொடங்கினர்.

திருவதிகையினின்றும் புறப்பட்டவிவர் காடு, நாடு, மேடுகள், ஆறுகள், குன்றுகள், மலைகள், வனாந்திரங்கள் தாண்டியும் இக்கொடுங் கணைபுக்க விடத்தை நோக்க கில்லாராய் பொன்னியாற்று வடகரைக்கண் வந்துற்றனர். வடகரை சேர்ந்த பிரம விஷ்ணு தேவேந்திரன் முதலிய மூவரும், இனி நடக்கும் வழியை அறியாது வராகி வள்ளலாரை நோக்கி ஸ்தோத்திரஞ் செய்வாராயினர். இப்படி மார்க்கமறியாது தவிக்கும் இம்மூவர் முன்னால், கிராத ரூபமெடுத்து ஈசுரன் தோன்றி "உங்களுக்கு வேண்டுவதீவேன்" எனவும் இவர்கள் ஈசன் முப்புரமெய்த கணை வீழ்ந்த விடம் தரிசிப்பான் வந்துளோம் முக்கு வழிகாட்டி யுய்விக்க வேண்டுமெனவும், அவ்வாறே வேடன் பின்னே புன்னாகச் சோலைவரையிற் போனவர் வேடனைக் காணாமற் சிவக்குறி யொன்றையே கண்டார்கள். தமக்குள் இறும்பூதடைந்தார்கள். உடனே ஈசனை வியந்துக் கைகுவித்துப் போற்றுவாராயினர். வழிகாட்டும் வள்ளலே என்று பெயர் கொடுத்து வியந்தார்கள். அத்தானம் வணங்கினவர் பாவமெல்லாம் ஒரு நொடியில் பஞ்சாய்ப் பறந்துபோம். இத்தலத்தில் எம்மம்மையாகிய ஜகதீச்வரியின் விசேஷமான வரங்கள் பெற்ற திருமகள் மகிஷாசுரனைச் சங்காரஞ் செய்தாள். சப்தமாதர்கள், வடுகன், சூரியன், முதலாயவர்கள் இத்தலத்தில் போந்து எம்பெம்மானைத் தூயமலர்கள் கொண்டு பூசித் தேத்திப் பெறலரும் பேறு

பெற்றுயர்ந்தார்கள். மேற்றிசை வள்ளலாரின் மகிமைகளைக் கண்டீ ர! மக்காள்! தேர்மின்! முன்னாலேயே உத்தர மாயூரேசனின் அருமை பெருமைகளை இனிதெடுத்துரைத்துளோம். விருஷபத்திற்கு ஞானோதயம் வரச்செய்தாற்போல் எண்ணில்லாதவர்களுக்கும் ஞானோதய முண்டுபண்ணி விசேஷ வரங்கள் உதவுந்தன்மையிலாயே அன்னவர் கைகாட்டு வள்ளல் என்னும் சீரிய பெயரும் பெற்றார்.

மோன முத்திரையாகிய சின் முத்திரையுடன், தன்பாலணுகியவர்களுக்கு அளிக்கும் ஞானாசிரியனாய் விளங்கி அன்னவருக்கு ஞானம் புகட்டும் அச்சிறந்த ஞானாசிரியனும் எம்பெருமான் மாகாத்மியத்தை மானுடரோ அறிந்து சொல்ல வல்லவர்? அப்படி அஞ்ஞானாசிரியரின் மான்மியஞ் சொல்லி வாழுநர்தான் மகா பெரியவர்; அவரே சிவ சொரூபரென்று சொல்லின், அவரது மகிமை அளவிடற் பாலதோ?

சன்மார்க்கமென்று பெரியவர்கள் பலரும் மேற்கொள்ளும் சிவ நெறி தழைக்கவும் பரசமய மென்னும் துன்மார்க்கங்கள் யாவும் அறவே சல்லி வேரற்றுப் போகவும், யாரும் சம்சார பந்தங்களின்று நீங்கி நிரதிசயானந்த மடையவும், எல்லோரும் சந்தோஷிக்கவும், காழிமாநகரில் கவுணியர் குலத்துச் சனித்த பாலனாவாயனும் கொச்சைப் பாலன் ஸ்ரீஞானசம்பந்த மூர்த்தியார், சக்கிராயுதப் படையை மாயோற்கு நல்கும் எம்பெருமானைத் தரிசிப்பான் கருத்துக்கொண்டு மறையோர் தொண்டர் குழாத்தோடும் மாயூரக்ஷேத்திரம் புக்க காலையில் காவிரியின் வெள்ளம் மிகப் பெருக்கெடுத் தோடா நின்றது. பூமியின் கணுள்ள எல்லா ஸ்தலங்களையும் ஒழிவற்ற பத்தியால் தரிசித்து மாயூர நாதனாகிய நின்னைக் காணும் அவாவே பெரிதும் மேலிட்டவனாகிய எனக்கு அக்கரை சேரமுடியாமல் இப்பெரு வெள்ளம் காவிரியிற் போந்ததே என்று சம்பந்தர் மனமுருகித்தோத்திரம் செய்யாநிற்கையில், எம்மையனும் பக்த ரக்ஷக பரமேசுவரன் மீட்டுமோர் கிராத ரூபனாகி காவிரித் துறையிலிறங்கு துறைகாட்டுவோன் போல்வந்து திருஞான சம்பந்தமூர்த்தி முன் தோன்றினார். தோன்றின எம்மையன் சம்பந்தரைத் தன்னுடன் அழைத்துக் காவிரியினூடே அக்கரைக்குப் போகையில் சலம் இவர்களின் கணைக்காலள

வேயாயிற்று சில விடங்களில். சில விடங்களில் பணலும் தெரிந்தது. இப்படியாக முப்புரி நூலராகிய ஞான ஸம்பந்தரை அழைத்துச் சென்ற வேட உருவம் புனைந்து சென்றவர் தென்கரை சேர்ந்ததும் திடீரென அந்தர்த்தானமாகவும், வியந்து ஆநந்த வசத்தராய் நின்ற கொச்சைப் பாலனும் சம்பந்தர் ஆங்கு சிவலிங்க வடிவொன்று கண்டு, இங்ஙனம் நடந்தவை யெல்லாம் ஈசுவரானுக்கிரகமே என வியந்து, இப்பெம்மான் துறைகாட்டு வள்ளலோவெனத் தொடங்கிப் பதிகம் பாடுவாராயினர். பின்பு மாயூரம் வந்து சேர்ந்த ஸம்பந்த மூர்த்தி நிறைகாட்டிப் பதிகம் பாடி நிகரில்லாத ஆநந்த முற்று, அம்புறையே பல தலங்களிலும் சஞ்சாரம் செய்ய மாயூரம் விட்டகன்றார்.

ஆண்டளப்பவன் மாயூரமடைந்து வள்ளல் பாதம் நினைந்து விசேஷமான தவம் இயற்ற, ஈசுவரன் அன்னவனுக்கு முன் பிரசன்னமாகி நினக்கு வேண்டிய வரம் யாதென்று கேட்டான். விண்ணவர் குரவனாக வேண்டுமென்று விரும்பினேனாதலின் எனக்கு ஞானமருளல் வேண்டுமென்று மாதேவனை இரத்தலும், ஈசுவரன், ஆண்டளப்பவனே! உத்தர மாயூரத்தில் சென்று விருஷப தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, எம் குறியைப் பூசித்தால் அன்னதை எளிதினில் அடைவாய் என்று அருளிச் செய்து, சிவலிங்க வடிவமாய் ஈசன் உத்தர மாயூரப்புக்கு வீற்றிருந்தனர்.

அன்னோனே விருப்புடன் பூசையாற்றி ஞானம் மிகுதியுமடைந்து வாக்கு தரும் வள்ளல் என்று வாழ்த்தி தன்னுலகம் சேர்ந்தனன்.

விசேஷமான புகழ் பெற்ற மாயூர வள்ளல் நாற்றிசையும் பரந்த கீர்த்தியை யுடையனாகி வேறு வேறாகிய நாமம் புனைதலாலே நாற்றிசைவள்ளல் என்னும் சீரிய பெயர் பெற்றனர். இவ்வற்புதத் தலங் கண்டேத்தும் பெருமையுடையவர் யாவராயினும் பிரமபதம் பெற்று என்றும் மீளா மோட்ச பதவிக் காளாகுவர் என்பதும் திண்ணம் திண்ணம்!!

(மாயூர வள்ளல் நாற்றிசை வள்ளலாகிய சருக்கம் முற்றிற்று).

---

45 விசுவநாத மூர்த்தி சருக்கம்

அலைகளையிக்கு விசுகின்ற தெய்வத்தன்மை வாய்ந்த கங்கா நதி என்னும் தன் மனைவி மேலுற்ற மோகத்தினாலோ, மாயூர க்ஷேத்திரத்தில் காவிரியின் கரையில் வசிக்கும் விருப்பினாலோ, சூரியன் துலா ராசியிற் சஞ்சரிக்கும் ஐப்பசி மாதத்தில் கங்கை தங்கிய பொன்னியாற்றில் விருஷப தீர்த்தத்தின் தென்கரைக்கண் இந்திரன் முதலிய தேவர்கள் மந்தார மாலைகளை கைவொழியாமல் மாரிபோல் தம் களிப்பு மிகுதியால் தூவவும், துந்துபி முதலிய வாத்தியங்களும் கடலொலித்து மேல முழங்கா நிற்கவும், காசி விசுவநாத மூர்த்தியாம் எம்மண்ணல் உலகத்தவர்கள் கடைத்தேறும் பொருட்டு இலிங்க வடிவாயமர்ந்தனன்.

விசுவநாதப் பெம்மான் விருஷப தீர்த்தக்கரையின் தென்பாங்கர் விரும்பி வந்தடைந்ததை யுணர்ந்த அவர் மனைவியா அன்னபூர்ணி விசாலாட்சி யம்மைகளுந் தோழியர்கள் பல்லோர்களும், தம்மைச் சூழ்ந்து வாரா நிற்க, எம் அகிலநாதப் பெம்மான் மாட்டு வந்து சேர்ந்தனர். தம் பெற்றோரிருவரும் இங்ஙனம் வந்து சேர்ந்ததை யுணர்ந்த துண்டி யானை முகப்பிரானும், ஆதுமைகணனும் அக்ஸ்தானத்தில் வந்து வீற்றிருந்தார். இருமுதுகுரவரும், விநாயகமூர்த்தியும் அங்கு வந்து சேர்ந்ததை யுணர்ந்த வயிரவக் கடவுளும் அங்கு வந்து சேர்ந்தனர். சுப்பிரமணியமூர்த்தி கபா, விஷ்ணுபாதம் முதலியவர்கள் சமேதராய் விசுவநாதப் பெம்மான் இக்காவிரியில் வந்ததை யோர்ந்த மாநுடரெல்லாரும் காசி க்ஷேத்திரத்தின்மீது வைத்துள்ள விசேஷாபிமானத்தை நீத்தார்கள்.

கங்கைக்கு மேலான மகிமை வாய்ந்த விருஷப தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து அகில நாயகனையும், அன்னபூர்ணி விசாலாட்சி யம்மைகளையும் விதிப்படி அர்ச்சித்தேத்தி, பிதிரர்களுவக்குமாறு கயாச் சிராத்தங்களும் செய்து, மாயூரேசனையும் அஞ்சனாயகியையும் தொழுது மகா தேஜஸ்விகளாய் அநேகர் வாழ்தராநிற்பார்.

விருஷப தீர்த்தத்தில் மூழ்கி அகில நாயகனை ஸ்தோத்திரம் செய்து விசேஷமான சிராத்தாதிகளும், பிண்ட தருப்பணங்களும் செய்வோர் தம் பிதிரர் தம்மைக் கரையேற்றினவராவார்கள். அப்

பேர்ப்பட்டவர்களே எல்லையில்லாச் செல்வவந்தர்களாகி பெருமை யுற்று வாழா நிற்பர்.

(விசுவநாத மூர்த்தி சருக்கம் முற்றிற்று)

46 அட்ட லிங்க சருக்கம்

சொல்லற்கரிய பெருமை வாய்ந்த மாயூர க்ஷேத்திரத்தில் சேர்ந்து மருத நிலத்து வேந்தர்களாகிய வானோர் எட்டுப்பேர், வள்ளலாரிடத்து வரம் பெற்ற காலையில், அவ்வள்ளலாரைத் தனித் தனி ஸ்தாபித்துப் பூசை புரியலானார்கள்.

பூர்வ திசையில் ஒரு தேவன் சிவ லிங்கம் ஸ்தாபித்து தீர்த்த மும் உண்டுபண்ணிப் பூசனை புரிந்து தனக்கு வேண்டிய வரங்கள் பெற்றான்.

ஏழு நாக்குடைய தேவன் ஒரு லிங்கமும் தீர்த்தமும் தன் திசையில் ஸ்தாபித்துப் பெரும்பேறு பெற்றான். மற்றொரு தேவன் மற்றொரு திக்கில் ஒரு சிவ லிங்கம் ஸ்தாபித்துப் பூசை புரிந்து தனக்கு வேண்டிய வரங்கள் பலவற்றைப் பெறுவானாயினான். நிருதி திக்கில் நைருத லிங்கமென்று அத்தேவன் ஒரு லிங்கமும் தீர்த்தமு மமைத்து பூசித்துப் பெரும் பேறு பெற்றான். வருணன் தன் திக்கில் மற்றோர் இலிங்கமும் தீர்த்தமும் ஸ்தாபித்து இஷ்ட சித்தி யடைந்தான். வாயு திக்கில் வாயு தன் பேரிட்டு ஓரிலிங்கமும் தீர்த்தமும் தன் பெயரால் ஸ்தாபித்துப் பூசனை யியற்றி வேண்டிய வரம் பெற்றான். குபேரன் அம்பா திரியே வடபாலிலோர் இலிங்கம் ஸ்தாபித்து விதிமுறைப் பூசனையுமாற்றி சகல பாக்கியங்களுமடைந் தனன். ஈசான்ய திக்கில் ஈசானன் தன் பெயரிட்டு ஈசானிய இலிங்கம் ஸ்தாபித்து ஈசான்ய தீர்த்தமொன்று மகழ்ந்து விசேஷ பாக்கியம பெற்றான்.

அஷ்ட திக்கு பாலகர்களாலும் இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து அஷ்டலிங்க தரிசனம் செய்வோர் பெறலரும் பேறு பெற்று வீடு பேறடைவதுண்மையேயாம். இவ் வெட்டுத் திருத்தலங்களை அப்போதைப்போது ஸ்ரீ க்ஷேத்தாடனஞ் செய்து புகுக்குவோரும் வீடு பேறடைவது சத்தியமேயாம்.

(அட்ட லிங்க சருக்கம் முற்றிற்று)

47 நாத சன்மன் அற வித்தை முத்தியடை சருக்கம்

வெள்ளிய திரைகளைக் கொழித்தொழுகும் கருங்கடல் சூழ்ந்த காசினியில் பெருமையாகிய தெய்வ மறை யொழுக்கம் பயில்கின்ற நாடொன்றில் வேதியர் தம் குலத்துதித்த நாதசன்ம னென்னும் வேதியனொருவன் தன் மனைவி அறவித்தை என்னும் தர்ம பத்தினியுடன் இல்லறம் நடாத்தி இனி வாழ்ந்து வருநாளில் காலகதியால் இருவரும் கைலயங்கிரியில் சாலோக பதவியுற்றனர்.

சாலோக பதவியில் மனைவியுட னிருக்கிற பன்னாட்கள் இந் நிலையிலேயே காலங் கழித்து மஹாமேருவை திரிபுர சம்ஹார காரணமாகவில்லாக வளைத்தஜோதிச்வரனுடன் இரண்டறக் கலப்புற ஆசையுற்று ஈசுவரனை வேண்டலும் பரமேசுவரன் கூறுவார். ஐய! நாத சன்ம என்னடிக் கலப்புற உளங்கொண்டாயேல், நீ நின் மனைவியுடன் பூமியில் நான் நன்கு விரும்பி இனிதமரும் தல மொன்றில் சார்ந்து என்னை யணைந்து அர்ச்சித்தேத்து தலினாலடைவாய் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

மான் கன்றினைக் கையினிற் றரித்துக் கௌரியானவள் கண் களிக்க, கௌரி தாண்டவமென்னும் தாண்டவத்தை மன்றினிலே புரியாநின்ற எம்பெருமானை வணங்கி, அருள்விடைகொண்டு கைலை மலையினைத் தன் மனைவியாகிய அறவித்தையுடன் நாத சன்மன் நீங்கி நிலமடைந்தான்.

பூமியிலுள்ள பிராமணோத்தமன் இப்பண்ணின் மிக்க முதுகுன்றம் என்னும் பெயர் வாய்ந்த விருத்தாசலம் போய் எப்பாவங்களையும் போக்கும் மணிமுத்தா நதிச் சுழியில் மூழ்கி விருத்தாம்பா பாலாம்பா சமேத விருத்தகிரீசரைப் பணிந்து விதிப்படி போற்றிப் பணிந்து போற்றி கதலி வனத்தில் அமர்வானாயினன். விருத்தகிரிப் பெம்மான் நாத சன்மனை நோக்கி, "நீ பஞ்ச நத க்ஷேத்திரம் சென்று வழிப்பட்டு இஷ்ட சித்திப் பெறுவாய்" எனலும் மறையவன் மனையாட்டியோடும் அந்நகருக்கு தன் வினைகளைக் களைவான் எண்ணிப் போய்ச் சேர்ந்தான்.

அதருமத்தினை அறவே களைந்து முப்பத்திரண்டு அறங்களையும் முறையே வளர்த்த தர்ம ஸம்வர்த்தனி சமேத பஞ்சநதேசுவரரை மனப்பூர்வமாய்வந்தித்து நாடோறு வழிபடாநின்ற நாதசன்மனுக்கு ஈசுவரனும் ப்ரத்தியட்சமாகி நினக்கு வேண்டியன யாவெனக்கேட்க, "நாத சன்மனும், வளம்மிக்க பெருங் கங்கையினு மேலாய் பெருமைபொருந்திய தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்து பிதிரர்கள் யாவரும் ஒருங்கே கரையேற கயயை யடைந்து மாக்ஷிமை பொருந்திய சிராத்தாதிகள் செய்து எழுமாதர் காதலித்த விடங்களாகிய சப்தபுரத்தினைச் சேர்ந்து,சிவ ஞானம் நிரம்பு மனத்தினனாய் இலிங்கம் ஸ்தாபித்து அதனை அன்பினாலாராதித்துக் கடைசியில் நின்னடிக் கலப்புறற்கேற்ற மிக்க உயர்வுற்ற தலம் யாதென்றான்? இதற்குச் சர்வேச்வரன், நின்னிஷ்ட பூர்த்தி செய்யும்படியான தலம் கௌரி மாயூர ஸ்தலமே யொழிய வேறொன்றின்று; அத்தலத்தில் வசிக்க எனக்கும் மிக்க விருப்புள்ளதாதலின், நாமும் அவ்விடம் வருகின்றோம். என் பின்னே நீயும் தொடர்ந்து வருவாய்! என சர்வேச்வரன் நடக்கலுற்றார். தர்மஸம்வர்த்தனி ஸமேதராய் எம்மண்ணலுடன், நாத சர்மனும் அவன்றன் மனையாட்டி அனவித்தையும் மாயூரத்திற்குப் பச்சிம திக்கிலே வந்து பொருந்தினார்கள்.

மாயூர மேற்றிசையிலே வந்திருந்த பெம்மான் மறையவனை நோக்கி, ஏ! வேதிய! நின் மனைவியுடன் இம்மாயூரத்தில் இடப தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்து, தென்றிக்கில் வந்து சிராத்தாதிகள் செய்து விசேஷமான தானாதிக் கிரியைகளை வழுவறச் செய்து விசுவநாதரை வழிபட்டு பின்னர், உத்தர மாயூரத்தில் தக்ஷிணாமூர்த்தி யவசரமாய்த் திருக்கோலங் கொண்டிருக்கும் ஈச்வரனிடத்திற் சென்று, பத்தர் தொழும் சிவ லிங்கப் பிரதிஷ்டையை வழுவற விதிப்படி செய்து பூசித்து நித்திய முக்தனாய் மகேசனுடன் இரண்டறக் கலப்பாயாக வென அருளிச் செய்தார்.

ஐயாறப்பர் இவ்வாறு அருள்புரியக் கேட்ட நாத சன்மன், அத்திருவை யாற்றின் அமர்வதுபோல் தேவரீர் இத்திருத்தலத்திலும் இனிதமர்ந்து காட்சி கொடுக்கவேண்டுமென்று இரந்ததற் கேற்ப, அவ்வாறே செய்குதுமென விடை பகர்ந்து ஐயாறப்பர் பச்சிம திக்கிலேயே புறைவாராயினர்.

நாத சன்மனும் ஐயாறப்பர் பணித்தவாறே விருஷப தீர்த்தத்தில் படிந்து தானதர்மம், பிதிர்கடன்கள் முதலாயின முறைபெறச் செய்து ஞானாம்பாசமேத வதான்யேச்வரரை வணங்கிப் போற்றி சந்தோஷித்தராய்த் தான்றோன்றீசம், கருணாபுரம், கஞ்சாறு, பசுபதீச்சுரம், சத்திபுரி, தருமபுரம், உத்தர மாயூரம் முதலிய ஸப்தஸ் தானங்களையும் தரிசனம் செய்து ஆசிரிய மூர்த்தியாம் தக்ஷிணா மூர்த்தியின் தாள் தொழுதும், விருஷபத்திற்கு முன்னம் அருளிச்செய்தபடியே பதி பசு பாசம் என்னும் பொதுச் சிறப்பின் பகுப்புணர்த்தி, மலங் கழிந்திட்டருள்காணுந் துணிபு முதலிய ஞானாகமங்களை நன்கு போதித்துக் கணவனும் மனைவியும் தன்னோடு இரண்டறக் கலந்தின்புறும்படியான உபதேசங்களை நன்கு பெற்று, தென்றிசை மாயூரத்தில் நாத சன்மன் தன் மனைவியுடன் புகுந்து வள்ளல் அஞ்சநாயகியார் சீர் பாதங்களைத் தொழுது போற்றித் துதி செய்வானாயினன்.

பன்னாளும் இச்செயல் நிகழாநிற்புழி ஓர் நாள் மாயூரேசன் இவர்கள் முன் தோன்றி, ஏ! மறையோய்! நீ இடப் புறத்தே சிவலிங்க குறியொன்று நிறுவி, இடப் பாகத்தின் இனிது வீற்றிருக்கும் உமையாளின் வலப் பாகத்தில் அம்மையின் குறியொன்று நிறுத்திப் பூசனை சரி வரப் புரிவையாயின் நின்னைச் சின்னாட்களில் முத்தியங்கடலில் சேர்ப்பிப்போம்.

வரத்தினைப் பெற்ற நாத சன்மன், என்னால் அர்ச்சித்தேத்தப்பட்ட இச் சிவலிங்க தரிசனம் செய்தோர் முத்தியடைதல் வேண்டும் என்னும் வரத்தையும் ஈசனிடத்திற் பெற்று மகிழ்ந்து ஈசுரன் குறித்தவாறு பூசனை புரிந்து, அம்மகேசன் ஆவிர்ப்பவித்துள்ள இலிங்கத்தினுள் இரண்டறக் கலந்தனர்.

இதனைக் கண்ட மண்ணவர்கள் ஆநந்த பரவசரானார்கள். வானவர் பூமழை பொழிந்தார். நாதசன்மனும் அவனது மனைவி அனவித்தை யென்பாளும் சிவாநந்த போகமே அநுபவித்திருந்தார்.

வள்ளனாயகரைக் காணாதவரும் அஞ்சனாயகியின் மலர்ப் பதம் அறியாதவரும் நாத சன்மன் அநவித்தைப் பூசை புரியாதவரும், விசேஷமான துன்பத்தையே யநுபவிப்பவராய் வெய்ய வாழ்

நரகுக்குள்ளாவார் என்பது தேற்றம் என்னும் விஷயத்தை ஓ! நைமிசாரணிய வாசிகளே! உள் மனத்தி லழுந்தப் பதித்து எம்மானை இங்கிருந்தே மனதார ஸ்மரியுங்கள் என்று சூத புராணிகர் கூறினார்.

(நாத சன்மன் அநவித்தை முத்தி பெறு சருக்கம் முற்றிற்று)



48 ஐயாறப்பர் சிறப்புச் சருக்கம்

மாதவ மேருவின் முதிர்ச்சி பெற்ற நாதசன்மனுக்காக ஐயாறப்பராம் பஞ்சநதேசவரர் மாயூர மணாளரிடம், சத்தி ஸ்வரூபியான தரும சமவர்த்தனியம்மை சதத்தனுக் கேற்றபடி திருவுருக் கொண்டு மாயூரம் வந்து சேர்ந்து எம்பெருமானிடத் துறைவதாயினள்.

திருமறை குரவரும் மாயூரம் போந்ததைக் கண்ணுற்ற ஒற்றைக் கோட்டினை யுடைய விக்கினேச்வரர், சுப்பிரமணியக் கடவுள், வடுகநாதன், நர்த்தனப் பெருமான், பூத கணங்கள், மற்றைய உபதேவதைகள் யாவரும் அர்ச்சாபூதங்களாய் மாயூரம் ஐயாறப்பர் சந்நிதானத்திலும் வந்து விளங்கின. உத்தர தட்சிண கைலாயங்களிரண்டும், தாமரை மலர்கள் பூத்து, அன்னப் பட்சிகள் முதலாய பல பறவைகளுடன் கூடிய தீர்த்தங்கள் யாவும் இவ்வையாறப்பர் சந்நிதானத்தில் ஒவ்வோர் அம்சாபூதத்தினாலே வந்து விளங்குவனவாயின.

நாதசன்மாவுக்காக அருள் பாலித்த நம் பஞ்சநதேச்வரரை அடியார்க் கெளியரென்றும், மாதசவுடையார் என்றும், போற்றினோர்க் கருள்வாரென்றும், எல்லா உலகங்களும் பெயர்கொடுத் தழைப்பது என் அவருக்குப் பொருந்தாது? அடியார்க் கெளியராகிய இப்பரம கிருபாநிதி இங்கு சேர்ந்துளார் என்பர் சில்லோர்; அற்றன்று; மாயூர க்ஷேத்திர வாஞ்சை மேலிட்டவராய் இங்கு சேர்ந்துளார் என்பர் பல்லோர். இவர்க்குப் பஞ்சநத க்ஷேத்திரத்தின் கண்ணும் வாஞ்சை மிகுதியு முடைமையினாலேயே அத்திரு

வையாறிருக்கும் பச்சிம திக்கினையே நோக்கி யிருப்பார் என்றி ச்சப்பாராயினர் பல்லோர். ஸ்ரீ பஞ்சநதேச்வரர் மனமர்ந்து வீற் றிருப்பார்க்குப் சம்ப்ரோக்ஷணம் முதலிய பற்பல கைங்கரியங்க ளும், பிரமோற்சவ உற்சவ முதலியனவைகளும், திருக்கல்யாணம் ஸப்தஸ்தான வுலா முதல் பல உற்சவங்களும் முறைபெறச் செய்து போற்றி பல்லோர் சிவ கதி பெறுகின்றனர்.

பொருள் பெற வேண்டினும், புத்திரர் வேண்டினும், சிவ லோக பதவியை யடைய வேண்டினும், ஞானமடைய வேண் டினும், எது வேண்டினும் பக்தர்கள் ஐயாறப்பரைச் சேர்வாராகி ன்றார்கள். தர்ம சம்வர்த்தனி யம்மையின் மனம் விருப்புற அபிஷேகா திகள் அவட்குச் செய்து சிறப்புப் பல செய்தோர்கள் விசேஷா நந்த போகானுபவம் பெற்றுக் கைலாசபதியைச் சார்வதும் சத்திய மேயாம்.

ஐயாறப்பர் ஸந்நிதானத்திலிருக்கும் தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்து தானதர்மாதிகள் செய்வார் அடையும் பேற்றினைப் பற்றி சாதாரண மனிதரால் சொல்லவும் கூடுமோ?

நீத சன்மனுக்கு வழிவிட வந்த பஞ்சநதேசுவரர் மாயூர க்ஷேத்திரத்தினை விரும்பி அங்ஙனே அமர்ந்திருந்ததைத் தெரிந்தும் பொழில்வளம் மிக்க அந்நகரில் இருக்க விருப்பமில்லாத மிருந்த பாடையர்களுக்கு என்ன சொல்லித்தான் என்ன காரியமாகப் போகிறது.

(ஐயாறப்பர் சிறப்புச் சருக்கம்முற்றிற்று.)



49 விருஷப தீர்த்த மகத்துவ முரைத்த சருக்கம்.

முன்னொரு கற்பத்திலே மூன்றரைக் கோடி தீர்த்தங்களும் திரண்டு போய்க் கைலாயகிரியை நண்ணி, யானை யுரியையுடைய திரி நேத்திரனைக் குறித்துத் தவமியற்றின. இவ்வாறு தவ மியற்றிய தீர்த்தங்களை நோக்கி, இறைவன் பிரசன்னமாகி யாது குறித்து இத் தவ முயலுகிறீரென்னத் தீர்த்தங்கள், எங்களிடத்தே தம் பாவங்

கனைத் தணிப்பா னுறநிபூண்டு எல்லோரும் புமுகுதலினுல், அவர்கள் பாவம் நரங்கள் பெற்று உடம்பு மிகுதியும் கறுத்தோம், எனக் கூறலும், உமேசன் "நீங்கள் கௌரி மாயூர க்ஷேத்திரம் புகுந்து விருஷப தீர்த்தநில் படிந்தாடி,பாவங்க ளொழியப் பெறுவீர் எனச் சொல்லி அந்தர்த் தான மாயினுர்.

ஈசனுரைத்தவாறே இம்மூன்றரைக் கோடி தீர்த்தங்களும் ஆண்டு தோறும் பறவைகளின் உருக்கொண்டு பறந்து மாயூர க்ஷேத்திரம் புகுந்து;விருஷப தீர்த்தத்தில் படிந்தாடி வள்ள நாயகரின் சிர்பாதங்களைத் தொழுது எழுந்து உவந்து தத்தமிடம் சார்வனவாகின்றன.

வேதியனொருவன் தன் தாயைப் புணர்ந்ததனுல் கொடுமையான நரகத்தி லாழ்ந்து, பின் பிறப்பின் ஆடாய்ப் பிறந்து மேற் கூறிய விருஷப தீர்த்தத்தில் மயேசன் செய்த யாகப் பசுவாகி, வள்ளலாரின் னின்னருளினுல் சிவ பதவி சார்ந்தனன் என்ருல் அத் தீர்த்த மகிமையைக் கூறலும் இயலுமோ?

சீதன்மை என்னும் வனப்பு மிக்க விலைமகளொருத்தி தீராவியாதிஸ்தையாகிப் பின்னர் தண்டக வனத்து சிவ தாசனருளினுல் விருஷப தீர்த்த மகிமை சொல்லப் பெற்று அத்தீர்த்தம் படிந்தாடி அமல நாயகற் பேணி அரும் பதம் பெற்றனள்.

விருஷபதீர்த்தத்தில் சங்கற்ப பூர்வகமாய் ஸ்நாநம் செய்து பூதானம் செய்வார் கைலாஸகிரியைப் பொருந்தி இன்பமனுப வித்து வாயூரிற்பார். தண்டுலம், பயறு, உளுந்து முதலிய தானிய தானங்கள் செய்வோர் சததிய லோகம் சேர்வர்.

மிருதங்கம்போல் தடித்துப் பருத் துருண்ட நீறு பூத்த பூசணிக்காய்த் தானம் செய்வோர் சூரிய லோகமும், ஸர்வாபரணலங்கிருதையான கந்நிகாதானம் செய்வோர் இந்திரலோகமும், அசுவ தானம் செய்வோர் சந்திர லோகமும், சேர்வர் என்பதும் சாதமே.

சொர்ண தானம் புரிந்தோர் அரசராய்ப்பிறந்து அரசாளுவர் காளிகோம், குளம், அன்ன தானங்கள் முதலியன செய்வோர் சிவ லோக பதவியை யடைந்து சிவ சாயுச்சிய மடைந்து பிரமாநந்த முத்தி பெறுவர்.

ஆதிகாலத்தி லொரு கற்பத்தில் பூமியிலுள்ள உயிர்களெல்லாம் பெரும் பாவங்கள் பலவற்றை இயற்றினவாதலின், பூமி மிக்க பளுவுற்றது. இச்சங்கதி பிரமனுக் கெட்ட அவனும் நாரணனிடம் நண்ணி இவ்விஷயத்தைக் கூறினன்.

ஸ்ரீமந் நாராயண மூர்த்தியும் கைலாய கிரி புக்கு ஐயாயிர வருடம் தவமியற்றப் பரசிவன் அவருக்குக் காட்சி நல்கினர். நல்கிய ஈசன் மகா விஷ்ணுவே! நின்கருத்தென்னவென வினவலும், உயிர்களெல்லாம் பாவத்தில் மூழ்கினவென்று தாழ்ந்தான். ஈசனும், விஷ்ணுவை நோக்கி, 'எல்லா உயிர்களும் கதிபடைய வேண்டுமானால் பெரியவர்களால் வியந்து கூறப்பட்ட ஆகம புராணங்கள் முதலிய பருவதாகிருதியமைந்த மறைகளனைத்தையும் நீரின் வடிவமாக்குவாம். அதில் உயிர்கள் ஸங்கற்ப பூர்வகமாய் ஸ்நானஞ் செய்யப் பாவங்கள் அழிந்துபோம்' என்றுரைத்து அவைகளை யெல்லாம் நீர் வடிவாக மாற நினைந்தனன்.

ஈசுவரனின் இச்சா மாத்திரத்தினால் பூமி முழுதும் விரிந்து பரந்து அச்சரிய உதகத்தினை நோக்கி ஆயிரம் யோசனை அகன்று நீண்டுள்ள புண்ணிய தீர்த்தமாகச் சுருங்குக வென ஆஞ்ஞாபித்தார்,

இத்தீர்த்தம் ஒரு ஸ்திரீ வடிவமாகி, கைலாயம், வைகுந்தம், சத்திய லோகம் முதலிய லோகங்களில் முறையே பன்னிரண்டு வருஷகாலவளவு உலாவி வருங்காலையில், சத்திய லோகத்தில் குறுமுனிவன் சென்று அத்தேவ கன்னிகையை இச்சிக்கப் பிரம தேவன் அத்தீர்த்தத்தை நின் கடத்திற் கொண்டு போவாயாக என வருளிச்செய்தான். இவரும் அத்தீர்த்தத்தை கடத்திற் பெய்தெடுத்துக்கொண்டு பூமியில் சகிய பர்வதஞ் சென்று அதனை ஒரு ஸ்தானத்தில் வைத்தான்.

அவ்விடத்தில் பலாசமொன்றில் இருஷிகள் அநேகர் வசமாகின்றார், அம்மரத்தி னருகில் போந்த இந்திரன் அம்மரத்தினை ஓமவிறகிற்காகவொடியா நின்றான். அதனால் மஹரிஷிகள் இந்திரனை அரசிழக்குமாறு சபியாநிற்க, தேவேந்திரனும், ஓ! இருஷிகளே நீவிர் மூங்கிலாகுதிர் எனப் பிரதி சாபம் வழங்கினன்,

எங்களுக்கு இப்பிரதி சாபம் எப்போதொழியு மென்னக் கேட்ட முனிவரரை நோக்கித் தேவேந்திரன் கூறுவான். இங்கே ஒரு முனி சீக்கிரத்தில் கடத்திற் புனல் கொண்டு வரும்போது அப் புனலின் நீர் பட்டு முன்னுருவம் பெறுவீர்; என்னக் கூறிப் போயி னன்.

அப்படி முன்னர்க் கூறியதற்கேற்ப ஸஹ்ய பருவதத்தின்மேல் ஸ்தாபிக்கப்படாநின்ற கடத்தின்மீது காகமொன்று போய் உட் கார்ந்தது. உட்கார்ந்த காகத்தை நோக்கிய முனிவனும் போ! போ! வென்றான். தேவலோகத்திலிருந்து கடத்தில் நிரப்பியிருக்கிற தீர்த் தம் போ! போ! வென்று முனிவன் நம்மைத்தான் சொல்லுகிறானோ வென வுன்னி, விரைவுட னெழும்பி ஆங்கு வளராநின்ற மூங்கிற் காடுகளில் பாய்ந்து ஓடி கடலிற் புகாநின்றது.

இந்திரன் கூறிய கூற்றின் வண்ணம், பல மூங்கில்களும் இத் தீர்த்த மகிமையால் மீட்டும் தவசிகளுருவம் பெற்றன. விரைவாக வோடும் இந்நதி கவேரன் செய் யாதவத்தால் காவேரிப் பெயரும் பெற்றதென்பர். மேலோனுகிய அகஸ்தியர் இவ்வாறு தம் கடத்தினி ன்றும் எழும்பி தன்னுத்தாவின்றி யேகக் கண்ட பெரும் நீர்வெள் ளத்தை இந்தக்ஷணமே உளுந்தளவாய்ச் சுருக்கி ஆசமனம் செய்வார் போல் தம்மிருக்கையை விட்டெழீஇ அதனைப் பின் தொடரலுற்றார். அந்நதியின் பின்னே மாயூரக்ஷேத்திரம் வந்தணுகி, ஸ்ரீ வள்ளநாய கனைக் கண்டு வணங்கிப் போற்றினார்.

ஆதி மூர்த்தியாகிய பரமசிவன் இவர் கருத்தினை யுணர்ந்து லோபா முத்திரையெனும் அணங்கினை இவருக்குக் கொடுத்து அவ் விருஷப தீர்த்தக் கரையிலேயே திருக்கலியாணம் செய்த கோலத தின் ஐதிகம் ஆண்டுகடோறும் இப்போது நடவாநிற்கின்றது.

காசிபன் புத்திரசந்தானத்தை யிச்சித்து விருஷப தீர்த்தத்தில் மூழ்க காவேரி அவருக்கு நேரே பிரசன்னமாகி, நின் மனைவிமார் யாவரும் வந்து இத்தீர்த்தத்தில் மூழ்க, விசேஷ புத்திர சந்தான மீவேன்; இவ்வாறு நீ நின் மனைவி மாரோடு ஸ்நானஞ் செய்யும் கட்டம் காசியப கட்ட மென்னப்படட்டும்; இக்கட்டத்தில் முழுகுவோர் யாவ

றும் அளவற்ற புத்திர சந்தான மடையட்டுமெனப் புகன்று காவிரி யம்மை அந்தர்த்தானமாயினள்.

அதிதி அத்தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்து முப்பத்து முக்கோடி தேவரைப் பெற்றாள். திதி யென்பவள் ஸ்நானமாடி முன் னையதினும் இரட்டைப் பங்கு அவுணரைப் பெற்றாள். மதியமைக சைதி நீராடி அட்ட திக்கயங்கள் எட்டையும் ஈன்றாள். கத்துருவும் இத்தீர்த்த மகிமையினால் பல்லாயிரம் பாம்புகளையும்,பெருமை பெற்ற விநதை ஸ்நாநஞ்செய்து முட்டையோரிண்டும் பெற்றாள்.

விநதை பெற்ற முட்டைகளில் ஐயாயிர மாண்டெல்லைப் பொறு மையாய்க் காவாமல் அதியவசரமாய் பொன்றினை யுடைக்க தொடை வரையிலுருவமைந்த கோடி பன்மத ரூப சௌந்தரியமுள்ள மைந்த னைப் பார்த்து, அறியாது செய்தோமே என விநதை மனங் கவன் றாள். அதனால் அவளோ மற்றைய முட்டையை ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்துக் கடைசியில் கருடனைப் பெற்று சந்தோஷித்தாள்.

காசிபனுடைய மற்றுமுள்ள மனைவிமாரும் விருஷப தீர்த்தத் தில் புகுந்தாடிப் பெற்ற பேற்றைப் பற்றி ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனும் சொல்லி முடியாது. அட்ட திக்கு பாலகரும் இக்காவி ரியின் இடப தீர்த்தத்திற் போந்து இன்பமாய் நீராடி விசேஷமான வல்லமையையும் தேஜஸையு மடைந்தார்கள்.

சூரிய சந்திரரிருவரும் இத்தீர்த்தத்தில் மூழ்கி தம் இஷ்ட சித் திகளைப் பெற்றார்கள்.

புலத்தியன் இத்தீர்த்த மகிமையினால் விச்சிரவ முனியை பெற்றான். விச்சிரவன் இத்தீர்த்த மகிமையால் குபேரனைப் பெற்றான்

தாமரைமலர் மேலுறைவானாகிய பிரமன் இத்தீர்த்தத்தில் ஸ்நாநம் புரிந்து சனற்குமா ரர்களைப் பெற்றான்.

வண்டுமூாய் மலர்மாலும் இத்தீர்த்த மகிமையால் மன்மதன் முதலான மைந்தர்களை ஈன்றான். தசரத மன்னன் இத்தீர்த்த மகத் துவத்தினால் இராமமூர்த்தி நான்கு புத்திரர்களை ஈன்றான். பாரெடுக்

கும் சத்திக் கிரியான் தசக்ரீவன் என்னும் பெயரிய இலங்கை வேந்தன் இத்தீர்த்த விசேஷத்தினால் அட்ட திக்கு விஜயத்தையு மடைந்தான். இத்தீர்த்த மகிமையினால் பாண்டு தம் புத்திரர்களைப் பெற்றுக் கடைசியில் அவர்களிழந்த இராஜ்ஜிய பாரத்தையும் பெற்ற தோடு அளவில்லாத எண்ணிறந்த மாக்கள் இப்புனலுண் மூழ்கி தம் இஷ்ட காமியார்த்தங்களையும் பெற்றார்கள்.

விண்ணத்தில் மினிரும் நட்சத்திரங்கள் பலவற்றிற்கும் ஒரு கணக் கெடுக்கலாம்; ஸப்த ஸாகரத்தின் நுண்ணிய மணல்களைக் கூட ஒன்றொன்றாக எண்ணி விடலாம் ஆனால் விருஷப தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்பவரின் எண்ணிக்கையையோ எண்ணி முடியவே முடியாது! ஓ! நைமிசாரண்ய வாசிகளே!! அறிந்து கொள்ளுங்கள்.

இங்கு வந்து இப்புண்ணிய விருஷப தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்த பற்பல தேவதைகளும் தத்தம பெயரால் தீர்த்தமுண்டு பண்ணிப் போயினர். அத்தீர்த்தத்தில் படிபவரும் ஈசுவரனதாணையி னால் முத்தி யுலகம் புகா நிற்பர் என்று சூதமுனிவன் நைமிசாரணிய வாசிகளைப் பார்த்துக் கூறினார்.

(இடப தீர்த்த மகத்துவச் சருக்கம் முற்றிற்று)



50 நைமிச முனிவர் பூசித்துப் பேறு பெற்ற சருக்கம்

கீர்த்தி மிக்க மாயூரேசன் மான்மியத்தை விரிவாய்ச் சூதமா முனிவர் சொல்லக் கேட்ட நைமிச முனிவர், மீட்டும் அம்முனிவரை மிகுதியும் நமஸ்கார பூர்வமாய் அஞ்சலி செய்து வணங்கி, ஓ! சூத மாமுனிவரே! மாயூரேசன் மான்மியத்தைத் தங்கள் திருவாக்கினால் கேட்டு மிகவும் தன்யரானோம். இனி தாங்கள் தயவு செய்து நித்திய கர்மாநுஷ்டான விதிகளைச் செய்தலைப் பற்றி விரிவாய்க்கூறுமின் என்ன கேட்ட முனிவர், * சவுசம் பற்கொம்பு தேர்ந்தெடுத்தல்,

* சவுசவிதி முதலிய பத்து விதிகளைப் பற்றித் தனிப் புத்தகத்தில் வெளியிடுவதாக உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

ஸ்நாநாங்க விதிகள், அநுஷ்டானம், சூரிய நமஸ்காரம், சிவ பூஜை, போஜனம், ஈசுவர தரிசனம், ஜபம். சமாதி முதலியவைகளை பற்றிய பத்து விதிகளை அவர்களுக்கு விரிவாய் எடுத்துபதேசித்தார்.

இன்னணம் சூதமேலோனியம்பிய மாற்றங்களை உற்றுக் கேட்ட முனிவர்கள் சொல்லுதற்கரிய மகிழ்ச்சி மேலிட்டவராய் ஈசுவரன் பாதங் காண்டற்குரிய சூழ்ச்சியை இப்போது நன்குணர்ந்தோம், என்றுளத்திற் கருதி தாம் மேற்கண்ட யாகத்தினைச் சரிவர முடித்து, பௌராணிகராகிய சூத மேலோனுக்கு விசேஷ ஆசாரோபசாரங்கள் பல செய்து, அன்னோனையு முடன்கொண்டு மாயூரத்திலுள்ள வள்ளலுபகரைக் காண்பான் விருப்புற்று நைமிச வனம் நீங்கினர்.

குன்றமும், காடும், நாடும், குளிர்ச்சியான பண்ணைகளும், கடந்து சோழ நாடு சேர்ந்தார்கள். அந்நாட்டிலுள்ள பற்பல சிவஸ்தலங்களைக் கண்டு தரிசித்துப் போற்றி மிக்க இறும்பூதடைந்தவராய், ஈசன் கௌரிக்காகத் தாண்டவம் செய்யாநிற்கும் மாயூர க்ஷேத்திரத்திலும் புகுவாராயினர்.

ஊழிக் காலத்தும் அழிதலில்லாத மாயூர க்ஷேத்திரத்தைச் சுற்றி ஒரு யோசனை அளவிலுள்ள பற்பல இலிங்க முகூர்த்தங்களையும் ஒழிவற்ற பக்தியால் தரிசித்துக்கொண்டு மாயூர க்ஷேத்திரத்தின் விருஷப தீர்த்தம் புகுந்தார். விதி பூர்வகமாய் சங்கற்பம் செய்துகொண்டு அதில் நீராடினர்.

பின்னர் பாவநாசம், பிரம தீர்த்தம் முதலிய தீர்த்தங்களிலும் விதிப்படி யிவர்கள் படிந்தாடி கண்மணி பூண்ட களத்தினராய் வெண்ணீறணிந்த மேனியராய், பஞ்சாட்சரத்தை யுட்கொண்ட மனத்தினராய், தொழுதகை தலைமேலேற மாயூரநாதன் கோயில்புக்கு அகத்திய வாரணத்தைப் போற்றி யதனனுஞ்ஞை பெற்று, மாலோனும் அரிதற்கருமையாயுள்ள வள்ளற் பெம்மானையும், அஞ்ச நாயகியம்மையும், மற்றைத் தேவர்களையும் அவரவர்கள் சந்நிதானங்களிற் போய்த் தரிசித்து கண்களில் ஆநந்த பாஷ்பம் சொரியவும், புளாங்கிதராகி ஸ்தோத்திர பாடங்கள் தனித்தனியாய் இயம்பி வல்

வினைகள் யாவும் போக்கியவராகிக் களித்திடும்படியான வாழ்வினை யடைந்தார்கள். விருஷப தீர்த்தம் புக்கு நீராடுதல், புராண பிரசங்கிகளுக்கு வந்தனைகள் புரிதல், அத்தலவாசம் செய்தல் இம்மூவகை யொழுக்கங்களைச் சிறந்ததெனை மேற்கொண்டவராய்ப் பன்னாட்களாறும் மாயூர க்ஷேத்திரத்தை விட்டு நீங்காமல் நைமிசாரணிய முனிவரும் வசித்து வந்தனர்.

இப்படியாக வசித்து வந்த முனிவர் பல்லோரும், மாயூரேசன் அஞ்சனாயகிகளின் விடைபெற்று மீண்டும் நைமிசவனமாகிய தம் யதாஸ்தானம் சேர்ந்தனர்.

இவ்வாறு போயவர், தம் தம் ஆச்சிரமங்களில் போகும் இருஷிகளை அவரவர தாச்சிரமங்களிற் புகச் செலுத்தி, சூத மா முனிவரையும் அவரதாச்சிரமத்தில் கொண்டு விட்டுப் பின்னர் இவர்கள் தம் சொந்த வுறைவிடமாகிய நைமிசாரணியம் சார்ந்து மாயூர நாதர் பாத கமலங்களையே அநுதினமும் பெரிதும் போற்றி வாழ்ந்து வாரா நின்றார்கள்.

இனிதாகச் செய்யப்பட்ட இம்மாயூர மான்மியத்தை எழுதுவோர், எழுதுவிப்போர், அச்சில் ஏற்றுவோர், அச்சியற்றுவிப்போர். மனங்கனிதரப் பல்லோரும் கேட்டின்புறுமாறு காலக்ஷேப பூர்வகமாய்ப் பிரசங்கிப்போர், இம்மான்மியம் தக்கவர் சொல்லக்கேட்போர், கற்பவர் கேட்பவர்களுக் குதவி செய்வோர், இம்மான்மியத்தை மாயூரேசனின் விஷயம் கொண்ட பெருமை கருதிப் பனிமலர் கொண்டு பூசனை புரிவோர், முதலாய ஞானவான்கள் பல்லோரும், இப்பிறப்பில் மனைவி மைந்தர் சங்க நிதி பதுமநிதி யென்னு மிரண்டு நிதிகளோடும் இன்புற வாழ்ந்த பின்னர், தேவர்களாகித் தெய்வ நாட்டுக் கோம்மைவெம்முலையார் போக மனுபவித்து, மாதுபாகனாகிய ஜகதீசுவரானுடன் இரண்டறக் கலக்கும் பிரமாநந்த முத்தி பெறுவர்.

இம்மான்மியத்தினைப் பெரிதும் பொற்றி நிலை குலையாமலும், தெய்வம் போற் போற்றி உயர்ந்த பீடத்தில் தம் கிருகத்தில் வைத்துப் பூசிப்பவர், பெறலரும் போகத்தை வள்ளலார் அநுக்கிரகத்தால் பெறுவது புண்மையேயாம்.

சீர்த்தி வாய்ந்த இம்மான்மியம் தங்கி யிருக்கப்பெற்ற மகிமை பொருந்திய கிருகத்தில் பூதப் பிரேத பிசாசாதிகளும், கொடிய நோயும், நுழைவதற்குப் பெரிதும் மஞ்சும். அப்பேர்ப்பட்ட கிருகத்தில் இருநிதிகளும், காமதேனு முதலியன சார்ந்திருந்தாலொத்து விசேஷ சாம்பிராச்சிய முண்டாகி நாடோறும், தழைத்தோங்கி வளரா நிற்கும் என்பதும் சதமேயாம்.



வாழி விருத்தம்.

'பார் பூத்த மாயூரநகர் வாழ்க வருள்வள்ளற் பரமன்வாழ்க
வேர் பூத்த கருந்தடங் கணஞ்சனையகி வாழ்க விவருக்கென்று
நார் பூத்த மனத்தன்பர் வாழ்க பெருஞ்சைவ நெறி நன்கு வாழ்க
சீர் பூத்த வம்பலத் துளானந்த நடகவில் குஞ்சிதத்தாள் வாழ்க'

(நைமிச முனிவர் பூசித்துப் பேறுபெற்ற சருக்கம் முற்றிற்று)

(மாயூர ஸ்தல மான்மியம் முற்றுப் பெற்றது.)

